# நீ எனது பூஞ்சோலை

ஜெய்சக்தி



## பதிப்புரை

திருமதி 'ஜெய்சக்தி' அவர்களின் அற்புதமான எழுத்துக்களால் தமிழ் வாசகர்கள் மனதிலே நீங்காத இடம் பிடித்து விட்டார்கள்.

ஒரு கதைக்கு, ஒரு கதை மேலும் மேலும் வாசகர்களின் மனதை கவர்ந்து வருகிறது. நல்ல எழுத்துக்களுக்கு நாட்டிலே வரவேற்பு இருக்கும் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு.

'நீ எனது பூஞ்சோலை' ஜெய்சக்தியின் 24வது நாவல். அற்புதமான கற்பனை வளமும், அருமையான கதை புனையும் ஆற்றலும் பாராட்டத்தக்கது. நல்ல கதையைப் படித்து மகிழ்வதோடு தங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்.

- அருணோதயம் அருணன்

# நீ எனது பூஞ்சோலை



## 1

"நல்ல அழகுதான்டி.. நீ! அதுல அப்பப்ப சந்தேகம் வந்துருமோ.. எப்பப்பாரு கண்ணாடி முன்னாலயே நிக்கறே" என்ற அம்மாவின் குரல் இப்போது கூட ஒலிப்பது போல் இருந்தது வந்தனாவுக்கு.

எங்கேயோ நூறு மைல்களுக்கு அப்பால் இருக்கிற அம்மா...!

அப்போதெல்லாம்..!

அப்போதென்றால் கல்லூரியில் முதலாமாண்டு படித்துக் கொண்டிருந்த நேரம்! அப்போது என்றால் ஐந்தாண்டுகளுக்கு முன்பு!

இப்போது டிரஸ்ஸிங் டேபிளுக்கு முன் நின்று கொண்டிருக்கிறாள்.

ஈட்டி மரத்தால் செய்யப்பட்ட வேலைப்பாடு மிகுந்த டிரஸ்ஸிங் டேபிள்.

அதன் முன்னால் நின்று அழகு பார்த்துக் கொள்கிற எல்லாத் தகுதியும் அவளது தோற்றத்திற்கு இருந்தது.

இருபத்து மூன்றாவது வயதில் இருந்தாள். முழுமையான இளமையின் வனப்பு அவள் மீது கவிந்திருந்தது. நீண்ட கருங்கூந்தல்.

இப்போதல்ல..! ஐந்தாண்டுகளுக்கு முன்பே தனது பிறந்த வீட்டில் இப்படியெல்லாம் ஈட்டி மரத்தால் செய்த டிரஸ்ஸிங் டேபிள் எல்லாம் இல்லை.

ஒரு மர பீரோவில் அதுவும் அம்மாவுக்கு அவரது அம்மா சீதனமாகக் கொடுத்த மர பீரோவில் ஒரு கண்ணாடி பதிக்கப்பட்டிருந்தது. அதில் நின்று பார்த்தால் முழுத் தோற்றமும் தெரியும்.

போக வர அதன் முன்னால் நின்று கொள்வாள். பின்னலை முன்னாலே எடுத்துப் போட்டுக் கொள்வாள். மறுபடியும் பின்னாலே எடுத்துப் போட்டுக் கொள்வாள். நின்ற இடத்திலேயே அரை வட்டமாக இந்தப்புறமும் அந்தப்புறமும் அசைந்து பார்ப்பாள்.

குடும்பத்தில், தெருவில் அந்தக் கிராமத்தில் இருக்கிற எல்லாருக்கும் அவளைப் பிடிக்கும் என்பது மட்டுமல்ல அவளுக்கே அவளைப் பிடிக்கும்.

எந்த விதமான திருத்தங்களுக்கும் அவசியமில்லாமல் இயற்கையாகவே அழகாக அமைந்திருந்த புருவங்கள்! அழகான பெரிய கண்கள்! எப்போதும் அந்தக் கருவிழிகள் சுறுசுறுவென்று அலைந்து கொண்டிருக்கும்.



"கண்களைச் சுழட்டாதடி!" என்று அம்மா அடிக்கடி கொட்டு வைப்பாள்.

அவள் கல்லூரியில் படிக்கும்போதே அவர்கள் கிராமத்துக்குள் சுடிதார் நாகரீகம் நுழைந்தாகி விட்டது. அதனால் சுடிதார் அணிவாள். அழகான கைத்தறிப் புடவைகள் அணிவாள்.

கைத்தறிப் புடவைகள் 'சீப்'பானவை என்பது ஒரு காரணம். சாதாரணத் தோற்றமுள்ளவர்களுக்கே கூட மிகக் கச்சிதமாகப் பொருந்துகிற கைத்தறிப் புடவை அவள் கட்டும்போது கூடுதலாக ஒரு அழகு பெறும். அந்த வயதில் வேண்டுமென்றே பின்னல் அசைய நடப்பாள்.

"ஷோ.. காட்டாதேன்னு சொல்றேன் இல்ல! ஏற்கனவே ஊரு பூராவும் கண்ணு உன் மேலதான்" என்று அடிக்கடி கொஞ்சம் பெருமையாகவே திட்டிக் கொண்டே அம்மா சுற்றிப் போடுவாள்.

தனது அழகை ஆராதித்த அம்மா!

தலைமுடியையும் மகளின் உடலழகையும் இயற்கையான எளிமையாகக் கிடைக்கிற பொருட்களை வைத்துக் கொண்டே வெகு ஆசையாகப் பராமரித்த அம்மா.

தான் படிக்காத பட்டப் படிப்பை மகள் படிக்கிறாளே என்ற பெருமை வேறு. கொடி போன்ற உடல் வாகு.

அப்போதுதான்.. இப்போதும்தான்.

முகத்தில் அடிக்கிற நிறம் கிடையாது. ஆனால் திருத்தமான அங்க லட்சணங்கள். அதனால் பார்வையாலேயே பின் தொடர்கிற இளைஞர்கள் பெரியவர்கள்.. என்று அவளைப் பாதுகாப்பதே அம்மாவுக்குக் கவலையாக இருந்தது. ஆனால் கல்லூரிக்குப் போய் இரண்டாமாண்டு

வருகிற போதே மகள் தெளிவானவள்தான்! தன்னைக் காத்துக் கொள்கிற பக்குவம் உடையவள்தான் என்று அம்மாவுக்குத் தெரிந்த பின் அம்மா அதட்டுவதை விட்டு விட்டாள் என்றாலும் மகளுக்கு நல்ல வாழ்க்கை அமைய வேண்டுமே என்ற கவலை வந்தது.

வலுக்கட்டாயமாக பழைய காலகட்டத்தில் இருந்து மனதைத் திருப்பினாள் வந்தனா.

வந்தனா அழகான பெயரைத் தேடித் தேர்ந்தெடுத்து வைத்தார் அப்பா. பெயருக்கு ஏற்ப இப்போதும் அழகுக்கு ஒன்றும் குறையே இல்லை.

இப்போதுதான் அங்கு வந்திருந்தாள்.

பின்னலை பின்னிக் கொண்டு நின்றாள்.

இப்போது முன்னைப்போல பராமரிப்பது இல்லையென்பதால் கொஞ்சம் நிறம் குறைந்திருந்தாலும் இப்போதும் இடுப்புக்குக் கீழேதான் தொங்கியது.

வாரியெடுத்துப் பின்னல் போட்டு முடித்தாள். லேசாகப் பவுடர் போட்டுக் கொண்டு ஒட்டுப் பொட்டை எடுத்து ஒட்டிக் கொண்டு வெளியே வந்தாள்.

விசாலமான அந்த பங்களாவின் பின்கட்டுப் பகுதியில் அவர்கள் இருந்தார்கள். அவள் என்றாள் அவளும் அவளது கணவன் மதியழகனும்.

கோயமுத்தூரிலிருந்து நூறு கிலோ மீட்டரில் ஒரு கிராமப் பக்கத்திலே இந்த நகரிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரம்.

கோவைக்கும் நகருக்கும் இடையே இருந்தது. அவளது கணவனுக்குப் பெரிய அளவிலே விவசாயப் பண்ணைகள் இருந்தது.



மதியழகன் இப்போது வாக்கிங் போயிருப்பான். அவளும் கூட குளித்து முடித்து விட்டு டிபனுக்கு எல்லாம் தயாராக இருக்கிறதா என்று பார்த்து விட்டுக் கோயிலுக்குப் போய் விடுவாள்.

பெரிய அந்தக் கோயில் கல் தளத்தில் கால்கள் பதிய நடந்து அம்மனை வேண்டிக் கொண்டு வருவாள். நடைப் பயிற்சியும் ஆயிற்று. பக்தி பரிபாலனமும் ஆயிற்று.

மதியழகன் வாக்கிங் முடித்து விட்டு பண்ணை ஆட்களுக்கு அவன் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி விட்டு வரும்போது அவள் மீண்டும் வீட்டில் இருப்பாள்.

மதியழகனின் தேவைகளை நிறைவேற்றத் தயாராக இருப்பாள்.

கை நீட்டினால் துண்டு.

டைனிங் டேபிளில் தயாராக இருக்கும் தட்டு! கேட்காமலே குறிப்பறிந்து பிடித்த ஐட்டங்களாக வைக்கிற நேர்த்தி!

எல்லாமும் வெகு பாந்தமாக நடக்கும். ஆனால், அவனுக்குப் பிடிக்கிறதா.. இல்லையா என்பது அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்.

பேச்சற்ற மௌனம்.

அந்தக் கவசத்தை உடைத்துத் துண்டு துண்டாக்க வேண்டுமென்ற ஆவேசம் அவளுக்குள் எழும். தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வாள்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தான் போய் திமிரென்று நின்றால் அம்மா எவ்வளவு அதிர்ந்து போவாள்!

அப்பா.. உள்ளுக்குள் அதிர்ந்தே போவார்.

பெரிய ஜமீன்தாரின் உறவுக்காரப் பையனுக்குத் தன் மகளைக் கொடுத்திருக்கிறது என்ற கர்வத்தில்தான் அதுவும் சமீப காலமாகத்தான் கம்பீரமாக நடமாடிக் கொண்டிருந்தார்.

அத்தனையும் சுக்கு நூறாகப் பொடி பட்டுப் போய் விடும்.

நீண்டதொரு பெருமூச்சு விட்டபடி ஆப்பம் வார்ப்பதற்குத் தயாரானாள் வந்தனா.

ஆப்பம் வார்த்து கடலைக் குழம்பு வைத்தால் மிகவும் பிரியமாகச் சாப்பிடுவான்.

பிரியமாகச் சாப்பிடுவது என்றால் சந்தோஷமாக மகிழ்ச்சியை எல்லாம் காட்ட மாட்டான். ஆனால் இரண்டொன்று அதிகமாகச் சாப்பிடுவான்.

முதலில் தேங்காய்ப் பால் ஊற்றிச் சாப்பிடுவான். இனிப்பு வகையாக இரண்டாவதாக கடலைக் குழம்பு தொட்டுக் கொண்டு சாப்பிடுவான்.

இரண்டு மூன்று நாட்கள் அந்த மாதிரி ஏதாவது மகிழ்ச்சி அடையும்போதெல்லாம் மாலை நேரங்களில் அவளது டிரஸ்ஸிங் டேபிளின் மேல் இரண்டு மூன்று புதுப் புடவைகள் இருக்கும்.

பெரும்பாலும் அவள் விரும்பி உடுத்துகிற நிறங்களாக இருக்கும்.

இரவு அவள் அவன் முகத்தைப் பார்த்தபடி நடமாடிக் கொண்டிருப்பாள்.

ஏதோ கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருப்பான். நிமிர்ந்து அவளைப் பார்ப்பான்.



''என்ன?'' என்பது போல்.

''இல்லே! புடவை.. நல்லாருந்துச்சு'' என்பாள்.

''புடிச்சுதா... சரி!'' என்பான். மீண்டும் பைல்களை நோக்கிக் குனிய முயல்வான். அதற்குள்ளாக அவள் அவசர அவசரமாக.

''தேங்க்ஸ்'' என்பாள்.

லேசான புன்னகை இதழ்க் கடையோரத்தில் எட்டிப் பார்க்கு முன்னே கோழியை அமுக்கிப் பிடித்தாற் போலே அமுக்கி மீண்டும் உள்ளே தள்ளி விடுவான் போலும்.

அவ்வளவுதான்.

புன்னகை.. அப்படியே மறைந்து போகும்.

''இந்தப் புடவைகளும், நகைகளும், கார்ப் பயணமும், வெளியே இறங்கினால் ஆளாளுக்கு ''வணக்கங்க.. சின்னம்மா..!'' என்று கும்பிடுவதும்தான் இந்தத் திருமணத்தில் அவள் கண்ட பலன்.

மாவை எடுத்து வாணலியில் ஊற்றி எடுக்கிற போது குழிந்த வாக்கில் ஓரங்கள் முறுமுறுவென்று ஒரு விறைப்புடன் நிற்க அதை ரசித்தபடியே தட்டில் எடுத்து வைக்கவும் அவன் டைனிங் டேபிளில் வந்து அமரவும் சரியாக இருந்தது.

மதியழகன் வந்து அமர்ந்தவுடனே அவள் சூடாக டிபனைக் கொண்டு வரும்போது அவன் கண்களில் லேசாக வியப்புத் தோன்றி மறையும். அது கல்யாணமான புதிதில்! இப்போது அது இயல்பான விஷயமாகப் போய் விட்டது.

''லலிதா வீட்டுல கல்யாணம்!'' என்பாள் பரிமாறிக் கொண்டே..

"எப்ப?" என்பான் சாப்பிடுவதில் ஆழ்ந்தபடி.

"அடுத்த வாரத்துல?"

"ம்.." என்பான். ஒரு துண்டை எடுத்து வாயில் போடுவான். மறுபடியும் கேட்பான்.

"நாம என்ன செய்யணும்? அம்மாவைக் கேட்டியா?"

"கேட்டேன்! மாப்பிள்ளைக்கு மோதிரம் போடணுமாம்."

"சரி! ஏற்பாடு செய்!" என்பான்.

அதற்குள் செல்போன் ஒலிக்கும்.

"ஏன்? உரம் வாங்கறதுக்கு... கன்னியப்பன் போகலியா? லீவா?" என்ன விஷயம்?"

"சரி! வேற யாராவது அனுப்புங்க..! இல்லே வேண்டாம். நானே டவுனுக்குப் போறேன்.. வாங்கிட்டு வந்தர்றேன்."

இப்படிப் பேச்சுக்கள் நடக்கும்.

இப்போதெல்லாம்.. அம்மா அதாவது அவளது அம்மா.. தனலட்சுமியம்மா கூட அவ்வளவாக வெளியே வந்து அவனோடு இயல்பாக உரையாடுவதில்லை.

அவளுக்குக் கோபம்!

மௌனக் கோபம்!

மதியழகன் அதைக் கண்டு கொண்டானா.. இல்லையா.. என்று தெரியவில்லை. ஆனால் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

அன்றைக்கு அதிசயமாகப் புறப்படும்போது "வந்தனா. நீயும் டவுனுக்கு வர்றியா?" என்றான்.



அவளுக்கு ஒரே அதிசயம்!

"வருகிறேன்" என்று புறப்பட்டிருக்கலாம் எப்போதும் போலத் தயக்கம்.

"வரணுமா?" என்றாள்.

அவனுக்குக் கோபம் "சுள்"ளென்று ஏறியது.

"வர்றியான்னா.. வரணுமான்னு கேட்டா இதென்ன கேள்வி?" என்றான்.

"சர்"ரென்று கிளம்பிவிட்டான்.

வந்தனா திகைத்துப் போய் விட்டாள். தலையில் கொட்டிக் கொள்ளாத குறைதான்.

மதியழகன் இந்த மாதிரி அழைக்கும்போது பேசாமல் போயிருக்கலாம்.

எப்படிப் போவது? எதற்காக என்று போவது? சும்மா... போயிட்டு வர்லாம் வா? என்று அழைத்தால் போகலாம்.

கேள்வி கேட்பதற்கு முன்னே கோபம் வருகிறது. கூப்பிட்ட மறு வினாடியே எதற்காகக் கூப்பிட்டோம் என்று தன் மீதே கோபம் வந்து விடும் போலிருக்கிறது.

சட்டென்று தன் மீதே சலிப்பாக இருந்தது. இந்த வாழ்க்கை மீதும் சலிப்பாக இருந்தது.

மௌனமாகத் தன்னறைக்குள் போனாள். இன்றைக்கு ஏதோ களைப்பாகவும் இருந்தது. படுத்துக் கொண்டாள்.

நினைவுகள் மறுபடியும் பின்னோக்கி ஓடியது. இரண்டாண்டுகளுக்கு முன்பு!

"ஏய்! கருணாம்பா! உன் புள்ளைக்கும் நல்ல காலம் பொறந்துருச்சு...! பெரிய ஜமீன் குடும்பம்.. நம்ம வந்தனாவைப் பொண்ணு கேட்டு வர்றாங்க! அவங்க அம்மாவும் பையனும் வர்றாங்க."

கருணாம்பாள் திகைத்துப் போனாள். "பெரிய ஜமீன்தார் குடும்பமா?"

"ஆமா! ஜமீன்தாருக்கு மச்சான் வீட்டுக் குடும்பம்."

அவருக்கு நம்பிக்கை வரவில்லை போலும். சுற்று முற்றும் பார்த்தார்.

தொட்டிக் கட்டு வீடுதான் என்றாலும் அளவான வீடு! சின்ன வீடு!

"நம்ம தகுதி எங்கே? ஜமீன்தார் எங்கே?"

"எங்க... நிஜமாத்தான்.. சொல்றீங்களா?"

"ஆமா! நம்ம வந்தனா.. அழகுக்காக வந்த சம்பந்தம்."

கருணாம்பாள் முகம் வாடியது.

"வேண்டாங்க! நம்ம சக்திக்கு மீறின இடம் வேண் டாம். அப்புறம்.. புள்ளை கண்ணைக் கசக்கிட்டு வந்தா.. நம்மாலே தாங்க முடியாது."

"அடிப்போடி.. கூறு கெட்டவளே? வர்ற இலட்சுமியை எட்டி உதைக்கறதா? பையனுக்கு சின்ன வயசுதான். அம்சமா இருப்பாரு.. நானே கல்யாணங்கல்ல பாத்திருக் கேன்" என்றான்.

தடபுடலாக இருந்தது.

இரண்டு மூன்று கார்கள் வந்து சர் சர்ரென்று நிற்க.. மாப்பிள்ளையும் அவர்கள் வீட்டாரும் வந்து இறங்கி னார்கள்.

மாப்பிள்ளை கம்பீரமாக இருந்தான். ஆனால் முகத் தில் அசாதாரண அழுத்தம் தெரிந்தது.

பெண் பார்த்து விட்டுப் போனார்கள். அதற்குப் பிறகு தான் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் வாக்கு வாதம் நடந்தது.



"இருந்தா.. என்ன? மாப்பிள்ளைக்கு இன்னும் சின்ன வயசுதானே?" என்று அப்பா வாதாடினார்.

எதை.. இருந்தால்.. என்ன? வாதாடுகிறார்கள்.

"எனக்கென்னமோ.. மனசுக்குப் பிடிக்கல" என்றார் அம்மா.

"உன்னை யார் கேக்கப் போறா? நான் சம்மதம் சொல்லி யாச்சு. அந்தப் பண்ணை இந்தப் பண்ணை விவசாய பூமின்னு எத்தனை நிலம் கிடக்கு தெரியுமா? பையன் ரொம்ப நல்லவரு.. எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை."

"அப்புறம்.. ஏன்?" என்று கேட்ட அம்மா உள்ளே யிருந்து வந்து நின்ற மகளைப் பார்த்தவுடன் தயங்கினார்.

"அம்மா.. என்ன விஷயம்?" என்றாள் வந்தனா.

அப்பா ஒரு நிமிடம் தயங்கினார். பிறகு சொன்னார்.

"வந்தனா! மாப்பிள்ளை ரொம்ப நல்லவரு.. ஆனா.. ரெண்டாம்.. தாரமா கேக்கறாங்க.." என்றார்.

வந்தனா என்ன சொல்வது என்று தெரியாதவளாக விழித்துக் கொண்டு நின்றாள்.



## 2

"அம்மா! நான் சொல்றதை நல்லாப் புரிஞ்சுக்க ஆறு.. மாசம்.. அந்தப் பொண்ணும் இந்தப் பையனும் சந்தோஷ மாத்தான் இருந்திருக்காங்க..! ஆனா.. திடீர்னு.." என்று தயங்கினார் அப்பா. பிறகு சொன்னார்.

"அந்தப் பொண்ணு தானா.. வெளியே போயிருக்க.."

"வெளியேன்னா..?" என்று கேட்டார் அம்மா. கேள்வி மிகக் கூர்மையாக வந்தது.

"வெளியேன்னா.. வேற யார் கூடவோ போன மாதிரி பேசிக்கறாங்க. ஆனா.. போயி இந்த வருஷத்தோட ஆறு வருஷமாச்சு.. இனிமே அந்தப் பொண்ணு வரப் போறதும் இல்லே! வந்தா.. தனலட்சுமியம்மா உள்ளே விடறதாவும் இல்லே..!" என்றார்.

"அப்பா..! இது சட்டப்படி ரிஸ்க். இல்லையா?"

"ஆமாம்மா.. நான் மாப்பிள்ளையோட அம்மா, அப்பா கிட்டே பேசினேன். கல்யாணத்தை வேண்ணா ரெஜிஸ்டர் பண்ணிக்கலாங்கறாங்க" என்றார் அப்பா.

அப்பாவின் முகத்தை ஆழ்ந்து பார்த்தாள். இப்படி பொரு சம்பந்தத்தை கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாது என்ற ஆவல் தெரிந்தது. பாவமாக இருந்தது. மறுபடியும் பேசினாள்.

"அம்மா.. என்னோட வசதிக்கு மாப்பிள்ளை பார்த்தா.. நீ இதே மாதிரிதாம்மா.. அப்பா.. எனக்கு இந்த மாசம் ஒரு செருப்பு வாங்கித் தரமுடியுமாப்பா? ஒரு நூறு ரூபா கிடைக்குமாப்பான்னு கேட்டுகிட்டிருக்கியே அது மாதிரித்தான் இருக்கணும்" என்றாள்.

அம்மா குறுக்கிட்டார்.

"அதுக்காக.. சிக்கல் இருக்கிற இடத்துல பொண்ணு குடுக்கலாமா? ஆறு மாசம் வாழ்ந்த பொண்ணு திடீர்ன்னு ஓடிப் போறான்னா.. உள்ளே என்ன பிரச்சினையோ?" என்றார் கவலையாக.



"இத பாரு! கருணா.. நான் விசாரிச்சுட்டேன். பையன் நல்ல பையனாம். அந்தப் பொண்ணுதான் ரொம்ப ஆட்டம்ன்னு.. எல்லாரும் சொல்றாங்க" என்றார்.

இத்தனை வாதப் பிரதிவாதங்களையும் வந்தனா அமைதியாகவே பார்த்துக் கொண்டு நின்றாள். அப்பா அவளைக் கெஞ்சுவது போலப் பார்த்தார்.

"அம்மா.. நீ என்னம்மா.. சொல்றே?" என்றார். அவள் ஒரு நிமிடம் நிலம் பார்த்தபடி நின்றாள். பிறகு சொன்னாள்.

"அப்பா.. நீங்க என்ன சொன்னாலும் கேட்கறேன். நீங்க எது செய்தாலும் எனக்கு நல்லதாத்தான் இருக்கும்" என்றாள்.

அந்த வார்த்தைகள் அப்பாவை நெகிழச் செய்தன என்றால் அம்மா மறுபடியும் சொன்னார்.

"பாருங்க! நம்ம பொண்ணு நம்ம மேலே எவ்வளவு நம்பிக்கை வச்சா.. இப்படிச் சொல்லுவா? அந்த நம்பிக்கையைக் காப்பாத்திக்குங்க... அவ மட்டும் நாளைக்குக் கண்ணைக் கசக்கிட்டு நின்னா.. நான் பத்ரகாளியாயிரு வேன்" என்றார் கருணாம்பாள்.

எந்தப் பேச்சும் அந்தத் திருமணம் நடைபெறுவதைத் தடை செய்யவில்லை.

திருமணம் மிக எளிமையாக நடந்தது.

முன்பெல்லாம் வந்தனாவுக்கு நிறையக் கற்பனைகள் இருந்தன.

திருமணத்திற்கு முன்பே நிச்சயமான மாப்பிள்ளையுடன் ஊர் சுற்ற வேண்டும். கோவிலுக்குப் போக வேண்டும். கடைகளுக்குப் போக வேண்டும். சிரித்துப்

பேச வேண்டும் என்று என்னென்னவோ சின்னச் சின்ன ஆசைகள்.

அப்படி எதுவுமே நடக்கவில்லை! மாறாக "அது.. ஜமீன்தார். சொந்தக்காரங்க.. இல்லே! அதனாலே.. கொஞ்சம்.. கெத்தாத்தான் இருப்பான்.." என்று விளக்கம் சொல்லப்பட்டது.

வந்தனாவுக்கு அந்த வீட்டில் ஏதோ விவகாரம் இருக்கிறதென்று உள்மனது சொன்னது. திடீரென்று தனக்குள் ஒரு பக்குவம் வந்தாற் போல் ஆனது.

படிப்பு பாதியில் நின்று போனது. முதலில் கடுமையாக ஆட்சேபித்த அம்மா.. கூட மாப்பிள்ளையின் வீட்டுக்குச் சென்று பார்த்து விட்டு மலைத்துப் போனார். அதை விட தலட்சுமியம்மாவின் பண்பு மிகவும் பிடித்தது. அக்கம் பக்கத்தவர்கள் சொன்னார்கள்.

"தலட்சுமியம்மாவை நம்பிப் பொண்ணைக் குடுங்க.. ஒரு குறையும் இல்லாமப் பாத்துக்குவாங்க" என்று.

இப்போதும் மாமியாரைப் பற்றிக் குறையொன்றும் இல்லை. பெத்த மகளைப் போலத்தான் பார்த்துக் கொண்டார்.

மகளது மனம் இன்னும் தெளிவாகவில்லை எனப் புரிந்து கொண்ட போது மிகவும் மறுகிப் போனார்.

"உன்னைக் கொண்டு வந்து சிக்க வச்சட்டேனே" என்று மிகவும் வருத்தப்பட்டார்.

"பரவால்லைங்கத்தே! அவங்க மனசுல என்ன கஷ்டமோ.. தெளிவாகட்டும். என் மேல நம்பிக்கை வரட்டும்" என்று பதில் சொன்னாள்.



"ஐயோ! என்ன பக்குவமா பதில் சொல்றே" என்று பாராட்டிக் கொள்வார்.

ஜாடைமாடையாக விலாஸினியை பற்றி விசாரித்தாள். என்னன்னு சொல்றது வந்தனா. நல்லாத்தான் இருந்தாங்க... சந்தோஷமாத்தான் நடமாடினாங்க.. இதுல கொடுமை என்னன்னா.. அவளாத்தான் தேடி வந்து மகன் கிட்டே பழகினாளாம். அவளே சொல்லியிருக்கா. திடீர்ன்னு ஒரு நாள் காலையில ஆளைக் காணோம். என்னமோ கடிதாசியில எழுதி இருக்கா.. அந்தக் கடுதாசி அவன்கிட்டேதான் இருக்கு.. அதைப் பத்திக் கேட்டா.. "போயிட்டா.. விடு.. அதுல என்ன எழுதியிருந்தா என்னன்னு எரிஞ்சு விழுவான். நாங்களும் கேக்கறதில்லே..." என்றார்.

அன்றைக்கே வந்தனா தானும் அது பற்றிக் கேட்பதில்லை என்று முடிவெடுத்துக் கொண்டாள்.

கணவனை அவளுக்கு மிகவும் பிடித்துத்தான் இருந்தது. கம்பீரமான நடை உடை பாவனைகள். இயல்பாகவே தீர்க்கமான மூக்கு. அழுத்தமான பார்வை. நடந்து கொண்டிருக்கும்போது நின்று திரும்பி ஒரு பார்வை பார்த்தாலே வேலையாட்கள் வெலவெலத்துப் போவார்கள்.

முன்பெல்லாம் ரொம்பவும் அளவாகப் பேசுவான். திருமணம் முடிந்த இரவு நடந்தது நினைவுக்கு வந்தது.

அறையில் அவன் காத்துக் கொண்டிருந்தான்!

அவன் அந்தப் பெரிய முன்னால் உள்ள வெராண்டாவில் அவன் வேட்டியின் நுனியை ஒரு கையில் பிடித்துக் கொண்டு மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தான்.

அறை ஜன்னலில் தெரிந்தது. அவள் பொறுத்துப் பார்த்து விட்டுக் கட்டிலில் அமர்ந்து கொண்டாள்.

சுற்று முற்றும் பார்த்து விட்டு ஏதோ ஒரு வாரப் பத்திரிகை இருந்தது.

எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள். உறக்கத்தால் கண்கள் செருகின.

சிறிது கழித்து மனம் தேறிக் கொண்டவனாக உள்ளே வந்தான்.

திடீரென்று கேட்டான்.

"விலாசினி பத்திச் சொன்னேன் இல்ல!"

"ம்..!"

"சரி.. அவ திடீர்னு திரும்பி.. வந்தா?" அவள் அவனை நேராகப் பார்த்தாள்.

"அதையெல்லாம்... யோசிச்சுத்தானே எனக்கும் தாலி கட்டியிருப்பீங்க?" என்றாள்.

"எனக்கும்" என்ற வார்த்தைகளைக் கேட்டவுடனே அவன் முகத்தில் ஏதோ ஒரு உணர்ச்சி தோன்றி மறைந்தது.

"விலாசினி.. போனதுல என்னோட தப்பு எதுவும் இல்லே!" என்றான் வறண்ட குரலில்.

அவள் தலையசைத்துக் கொண்டாள்.

"ஆனா.. எனக்கு இந்த வாழ்க்கைக்கு டைம் வேணும்" என்றான்.

மறுபடியும் தலையாட்டினாள்.

"ஒருவேளை.. ஒரு வருஷத்துலயும்.. எனக்கு மனசு மாறலாம். மூன்று நாலு வருஷமும்.. ஆகலாம்.." என்றான்.



அவள் மறுபடியும் தலையாட்டினாள். "குட் நைட்" என்றான்.

சடக்கென்று பேச்சை முறித்துக் கொண்டு அவன் படுக்கையில் சாய அவள் ஒருக்களித்துப் படுத்தபடி சொன்னான்.

"கதவைச் சாத்திடலாம். அந்த ரூம்ல ஒரு பெட் இருக்கு" என்றான்.

அவள் மௌனமாக உள்ளே போனாள்.

இதுவரை அதே தான் நடந்து கொண்டிருந்தது.

பிய்த்துக் கொண்டு போனால் என்ன என்று அலை பாய்கிற மனசுக்கு ஆறுதல் சொல்லிக் கொள்வாள்.

ஒரு பெண் செய்த நம்பிக்கை துரோகத்தில் எல்லார் மேலும் அவருக்கு அவநம்பிக்கை இருக்கிறது. அதனால் பொறுமையாகத்தான் காத்திருக்க வேண்டும் என்று.

அவளுடைய தேவைகள் எல்லாம் கனகச்சிதமாக நிறைவேற்றப்படும்.

சில சமயங்களில் விசேஷங்களுக்குக் கூட சேர்ந்து போவார்கள். மற்றவர்கள் முன்னால் "வந்தனா" என்று இயல்பாக அழைப்பான்.

அப்படிக் கிடைக்கிற சில நேரத்துச் சந்தோஷங்கள் தான் அவளுக்கு ஆயுசு முழுக்கக் கிடைக்கும் போலும்.

சமீப காலமாக!

அவளிடம் கோபித்துக் கொள்ள ஆரம்பித்திருந்தான். அது சில சமயங்களில் அவள் உள்ளத்தைத் தைத்தது.

தலைலட்சுமியம்மா கூட சொன்னார்.

"அவன் கோபிச்சுப் பேசினாலே உன்கிட்டே உரிமை எடுத்துக்கறான்னுதானே அர்த்தம்."

அந்த தாய் மனசைப் பார்த்து அவளுக்கும் பாவமாக இருக்கும்.

புரண்டு படுத்தாள்!

திடீரென்று விழிப்பு வந்தது!

அது எப்படித்தான் அவள் மனசுக்கு அவன் வருகை புரியுமோ தெரியவில்லை. அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்திருப்பாள்.

"வந்தனா?" என்று அழைத்தான் அதிசயமாய்.

அவள் அடித்துப் பிடித்துக் கொண்டு வெளியே வருவதைப் பார்த்தவன் முகம் ஒரு வினாடி மென்மையாகியது.

"இந்தா..! அந்த ஹோட்டலில் இருந்து டிபன் வாங்கிட்டு வந்தேன்.." என்றான்.

"நீங்க எதுக்கு.. கடைக்கெல்லாம் போய்?"

"அடடா! இப்ப.. என்ன நானா சுமந்தேன். கார் சுமந்துச்சு.. சாப்பிடு.." என்றான்.

மேஜை மேல் வைத்தான்.

அவர்கள் பகுதியில் இருந்த ஹாலில் இருந்த மேஜை. அவள் சாப்பிடுகிறாளா என்று பார்க்கிறவன் போல ஒரு செய்தித்தாளை எடுத்துப் பிரித்து வைத்துக் கொண்டு அமர்ந்து கொண்டான்.

அவள் தயங்கி நின்றபடி அவனைப் பார்த்தாள்.

"சாப்பிடு..." என்ற குரல் மட்டும் வந்தது. அவள் விதிர்விதிர்த்தபடி சாப்பிட ஆரம்பித்தாள். மறுபடியும் திரும்பி "நீங்க..?" என்றாள்.



"நான்... சாப்பிட்டுட்டேன்! பிரண்ட் ஒருத்தன் வந்திருந்தான். ஒரு விஷயமா அவன்கிட்டே பேச வேண்டியிருந்தது. அதான் ஹோட்டல்ல சாப்பிட்டுக்கிட்டே பேசினோம்.." என்றான்.

அவள் மௌனமாகக் கேட்டுக் கொண்டே சாப்பிட்டாள்.

சாப்பிட்டு முடித்தாள். அதற்காகவே காத்திருந்தவன் போல் எழுந்தான்.

"சரி.. நான் கொஞ்சம் வெளியே நடந்துட்டு வர்றேன்" என்று கிளம்பி விட்டான்.

வந்தனா சாப்பிட்ட பின்பு மேஜையை சுத்தம் செய்து விட்டு அவன் போட்டு விட்டுப் போயிருந்த அந்தச் செய்தித் தாளை எடுத்துக் கொண்டாள்.

"இந்த வாழ்க்கைக்கு என்னதான் பொருள்?" என்றிருந்தது.

வயிற்றுக்குக் குறையில்லாமல் வைத்துக் கொள்கிறார்கள். தேவைக்கு மேலேயே நகைகள் இருக்கின்றன. நல்ல துணிமணிகள்.

வெளியில் பார்க்கிற பெண்கள் எல்லாருக்கும் பொறாமை வருகிற அளவுக்கு ஒரு வாழ்க்கை. ஆனால், உள்ளே உள்ளீடற்ற வாழ்க்கைதானே?!

எதற்காகவோ கணவன் காத்திருக்கிறானோ? ஆறே மாதத்தில் ஓடிப் போன மனைவி அவன் உள்ளத்தில் அவநம்பிக்கையை விதைத்து விட்டாளோ? இவள் மட்டும் அப்படிச் செய்ய மாட்டாளா என்ன என்ற சந்தேகமோ?"

மொத்தத்தில் பெண் குலத்தின் மீதே அவனுக்கு அவநம்பிக்கை தோன்றி விட்டதோ? அப்படியென்றால் தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களுக்காக இல்லா விட்டாலும் வாழ்க்கையில் கணவனுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படுத்துவதற்காகவாவது நாம் காத்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

அன்பு இருக்கிறது! ஆனால் அது நேசமாக மாறுவதில் ஒரு பெரிய தயக்கம் இருக்கிறது. அடிபட்ட உள்ளம்!

பொறுத்திருக்கத்தான் வேண்டும்! என்று எண்ணிக் கொண்டாள்.

ஒரு பெருமூச்சுடன் எழுந்தாள்.

இன்னும் குறைந்தது ஒரு மணி நேரமாவது இல்லாமல் வர மாட்டான்.

அவள் கணவனது பெரிய படுக்கையைத் தட்டிப் போட்டாள். இப்போதெல்லாம் அவனது பொருட்களைக் கையாள்வதற்கு அனுமதிக்கிறான். அதுவே பெரிய விஷயம் என்கிறார் மாமியார்.

வந்த புதிதில் பீரோவைச் சுத்தம் செய்யறேன் என்று ஆரம்பித்த போது அவன் கடுகடுப்பான குரலில் சொன்னான்.

"நானே என் பீரோவை சுத்தம் செஞ்சுக்கறேன்" என்று.

அவள் முகம் வாடிவிட்டது. அதைக் கவனித்தானோ என்னவோ மறுபடியும் சொன்னான்.

"அதுல முக்கியமான பேப்பர்ஸ் எல்லாம்.. இருக்கு!" என்று.

வந்தனா கல்யாணமாகி வந்த புதிதில் செய்வது போல் தலையை உருட்டிக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டாள்.



தன் முதுகை அவன் பார்வை துளைப்பது போல் தோன்றியது. ஆனாலும் திருப்பிப் பார்க்க பயம். அப்படி இருந்தவன் சமீப காலமாக.

"வந்தனா... கொஞ்சம் பீரோவைக் கிளீன் பண்ணிடு" என்கிறான். கூடவே கவனமாகச் சொல்வான்.

"எதையும் டிஸ்லொகேட் பண்ணிடாதே! அப்படியே எடுத்த வாக்கிலே அடுக்கி வச்சுடு என்ன?" என்பான்.

வந்தனாவும் சரியென்று வழக்கம் போல் தலையை உருட்டுவாள். ஒரு நாள் அப்படித் தலையை உருட்டி விட்டுத் திரும்பி எதேச்சையாகப் பார்த்தபோது கண்களில் குறும்பு மின்ன அவன் பார்த்துக் கொண்டிருந்தாற் போலத் தோன்றியது.

"வெடுக்"கென்று தலையைத் திருப்பிக் கொண்டாள்.

தனது படுக்கையைத் தட்டிப் போட்டுக் கொண்டவள் நினைத்துக் கொண்டாள்.

"பீரோவைச் சுத்தம் செய்து ரெண்டு மாசத்துக்கு மேல ஆயிடுச்சு..." என்று மறுநாள் காலை அவன் அவசரமாக அவளிடம் சொன்னான்.

"வந்தனா..! அவசரமா வெளியூர் போறேன்.. விவசாயிகள் சங்க வேலை தொடர்பா.. டெல்லியில மினிஸ்டரைச் சந்திக்கப் போறோம். ரெண்டு நாளாகும். நீ வேணுன்னா... அம்மா... வீட்டுக்குப் போயிட்டு வர்றியா!"

"இல்லே! அடுத்த மாசம் தீபாவளிக்குப் போயிக்கலாம்" என்றாள் வந்தனா.

"ஓ..கே!" என்று தோளைக் குலுக்கினான். அவள் அவனிடம் "ஏங்க! பீரோவை சுத்தம் செய்யவா!" என்றாள்.

ஒரு நிமிடம் யோசித்தவன் "சரி.. செஞ்சுடு" என்றான். மீண்டும் நினைத்துக் கொண்டவன் ஏதோ ஆரம்பிக்க அவனே முடித்தான்.

''எதையும் டிஸ்லொகேட் செய்யாதே! எடுத்தது எடுத்த இடத்துல இருக்கணும். அதானே?'' என்றாள்.

அவன் புன்னகைத்தான்.

புறப்படும்போது கேட்டான். ''உனக்கு டெல்லியி லிருந்து ஏதாவது வாங்கிட்டு வரட்டுமா?'' என்று.

''உங்க இஷ்டம்'' என்றாள்.

வழியனுப்பி விட்டு வந்து வீட்டுக் காரியங்களைப் பார்க்கும்போது எண்ணிக் கொண்டாள்.

''நாளைக்கு ரெண்டு பீரோவையும் நிதானமா.. சுத்தம் பண்ணி வைக்கணும்'' என்று.

அந்த பீரோக்களில் ஒன்றில் அவள் அமைதியையே குலைக்கக் கூடிய வெடிகுண்டு காத்திருக்கிறது என்பதை அறியாமல்.

பீரோவின் மேல் தட்டில் இருந்து அந்தப் பை விழுந்தது. எடுத்தாள். கவர் திறந்து கிடந்தது.

எடுத்து வைக்க முயலும்போது அதற்குள்ளிருந்து ஒரு கவர் விழுந்தது.

வந்தனா கையில் எடுத்தாள்.



# 3

''ஹெல்லோ! ஐ ம் விலாஸினி ப்ரம் அக்ரி யுனிவர் சிட்டி. உங்க செட்டு நீர்ப் பாசன முறையை அப்சர்வ் பண்றதுக்காக வந்திருக்கேன்'' என்றாள்.



''ஓ! எனக்கு எதுவும் தகவல் வர்லையே!'' என்றான் மதியழகன்.

''அதான்.. சார்! நேர்ல வந்து சொல்லிட்டு பர்மிஷன் வாங்கிட்டு எப்போலேந்து வர்லாம்னு கேட்டுட்டுப் போலாம்னு வந்தேன்'' என்றாள் விலாசினி.

ஒரு கடிதம் நீட்டினாள்.

''எங்க புரொபசர் உங்களுக்குப் பழக்கமாமே...'' அவர் லெட்டர் குடுத்தாரு'' என்றாள்.

வாங்கிப் படித்தான்.

பேராசிரியர் ஆறுமுகம் கடிதம் கொடுத்திருந்தார் படித்துப் பார்த்தான்.

பிறகு அந்தப் பெண்ணைப் பார்த்தான்.

''எத்தனை பேர் வர்றீங்க?''

''நான் மட்டும்தான்...'' என்றாள்.

''ஓ!... எங்கே தங்கப் போறீங்க?''

''தெரியலை. சார்... இனிமேதான் ஏற்பாடு செய்யணும்.''

''எத்தனை நாள் தங்கப் போறீங்க?''

''மே.. பி... ஒரு நாலு நாள்!''

''ஓ.கே.! நோ பிராப்ளம்! உங்களுக்கொண்ணும் ஆட்சேபணையில்லேன்னா.. எங்க வீட்லேயே தங்கலாம். எங்க மதர் இருக்காங்க.. கூடத் தங்கிக்கலாம்'' என்றான்.

மலையாள நடிகரைப் போல வேஷ்டியை நுனியை பிடித்தபடி நடப்பது மதியழகன் பழக்கம்.

''சரி.. வாங்க!'' என்றான். தனது அலுவலகமாக வைத்துக் கொண்டிருந்த கட்டிடத்தின் காம்பவுண்ட் வாசல் வரை வந்து வழியனுப்பினான்.

"எதில வந்தீங்க?" என்றான்.

"சார்... பஸ்ல" என்றாள்.

"ம்..!" என்று யோசித்தான் இந்த நேரத்துக்கு பஸ் வராதே. அப்ப வாங்க உள்ளேயே கொஞ்ச நேரம் வெயிட் பண்ணுங்க.. பஸ் வர்றதுக்கு அரை மணி நேரம் ஆகும்" என்றான்.

சரியென்று வந்தாள்.

முன்னறையில் சோபாவில் அமர்ந்தாள். குடிப்பதற்கு கூடாக உ வந்தது.

"அவன் அலுவலக அறையில் போனில் பேசுவது கேட்டது.

"அப்புறம்.. புரொபசர் சார்! லெட்டர் பார்த்தேன்."

"ஆமப்பா! அந்தப் பொண்ணு ஒரு சின்ன ப்ராஜக்ட் பண்ண வேண்டியிருக்கு. அதனால பழத் தோட்டம், பழப் பண்ணை எல்லாமும் இருக்கற இடம் அதான் அனுப் பிச்சேன்" என்றார்.

"ஓ.. சார்! அப்புறம்.. லேட்டஸ்ட்டா என்ன கண்டு பிடிச்சிருக்கீங்க" என்றான்.

"முயற்சி பண்ணிகிட்டிருக்கோம்.. புஞ்சை நிலத்தில ஏதாவது இ:பெக்டிவ்வா பண்ண முடியுமானு பாத்துகிட் டிருக்கோம்."

"ஓ.கே. சார்"

"அப்புறம் மதி..! அந்தப் பொண்ணு புயல் மாதிரி.. அதான் உங்க பண்ணைக்கு அனுப்பியிருக்கேன்."

"சார் நாங்க விவசாயிங்க.. புயல்ன்னாலே எங்களுக்கு பயமாருக்கு.." என்றான்.



அந்தப் பக்கம் சிரித்தார்.

"நீயெல்லாம் நாணல் மாதிரி. எந்தப் புயலும் அவ் வளவு சீக்கிரம் உன்னை சாய்ச்சுடாது" என்றார்.

இருவரும் சிரித்தார்கள்.

மதியழகன் கூடத் தன்னை நாணல் என்றுதான் நம்பிக் கொண்டான். விலாஸினி முழு வீச்சில் புயலாக விஸ்வ ரூபமெடுத்து அவனை வீழ்த்தும் வரை.

* * *

"சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு..." என்கிற ரேன்ஜுக்கு உலாவிக் கொண்டிருந்தாள் விலாஸினி.

வந்த நாள் அன்றைக்கு அவளை அவன் கவனிக்க வில்லை.

"வந்தீங்களா? சரி.. இருங்க..!" என்பதுபோல் விட்டு விட்டான்.

"மேடம்! உங்க நேடிவ் வில்லேஜா, சிட்டியா?" என்று மட்டும் கேட்டான்.

"பட்டணத்து பூதம்தான் நான்!" என்றாள். சிரித்து விட்டான்.

"என்ன மேடம்.. எங்களை பயமுறுத்தி மூலைல தள்ளிடறதுன்னு.. முடிவு பண்ணிட்டீங்களா?" என்றான்.

"ஏன் அப்படிக் கேட்கறீங்க?" என்றாள். முகத்தில் சற்றே ஏமாற்றம் தெரிந்தது.

"இல்லே! புரொபசர் என்னவோ.. உங்களைப் புயல்னு சொல்றாரு. நீங்க என்னவோ.. உங்களைப் பூதம்னு சொல்றீங்க" என்றான்.

"சே.. போங்க.. சார்! நான் சொன்ன விதத்தை நீங்க புரிஞ்சுக்கலே.. இல்லை. நான் என்னை பூதம் சொல்லிக்கு

வேணாம். உடனே.. நீங்க.. சே.. சே.. நீங்க எங்க பூதம்கறீங்க.. நீங்க ரொம்ப அழகுங்க..ன்னு சொல்வீங்களாக்கும்னு பார்த்தேன்'' என்றாள் சோகமாக.

மதியழகன் ஒரு நொடி அவளை வியப்பாகப் பார்த்து விட்டுச் சிரித்து விட்டான்.

''அப்படி வேற ஒரு எதிர்பார்ப்பா? ஓ.கே. ஓ.கே.! நீங்க நல்லாத்தான் இருக்கீங்க..'' என்றான். சிரித்து விட்டு மறுபடியும் சொன்னான்.

''மேடம்! நான் எதுக்குக் கேட்டேன்னா கிராமத்துல வளர்ந்திருந்தா இந்த மாதிரி இடங்கள்ல எப்படி இருக்கும்னு தெரியும். மேடம்.. திடீர்னு பச்சைப் பாம்பார் தலை காட்டுவாரு. முயல் தம்பி.. ஓடுவாரு.. பழக்கமானவங்கன்னா அதுக்குத் தகுந்த மாதிரி நடந்துக்குவாங்க இல்லே!'' என்றான்.

''ஓஹோ! நான் நினைச்சேன்.. நம்ம காலிபர் பாத்து மயங்கிப் போயிட்டீங்களா?'' என்றாள்.

''ஹல்லோ! எனக்கு வேலை நிறைய இருக்கு'' என்றபடி நகர்ந்து விட்டாள். ஆனால் உள்ளுக்குள் கொஞ்சம் திணறித்தான் போனான்.

கல்லூரி நாட்களில் கலாட்டாவாகப் பேசிக் கொள்வது உண்டு. பெண்களிடமும் இயல்பாகப் பேசுவான். ஆனால் ஒரே நாள் பழக்கத்தில் இந்தப் பெண் என்ன இந்தப் போடு போடுகிறாள் என்று நினைத்துக் கொண்டான்.

விலாஸினியுடன் துணைக்குப் போகுமாறு ஒரு பண்ணையாளை அனுப்பினான்.

காளிமுத்து அவள் செய்கிற கலாட்டாக்களை வந்து சொன்ன போது அவன் சிரித்துக் கொண்டான்.



அடுத்த நாள்!

அவள் தங்களது வயலைப் பார்வையிட்டுக் கொண்டு நடந்து கொண்டிருக்கையில் அவளைப் பார்த்தான். தூரத்தில் நின்று கொண்டிருந்தாள். வாயில் எதையோ வைத்துக் கொண்டு உறிஞ்சிக் கொண்டிருந்தாள்.

காளிமுத்து பக்கத்தில் நின்று கொண்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வியப்புடன் பார்த்தவன் யதேச்சையாகப் போவது போல அந்தப் பக்கம் போனான்.

''ஹலோ! மேடம்.. என்ன பண்ணிட்டிருக்கீங்க?'' என்றான்.

சற்றும் தயங்காமல் ''சார்! இந்த மேடம்னு கூப்பிடறதை நிறுத்தறீங்களா? மடம்னு மடம்னு காதுல விழுகுது.''

''மே.. பி சம்திங் ராங் வித் யுவர் இயர்'' என்றான் மதியழகன்.

''இயர் வொர்க் பண்ணாமப் போற அளவுக்கு இயர்ஸ் ஆயிடலை'' என்றாள் விலாஸினி.

''அதை விடுங்க..! இப்ப என்ன பண்ணிட்டிருக்கீங்க?'' என்றான் மதியழகன்.

''சார்! இந்தச் சின்னத் தும்பைப் பூவைப் பாருங்களேன்! இதோட காம்புக்குள்ளே கொஞ்சம் கொஞ்சம் தேன்.. இருக்கில்ல! அதை டேஸ்ட் பண்ணிப் பாக்கறேன்'' என்றாள்.

அவனிடமும் ஒரு சின்னப் பூவைப் பறித்து நீட்டினாள்.

அவன் சிரித்தான். ''ஆமா! சின்ன வயசுல என் சிஸ்டர்ஸ் ரெண்டு பேரும் இதே வேலையா அலைவாங்க'' என்றான்.

தன் வயதை மறந்தவன் போல், தான் ஒரு முதலாளி என்பதை மறந்தவன் போல் அவனும் வாயில் வைத்து உறிஞ்சினான். துக்கினியூண்டு என்பார்களே அதுபோல் துளியளவு தேன் வாய்க்குள் 'குபுக்'கென்று பாய்ந்தது.

இருவரும் சிரித்தார்கள்!

"சார்! ஒரு ஹாப் அன் அவர் எனக்காக தினமும் ஸ்பேர் பண்ணுவீங்களா?"

"வொய் நாட்?" என்றான்.

நேரம் கொடுத்தான்!

இரண்டாம் நாளில் இருந்தே அந்த நேரத்தை எதிர் பார்க்க ஆரம்பித்தான்.

அடுத்த நாள் காலை!

"காளிமுத்து சார் இன்னும் வரலையா?" என்று கேட்டுக் கொண்டிருந்தாள் விலாஸினி.

அவன் உள்ளே இருப்பதை அவள் அறியவில்லை.

"ஷ்..!" என்று காளிமுத்து சைகை செய்து விட்டு உள்ளே இருக்கிறார் என்று ஜாடை செய்திருப்பான் போலும். கிசுகிசுவென்று பேச ஆரம்பித்தார்கள்.

அவன் செய்கிற இந்த மாதிரி சேட்டைகளை அவன் ரசிக்க ஆரம்பித்திருந்தான்.

சிரித்துக் கொள்வான்..

"சரி.. காளிமுத்து.. வா.. நாம நிலத்துக்குப் போலாம்" என்றான்.

இயற்கையான முறைகளைப் பயன்படுத்தி மகசூலை அதிகமாக்குகிற முறைகள் பலவற்றைக் கண்டு பிடித்து வைத்திருந்தான் மதியழகன்.



அது பற்றிய ஒரு ப்ராஜக்ட் செய்வதற்காக அவள் வந்திருந்தாள்.

மறுபடியும் அவர்கள் நிலத்துக்குப் போனவுடனே தானும் ரவுண்ட்ஸ் புறப்பட்டான் மதியழகன்.

கொஞ்ச தூரம் நடந்தவுடன் தனது மானேஜரிடம் பேசிக் கொண்டே திரும்பினான்.

அப்போதுதான் அந்தக் காட்சியைக் கண்டான்.

விலாஸினியும், காளிமுத்துவும் சுவாரசியமாக ஒரு மாமரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அதே நேரம்!

சற்று தொலைவில் ஒரு செடியில் ஒரு பச்சைப் பாம்பு தொங்கிக் கொண்டிருந்தது.

சரசரவென்று ஏறிக் கொண்டும், இறங்கிக் கொண்டும் வித்தை காட்டிக் கொண்டிருந்தது.

மேனேஜரிடம் பேசிக் கொண்டிருந்தவன் அதை விட்டு விட்டு வேகமாக அவர்களிடம் போனான்.

"விலாஸினி! விலாஸினி!" என்று அவசரமாக அழைத் தான்.

அதற்குள்ளாக இரண்டு எட்டு முன்னால் வைத்த விலாஸினியும் பாம்பு ஏறிக் கொண்டிருப்பதைப் பார்த் தாள்.

மிகவும் ஒல்லியாக இளமஞ்சள் நிறம் உடலின் கீழ்ப் பகுதியிலும், இலைப் பச்சை நிறம் உடலின் மேற்பகுதி யிலுமாக செடிக்கும் அதற்கும் வித்தியாசம் தெரியாமல் நெளிந்து நெளிந்து ஊர்ந்து கொண்டிருந்த பாம்பைப் பார்த்தவுடன் அதிர்ச்சியாகி அவள் திரும்ப அதே நேரம் வேகமாக அவர்களை நெருங்கி வந்து கொண்டிருந்த மதியழகனின் மார்பில் முட்டிக் கொண்டாள்.

அதிர்ச்சியில் "ஐயோ... பாம்பு!" என்று கத்திக் கொண்டு அவனைக் கட்டிக் கொண்டாள்.

மதியழகன் அந்த ஸ்பரிசத்தில் திகைத்துப் போனான். ஒரு கணம்தான்! மறு கணம் சுதாரித்துக் கொண்டு,

''அப்படியே பின்னாடி வந்துடு'' என்று இழுத்துக் கொண்டு நகர்ந்தான்.

விலாஸினி முகத்தை நிமிர்த்தாமல் காலை மட்டும் நகர்த்தினாள்.

காளிமுத்துவுக்கு இந்தக் காட்சி சுவாரசியமாக இருந்தது போலும்! என்ன செய்வதென்று தெரியாமல் அவர்களோடு நகர்ந்தான்.

"பாம்பை அடிங்க" என்று பதறினாள் விலாஸினி.

"இல்லல்லே! அது போயிடும்'' என்று தேற்றினான் மதியழகன்.

தனது அலுவலக அறைக்கு அழைத்து வந்தான். ''காளிமுத்து! சமையற்காரம்மாகிட்டே காபி போடச் சொல்லு.." என்றான்.

''அதுதான்.. எப்பவும் தயாரா இருக்குமே'' என்று போன காளிமுத்து உடனே இரண்டு கப்புகளில் காபி கொண்டு வந்து கொடுத்தான்.

அந்த நேரத்து அதிர்ச்சிக்குப் பின் உடம்பே ஆடிப் போன விலாஸினிக்கு அந்த காபி இதமாக இருந்தது. மெது மெதுவாக காபி இறங்கவும் தொண்டைக்கு இதமாக இருந்தது.

மெதுவாக இயல்புக்கு வந்தாள்.

இப்போது மதியழகன் சிரித்துக் கொண்டே சொன்னான்.



''என்னவோ. ரொம்ப தைரியமான ஆளுன்னு நினைச்சேன். என்ன இப்படி நடுங்கறீங்க?'' என்றான்.

அவள் மிகவும் சீரியஸாக அவன் முகம் பார்த்தாள்.

''சார்! என்ன விளையாடறீங்களா? பாம்புகிட்டே போய் பலம் காட்ட முடியுமா? நான்தான் விலாஸினி... டவுன்ல இருந்து வந்திருக்கேன்னு சொன்னாப் புரியுமா?'' என்றாள். கொஞ்சம் கோபம்கூடத் தெரிந்தது.

''அதானே... ஏன் காளிமுத்து! பாம்புக்கு நாம சொல்ற எதுவும் புரியாதில்லே'' என்றான் கண்களில் குறும்பு மின்ன.

காளிமுத்து அதைப் புரிந்து கொண்டவன் போல் ''ஆமாங்கய்யா நீ லண்டனில் இருந்து வந்தாத்தான் எனக்கு என்ன? நான் போடணும்னா போட்டுத்தான் தீருவேன்னுதான் சொல்லும்'' என்றான்.

ஆரம்ப கட்ட அதிர்ச்சி சரியானவுடன் அவளுக்குள்ளும் குறும்பு தோன்றியது போலும்.

''ஆமா! நான் மதியழகன் சாரோட இடத்துல ரெண்ட் குடுக்காம குடியிருக்கிற ஆளு.. என்னைப் போய் போகச் சொன்னா போயிடுவேனா.. அப்படின்னு.. கேட்டா..?'' என்றாள்.

''யாரு?''

''பாம்பு.. சாரு..!'' என்றாள்.

''ஆமா.. இப்ப வீரம் பேசுவீங்க. அப்ப நடுக்கத்தைப் பார்க்கணும்'' என்றான்.

அவள் முகத்தில் வெட்கம் தெரிந்தது.

''சார்.. கேலி செய்யாதீங்க! சார்!'' என்றாள்.

ஒரு கணம் அவன் மார்பில் சாய்ந்து கொண்ட விதம் நினைவுக்கு வந்தது போலும். அவள் முகம் சிவந்தது. தன் முகம் சிவப்பது குறித்து அவளுக்கே ஆச்சரியமாகவும் இருந்தது.

பட்டணத்தில் வளர்ந்தவள். எல்லா வயது ஆண்களுடனும் இயல்பாகப் பழகுவாள். கல்லூரியில் கூட தோழிகள் சொல்வார்கள்.

"ஏய்! உன்னை நாங்க ஜென்ட்ஸ்ல ஒருத்தின்னுதான் வச்சிருக்கோம்.." என்பார்கள்.

அவள் அதைப் பெரிதாகக் கண்டு கொள்ள மாட்டாள்.

"ஆண், பெண்களுடன் பேசக் கூடாதுன்னு ஏதாவது இருக்கா! தொடக் கூடாதுன்னு இருக்கா" என்று கேட்பாள்.

சிந்தனைகளில், செயல்களில் எல்லாவற்றிலுமே அவளிடம் ஒரு வேகம் இருக்கும்.

பேராசிரியர் ஆறுமுகம்தான் சொல்வார். "விலாஸினி கிட்டே ஒரு வேகம் இருக்கு." என்று.

சட்டென்று விஷயங்களைப் புரிந்து கொள்வாள். அதே போல அவளது ரசனைகளைப் பொறுத்த வரையிலும் ஒன்றிலிருந்து ஒன்று தாவிக் கொண்டே இருப்பாள். தன்னைப் பற்றிய தேடல் வாழ்க்கையின் அர்த்தம் பற்றிய தேடல் எல்லாமும் அவளிடத்தில் இருந்தது.

அப்படிப்பட்ட தனக்கு ஒரு இப்படி வெட்கம் என்ற ஏற்படக் கூடும் என்று. அவள் நினைத்ததேயில்லை.

அவளது முகபாவத்தில் 'சட்' 'சட்'டென்று ஏற்படுகிற முக மாற்றங்களை அவனும் கூர்ந்து கவனித்தான். அவனுக்கும் அவள் தன் மேல் சாய்ந்திருந்த அந்தக் கணம் நினைவு வந்தது போலும்.



மெத்து மெத்தென்று பூப்போல சாய்ந்திருந்தாள். ஒரு நிமிடம்தான். அவனுக்குள்ளும் அது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது போலும்.

பத்தொன்பது வயது நிறைந்திருந்தது அவளுக்கு! அவன் இருபத்து மூன்றாவது வயதில் இருந்தான். இருவருக்குமே சலனம் இயல்பான அந்த வயதில் முதல் முறையாக கவனம் கலைந்ததை உணர்ந்தார்கள்.

அதை மறைப்பதற்காகவோ என்னவோ அவள் அவனிடம்,

"சார்! பழத் தோட்டம், நஞ்சை நிலம், பண்ணைன்னு இப்படி வெளுத்துக் கட்றீங்களே.. எப்படி சார்?" என்றாள்.

"எல்லாம்.. எங்கப்பா.. ஆரம்பிச்சது. நான் தொடர்ந்து பார்த்துக்கறேன்" என்றான்.

வலுக்கட்டாயமாக கவனம் திருப்பி அதுபற்றிப் பேச ஆரம்பித்தார்கள்.

காளிமுத்து தனக்கு இனிமேல் வேலையில்லை என்பது போல் நகர்ந்தான்.



# 4

கல்லூரி நாட்களிலேயே பெண்களோடு படித்தவன் என்பதால் எந்தப் பெண்ணும் பெரிதாகத் தன்னை பாதித்து விடப் போவதில்லை என்றுதான் நம்பிக் கொண் டிருந்தான். அதனால் விலாஸினியிடம் இயல்பாகப்

பழகுவதில் அவனுக்கு ஒன்றும் வேறுபாடாகத் தெரிய வில்லை.

இயல்பாகச் சிரித்தான். ஆனால் பண்ணையில் வேலை செய்பவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. முதலாவதாக வெளியாட்கள் குறிப்பாக இளவயதுப் பெண்கள் யாரும் அப்படி வந்ததில்லை. இரண்டாவது அந்த வயதிலேயே மதியழகன் தன் வேலைகளுக்கு, அதற்கான ஏற்பாடுகள் என்பதிலேயேதான் கவனம் செலுத்துவான். ஆனால் ஊருக்கு வெகு அருகில் இருக்கிற ஒரு வேளாண்மைக் கல்லூரியுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தான்.

அவர்களும் அவனது ஆலோசனைகளைப் பயன்படுத் திக் கொள்வார்கள். அவன் படித்த கல்லூரி வேறு. அத னால்தான் புராஜக்ட் என்று யாராவது வந்தால் அனுமதிப் பான். இதுவரை பெண்கள் வந்ததில்லை.

முதல் முறையாக வந்தாள் விலாஸினி. ஆனால் இவ் வளவு சீக்கிரம் எல்லாரிடமும் ஒட்டிக் கொள்வாள் என்றே அவன் எதிர்பார்க்கவில்லை. காட்டுக் குருவிகளையும், மைனாக்களையும் கண்டு அவள் ரசிப்பதும், குதிப்பதும் சிரிப்பதும் அவனுக்கு அவ்வப்போது நினைவுக்கு வரும்.

சிரித்துக் கொள்வான்!

இளமைதான் வாழ்க்கையை எவ்வளவு உற்சாகமாக இருக்கச் செய்கிறது என்று எண்ணிக் கொண்டான்.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை.

அம்மா அதிகாலையில் எழுந்து குளித்து பூஜை முடித்து விட்டு வருகையில்தான் விலாஸினி கொட்டாவி விட்டுக் கொண்டு வெளியே வந்தாள்.

அதே நேரம்!



சுறுசுறுப்பாக வாக்கிங் கிளம்பிக் கொண்டிருந்தான் மதியழகன்.

கொட்டாவி விட்டுக் கொண்டு வந்து வெளியே வந்த விலாஸினி அவனைப் பார்த்தவுடன் 'கப்'பென்று வாயை மூடிக் கொண்டாள்.

பொங்கி வந்த பெருஞ்சிரிப்பைக் குறுஞ்சிரிப்பாய் மாற்றிக் கொண்டு அம்மாவைப் பார்த்தான் மதியழகன். அம்மாவும் அதே குறுநகையைப் படரவிட்டபடி விலா ஸினியைப் பார்த்தார். பிறகு மகனைப் பார்த்தார்.

''என்னடா... சாமி.. பொழுது விடிந்ததா?'' என்றார். அம்மா.

''குட் மார்னிங்... என்றான் மதியழகன்.

''குட் மார்னிங்'' என்று நெளிந்தாள் விலாஸினி.

''ஹல்லோ! அக்ரி யுனிவர்சிட்டியில காலையில நேரத் துல போக வேண்டியிருக்குமே?'' என்றான் மதியழகன்.

''ஆமா... சார்! அது ஒண்ணுதான் எனக்குப் பிடிக்கலே'' என்று புகார் செய்தாள் விலாஸினி.

''விலாஸினிக்கு.. இந்த சிஸ்டம் புடிக்கலையாம்.. சார்ன்னு புரொபசருக்கு சொல்லிடலாமா?''

''சே! நீங்க இப்படி துரோகம் பண்ற ஆள்ன்னு தெரி யாமப் பேசக...'' என்றாள்.

மதியழகன் சிரித்தான்.

''ஓ..கே! அபயம் அளித்தோம். பயப்படாம காபி சாப்பிடுங்க'' என்று சொல்லிவிட்டு வெளியே போனான்.

''அதெப்படி? அது.. ஏன் இப்படி?'' என்று மதியழ கனின் தாயாரைக் குடைந்தெடுத்தபடி அவர் பின்னா

லேயே அலைவாள் விலாஸினி. அதனாலோ என்னவோ அவருக்கு அவளை மிகவும் பிடித்தது. பெரிய செல்வந்தர் வீட்டுப் பெண்ணாக இருந்தாலும் இவ்வளவு இயல்பாகப் பழகுகிறாளே என்று இருந்தது.

விலாஸினி போனதற்குப் பிறகு ஆறேழு நாட்கள் கழிந்திருந்தது.

அம்மா கூட சொன்னார்.

"ஏன் தம்பி! ஒரு பொண்ணு வீட்ல இருந்தாலே கலகலன்னு இருக்குல்லே..!" என்று.

அவனும் ஆமோதித்தான்.

திருமணம் வரையிலும் அவனது சகோதரிகள் வீட்டைக் கலகலப்பாக்கிக் கொண்டிருப்பார்கள். அதிலும் பெரிய அக்கா மகேஸ்வரிக்கும், சின்ன அக்கா கமலேஸ்வரிக்கும் சண்டை தூள் கிளம்பும். ஆனால் நடுவில் யாரும் சமாதானத்திற்குப் போக முடியாது.

இரண்டு பேரும் ஒன்று சேர்ந்து கொள்வார்கள். அதனால் வீட்டில் யாரும் அவர்களது சண்டையில் தலையிட மாட்டார்கள்.

அவர்களே வந்து புகார் செய்தாலும் "ஐயோ... என்னால தாங்க முடியலைப்பா.. ஆளை விடுங்க" என்று கும்பிடு போட்டு விட்டு நகர்ந்து விடுவார்கள். அவர்கள் இருவருக்கும் திருமணமாகிப் போனதற்குப் பின்பு வீடே வெறிச் சோடிக் கிடந்தது என்றால் அப்பாவின் மறைவு குடும்பத்தை ஒரு ஆட்டு ஆட்டி விட்டது.

மேல் படிப்பு, டாக்டரேட் என்று போக விரும்பிய மதியழகன் அந்த இடியாவைத் தூக்கித் தூர வைத்து விட்டு தங்களது பெரிய நிலத்தை நிர்வாகிக்கிற பொறுப்



பையும், பண்ணைகளைப் பார்த்துக் கொள்கிற பொறுப்பையும் எடுத்துக் கொண்டான்.

நல்லவேளையாக சின்ன வயதிலேயே விவசாயம் தொடர்பான ஆர்வம் இருந்தது. அதனாலேயே அது தொடர்பான படிப்பையே தேர்ந்தெடுத்துக் கொண்டான். நிறைய புதிய முறைகள் கற்று அந்தப் பகுதியிலேயே ஒரு பெரிய விவசாயப் புள்ளியாகப் பெயரெடுக்க வேண்டும் என்ற எண்ணம் இப்போதும் இருந்தது. ஆனால் பெரிய சொத்தை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பில் இருந்ததால் ஆராய்ச்சி முயற்சிகளை இப்போது மேற்கொள்ள இயலவில்லை.

விவசாயம் பற்றி நிறையக் கருத்துக்கள் இருந்தன. அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் விவசாய நிலங்களைத் துண்டு போடுகிற பழக்கம் இல்லை என்பதை அவன் அறிந்து வைத்திருந்தான்.

நமது நாட்டில் துரதிர்ஷ்ட வசமாக நிலங்கள் சிறு துண்டுகளாகத் துண்டாடப்படுவதையும், அதனாலேயே பெரிய அளவில் அறிவியல் முறைகளைப் பயன்படுத்த முடிவதில்லை என்று பேராசிரியர்களோடு சேர்ந்து அவனும் வருத்தப்படுவதுண்டு.

"அப்பன் ஐந்து தலைப் பாம்பென்பான் மகன் ஆறு தலைப் பாம்பென்பான்" என்று பாரதியார் பாடியது போலே இல்லாத ஐந்து தலைப் பாம்புகளுக்காகவும் ஆறுதலைப் பாம்புகளுக்காகவும் தலைமுறைகள் அடித்துக் கொள்கிற விதம் பற்றிய கவலை அவனுக்கும் இருந்தது. பங்காளிச் சண்டை என்ற பெயரில் சொத்துக்கள் கரைவதும் அவனுக்குப் பிடிக்காத விஷயங்கள். அதனாலேயே சகோதரிகளின் கணவன்மார்களிடம் அமர்ந்து

பேசி நிலத்தைப் பொதாகப் பார்க்க முடியாத அளவில் பங்கு வைத்துக் கொண்டான்.

அவர்கள் இருவரும் வேறு துறைகளில் நல்ல பணி களில் இருந்தார்கள். அதோடு நிலமாகவும் இருந்தது. அதையே பராமரிக்க முடியாமல் இருந்தார்கள். அதனால் "எங்களுக்கு நிலமே வேண்டாம்.. அந்த மதிப்புக்கு டவுன் பக்கத்தில் சொத்தாக வாங்கிக் கொடுங்கள்" என்று வாங்கிக் கொண்டார்கள்.

மதியழகனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அப்படியே செய்தான்.

நிலத்தை நேசித்தான். தான் செய்கிற தொழிலை நேசித்தான். எல்லாரும் நிலங்களை விற்றுக் கான்கிரீட் கட்டிடங்களை உருவாக்கி விட்டால் வேளாண்மை என்ன ஆகும்? "எங்க ஏரோட்டம் நின்று போனால் உங்க காரோட் டம் என்னவாகும்" என்று கண்ணதாசன் பாடலில் வருகிறாற் போன்ற கேள்வி அவன் மனதுக்குள் இருந்தது. தனாலேயே அந்த வயதிலேயே ஊரில் முக்கிய புள்ளி ன்பதால் கிராமவாசிகள் குடும்பத்துப் பிரச்சினைகளைத் ர்க்கும் போது நிலங்களைப் பிரிப்பதில் நியாயமாக ருப்பான். அவனது வீட்டிலேயே ஏன்? அவன் வாழ்வி லேயே ஒரு தலைக்குனிவான நிகழ்வு நடக்கும் வரை.

• • •

வழக்கம் போல் இரவு எட்டு மணி வாக்கில் அவன் ட்டி நுனியைப் பிடித்தபடி தனது வீட்டுக்கு வந்த து விருந்தினர் அறையில் விளக்கு எரிந்தது தெரிந்தது.

"என்னடா.. ஆச்சரியம்!" என்று எண்ணிக் கொண்டே றும் வீட்டை நெருங்கினான். போர்ட்டிகோவில்



முன்னால் இருந்த படிகளில் மேல் படியில் கன்னத்தில் கை வைத்தபடி விலாஸினி அமர்ந்து கொண்டிருந் தாள்.

ஒரு நிமிடம் திடுக்கிட்டுப் போய் நின்றான். "விலா ஸினியா? எங்கே.. இங்கே? போன வாரம்தானே விடை பெற்றுக் கொண்டு போனாள்."

மறுபடியும் நடையை எட்டிப் போட்டான்.

"சார்!" என்று உற்சாகமாக எழுந்தாள் விலாஸினி.

"ஹலோ! என்னம்மா? பேக் டு பெவிலியனா?" என்றான்.

"ஆமா.. சார்?" என்றாள்.

அவன் சிரித்து விட்டான்.

"ஓ.கே.! காலேஜ் வழக்கம்.. அப்படித்தானே? அப் புறம்..!"

"என்ன சார்? வீட்டுக்கு வந்தா வாங்கன்னு பிரகாசமா வரவேற்க மாட்டீங்களா? ஏன் வந்தேங்கற மாதிரிப் பாக்கறீங்க?" என்றாள்.

அவன் முகம் தீவிர பாவனைக்கு மாறியது.

"நான்தான் அன்னைக்கே.. நீங்க எப்ப வேண்ணா வர்லாம்னு சொல்லிட்டேனே! ஓ.கே. இப்ப உங்க திருப்திக்காக 'வெல்கம் மை டியர் யங் லேடி போதுமா?'" என்றான்.

அவள் சமாதானமானவள் போல் நடித்தாள். பிறகு இருவரும் குபீரென்று சிரித்தார்கள்.

சிரித்துக் கொண்டே உள்ளே நுழைகையில் அம்மா வந்தார்.

"தம்பி! அவசரமா.. நான் இப்பக் கிளம்பறேன்" என்றார்.

"என்னம்மா.. விஷயம்?"

"நம்ம.. கமலியோட நாத்தனார் வீட்ல நாளைக்குக் குலதெய்வம் கோயிலுக்குப் போயி பொங்கல் வக்கிறாங்களாம்.."

"காலைலதானேம்மா.. கார்ல அனுப்பறேன்" என்றான்.

"இல்லடா தம்பி! காலைல அஞ்சு மணிக்குக் கோயிலுக்குக் கிளம்பறாங்களாம்" என்றார்.

"சரி.. நான் கொண்டு வந்து விடட்டுமா?" என்றான்.

"இல்ல. டிரைவரை வரச் சொல்லிருக்கேன்" என்றார். அப்போதுதான் இந்தப் பெண்ணை என்ன செய்வது" என்று நினைத்தாற் போல.

"எங்கண்ணு.. விலாஸினி! நீ இருந்துக்குவேதானே" என்றார்.

அப்போதுதான் மதியழகனுக்கும் அது புரிந்தது. தர்ம சங்கடமாக உணர்ந்தான்.

அம்மா மனதைத் தேற்றிக் கொண்டாற்போல் சொன்னார்.

"அது சரி..! சமையற்கார சரசுவதி இருக்கா இல்லே!" என்று.



"எனக்கொன்றும் பிரச்சினையில்லே!" என்றாள் விலாஸினி.

அம்மா விடைபெற்றுக் கொண்டு போனதற்குப் பின் "விலாஸினி! சாப்பிட்டரலாமா?" என்றான்.

அம்மா இல்லாததால் அவளை உபசரிக்க வேண்டியது தன்னுடைய கடமை என்று உணர்ந்தவன் போல் உடன் அமர்ந்து தானும் சாப்பிட்டான்.

சமையற்காரம்மாவிடம் திரும்பி "ஏம்மா! காளிமுத்து எங்கே!" என்றான்.

"காளிமுத்துவும் அவர் சம்சாரமும்தான் அந்த விசேஷத்துக்குப் போயிருக்காங்களே" என்றாள்.

"சரி! இந்த அம்மாவுக்கு என்ன வசதி வேணுமோ.. பாத்து செய்ங்க.." என்றான்.

"சரிங்கய்யா!" என்றாள் சரசுவதி.

அன்றைக்கு நிலவொளி பகல்போல் இருந்தது. அந்த மாதிரி நிலாக்காலத்தில் நடப்பது என்பது மதியழகனுக்கு மிகவும் பிடிக்கும். ஒரு சம்பிரதாயத்துக்காக.

"விலாஸினி. ஒரு வாக் போயிட்டு வரேன்" என்று சொன்னான்.

"நானும் வரேன்" என்றாள்.

மதியழகனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. "அதுக்கென்ன வாங்களேன்" என்றான்.

சற்று தூரம் நடந்தார்கள்.

"சார்.. இங்க பயப்படறதுக்கு ஒன்றுமில்லையா?" என்றாள்.

"பயப்படறதும், பயப்படாததும் நம்ம இஷ்டம் தானே" என்றான்.

அப்போது ஒரு புதருக்குள் இருந்து முயல் நின்று குதித்தோடியது. அந்த சத்தத்தில் பயந்து அவன் மேல் பாய்ந்து கட்டிக் கொண்டாள்.

"ஹலோ! அது வேறு ஒன்னுமில்லே! முயல் குட்டி" என்றான்.

"ஓ!" என்று நிமிர்ந்தாள்.

"எங்கப்பா.. சொல்வார் முயல் வேட்டைக்குப் போவாங்களாம். ரோட்ல கூட கார்ல போகும்போது முயல் மேல லைட் அடிச்சா திகைத்து நின்றுடுமாம். அப்புறம் வேட்டைதான்" என்றான்.

அவன் சிரித்தான்.

"அப்புறம். அப்பா சொல்வாங்க.. முயல் கறி ரொம்ப டேஸ்டா இருக்குமாம்" என்றான்.

"நீங்க சாப்பிடுவீங்களோ..?" என்றான்.

"எப்பவாவது கொஞ்சம் சிக்கன் சாப்பிடுவோம் நீங்க?"

"நான் ப்யூர் வெஜிடேரியன்" என்றான்.

"ரியலி?" "சே! சாகசப் பட்சியோ" என்றாள். அப்புறம் வெடுக்கென்று திரும்பினாள்.

"என்.. இதைக் கொஞ்சம் நிறுத்தறீங்களா?" என்றாள் கோபமாக.

"எதை?" என்றான் வியப்பாக.

"இதைத்தான்.. இந்த வாங்க போங்கன்னு பேசறீங்களே?" அதை?" என்றாள்.

"ஓ..!" என்றான். இயல்பாக ஒருமைக்குத் தாவிக் கொண்டான். பிறகு



"உங்க ப்ராஜக்ட் என்னாச்சு?" என்றான்.

"சார்! அது பத்தி ஒன்னு ரெண்டு விஷயங்கள் உங்க கிட்டே பேசணும். அதான் வந்தேன்" என்றாள்.

மோட்டாரிலிருந்து தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த ஒரு தொட்டிக்கருகில் இரண்டு அடி மரத்துண்டுகள் அழகான இருக்கைகள் போலப் போட்டு வைத்திருந் தார்கள் அதில் அமர்ந்தார்கள்.

பண்ணையாள் ஒருவனிடம் ஏதோ சொல்லியதும் அவன் போய் சூடாக ஏதோ பலகாரம் சாப்பிடக் கொண்டு வந்து பரிமாறினான்.

அந்தக் காலத்துல எல்லாம்.. நிலாச்சோறுன்னு சாப் பிடுவாங்க. தெரியுமா?" என்றான்.

"ஆமா!" என்றாள் கொஞ்சம் சாப்பிட்டாள். ப்ராஜக்ட் பற்றிய விவரங்கள் பேசிக் கொண்டே ஆளுக்கொரு தட்டைக் கையில் வைத்துக் கொண்டு சூடான பதார்த் தங்களைச் சாப்பிட்டது சுகமாக இருந்தது.

தனது குடும்பப் பின்னணி பற்றிச் சொன்னாள் விலா ஸினி.

பெரிய பணக்காரக் குடும்பமாம். எது கேட்டாலும் உடனே கிடைக்குமாம். இரண்டு சகோதரர்களாம், அவர்களும் சொந்த பிஸினஸில் இருந்தார்களாம். வீட்டில் கல்யாணம் செய்து வைத்து விடுவார்கள் என்று பயந்து கொண்டு காலேஜுக்கு வந்து விட்டாளாம். வேளாண்மைத் துறை என்றால் பிடிக்குமாம்.

தன் தாய், தந்தையரைப் பற்றி சகோதரர்களைப் பற்றி யெல்லாம் அவள் சுவாரசியமாக சொன்ன விதத்தில் அடிக்கடி சிரித்தார்கள்.

பேசிக் கொண்டார்கள்.

சாப்பிட்டு முடித்துக் கூட ஒரு மணி நேரம் ஆகி விட்டது.

பண்ணையாட்களிடம் "நீங்க வேண்ணாப் போங்க" என்று சொல்லி அனுப்பி விட்டான்.

நேரம் போனதே தெரியாமல் பேசிக் கொண்டிருந்து விட்டுப் பதினோரு மணியிருக்கும். எழுந்தார்கள்.

திடீரென்று அந்தத் தொட்டியைக் காட்டிக் கேட்டாள்.

"இந்தத் தொட்டி எவ்வளவு பெருசு" என்று.

அவன் சொன்னான்.

"அது இருக்கும்.. ஏழெட்டு அடி" என்றான்.

சட்டென்று தொட்டியின் விளிம்பின் மேல் ஏறி நின்றாள்.

தொப் என்று குதித்தாள். ஆனால் ஓரிரு நிமிடங்களில் அவள் திணறுவது தெரிந்து அவனும் எட்டிக் குதித்தான்.

உள்ளே போனதும் அவளது இரு கரங்களும் மதி யழகன் கழுத்தை வளைத்தன.

"ஏமாந்துட்டீங்களா? எனக்கு நீச்சல் தெரியும். தண் ணீருக்கடியில் இருந்து இந்த மாதிரி அழகான பொண்ணு. அதுவும் ஒரு பொண்ணணி நேரத்துல "ஐ லவ் யூ" சொன்னா எப்படி இருக்கும்னு தெரியுமா?" என்றாள்.

அவன் முகத்தில் முகம் பதிய "ஆமா மிஸ்டர்.. மதியழகன்" என்று இதழ் பதித்தாள்.

"தேவ்! என்ன இது?" என்று அவன் திணறுகையில் சட்டென்று மேலே வந்தார்கள்.



அவர்கள் இருவரும் மேலே எழுகையில் பங்களாவின் பின் கட்டுப் பகுதியில் கவலையுடன் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த ஐந்தாறு வேலையாட்கள் மறைந்து கொள்வதைப் பார்த்த அவன் கடுப்பாகத் திரும்பி,

"அறிவிருக்கா.. உனக்கு?" என்றான்.

அவள் சிரித்தாள்.

"என்ன சிரிப்பு?" என்றான்.

"இப்படிக் கோபிச்சுகிட்டா.. உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்குன்னு அர்த்தம்?" என்றாள்.

கலகலவெனச் சிரித்தாள்.

"அட... ஆண்டவா!" என்று தலையில் கை வைத்துக் கொண்டு தொட்டியின் விளிம்பில் அமர்ந்த வேளையில் தான் அவனுக்குள் மின்சாரம் போல் பாய்ந்தது.

நீரில் முற்றுமாக நனைந்து ஆனால் நீந்தி ஒவ்வொரு முறையும் எழுந்து கலகலவென சிரிக்கிற அந்தப் பெண் ணின் கொள்ளை அழகு.



## 5

சர் சர்ரென்று கார்கள் வந்து நின்றன!

மதியழகனின் தாயார் தலைட்சுமியம்மாள் உள்ளே பின் கட்டில் நின்றபடி ஆட்களிடம் வேலை வாங்கிக் கொண் டிருந்தார்.

பின்கட்டில் பெரிய இடம் இருந்தது. சிமெண்ட் தளம் போட்டிருந்தார்கள். அந்த சிமெண்ட் தளம் அரை வட்ட வடிவமாக இருந்தது. அதன் ஓரங்களில் லேசாகக் கரை கட்டினாற் போல் செங்கல் பதித்துக் கட்டியிருந்தார்கள். அதன் அந்தப் புறத்தில் சரியான இடைவெளியில் தென்னை மரங்கள் நட்டிருந்தார்கள்.

அந்த சிமெண்ட் தளத்தில் அவனது தந்தையார் இருந்த போது மகனுக்கும், தந்தைக்கும் குஸ்தி நடக்கும். மதி யழகனின் சகோதரிகள் இருவரும் ஓடிப் பிடித்து விளை யாடுவார்கள். ரைஸ் மில்லில் இருக்கும் அளவுக்குப் பரப்பளவும் இருந்ததால் சில நேரங்களில் நெல்லைக் காயப் போடவும் செய்வார்கள்.

''மல்டி பர்ப்பஸ் பேக் யார்ட்'' என்று பெயர் வைத் திருந்தான் மதியழகன்.

சகோதரிகள் நொண்டியடித்து விளையாடும்போது குறுக்கே புகுந்து விழுக்காட்டி விடுவான். மொத்து கிடைக்கும். ஆனாலும் அது ஒரு பொற்காலம் என்று அம்மாவும் மகனும் பேசிக் கொள்வார்கள்.

மதியழகனுக்காவது நிர்வாகம், வேலை என்று பொழுது போதாமல் இருந்தது. அம்மாவுக்கும் அத்தனை பெரிய பங்களாவைப் பராமரிக்க வேண்டிய அவசியம் இருந்தது. எனினும் கணவனின் மறைவு அவரை மிகவும் தாக்கி யிருந்தது. விரைவாகவே மகனுக்குத் திருமணம் செய்து வைத்துவிட வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் மகனிடம் அது குறித்துப் பேச பயமாக இருந்தது.

ஒரே ஒரு முறை அது பற்றிப் பேச ஆரம்பித்தவுடனே கோபம் பொங்கி விட்டது.



''அம்மா! என்னம்மா விளையாடறீங்களா? இருபத் தேழு இருபத்தெட்டிலதான் கல்யாணம்'' என்றான்.

''தம்பி... நான் சொல்றதைக் கேளு. அந்தக் காலத்துல எல்லாம் இருபது இருபத்திரண்டுல கல்யாணம் செய் வாங்க... ஐம்பது வயசுக்குள்ளே குழந்தைகளுக்குக் கல்யாணம் செய்வாங்க. அறுபதுக்குள்ளே பேரன், பேத்தி பாத்துடுவாங்க.. இப்பல்லாம்.. பணம் பணம்ன்னு ஓடி.. அப்புறம்.. ஐம்பது அறுபதுக்குள்ள.. தளர்ந்து போயிட றாங்க'' என்றார்.

எப்படியாவது தனக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்ற ஆசையில் அம்மா பேசுவது அவனுக்குப் புரிந்தது.

அப்பாவுக்கு அந்த ஆக்ஸிடெண்ட் மட்டும் நடக்காமல் இருந்தால் இன்னும் எவ்வளவோ நாட்கள் இருந்திருப்பார் என்றும், அவரும் இள வயதிலேயே திருமணம் முடித்தவர் என்பதாலோ என்னவோ இரண்டு பெண்கள் திருமணத்தையாவது பார்த்தார் என்றுதான் அவனுக்கும் தோன்றியது. ஆனால் கொஞ்சம் அந்த மாதிரிக் கருத்தைத் தெரிவித்தாலும் அம்மா ''பொசுக்''கென்று கோழியை அமுக்குகிறாற் போல் தன்னை அமுக்கிப் பிடித்து விடு வார் என்று தெரியும்.

''சும்மாயிருங்கம்மா..!'' என்று ஒரே வார்த்தையில் சொல்லி அதை அடக்கி வைத்திருந்தான். ஆனால் விலா ஸினியின் வருகை அவனுக்குள்ளும் ஏதேதோ நினைவு களைக் கிளறியிருந்தது.

அன்றைக்கு அவள் காட்டிய துணிச்சல் அவனுக்கு ஆச்சரியத்தைத் தோற்றுவித்திருந்தது. லேசான அதிர்ச் சியும் கூட...

இரண்டு சகோதரிகளுடன் வளர்ந்தவன் அதனால்
பெண்களிடம் இயல்பாகத்தான் பழகுவான். ஆனால்
அவர்கள் இருவரும் சராசரியான இரண்டு குடும்பப்
பெண்கள். தங்கள் கல்வியறிவை நேர்த்தியான நடை,
உடை பாவனைகளில் வெளிப்படுத்துவார்கள் அவ்வளவு
தான்.

விலாஸினியோ புயலாக இருந்தாள்.

வேலையாட்கள் ஆங்காங்கே ஒளிந்திருந்து பார்க்
கிறார்கள் என்பது தெரிந்ததால் வெளிப்படையாகத் திட்ட
வும் முடியவில்லை. தண்ணீருக்குள்ளே நடந்தது யாருக்
கும் தெரியாது என்று சமாதானப்படுத்திக் கொண்டாலும்
தோளில் தொற்றிக் கொள்ளாத குறையாக அவள் அவன்
அருகில் நடக்க முயன்றபோது மட்டும் அடிக்குரலில்
கோபமாகச் சொன்னான்.

"மிஸ்... விலாஸினி.. பிஹேவ் யுவர் செல்ப். இது
வில்லேஜ். எனக்குன்னு ஒரு இமேஜ் இருக்கு. டோண்ட்
ஸ்பாயில் ஆல் தட்" என்றான்.

உடனே அவள் நல்ல பிள்ளையாக ஒதுங்கி நடந்து
வந்தாள்.

மதியழகன் அவளோடு நடப்பதைத் தவிர்த்தவனாக
முன்னே வேகமாகப் போனான்.

சமையற்காரம்மாவை அழைத்தான்.

"அந்தப் பொண்ணுக்கு துண்டு குடுங்க" என்று
சொல்லிவிட்டு அறைக்குப் போய் விட்டான்.

விலாஸினி எதையும் காட்டிக் கொள்ளாமல் ஆனால்
அலட்டிக் கொள்ளாமல் சமையற்காரம்மாளுடன் நேரம்
செலவழித்து விட்டு அந்த அம்மா சூடாகக் காய்ச்சிக்



கொடுத்த பாலைக் குடித்து விட்டு அறைக்குப் போய்
விட்டாள்.

எங்கே தன்னுடைய அறைக்கு வந்து விடுவாளோ
என்ற அச்சத்துடனேயே இருந்தான் மதியழகன்.

கதவைத் தாளிடுவது அவன் பழக்கம் இல்லையாத
லால் கதவை ஒருக்களித்து வைத்து விட்டு பதினோரு
மணிக்குத்தான் உறங்கினான்.

இரவு ஒரு மணியிருக்கும்!

யாரோ தன்னைத் தொட்டாற் போல் தோன்றவும்
திடுக்கிட்டு விழித்தான்.

விலாஸினி அந்தப் பெரிய படுக்கையில் முழங்
கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்தபடி முன்னும்
பின்னும் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தாள்.

விழித்தவுடன் அவன் மனதில் தோன்றியது இரவு
விளக்கின் ஒளியில் தேவதை போல் காட்சியளித்தாள்
என்பதுதான்.

முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டான்.

"ஹேய்! என்ன இப்படியெல்லாம் படுத்தறே!" என்
றான்.

சிரிப்பும் வந்தது. கோபமும் வந்தது. இவ்வளவு
அழகான இளமையான பெண் தன்னைத் தூரத்தித் தூரத்தித்
தொல்லை கொடுப்பது தனக்கே பிடிக்கிறது என்று
நினைத்த போது அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.
ஆனந்தமாகவும் இருந்தது.

"என்ன படுத்திளேன்? நீங்கதான் படுத்திறீங்க?"

இவன் சம்மணமிட்டு அமர்ந்தான். குழந்தைக்குச்
சொல்வது போல் சொன்னான்.

"விலாஸினி! என்னம்மா... நீ புரிஞ்சுக்க மாட்டேங்கறே! இப்படியெல்லாம் நடு ராத்திரியில என் ரூமுக்கு வர்றே... எல்லாரும் என்ன நினைப்பாங்க" என்றான்.

"ஹலோ! யார் என்ன நினைப்பாங்கங்கறது பத்தி எனக்குக் கவலையில்லை. நீங்க என்னைப் பத்தி என்ன நினைக்கறீங்க.. அதை மட்டும் சொல்லுங்க."

"அதெல்லாம்.. அப்படிச் சொல்ல முடியாது. நீ ஏதோ ப்ராஜக்ட் பண்ண வந்தே பண்ணிட்டுப் போ. இதெல்லாம்... இந்த வயசுக்கு வர்ற சலனங்கள்" என்று அவன் முடிக்கு முன்னே அவள் அவன் கழுத்தை வளைத்தாள்.

முகம் நோக்கிக் குனிந்தாள். தன்னுடைய திறமையெல்லாம் வெளிப்படுத்துவது போல் காட்டிய வேகத்தில் அவன் நிலைகுலைந்தான் என்பதால் தன்னை மறந்து பதில்கள் கொடுத்தான்.

தங்களை மீறுகிற நேரத்தில் அவள் சட்டென்று விலகினாள். கட்டை விரலை ஆட்டிக் காட்டியபடி அறையை விட்டு வெளியே போனாள். அதுவும் கலகலவென்று சிரித்தபடி.

மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல், வெளியே வரவும் யோசித்தபடி புரண்டு புரண்டு படுத்தபடி யோசனையில் ஆழ்ந்தான்.

மறு நாள் காலை!

அம்மா வந்து விட்டார்.

மிகவும் பதவிசாக நடந்து கொண்டாள். வேலையாட்களின் பார்வை தன் முதுகுக்குப் பின்னால் துளைப்பது தெரிந்தது அவனுக்கு அவஸ்தையாக இருந்தது.



அம்மாவுக்கு அரசல் புரசலாகத் தெரிந்ததோ என்னமோ அம்மா ஒன்றும் கேட்கவில்லை. அது வேறு அவனுக்கு இன்னும் அவஸ்தையாக இருந்தது.

"அம்மா நாலு வார்த்தை திட்டி விட்டால் கூடப் பரவாயில்லை" என்றிருந்தது.

அம்மா எதுவுமே கேட்கவில்லை!

அதைக் காட்டிலும் அவஸ்தையான விஷயம் என்னவென்றால் விலாஸினியின் பார்வை அவன் மீது படிந்த போதெல்லாம் அவள் கண்களில் குறும்பு கூத்தாடியது. மின்னல் பாய்ந்தாற்போல் உணர்ந்தான்.

இரண்டு முறை அப்படித் தவித்தாலும் மூன்றாவது முறையிலிருந்து தானும் பதில் பார்வை பார்ப்பதை உணர்ந்தான்.

அந்த மாதிரி ஒரு சூழ்நிலையை விலாஸினி ரசிப்பது தெரிந்ததும் கோபமும் வந்தது.

நல்லவேளையாக ஞாயிற்றுக்கிழமை மாலையே புறப்பட்டாள் விலாஸினி.

மதியழகனும் வழியனுப்ப வேண்டுமென்பதற்காக அவள் கூட வந்தான்.

அவனுக்கு மட்டும் கேட்கும்படியாகச் சொன்னாள். "மிஸ்டர். மதியழகன்.. நீங்க என்கிட்டேயிருந்து தப்பிக்கவே முடியாது" என்று.

"சரி.. சரி.. கிளம்பு!" என்றான் எரிச்சலாக. அதற்கும் கலகலவென்று சிரித்தாள்.

போன வாரம் நடந்த நிகழ்வுக்குப் பிறகு அவளும் அழைக்கவில்லை. இப்போது நான்கைந்து நாட்கள் ஓடியிருந்தது.

கிட்டத்தட்ட நடந்ததெல்லாம் கனவோ என்று கூடத் தோன்றிவிட்டது. அவன் தன்னுடைய வேலைகளில் ஆழ்ந்தான். அதுபோல அவன் வெளியே போயிருந்தான்.

அப்போதுதான் கார்கள் இப்படி சர் சர்ரென்று வந்து நின்றன.

தனலட்சுமியம்மாள் வந்திருப்பவர்கள் யார் என்று தெரிந்தவுடன்.

''கணக்குப்பிள்ளை! தம்பிக்கு போன் போடுங்க'' என்றார்.

போட்டார்கள்!

* * *

''அம்மா..! எனக்கு என்னமோ எல்லாமே வேகமா நடக்கற மாதிரி இருக்கு'' என்று.

''ஆமாம்ப்பா! ஆனா.. நல்ல விஷயம் தானே நடக்கிறது?'' என்றார் அம்மா.

''நல்ல விஷயம்தான்ம்மா! ஆனா.. எனக்கு இப்ப என்ன இருபத்து மூணு வயசுதானே ஆச்சு.. அதுக்குள்ளே.''

''அது சரிப்பா! இப்படி நல்ல இடமாத்தானே மேல வந்து விழுகையிலே நாம ஏன்ப்பா.. தடுக்கணும்!'' உனக்குப் பொண்ணைப் பிடிச்சிருக்கா..? அதுல ஏதும் சந்தேகமா?'' என்றார் தனலட்சுமியம்மா.

''புடிச்சுத்தான்.. இருக்கு..! ஆனா.. கொஞ்சம் விளையாட்டுத்தனமா இருக்கா!'' என்றான்.

''அதெல்லாம், குழந்தை குட்டின்னு.. வந்தா.. எல்லாம் சரியாப் போயிடும். நீயும் விவசாயம் வேலைன்னு அலைஞ்சுகிட்டே இருக்கே. இந்தாப் பெரிய வீட்ல



தனியா நான் அல்லாடிகிட்டு இருக்கேன். ஒரு பொண்ணு வீட்டுக்கு வந்தா நல்லாத்தானே இருக்கும்?'' என்றார் தனலட்சுமி.

மதியழகனுக்கும் விலாஸினியைப் பிடித்தது. கண்டதும் காதல் என்றெல்லாம் இல்லாவிட்டாலும் அவள் குறும்பும் குதூகலச் சிரிப்பும் அவனுக்குப் பிடித்துத்தான் இருந்தது. ஆனால் உடனே கல்யாணம் வேண்டுமா என்ற தயக்கம் இருந்தது. ஆனால் எதுவும் அவன் கருத்துக்காக நிற்கவில்லை.

மதியழகனின் சகோதரிகள் ஆர்வமாக ஏற்பாடு செய்தார்கள்.

திருமணம் வெகு தடபுடலாக நடந்து முடிந்தது.

விலாஸினி சரளமாகவும், கலகலப்பாகவும் பழகினாள். அதிலும் மதியழகனின் இளைய சகோதரியும் அவளும் ஏதோ பேசிக் கொண்டு கிளுகிளுவென்று சிரித்துக் கொள்வார்கள். அதெல்லாம் பார்க்க மதியழகனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

**சீதனம், சீர்** என்ற பெயரில் விலாஸினியின் தந்தை ஒரு ஊரையே கொண்டு வந்து இறக்கி விட்டார். **சீதனப்** பொருட்களைப் பார்ப்பதற்கென்றே ஊர்க்காரர்கள் ஊர்வலம் போல் வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

விலாஸினிக்கு அதெல்லாம் வேடிக்கையாக இருந்தது. விலாஸினிக்கென்று தனிக்கார், அவளுக்கென்று வேண்டும் மட்டும் கைச்செலவுக்கு வட்டி கிடைக்கிற மாதிரி டெபாசிட் என்று எல்லாவற்றையும் ஏற்பாடு செய்து விட்டுப் போனார்.

சகோதரர்கள் ''விலாஸ்'' ''விலாஸ்'' என்று உருகினார்கள்.

போல வளர்த்தோம். பார்த்து வச்சுக்குங்க" என்று கெஞ்சாத குறையாகப் பேசுவதைப் பார்த்து "இளவரசியைப் மதியழகனுக்கு ஒரே ஆச்சரியம்.

மகேஸ்வரிதான் வந்து "ஐயே! போதுமே! எங்க வீட்லயும் எல்லாரும் மனுஷங்கதான். அண்ணி அவங்களையெல்லாம் மிரட்டினாப் பத்தாதா..." என்று கேலி செய்தாள்.

விலாஸினியின் தந்தையும், தாயும் புறப்படும்போது மதியழகனின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதார்கள்.

மதியழகன் வெகுவாகத் தேற்றினான்.

"உங்களுக்குப் பொண்ணைப் பாக்கணும்னு இருந்தா.. எப்ப வேண்ணா வாங்க.. எத்தனை நாள் வேண்ணாத் தங்குங்க.." என்று தேற்றினான். அது மட்டுமில்லாமல் சென்னையில் கூட இவர்களுக்கென்று பங்களாக்கள் அதுவும் அவன் பெயரில் வாங்கிப் போட்டார்கள்.

பணம், பொருள், அன்பு என்று விலாஸினிக்கு எதுவுமே கிடைக்காத நிலை இருக்கவில்லை.

திருமணம் முடிந்தவுடன் ஹனிமூன் போனார்கள். இருவருக்குமே மிகவும் இளவயது என்பதாலோ என்னவோ எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாதவர்களாகக் கழித்தார்கள்.

எடுத்ததற்கெல்லாம் சிரித்தார்கள். அடித்துப் பிடித்து விளையாடிக் கொண்டார்கள்.

விலாஸினி சுதந்திரமாக வளர்ந்தவள். என்பதாலோ என்னவோ அவனிடமும் சுதந்திரமாகவே நடந்து கொண்டாள்.



தனிமையான நேரங்களின் போது கூட விலாஸினி வெட்கம் என்றால் கிலோ என்ன விலை என்று கேட்பாள் போலிருந்தது.

"ஹேய்! என்ன... இந்த ரகளை பண்றே?" என்று அவன் சிரித்துக் கொண்டான்.

ஆணும், பெண்ணும் என்ற உறவு நிலையின் எல்லா பிரிவுகளையும் காட்டினாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

மெதுவாக மதியழகன் ஒரு நாள் சொன்னான்.

"விலாஸினி! இன்னும் ஒன்றரை வருஷம்தானே படிப்பிருக்கு? முடிச்சுரு" என்றான்.

"எதுக்கு?" என்றாள்.

"என்ன எதுக்குன்னு கேட்கறே?"

"பாருங்க! மதியழகன் மொத்தப் பாடப்புத்தகத்தையும் நான் தரோ பண்ணி வச்சாச்சு. வேண்ணா அதுல ஒரு பரீட்சை எழுதி ஒரு "பாஸ்" வாங்கலாம். நாலெட்ஜ்தான் முக்கியம் டிகிரி இல்லே!" என்றாள்.

"சொல்லுவே! ஏன்னா.. டிகிரி வாங்கி அதை வச்சு ஒரு வேலை வாங்க வேண்டிய தேவை உனக்கில்லே" என்று சிரித்தான் மதியழகன்.

"இருக்கலாம். அதுவும் ஒரு காரணமா இருக்கலாம். அல்லது எல்லாத்தைப் பத்தியும் தெளிவா ஒரு முடிவு வச்சிருக்கிறது ஒரு காரணமா இருக்கலாம்."

"எல்லாத்தையும் பத்தியும் தெளிவா ஒரு முடிவா..? நீயா?" என்று மதியழகன் சிரித்தான்.

"ஏன்.. ஏன் அப்படிச் சொல்றீங்க?" என்று சிரித்தாள்.

"நம்ம கல்யாணமே தெளிவான முடிவு மாதிரித் தெரியலே. வந்தேன் கண்டேன் வென்றேன்னு கோழியை அமுக்கற மாதிரி என்னை அமுக்கிப் போட்டுட்டே இல்லே!" என்றான்.

அவள் சிரித்தாள்!

நெருங்கினாள். அவனுக்கு வேறு விதமாகப் பதிலளித்துக் கொண்டே சொன்னாள்.

"அப்போ! பிடிக்காமத்தான் ஒத்துக்கிட்டீங்களா?" என்று சிரித்தாள்.

"பிடிக்காம யாராவது ஒத்துப்பாங்களா? ஆனா, வேகமான இந்தப் படையெடுப்பைத்தான் தாங்க முடியலே..." என்றான் சிரித்துக் கொண்டே.

இருவரும் சிரித்தார்கள்.

மறுபடியும் கேட்டான் மதியழகன்.

"ஹேய்! நான் சீரியஸாச் சொல்றேன்? படிக்கப் போறியா.. இல்லையா?"

"இல்ல.. மேன்! நான் போகலே! ஐம் கோயிங் டு என்ஜாய்.. பாமிலி லைப்" என்றாள்.

"போச்சு!" என்றான் மதியழகன்.

"ஏன்?"

"நான் தீர்ந்தேன்" என்றான்.

"ஹ்ஹும்..! நீங்கே மாட்டீங்க! வாழ்க்கையை ரசிக்கப் பழகுங்க.. புலம்பாம..." என்றாள்.

கண்டிப்பாக மதியழகன் புலம்புகிற மாதிரி எதுவும் நடக்கவில்லை. ஆனால் நாலே மாதங்களில் அவளிடத்தில் ஒரு வித்தியாசம் தெரிந்தது.



மதியழகனுக்கு அது உறுத்தலாகவே இருந்தது. கடைசியில் அந்த மாற்றம் எதனால் என்று தெரிந்தபோது. மொத்தக் குடும்பமும் நிலை குலைந்து போனது.



# 6

"கமலி! வேண்டாம்! என்று ஆள்காட்டி விரல் நீட்டி எச்சரித்தாள் விலாஸினி.

"ஆசை! தோசை! அப்பளம்.. வடை!" என்று அழகு காட்டினாள்.

வீட்டுக்குப் பின்னாலே இருந்த பின்கட்டில் மூங்கில் கூடைச் சேர் ஒன்றில் அமர்ந்தபடி இந்த ரகளைகளைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் மதியழகன்.

"மதி...! பாருங்க! இந்தக் கமலியை" என்று புகார் சொன்னாள் விலாஸினி.

மதியழகன் "அம்பேல்" என்பது போல் இரண்டு கைகளையும் உயர்த்திக் காட்டினான்.

"அங்கே... அங்கே... சொல்லு!" என்று அம்மாவைக் கண் காட்டினான்.

விலாஸினியும் விடுவேனா என்று அம்மாவிடம் போய்ச் சொன்னாள்.

தனலட்சுமியம்மாள் உடனே. கமலியிடம் சொன்னாள்.

"ஏய்... கமலி! அந்தப் பந்தைக் குடு" என்று கண்டித்தாள்.

"ஆமா! நீ எப்பப் பார்த்தாலும் மருமகளுக்கே சப்போர்ட்" என்றாள் கமலி.

"ஆமாடி... பின்னே! நம்ம வீட்டே கதின்னு வந்திருக்கா. அவ மனசு நோகலாமா? என்றார் தனலட்சுமியம்மா சிரிக்காமல்.

"அதான்.. அதான்.. அந்தத் தைரியம்தான். அண்ணி.. எப்பப் பாரு.. அழிச்சாட்டியம் பண்றா" என்றாள்.

"ஆமாடி! அவதான் என்ற செல்லப் புள்ளை" என்றார் அம்மா.

மதியழகன் நழுவுவதைப் போல எழுந்து நகர சகோதரிகள் இருவரும் வந்து குறுக்காட்டினார்கள்.

"அப்படி எல்லாம் நீ ஓடிப் போயிற முடியாது. பதில் சொல்லிட்டுப் போ" என்றார்கள்.

"என்ன பதில் சொல்லணும்?"

"யார் செஞ்சது... தப்பு!"

மதியழகன் ஒருமுறை திரும்பிப் பார்த்தான். பின்பு கண்களில் குறும்பு மின்னச் சொன்னான்.

"எப்பவும்... யார் பண்ணுவாங்க? விலாஸினிதான்" என்றான்.

விலாஸினி உடனே மட்டையை வீசி எறிந்து விட்டு 'தப்' 'தப்' என்று நடந்து உள்ளே போனாள்.

கமலேஸ்வரியும், மகேஸ்வரியும் சகோதரனுடன் சேர்ந்து சிரித்தார்கள்.

"தம்பி.. போ! சமாதானம் பண்ணு!" என்றாள் மகேஸ்வரி.

"சும்மாயிருக்கா.." என்றான் மதியழகன். சூழ்நிலையிலிருந்து தப்பிப்பதற்காகவோ என்னவோ தனது அலுவலக அறையில் போய்ப் புகுந்து கொண்டான்.



சற்று நேரம் கழித்து..!

"தம்பி.. சாப்பிட... வா" என்று குரல் கொடுத்தாள் கமலேஸ்வரி.

"அண்ணி.. வந்தாச்சா!" என்று பதில் குரல் கொடுத்தான் மதியழகன்.

"ம்.. வந்தாச்சு! என்றாள் கமலேஸ்வரி. மதியழகன் எழுந்து வந்தான்.

விலாஸினி அமர்ந்திருந்த சேருக்கருகில் இருந்த சேரில் அமர்ந்தான்.

விலாஸினி சட்டென்று எழுந்தாள்.

முறுக்கிக் கொண்டு போய் வேறொரு சேரில் அமர்ந்தாள்.

மதியழகனும் மகேஸ்வரியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பொங்கிக் கொண்டு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டார்கள்.

அமைதியாகச் சாப்பிட ஆரம்பித்தார்கள். சற்று நேரத்தில் கோபத்தில் இருக்கிறோம் என்பதை மறந்து போன விலாஸினி.

"கமலாக்கா..! நாளைக்கு சினிமாவுக்குப் போலாமா?" என்று பேச ஆரம்பித்தவுடன் மற்ற மூவரும் சிரித்தார்கள்.

விலாஸினியும் சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்து விட்டாள்.

"திடுக்"கென்று விழித்தான் மதியழகன்..! அத்தனையும் போன வாரத்தில் தன் வீட்டில் நிகழ்ந்த நிகழ்வு, கனவாகப் படக்கிறது.

இப்போது மும்பையில் இருந்தான்.

லயன்ஸ் கிளப் மாதிரியான ஒரு கிளப்பில் அவன் உறுப்பினராக இருந்தான். அதன் சார்பாக ஏதோ ஒரு கான்பிரன்ஸுக்காக வந்தான். அதற்குப் பிறகு நண்பர்களோடு சுற்றிப் பார்க்கக் கிளம்பி விட்டான்.

வந்து நான்கு நாட்களாகி இருந்தது. உள்ளுக்குள்ளே விலாஸினியின் நினைவு ஓடிக் கொண்டே இருந்தது.

மணியைப் பார்த்தான். அதிகாலை ஐந்து மணி!

பொய்யாகச் சண்டை போடுவதும், கொஞ்ச நேரத்திலேயே அதை மறந்தவள் போல சமாதானத்திற்கு வருவதும் அவள் இயல்பாக இருந்தது.

அந்த நிகழ்வு நிகழ்ந்த அன்று இரவு தங்கள் அறைக்கு அவள் வந்தவுடனே செய்த ரகளை அவன் நினைவுக்கு வந்தது.

"எப்படி... நீங்க.. நான்தான் தப்பு செஞ்சேன்னு சொல்லலாம்?" என்று மேலே விழுந்து பிடுங்கி.. அவள் செய்த பொய்ச் சண்டையும், அதற்குப் பிறகு தொடர்ந்த ஊடலும், கூடலும் இப்போதும் கூட இதழ்க் கடையோரத்தில் ஒரு புன்னகையை வரவழைத்தது.

அழைத்தான்!

அப்போதெல்லாம் செல்போன்கள் இந்த அளவு பிரபலமாகவில்லை.

டெலிபோனில்தான் அழைத்தான்.

அவர்களது அறைக்கென்று தனியாக ஒரு இணைப்பு வாங்கி வைத்திருந்தார்கள்.

விலாஸினி லைனில் வந்தாள்.

"ஹேய் விஷ்ணுஸ்..." என்றாள்.



''யாருய்யா... நீ..? தூக்கத்தைக் கெடுக்கறது?'' என்றாள்.

''தூக்கம் வருதா.. உனக்கு? கட்டையிலே ரெண்டு போடறேன்.. பாரு.. இங்க அவனவன் தூக்கம்.. வராம..'' என்றான்.

''அதான்.. நான் கூட வர்றேன்னு.. சொன்னேன் இல்லே..!'' என்றாள் விலாஸினி.

''டேய்.. புரிஞ்சுக்கடா! கூட வந்திருக்கறது பூராவும் ஜென்ட்ஸ்'' நாங்க மூணு பேரும் ஒரு டீமா.. சுத்திகிட்டிருக்கோம்..!''

''ஸோ.. வாட்! நானும் கூட இருந்துக்குவேன்.''

''இல்லை..! அப்புறம். உனக்காகத் தனியா அரேஞ்ஜ்மென்ட்ஸ் பண்ணிகிட்டிருக்கணும்'' என்றான்.

''போய்யா.. உனக்கு பயம்!''

''என்ன.. பயம்?''

''உன்னை விட அழகா.. அதுல யாராவது இருப்பாங்களா.. இருக்கும்.. அதான்.. பயம்..'' என்றாள்.

''ஆட ஆமா! அது வேற இருக்கில்லே! என்னை.. விட அழகா.. ரெண்டு பேர் இருக்காளுக.. அவளுகளும் உன்னை லைக் பண்ணினாங்கன்னு வை'' என்று இழுத்து நிறுத்த.

''யு ஆர் இன்சல்ட்டிங்.. மீ.''

''இல்லை! இன்ஸல்ட் பண்ணலே..! சேஃப் கார்ட் பண்றேன்'' என்றான்.

''ஸ்டாப்.. இட்!'' என்றாள். நிஜமாகவே கோபித்துக் கொண்டாள்.

விலாஸினி எந்த விஷயத்தை சாதாரணமாக எடுத்துக் கொள்வாள் எந்த விஷயத்தை மிகவும் தீவிரமான விஷயமாக எடுத்துக் கொள்வாள் என்றே கணிக்க முடியாத அளவில் நடந்து கொள்வாள். மதியழகனுக்கு அவள் அப்படியெல்லாம் இருப்பது பிடித்துத்தான் இருந்தது. ஆனால் அடிப்படையில் அவளைப் பற்றி அவன் நன்றாகப் புரிந்து வைத்திருந்தான். அப்படியெல்லாம் மேலோட்டமான பெண் அல்ல விலாஸினி என்பதுதான் அது.

"பரீட்சை எழுதுவதில் எனக்கு ஆர்வமில்லை" என்று சொன்னாலும் அவள் ஒரு விதத்தில் வேளாண்மை தொடர்பான எல்லா விஷயங்களையும் கரைத்துக் குடித்திருந்தாள் என்று அவனுக்குத் தெரியும்.

"கூர்த்த மதி" என்பார்களே அது போலே எந்த விஷயத்தையும் எளிதில் புரிந்து கொள்வாள். மனதில் வாங்கிக் கொள்வாள். ஆனால் சாதாரணப் பெண்ணைப் போல ஆடுவாள், பாடுவாள், சண்டை போடுவாள் கோபித்துக் கொள்வாள்.

திடீரென்று ஒரு நாள் சொன்னாள்.

"போங்க மதி! எனக்கு ரொம்ப அலுப்பா... இருக்கு" என்று.

"ஏண்டா!" என்றான் மதியழகன் வாஞ்சையாக.

"எல்லாமே கேட்டவுடனே... கிடைச்சா... அந்த லைப்ல என்ன த்ரில் இருக்கும்?" என்றாள்.

அவன் மேஜையில் எதையோ தேடிக் கொண்டிருந்தவன் திரும்பிப் பார்த்து விட்டுக் குபீரென்று சிரித்தான்.

"நல்லா... ஆச்சு.. போ.. இப்படி ஒரு கவலையா!"



"ஆமா.. பின்னே! அதுவும்.. கவலைதானே.." என்றாள்.

திடீர், திடீரென்று வேறு வேறு கோணங்களில் சிந்திப்பாள். பேசுவாள்.

மதியழகன் அதையெல்லாம் ரசிக்கத்தான் செய்வான். ஆனால் இந்த முறை டெல்லியில் இருந்து வீட்டுக்குப் போனவுடன் அவனது கோபத்தின் முழு வீச்சையும் பார்த்தான்.

ஊரிலிருந்து அவன் வந்த சமயம் அவனது சகோதரிகளும் இருந்தார்கள்.

பெரும்பாலும் மதியழகன் ஊருக்குப் போனால் அவன் திரும்ப வரும் வரை அம்மா உள்ளார்ந்த கவலையில் இருப்பார் என்பதாலோ என்னவோ கமலேஸ்வரியும், மகேஸ்வரியும் வந்து விடுவார்கள்.

கமலேஸ்வரிக்கும், விலாஸினிக்கும் இரண்டு வயது தான் வித்தியாசம் என்பதால் அவர்கள் இருவரும் கலகல வென்று சிரித்துக் கொண்டு தங்களுக்குள் கிசுகிசுத்தபடி நடமாடுவார்கள்.

அடிக்கடி இருபது மைல் தூரத்தில் இருக்கிற பட்டணத்துக்கு ஷாப்பிங் போய் விடுவார்கள்.

விலாஸினி இரண்டு பெரிய பெட்டிகள் வைத்திருந்தாள். அதில் முழுவதும் செயற்கை அணிகலன்கள் பாசி மணி மாலைகள் விதவிதமான வளையல்கள். தொங்கட்டான்கள் என்று நிரப்பி வைத்திருப்பாள்.

கமலிக்கு அந்தப் பெட்டியின் மேல் எப்போதும் ஒரு கண். ஒவ்வொரு முறை வரும்போதும் அதிலிருந்து தனக்குப் பிரியமானவற்றைக் கேட்டு வாங்கிக் கொள்வாள்.

விலாஸினியும் கொடுப்பாள்!

அப்படி இந்த முறையும் வீடு நிறைய மனிதர்கள் இருந்தார்கள்.

சகோதரிகளுக்கும், மகேஸ்வரியின் குழந்தைக்கும் கமலியின் குழந்தைக்கும் அவன் வாங்கி வந்திருந்த பரிசுப் பொருட்களைக் கொடுத்தான் மதியழகன்.

விலாஸினிக்கும் கொடுத்தான். அதிகமாகப் பேசாமல் வாங்கிக் கொண்டாள்.

மதியழகன் நெற்றிப் புருவங்கள் ஒருமுறை கேள்வி கேட்கிறாற் போல் ஏறி இறங்கின. அவள் அலட்சியமாகத் தோளைக் குலுக்கினாள். "சரி.. தனியாக இருக்கும் போது பார்த்துக் கொள்ளலாம்" என்று விட்டு விட்டான்.

அப்போது அவனுக்குத் தெரியவில்லை. கோபம் வந்தால் விலாஸினிக்கு எப்படி வரும் என்று.

தனிமை கிடைக்கிற சமயம். அவன் தங்கள் பகுதிக்குள் நுழைந்து ஹால் கதவைச் சாத்திவிட்டு திரும்பினான்.

சம்ஹாரம் செய்வதற்குத் தயாராக நிற்கிற பத்ர காளியைப் போல் உக்கிரப் பார்வை பார்த்துக் கொண்டு நின்றாள் விலாஸினி.

• • •

"சொன்னாப் புரிஞ்சுக்க மாட்டியா?" என்றான் மதியழகன் சற்றே சலிப்புடன்.

"என்னத்தைப் புரிஞ்சுக்கறது? எப்படி நீங்க அப்படிச் சொல்லலாம்?"

"ஹேய்! தமாஷுக்குத்தானே சொன்னேன்?"



"என்ன தமாஷ்? இதெல்லாம் தமாஷா? என்னை விட ரெண்டு பேர் அழகா இருக்காளுக. அதனாலதான் கூட்டிட்டு வரலேன்னு சொன்னா.. என்ன அர்த்தம்? அவங்க அழகா இருந்தா... நான் அட்ராக்ட் ஆயிடுவேனா? அவ்வளவு கேவலமாப் போயிட்டேனா?" என்றாள் காட்டமாக.

"ஹேய்! நான் ஜோவியலாகத்தான் சொன்னேன்! இஃப் யு ஆர் ஹூர்ட்டட் ஐ வில் அப்பாலஜைஸ்."

அவள் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.

சோபாவை எட்டி உதைத்தாள். கைக்குக் கிடைத்த பொருட்களைக் கீழே வீசினாள். கடைசியில் சுவரில் மாட்டியிருந்த ஒரு கண்ணாடியை கீழே போடப் போனாள்.

அந்தக் கணத்தில் மதியழகன் தன்னிலை மறந்து அந்தக் கண்ணாடியைக் கையிலிருந்து வாங்கிக் கட்டிலின் மேல் வைத்தான்.

ஓங்கி ஒரு அறை அறைந்தாள்.

கன்னத்தைப் பிடித்துக் கொண்டு அவள் மலங்க மலங்க விழிப்பதைப் பார்த்தான். ஒரு நிமிடம் மிகவும் வருத்தப்பட்டு விட்டான்.

அவளை நெருங்கினான். தன் அணைப்பில் கொண்டு வருவதற்கு முயற்சி செய்தான். அவள் அவனது கரங்களைத் தட்டி விட்டாள்.

"ஹேய்.. விலாஸினி! அது எங்கப்பா வாங்கின கண்ணாடி. பெல்ஜியத்துல இருந்து வரவழைச்சது. நீ அதைப் போய்.." என்று கெஞ்சாத குறையாகத் தேற்ற முயற்சி செய்தான்.

மௌனமாகக் கண்ணீர் வடித்தாள். தேம்பவில்லை. பேசவில்லை.

மறுநாள் முழுக்க சாப்பிடவும் இல்லை. ஆனால் மதியழகன் மேல் ஏன் கோபம் என்று மற்றவர்களிடம் சொல்லவும் இல்லை. அவனாகத்தான் சொன்னான்.

"அம்மா! நான் ஏதோ தமாஷாச் சொன்னேன். அவளுக்குக் கோபம் வந்துடுச்சு" என்றான்.

அவனும் சாப்பிடவில்லை.

தனலட்சுமியம்மாள்தான் பதைத்துப் போனார். அன்று மாலை வரை பொறுத்துப் பார்த்தார். மருமகளின் அறைக்கே போனார்.

"அவன் ஒரு கூறு கெட்ட பையன்... தாயி! எதையோ சொல்லியிருப்பான். நீ மறந்துடு" என்று தேற்றினார்.

"என்ன சொன்னேன்னு சொன்னாரா?" என்றாள்.

"இல்லை!" என்ற தனலட்சுமியம்மாள் மேலும் சொன்னார்.

"அதைக் கேட்டு நான் என்ன பண்ணப் போறேன் தங்கம். புருஷன், பொண்டாட்டின்னா ஆயிரம் இருக்கும். ஆனா, ரெண்டு பேரும் இப்படி வயித்தைக் காய போட்டுக்கறீங்களே?" என்றார்.

எழுந்து அமர்ந்தாள்!

"ஓஹோ! அந்த ஆளும் சாப்பிடலியாக்கும்?" என்றாள். பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டு,

"அவரும் சாப்பிடலியா?" என்றாள்.



"இல்லடா! இப்படியே பண்ணினீங்கன்னா... நானும் ராத்திரியிலருந்து சாப்பிட மாட்டேன்" என்றாள் தனலட்சுமியம்மாள்.

"இப்ப வர்றேங்கத்தை" என்று எழுந்தாள். "சரி.. நான் சாப்பாடு பரிமாறச் சொல்றேன்" என்று அவர் நகர்கையில் தனது மாமியாரிடம் சொன்னாள்.

"அவருக்கும் போன் பண்ணி வரச் சொல்லுங்க" என்று.

இரண்டு பேரும் மௌனமாகச் சாப்பிட அம்மா அமைதியாகப் பரிமாறினார்.

சாப்பிட்டு முடித்த பின்பு வேலையாட்களுக்கெல்லாம் என்ன சொன்னாரோ தெரியவில்லை. எல்லாரும் தனிமை கொடுத்து விலகியிருந்தார்கள்.

அம்மாவும் கோவிலுக்குப் போகிறேன் என்று கிளம்பி விட்டார்.

மீண்டும் தனிமையின் போது தனது கோபத்தைக் கணவனிடம் முழுமையாக வேறு விதமாகக் காட்டினாள் விலாஸினி.

"ஏய்யா! அடிக்கவா செய்யறே! இதுவரைக்கும் இந்த மாதிரி யாருமே என்னை நடத்தினதில்லே.. தெரியுமா? அதுக்குத் தண்டனை என்ன தெரியுமா?" என்று அவள் கொடுத்த தண்டனைகளை ஒரு வித ஆச்சரியத்துடனும் திகைப்புடனும் எதிர்கொண்டான் மதியழகன். ஆனால், அடுத்த இரண்டு நாட்களில் எல்லா விஷயங்களிலுமே மனைவியிடம் இருக்கிற வேகம் குறித்து அவனுக்குள் ஒரு உள்ளார்ந்த கவலை தோன்றத்தான் செய்தது.



# 7

''ஹல்லோ! ஒரு விஷயம் புரிஞ்சுக்குங்க.. எங்க வீட்ல என்னை யாரும் எந்தக் கேள்வியும் கேட்டதில்லே..''

''அம்மிணி! ஒரு விஷயம் நீயும் புரிஞ்சுக்க. அது உன் பிறந்த வீடு. இது புகுந்த வீடு..''

''புகுந்த வீடுன்னா.. நான் என்ன அடிமையா?''

அவன் புன்னகைத்தான். செல்லமாக அவள் காதைப் பிடித்துத் திருகினான்.

''தியாமா... நீ இப்படியெல்லாம் பேசறதுக்கு நான் கோபப் படணும். சில்லியாய் பேசறே...'' என்றான்.

''என்ன... என்னப்பா.. சில்லியாய் பேசறேன்.''

''வேண்டாம்.. மரியாதை குறைஞ்சதுன்னா... நடக்கறது வேற..''

''என்ன வேற நடக்கும்?'' என்றாள். முறைத்தாள். அவன் ''வேறு'' என்னென்ன.. நடக்கும்'' அவன் சற்று நேரம் விளையாடிக் காட்டினான்.

சிரித்தார்கள். கலகலப்பானார்கள். ஆனால் மறுபடியும் விட்ட இடத்துக்கே வந்தாள்.

''ஹலோ! இந்த வித்தை காட்டற வேலையெல்லாம் வேண்டாம். மிஸ்டர். மதி! என் கேள்விக்கு பதில் வரலே..''



''என்ன கேள்வி?''

''புகுந்த வீடுன்னா.. நான் என்ன அடிமையா?'' எங்கே போனாலும் சொல்லிட்டுப் போகணுமா?''

''இங்க.. பார்! விஷயம் புரிஞ்சுக்க. அடிமைங்கறதுக்காக சொல்லிட்டுப் போக வேண்டியதில்லை. எங்கே இருக்கேன்னு எனக்குத் தெரியணும் இல்லே? இவ்வளவு அழகான தங்க விக்கிரகத்தைக் கொண்டு வந்து என் கையில ஒப்படைச்சிருக்காங்க.''

''மஸ்கா... போடாதே... மேன்...!''

''மஸ்கா இல்லடி... என் தங்கம்! சியல் ட்ரூத். உங்க பிறந்த வீட்ல நிலைமை வேற. இங்க உன் நல்லது கெட்டதுக்கு நான்தானே பொறுப்பு. திடீர்னு உங்கப் பாவே கூப்பிடறார்ன்னு வை. நீ எங்கேன்னு தெரியலைன்னு சொன்னா, என்ன நினைப்பாரு. அதைக் கூடத் தெரியாம நீ என்னப்பா கம்பா குத்தறேன்னு கேட்க மாட்டாரு?''

''கேட்பாருங்கறீங்க?''

''ஆமா... பின்னே?''

அவள் குபீரென்று சிரித்தாள்.

''என்ன... என்ன... சிரிப்பு?''

''இல்லே.. நீங்க கம்பு குத்தினா... எப்படியிருக்கும்ன்னு யோசிச்சேன்'' என்றாள். ஒரு நிமிடம் வெறித்தான். பிறகு அவனும் சிரித்து விட்டான்.

''முருகா... சரவணா..'' என்று முணுமுணுத்தான்.

''முருகனும் சரவணனும் ஒண்ணு இல்லே?'' என்றாள் விலாஸினி.

"ஹேய்.. விலாஸினி.. படுத்தறடி!" என்றான். அதற்கு மேல் அவளைப் பேசவிடவில்லை.

தொடர்ந்த நாட்களில் அவனுக்குள் ஒரு கலக்கம் தோன்றியது.

சுகமாக வளர்ந்திருக்கிறாள். கேட்பதெல்லாம் கிடைத்திருக்கிறது. ஆனால், அதற்காக சோம்பேறியாக வளரவில்லை.

கைக்காரியங்கள் எல்லாம் நன்றாகவே செய்கிறாள். ஆனால் அவள் தன்னுடன் வாழ்கின்ற இந்த வாழ்க்கையில் முழுமையாக நிறைவு பெறவில்லை என்று தோன்றியது.

உறவைப் பொறுத்ததாகவும் அந்த அதிருப்தி அவனுக்குப் படவில்லை.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு நடந்தது. அப்போதிருந்தேதான் இந்தப் புகைச்சல்.

திடீரென்று வெளியே கிளம்பியிருக்கிறாள் விலாஸினி. அம்மா அவன் அலுவலகத்துக்கு போன் செய்தார். அந்த சமயத்தில் தானே உருவாக்கியிருக்கிற ஒரு இயற்கை உரம் குறித்து அவன் ஒரு சில பேராசிரியர்களுடன் போனில் ஆலோசனையில் இருந்தான்.

தனலட்சுமியம்மாவிடமிருந்து போன் வந்தது.

"என்னம்மா?" என்றான்.

"தம்பி.. டேய்! விலாஸினி எங்கேயோ போயிருக்கா.. சொல்லிட்டும் போகல."

"அம்மா.. அவளைப் பத்தித் தெரியாதா..? நான் இப்ப முக்கிய டிஸ்கஷன்ல இருக்கேன். வந்தான்னா.. ஆபீஸுக்கு



வரச் சொல்லு.. அவளும் இந்த டிஸ்கஷனுக்கு வந்தா நல்லா இருக்கும்."

"அடப்போடா! ஆளையே காணோம்ங்கறேன். நீ டிஸ்கஷனுக்கு வரச் சொல்லுங்கறே" என்று கடுப்பானார் அம்மா.

"டொக்"கென்று போனை வைத்தார். அப்போது மதியழகனுக்கே தோன்றியது.

"போகிற இடத்தைச் சொல்லிவிட்டுப் போனால் என்ன?" என்று.

பேராசிரியர்கள் வேறு சரமாரியாகக் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ஆமா.. சார்! இந்த இரண்டு தடவையா யூஸ் பண்ணிப் பார்த்தேன். மகசூல் நல்லா வருது. அதனாலதான் தைரியமா சொல்றேன். பேசாம ஒரு பாக்டரி போட்டலாமான்னு பாக்கறேன்" என்று அவன் பேசிக் கொண்டிருந்ததில் மேலும் ஒரு மூன்று மணி நேரம் ஓடியது. அதற்குப் பிறகு மறுபடியும் அம்மாவிடம் இருந்து போன்.

"தம்பி! காலைல எட்டு மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பிப் போயிருக்கா. இப்ப மத்தியானம் ஒரு மணியாச்சு. நீ என்னடா புரிஞ்சுக்கவே மாட்டேங்கறே?"

அவனும் சிந்தனையிலாழ்ந்தான். இப்போது போல அப்போதெல்லாம் செல்போன் வசதியில்லை. அதனால் கண்டு பிடிக்கவும் வழியில்லை.

அவனுக்கே கொஞ்சம் கவலையானது.

"அம்மா! காளிமுத்துகிட்டே விசாரிச்சயா?"

"ஆமா... டா! காரை எடுத்துக்கிட்டுத்தான் போனாளாம்."

"ஓ..!" என்றான். கவலை சற்று அதிகமானது. அவளுக்கென்று மாருதி கார் ஒன்று இருந்தது. வேகமாக ஓட்டுவாள் நன்றாக ஓட்டும் திறமை இருந்தது. ஆனால்... அதிகமான வேகத்தில்தான் ஓட்டுவாள். அதிலும் அவர்கள் கிராமம் சற்று உள்ளடங்கி இருந்ததால் போக்குவரத்து அதிகம் இருக்காது. ஒரு நாளைக்கு நான்கு முறை அல்லது ஐந்து முறை பஸ்கள் வந்து போகும். அவ்வளவு தான். அதில் என்ன சிக்கல் என்றால் போக்குவரத்து இல்லாத ரோடு என்பதனால் ஆடு மாடு மேய்ப்பவர்கள் சர்வ சுதந்திரமாக உலாவுவார்கள். ஆடு மாடுகளை மேய விட்டிருப்பார்கள்.

எங்காவது யார் மேலாவது காரை மோதியிருப்பாளோ? பிரச்சினைகளில் எதுவும் சிக்கியிருப்பாளோ? அம்மாவின் கவலையில் நியாயம் இருக்கிறதாகத் தோன்றியது.

"அம்மா! நீ வொரி பண்ணிக்காதே.. நான் இப்ப வர்றேன்" என்றான்.

கிளம்பி வந்தான்.

பிற்பகல் இரண்டு மணி வரை போர்ட்டிகோவில் காத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

முகத்தில் கவலையைக் காட்டினால் அம்மாவும் கவலைப் படுவாரே என்று எதையும் காட்டாமல் அமர்ந்து கொண்டான். அப்படியும் ஒரு மணி வாக்கில் அம்மா வந்து போர்ட்டிகோவில் எதிரில் இருந்த சேரில் அமர்ந்தார்.

"எப்பா! வேலியில போற ஓணானை எடுத்து விட்டுட்டு குத்துதே குடையுதேங்கற மாதிரி ஆயிடுச்சே!" என்றார்.



மதியழகன் தன் கவலையை மறைத்துக் கொண்டவனாகப் புன்னகைத்தான்.

"அம்மா! எனக்கும் இருபத்து மூணுதான் ஆச்சு.. கொஞ்சம் ஃப்ரீயா விடுங்கண்ணேன். நீங்க கேக்கலை" என்றான். ஒரு பெருமூச்சு விட்டான்.

"அம்மா.. ரொம்பக் கவலைப்படாதீங்க..! புத்திசாலித் தான். ஆனா செல்லமா வளர்ந்திருக்கா.. இன்னும் பொறுப்புப் பத்தலே.. அவ்வளவுதான்.. சரியாயிடுவா.. கோபப் படாதீங்க! மெல்ல மெல்லச் சொல்லித் திருத்தலாம்..." என்றான்.

"ஆமா! எங்கத்தை போய் கோபத்தைக் காட்டறது. பாரு.. இப்ப வந்தவுடனே கட்டிப் புடிச்சுக் கொஞ்சுவா.. அத்தே.. அத்தேன்னு. அப்புறம் நம்ம கோபம் எல்லாம் பஞ்சாப் பறந்து போயிடும்" என்றார்.

இருவரும் சிரித்தார்கள். தனலட்சுமி தொடர்ந்தார். "அதனாலதான் தம்பி! ஒண்ணும் சொல்றதுக்கு முடியாம இருக்கு. எப்படி நடந்துக்கணும்னு தெரியலயே ஒழிய.. பிரியமெல்லாம் நிறைய இருக்கு.." என்றார் தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொள்வது போல. பிறகு எழுந்து உள்ளே போனார்.

அதற்குப் பிறகு அன்றைய ஹிந்துப் பத்திரிகையை வரி விடாமல் படித்து முடித்தான். தமிழ்ப் பத்திரிகைகளைப் படித்து முடித்தான். நேரம்தான் ஓடியதே தவிர செய்தி எதுவும் தெரியவில்லை.

இடையில் அம்மா இரண்டு முறை வந்து சாப்பிட அழைத்துப் போனார்.

ஒரு வழியாக இரண்டரை மணிக்கு வந்து இறங்கினாள்.

''ஹல்லோ! மதி!'' என்று எந்த விதமான விகல்பமுமில்லாமல் அழைத்தாள். அழகாய் சிரித்தாள்.

ஒரு பக்கம் அந்த கோபமெல்லாம் சூரியனைக் கண்ட பனி போல விலகினாலும் இப்படித் தன்னை முட்டாளடிக்கிறாளே என்ற கோபமும் எழுந்தது.

''விலாஸ்! எங்கே போயிருந்தே?'' என்று எழுந்தான்.

காரிலிருந்து ஏதோ ஒரு மூட்டையை இறக்குவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

''காளிமுத்து!'' என்று குரல் கொடுத்து விட்டு மதியழகனும் போய் காரருகில் நின்றான்.

''என்னது? புடவை செலக்ஷனா? நினைச்சேன்.. இவ்வளவு நேரம் ஆளைக் காணம்னவுடனே.. துணிமணிதான் செலக்ட் பண்ணப் போயிருப்பேன்னு..''

''ஐ ம் நாட் ஆர்டினரி.. வுமன்.. யு.. ஸீ!'' என்று சிரித்தாள்.

''நான் எப்ப சொன்னேன் நீ ஆர்டினரின்னு.. நீ எக்ஸ்டிரா ஆர்டினரின்னு தானே.. நான் சொல்றேன்'' என்றான் கிண்டலாக.

''கிண்டலா? வாங்க. ரூமுக்கு.. பேசிக்கறேன்'' என்றாள்.

காளிமுத்து வந்து மூட்டையைத் தூக்கிக் கொண்டு அவர்களது பகுதிக்குக் கொண்டு சென்றான்.

''இதெல்லாம்.. என்ன தெரியுமா? புக்ஸ்.. புக்ஸ்..'' என்றாள். அவர்கள் இருவரும் ஹாலுக்குள் நுழையவும் தனலட்சுமியம்மா உள்கட்டுப் பகுதியில் இருந்து ஹாலுக்கு வரவும் ஓடிப் போய்க் கட்டிக் கொண்டாள்.

''ஹை! அத்தை! எப்படிங்க அத்தை இவ்வளவு அழகா இருக்கீங்க?'' என்றாள். பச்சென்று முத்தம் வைத்தாள்.



தாயும், மகனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். மகன் தோள் குலுங்க சிரித்தான்.

''மருமக... பொண்ணே! ஐஸெல்லாம்.. வைக்காதே. எங்கே போனே... சொல்லாம கொள்ளாம.''

அவள் விலகினாள். அத்தையை செல்லமாகப் பார்த்து சிணுங்கினாள்.

''என்னத்தை ஒரு அரை நாள் கூட எனக்கு சுதந்திரமா வெளிய போக பர்மிஷன் இல்லையா'' என்றாள்.

''உனக்கில்லாத பர்மிஷனா.. ராஜாத்தி.. ஆனா.. எங்க போறேன்னு சொல்லிட்டுப் போடா'' என்றார் அம்மாவும் அதே பாணியில்.

உடனடியாகவே டைனிங் டேபிளுக்குப் போய் சாப்பிட்டார்கள்.

அறைக்கு வந்த பின் அவன் கேட்டான்.

''ஏய்! ஏன் இந்த மாதிரிப் பண்றே?'' என்று.

''எந்த மாதிரி...?'' என்றாள்.

''காலைல எட்டு மணிக்கு கிளம்பியிருக்கே? மத்தியானம் ரெண்டரை மணிக்கு வர்றே! எங்கே.. இருக்கே.. என்ன செய்யறே? எதுவும் இல்லே!'' என்றான்.

''ஓ..! சொல்லிட்டுப் போகணுமா?'' என்றாள் அப்பாவியாய்.

''அட... சரவணா!'' என்று தலையில் கை வைத்துக் கொண்டான் மதியழகன்.

ஒரு வேளை கிண்டல் செய்கிறானோ என்று பார்த்தாள். இல்லை.. கிண்டலான பார்வை எதுவும் அவனிடம் இருக்கவில்லை. யதார்த்தமாகத்தான் கேட்கிறான் என்பது புரிந்தது

"என்ன.. விலாஸினி.. இப்படிக் கேட்கறே" என்றான்.

"இல்லே! எங்க வீட்லயெல்லாம் நான் சொல்லிட்டுப் போக மாட்டேன்" என்றாள்.

"இல்ல.. விலாஸ்! அங்க இப்படியில்லே!" என்று விளக்கம் சொன்னான்.

அப்போது பிரச்சினை செய்ய வேண்டாம் என்று விட்டு விட்டான். ஆனால் மாமனாரிடம் பேசினான். அவரும் அந்தப் பக்கம் ஒரு பெருமூச்சு விட்டார்.

"மாப்பிளே! அப்படித்தான் பண்ணுவா. ரெண்டு பசங்க.. என் வைப் எல்லாருமா சேர்ந்து அவளுக்கு ரொம்ப செல்லம் குடுத்துக் கெடுத்து வச்சிருக்கோம். உங்களைப் பார்த்தவுடனே எனக்கு மனசுல என்ன தோணுச்சுன்னா.. சின்ன வயசானாலும் ரொம்பப் பொறுப்பா.. இருக்கீங்க.. சமாளிச்சிடுவீங்கன்னுதான்" என்றார். பிறகு தயக்கத்துடன்,

"வெறுத்துராதீங்க!" என்றார்.

"சேச்சே! பாதி குழந்தை.. பாதி விடலையா இருக்காளே தவிர.. ரொம்ப அன்பானவ.. என்னால அவளை வெறுக்கவே முடியாது. "ஆனா.. இங்கத்த சூழ்நிலை வேறு. இப்படிச் சொல்லாமக் கொள்ளாமக் கிளம்பினா.. அம்மா.. ரொம்பக் கவலைப்படறாங்க."

"ஓ!.."

"ஆனா.. வந்ததுக்கப்புறம். அம்மாவைக் கட்டிப் புடிச்சு.. கொஞ்சி.. சமாளிக்கறா.." என்றான்.

இருவரும் சிரித்தார்கள். பிறகு மாமனார் சொன்னார்.

"மாப்பிளே! கோபம் காமிங்க!" என்று.

"அதானே.. முடியலே! கண்ணை முழிச்சுகிட்டு நின்னான்னா. என் கோபம் செல்லுபடியாகாமல் போகுதே!



அப்படியும் கோபம் காட்டினேன். ஒரு நாள் அறைஞ்சு கூடப் போட்டேன்.. ஆனா.. வேற விதமா சமாளிக்கிறா.." என்றான்.

அதைச் சொல்லும்போது அவன் முகம் சிவந்து போனது. அந்தப்புறம் அவர் தொடர்ந்து சிரிக்கவும் இன்னும் வெட்கமாகப் போனது. பிறகு ஆச்சர்யமாகக் கேட்டார்.

"அடிச்சீங்களா!" என்று.

"ஆமா.. மாமா! அப்புறம் ரொம்ப பீல் பண்ணினேன். இனிமேக் கை வக்கிறதில்லேன்னு முடிவு."

"மாப்பிளே! என்னமோ செய்ங்க! எனக்கு என் மக மேல் இருக்கற நம்பிக்கைய விட உங்க மேல அதிகம். எப்படியோ சரி பண்ணுங்க. அப்புறம் எப்ப ஊருக்கு வர்றீங்க?"

"பொங்கலுக்கு.. வர்றோம்.. மாமா!"

"ஓ.கே!" என்றார்.

மகளைப் பத்தித் தான் சொன்ன புகார்களை அவர் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்றும், அவளைத் தான் அடித்தோம் என்று சொன்னபோது கூட புரிந்து கொண்டார் என்பதும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் சொன்னது போலவே மகளைச் சரி செய்கிற பொறுப்பைத் தன் கையிலே விட்டு விட்டு அவர் நிம்மதியாக இருக்கிறார் என்று தோன்றியது.

அதற்குப் பிறகுதான் கேள்விகள் கேட்டான். அது ஒரு சிறு செல்லச் சண்டையாக ஆனது. கடைசியில் வேறு விதத்தில் முடிந்து விட்டது.

அருகில் ஆழ்ந்து மூச்சு விட்டபடி நிம்மதியாக உறங்கு கிற மனைவியைப் பார்த்தான். இவளைக் குழந்தை

யென்பதா... குமரியென்பதா என்று ஏதேதோ எண்ணங்கள் தோன்றியதும் கூடவே தன்னைக் குறித்தே அவனுக்குக் கோபமும் தோன்றியது.

தன் தோடுகையால், தன் மலர்ந்த சிரிப்பால், வெட்கம் நாணம் இவற்றைத் தூரக் கட்டி வைத்து விட்டு அவன் எடுக்கிற படையெடுப்பால் தான் அவள் கைகளில் பொம்மையாய் ஆகி விடுகிறோம் என்பதை உணர்ந்த கோபம்தான் அது.

அவள் மெதுவாக விழித்தாள். அவன் சிந்தனையில் அமர்ந்திருப்பதைப் பார்த்தாள்.

"ஹலோ! எந்தக் கோட்டையைப் பிடிக்க இப்படி யோசனை... தூங்குங்க. மதி.." என்றாள்.

அருகில் இழுத்தாள். அவனும் இசைந்து கொடுத்தான். மனைவியின் கையணைப்பு அவன் கவலைகளையெல்லாம் மறக்கடிக்க அவளது முகத்தோடு முகம் இழைய உலகம் மறந்து உறங்கினான்.

இனிமேல் பல நாட்களுக்கு உறக்கத்தைக் கெடுக்கப் போகிற சூறாவளிகள் அவனுக்காகக் காத்திருக்கின்றன என்பதை அறியாதவளாய் குழந்தையாய் உறங்கிக் கொண்டிருந்தாள்.



# 8

"இல்ல தம்பி! எதுக்காக இப்படிக் கவலைப்படறே! சரியாயிடுவா" என்றாள்.



மதியழகன் முகத்தில் தெளிவு ஏற்படவில்லை.

"இல்லக்கா..! எனக்கும் புரியலே! ரொம்பச் சண்டியான குழந்தை மாதிரி இருக்கா. புயல் மாதிரிப் போறா.. வர்றா.. எவ்வளவுக்கெவ்வளவு வேகமா ஒரு விஷயத்தைத் தீவிரமாக் கத்துக்கறாளோ அவ்வளவுக்கவ்வளவு வேகமா தூக்கி எறிஞ்சுட்டு வேற விஷயத்துக்குத் தாவிடறா..!" என்றான்.

மகேஸ்வரி புரிந்து கொண்டவளாய் புன்னகைத்தாள். உண்மைதான். உள்ளூர அவளுக்கும் அந்தக் கவலை இருந்தது. ஆனால் தம்பிக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று புரியவில்லை.

"சரியாயிடுவா.. தம்பி!" என்று மட்டும்தான் சொன்னாள்.

மதியழகன் காரில் திரும்பி வரும்போது இரண்டு நாட்களுக்கு முன் நடந்த நிகழ்வுகளை எண்ணிப் பார்த்தான்.

ஆர்வமாகப் புத்தகங்களைச் சுமந்து கொண்டு வந்து காரிலிருந்து இறங்கிய மனைவியைப் பார்த்து அவனுக்குள் புன்சிரிப்பு மலர்ந்தது. அது வரையில் இருந்தகோபம் கூட இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனது.

இதுவரையிலும் அவளால் ஏற்பட்ட பரபரப்பை நினைவு படுத்திக் கொண்டுதான் புதிதாகக் கோபப்பட வேண்டியிருந்தது. ஆனாலும் எப்போதும் போல் சண்டித்தனம் செய்து கொண்டு நிற்கிற குழந்தையைப் பார்க்கும்போது கோபம் மறைந்து போய் அன்பு பொங்கி வழியுமே அது போல் இப்போதும் அவன் மனதில் அன்பு பொங்கியது.

அந்த ஆர்வமும், வேகமும் அவனுக்குப் பிடித்தது.

அம்மாவும், அவனுமாக ஒரு பிடி பிடித்ததும் கொஞ்சம் ஆரண்டு போனாள்.

அடுத்த இரண்டு நாட்களும் கொஞ்சம் குற்ற மனப்பான்மையுடன்தான் நடமாடினாள். அதைப் பார்த்தது அவனுக்குப் பாவமாகப் போனது.

ஏதாவது ஒரு விதத்தில் அவளைத் திருப்திப்படுத்த வேண்டுமென்று நினைத்தான்.

அடுத்த இரண்டு நாட்களும் மாடியில் அவர்கள் படுக்கையறைக்கு பக்கத்தில் வேலை நடந்து கொண்டிருந்தது.

"மதி! என்ன நடக்குது?" என்று கேட்டாள்.

"கொஞ்சம் வேலை நடக்குது! கீழே இருக்கிற பெட்ரூம்லதான் நாம ரெண்டு நாளைக்குத் தங்கப் போறோம்" என்றான்.

"கீழயா?" என்றாள் சற்றே ஏமாற்றத்துடன்.

"ஏன்?" என்றான் குறும்புச் சிரிப்புடன்.

மேலே என்றால் விலாஸினி சர்வ சுதந்திரமாக இருப்பாள். ஒரே ஆட்டம் பாட்டம்தான். சில நேரங்களில் அவள் ஆட்டத்தைப் பார்த்து ரசிப்பான். சில நேரங்களில் செல்லமாகக் குட்டி விட்டுத் தன் வேலையைப் பார்க்க நகர்ந்து விடுவான்.

அநேகமாக நேரங்களில் இடையில் வருவாள். ஒரு மணி நேரமே அவனோடு இருந்தாலும் புதுமையாக ஏதாவது கருத்துக்கள் கொடுப்பாள். அதற்கான பரிசுகளும் அவனுக்குக் கிடைக்கும்.



எப்போது எதைச் செய்வாள் என்று தெரிந்து கொள்ள முடியாத ஒரு நிலையில் அவர்களை வைத்திருந்தாள் என்ற ஒன்றைத் தவிர அவளை எதற்காகவும் கோபித்துக் கொள்ள முடியாது.

இப்போது தன் பங்குக்கு அவளை அசத்த வேண்டுமென்று நினைத்தான் மதியழகன்.

அவளும் தனக்கு சம்பந்தமில்லாத விஷயம் என்று நினைத்து நடமாடிக் கொண்டிருந்தாள்.

மூன்றாம் நாள்!!

"ஹேய்! விலாஸினி.. வா" என்று அழைத்துப் போனான்.

"எங்கே?" என்றாள்.

"வாயேன்.. சொல்றேன்!" என்று இழுத்துப் போனான்.

அறைக் கதவைத் திறந்து காட்டினான்.

விலாஸினி மலைத்துப் போனாள்.

நீளமான அறை! அந்த அறையின் இரு புறங்களிலும் புத்தக அலமாரிகள்.

அதில் அவள் வாங்கி வந்திருந்த புத்தகங்கள் எல்லாம் வகை பிரித்து அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

"வாவ்! மதி!" என்று எம்பி எம்பிக் குதித்தாள்.

பின்னாலிருந்தது கணவனைக் கட்டிக் கொண்டாள். பரிசு மழை பொழிந்தாள்.

மதியழகன் திணறிப் போனான்.

"ஹேய்! யாராவது வரப் போறாங்க" என்று தடுமாற,

"போய்யா! அவனவன் பொண்டாட்டியைக் கொஞ்சக் கூட இப்படித் தடுமாறீங்க" என்று காலால் கதவை எட்டி உதைத்து மூடினாள்.

கணவனிடம் பதில் வாங்கிக் கொண்டுதான் விலகினாள்.

"ராட்சசி... நீ" என்று சிரித்தான் மதியழகன்.

மதியழகன் புத்தக அறை அமைத்துக் கொடுத்தாலும் கொடுத்தான். பெரும்பாலான சமயங்கள் உள்ளே அடைந்து கொண்டாள்.

பொறுக்க முடியாத மாமியார் ஒரு நாள் கீழேயிருந்து அழைத்தார்.

"அம்மிணி! பொஸ்தகம் அப்புறம் படிக்கலாம். புருஷனுக்குச் சோறாக்கிப் போடறதுக்கும் கொஞ்சம் பழகு" என்றார். சிரித்தாள்.

"அத்தே" என்று இறங்கி வந்தாள்.

எப்போதும் போல் அத்தையிடம் தன் வால்தனத்தை மூட்டை கட்டி விட்டு பவ்யமாக நின்றாள்.

"எம்மிணி! சமையலும் கத்துக்கோ..!" அப்பத்தானே நல்லது..!" என்றார்.

"சரிங்க!" என்றாள்.

நான்கே நாட்கள் கூட நின்றாள். அருமையாகச் சமையல் கற்றுக் கொண்டாள்.

"அத்தே! அத்தான்கிட்டே சொல்லாதீங்க! திடீர்னு ஒரு நாளைக்கு நான் சமைக்கறேன்" என்றாள்.

"சரி..!" என்று அந்த ரகசியத்தில் தலைலட்சுமியம்மாவும் சந்தோஷமாகப் பங்கு கொண்டார்.

நான்கைந்து நாட்கள் கழித்து!

படுக்கையறையில் அதிகாலையிலிருந்தே மனைவியைக் காணோமே என்று இறங்கி வந்தான் மதியழகன்.

"அம்மா! இவ எங்கம்மா... போனா?" என்று கேட்டுக் கொண்டே ஹாலுக்கு வர,



அம்மா ஜாடையிலேயே "உஷ்" என்று காட்டி சமையல் அறைப் பக்கம் கை காட்டினார்.

மகன் நெருங்கினான்.

கிசுகிசுப்பாகக் கேட்டான்.

"ஏம்மா! கிச்சன்ல இவளுக்கு என்ன வேலை?" என்றான்.

"என்னடா... இப்படிக் கேட்கறே! சமைக்கறாடா" என்றார் தலைலட்சுமியம்மாள்.

"வாவ்! சமைக்கறாளா?" என்று ஏதோ தலை சுற்றினாற் போல நடித்துக் கொண்டு சோபாவில் தொப்பென்று அமர்ந்தான்.

"பொய்யில்ல... போய்ப் பாரு!" எனவும் அவன் மெல்ல எட்டிப் பார்த்தான்.

காஸ் ஸ்டவ்வில் இரண்டு அடுப்புகளிலும் ஏதோ பாத்திரங்கள் இருக்க மேடை மேல் இருந்த பாத்திரத்தில் இருந்து எதையோ கரண்டியில் ஊற்றி சுவை பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அடி.. ஆத்தி!" என்று அவன் குரல் கொடுத்தபடி உள்ளே நுழைய அவள் திரும்பிப் பார்த்து அழகாகச் சிரித்தாள்.

"கண்டு பிடிச்சட்டீங்களா? நான் சஸ்பென்ஸா வச்சுக்கலாம்னு பார்த்தேன்" என்றாள்.

"கண்ணால பார்க்கவும்தான் நம்பினேன்" என்று அவள் அருகில் நெருங்கி நிற்கவும் அவள் வரிசைப் பற்கள் தெரிய சிரித்தாள்.

"சீக்கிரம் குளிச்சுட்டு வாங்க. சாப்பிடலாம்."

"குளிக்கிறதா? உன் கையால சாப்பிடணும்னு நினைச்சாலே ஏதோ த்ரில்லிங்கா இருக்கு. குளிக்காட்டி என்ன..? சாப்பிடறேன்" என்றான்.

அவள் அவனை செல்லமாகத் தள்ளி விட்டு விட்டுச் சொன்னாள்.

"எல்லாம் ரெடியாக இன்னும் பத்து நிமிஷம் ஆகும். அதுக்குள்ளே குளிச்சுட்டு வந்தர்லாம்" என்றாள்.

"என்ன மெனு?" என்றான் ஆர்வமாக.

"குளிச்சுட்டு வாய்யா..!" என்றாள் அவனுக்கு மட்டும் கேட்கும்படியாக.

"வந்து பேசிக்கறேன்" என்று மிரட்டி விட்டு நகர்ந்தான்.

• • •

"ஹேய்.. நிஜம்மாவே சூப்பரா இருக்கு!" என்று அவன் சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிடுவதை அவள் வாஞ்சையாய்ப் பார்த்தாள்.

அம்மாவைத் திரும்பிப் பார்த்தான்.

"அம்மா.. நிஜம்மாவே இவதான் செஞ்சாளா? நீ கலந்து கொடுத்துட்டு.. ஏத்தி.. இறக்கற வேலை மட்டும் செஞ்சாளா!" என்று கேட்டான்.

"இல்லைடா.. தம்பி! எல்லாம் அவளேதான் செஞ்சா.. சும்மா.. சொல்லக் கூடாது. உன் பொண்டாட்டி.. எல்லாமே.. சீக்கிரம்தான் பழகிக்கறா.." என்று திரும்பினாள்.

இடுப்பில் இரண்டு கைகளும் வைத்துக் கொண்டு கணவனை முறைத்துக் கொண்டிருந்த மருமகளைப் பார்த்ததும் இங்கிதம் தெரிந்தவளாய் நகர்ந்தாள்.



"சாப்பிட்டு முடிச்சர்றேன். அப்புறம் சண்டை வச்சுக்கலாம்.. என்ன?" என்றான், மதியழகன் சமாதானம் போல.

"ம்..!" என்று உறுமி விட்டுப் பரிமாறினாள்.

"விலாசினி! நீ இதுக்கு முன்னாடி சமையல் செஞ்சிருக்கியா?" என்று கேட்டான்.

"ம்..! பால் காய்ச்சுவேன்.. தோசை ஊற்றுவேன்" என்றாள்.

"ஆமா.. எவ்வளவு கஷ்டமான வேலையாக்கும் செஞ்சிருக்கே?" என்று சிரித்தான்.

இட்லி வார்த்துக் குருமா செஞ்சிருந்தாள். அதுவும் தவிர கேசரி செய்திருந்தாள். பூரி கிழங்கும் செய்திருந்தாள்.

ஒரு பெருமை அவன் முகத்தில் நிறைந்திருந்தது. இவ்வளவு அழகாக வேலைகளைக் கற்றுக் கொள்வாள் என்று அவன் எதிர்பாராதது. ஆனால் உடனடியாக வேறு விதமாகக் கொடி பிடித்தாள்.

"என்னைச் சமையல் கத்துக்கச் சொன்னீங்க.. இல்லே! நீங்களும் சமையல் கத்துக்குங்க" என்றாள்.

"ஏய்.. போ!" என்று அவன் சிரித்தான்.

"மிஸ்டர். மதி! ஐ மீன் இட். ஒரு பொண்பிள்ளை மட்டும்தான் சமையல் கத்துக்கணும்னு எதுல இருக்கு. இல்லே.. ஆம்பளைங்க சமையல் கத்துக்கக் கூடாதுன்னு எதிலே இருக்கு?" என்றாள் காட்டமாக.

சட்டையைக் கழற்றி ஹாங்கரில் மாட்டிய அவன் கேட்டான்.

"என்ன சலஞ்சு பண்றியா?"

"அப்படித்தான்.. வச்சுக்குங்களேன் சமையல் கத்துக்க.. எனக்கு நாலு நாள் தேவைப்பட்டுச்சு.. உங்களுக்கு

"... எவ்வளவு நாள் தேவைப்படுதுன்னு.. பார்க்கலாம்'' என்றாள்.

அவன் சிரித்தான். ஆனால் சவாலை எதிர் கொண்டான்.

அடுத்த நாள் காலை அவன் சமையலறையில் வேலை கற்றுக் கொள்வதைப் பார்த்த அம்மாவும் வேலையாட்களும்.

''அட.. ஆத்தி..!'' என்று அதிசயிக்க அவன் அம்மாவைப் பார்த்துச் சிரித்தான்.

"அம்மா! என்னால சமையல் கத்துக்க முடியாதுன்னு.. உன் மருமகள் சவால் விடறா.. அப்புறம் எப்படி சும்மா.. இருக்கறது?" என்றான்.

அம்மாவும் பெரிதாக தலையாட்டிக் கொள்ள விலாஸினியைப் போல இல்லையென்றாலும் அவனும் ஓரளவு சமையல் கற்றுக் கொண்டான். அந்த நாட்களில் மனைவியிடம் நெருங்கி அமர்ந்தபடி சொன்னான்.

"ஹேய்! விலாஸ்.. உண்மையிலே நீங்க கெட்டிக் காரங்கதான். சமையலையும் செஞ்சுகிட்டு.. எல்லா வேலைகளையும் மேனேஜ் பண்றீங்கன்னா.. உண்மையாலே பெரிய விஷயம்தான்'' என்று பாராட்டிக் கொண்டான்.

''பாரின்லயெல்லாம் ஆண்களும்தான் சமையல் செய்றாங்க'' என்றாள்.

திரும்ப அடுத்த நாளில் இருந்து புத்தக உலகத்திற்குள் நுழைந்து கொண்டான்.

இதற்கிடையில் சகோதரியைப் பார்ப்பதற்காக வந்திருந்தான் மதியழகன். அப்போதுதான் மகேஸ்வரியிடம் தன் வருத்தங்களைப் பகிர்ந்து கொண்டான்.



ஏனோ மதியழகனின் மனத்தில் தன் மனைவி பற்றிய கேள்விக்குறி இருந்து கொண்டே இருந்தது.

''அவள் எதிலும் முழுமையாக நிறைவடைவதில்லை. ஏதோ ஒன்று அவளுக்குள் காலியாவே இருக்கிறது'' என்று அவனுக்குத் தோன்றியது.

வாழ்க்கையில் எல்லாமே கிடைத்த புத்தன் ஒரு நாள் எல்லாவற்றிலும் வெறுத்துப் போனாற் போல அவளுக்குள்ளும் ஒரு தேடல் இருக்கிறது என்பது அவன் சந்தேகம். கானல் நீரை நோக்கி ஓடுகிறாளா.. என்று எண்ணம்.

எல்லாவற்றிலும் ஒரு வேகம்..! நின்று நிதானித்து யோசிக்காத ஒரு வேகம்.. தலை தெறிக்க ஓடுகிற வேகம்!

யாரிடமும் வெளிப்படையாக அவனால் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. இதற்கிடையில் ''பத்து நாள் பிறந்த வீட்டில் இருந்து விட்டு வருகிறேன்'' என்று கிளம்பினாள். அனுப்பி வைத்தான். அதன் விளைவு என்னவாக இருக்கும் என்று அப்போது புரியவில்லை.

✱ ✱ ✱

பத்து நாட்களையும் மதியழகன் தன் சொந்த வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டான்.

சகோதரிகள் வீட்டுக்குப் போய் தங்கினான். அதில் நான்கைந்து நாட்கள் ஓடியது. நெருங்கிய நண்பர்களோடு இரண்டு மூன்று நாட்கள் கழித்துவிட்டு, பிறகு மனைவியை அழைத்து வரச் சென்னைக்குப் போனான்.

''மாப்பிளே! வாங்க!'' என்று மருமகனை வரவேற்றார்கள் மாமனார் வீட்டில்.

விலாஸினியைக் காணவில்லை.

''விலாஸ் எங்கே?'' என்றான்.

"அதையேன் கேக்கறீங்க.. மாப்பிளே! இப்ப நாலு நாளா.. என்னமோ ஸ்பீச். கேக்கறேன்னு போயிருக்கா..!" என்றார்.

"ஓ..! புது இன்ட்ரஸ்ட்டோ!" என்று சிரித்துக் கொண்டான்.

"மாப்பிளே! எப்படித்தான் இவளை சமாளிக்கறீங்களோ!" என்று மாமியாரே அங்கலாய்க்கவும் அவன் புன்னகைத்தான்.

"அங்கயெல்லாம்.. சந்தோஷமாத்தான் இருக்கா..! அம்மாவுக்கு அவளைப் பிடிக்குது. அம்மாகிட்டேயும் நல்லா பிரியமா இருந்துக்கறா" என்றான்.

"அட! ரொம்ப ஆச்சரியம்தான்" என்று ஆச்சரியப் பட்டார்கள் சகோதரர்கள்.

"அவ சந்தோஷமா இருந்துக்குவா! சுத்தியிருக்கிறவங்க இல்லே அவஸ்தைப் படணும்" என்று மாமியாரே முணுமுணுப்பதைக் கேட்டு அவனுக்குள் ஒரு சிரிப்பு.

திரும்ப அழைத்து வந்தான்.

வரும்போது காரை அங்கங்கே நிறுத்தி பழனி விருந்து பஞ்சு மிட்டாய் வரை அவள் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்தான். அவள் ரசிப்பதை அவனும் ரசித்தான்.

வீட்டிற்கு வந்ததும் அன்றிரவு சொன்னாள்.

"வாழ்க்கைன்னா.. ஒரு த்ரில் இருக்கணுமில்லே. கேட்டதெல்லாம்.. உடனே உடனே கிடைச்சா.. சே.. ஒரு த்ரில்லே இல்ல" என்று.

"விடுஞ்சது.. போ..!" என்று சிரித்தான் மதியழகன். அவள் முறைத்தான்.



"ஹேய்! இந்த முறைப்பைத்தான் இப்ப பத்து நாளா ரொம்ப மிஸ் பண்ணினேன்" என்று அருகில் இழுக்கவும் அவள் இசைந்து கொடுத்தாள். ஆனால் அவனுக்குத் தோன்றியது அவள் மனம் வேறெங்கோ இருக்கிறது என்று.



# 9

"காளிமுத்து! விலாஸினி இல்லையா?" என்றான் மதியழகன்.

"ஐயா! அம்மா.. காரெடுத்துட்டு எங்கயோ போனாங்க" என்றான் காளிமுத்து.

உச்சுக் கொட்டினான் மதியழகன்.

"காளிமுத்து! அம்மாகிட்டே சொல்லிட்டுப் போனாளான்னு கேளு.."

"சொன்ன மாதிரித் தெரியலிங்கய்யா! இந்தப் புள்ளை என்ன இஷ்டத்துக்குப் போகுது வருதுன்னு பெரியம்மா புலம்பிகிட்டிருந்தாங்க" என்றான்.

"சரி.." என்று சுருக்கமாக உறுமிவிட்டு போனை வைத்தான்.

கொஞ்சம் கோபம் வந்தது.

"என்ன.. இவ? இஷ்டத்துக்கு நடந்துக்கறா.. இன்னைக்குத் திருந்துவா நாளைக்குத் திருந்துவான்னு பார்த்தா

திருந்தவே மாட்டேங்கறா.." என்று எண்ணிக் கொண் டான்.

தனலட்சுமியம்மா அவனிடம் அடிக்கடி புலம்பினார். "தம்பி நல்லதே நடக்கட்டும்னு நினைப்போம். ஆனா.. இந்தப் புள்ளை சகட்டு மேனிக்குக் காரை ஓட்டிகிட்டுப் போகுதுன்னு பாக்கறவங்க சொல்றாங்க.. ஏதாவது ஒன்னு கிடக்க ஒன்னு ஆச்சன்னா.. புள்ளை எங்க இருக்கிறானு தெரிய வேண்டாமா!" என்று சொல்லுவார்.

அதிலிருந்த நியாயம் அவனுக்கும் புரிந்தது. ஆனால் விலாஸினி வேண்டுமென்றும் அப்படிச் செய்கிறாள் என்றும் சொல்ல இயலவில்லை.

ஒரு எண்ணம் தோன்றினால் உடனே அதைச் செயல்படுத்த வேண்டுமென உடனே அந்த வேகத்தில் வெளியே கிளம்பி விடுகிறாள். சில நேரங்களில் எங்கிருந்தாலும் போன் செய்வாள்.

"நான் அரை மணி நேரத்துல வந்துடுவேன். ஒரு மணி நேரத்துல வந்துடுவேன்" என்று.

ஒரு சமயம் கர்நாடக சங்கீதம் தொடர்பான காசட்டுகளும், சி.டிக்களுமாகக் கொண்டு வந்து குவிப்பாள்.

இன்னொரு சமயம் ஓவியம் தொடர்பான புத்தகங்களாகக் கொண்டு வந்து குவிப்பாள். ஆனால் அத்தனையும் வரி விடாமல் படிப்பாள். அத்தனை பாடல்களையும் கேட்டாள்.

அவ்வளவு வேகமும், ஆர்வமும் அவனுக்கு ஆச்சரியமாக இருக்கும்.

பணம் ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. என்பதால் அதனடிப்படையில் எழுகிற பிரச்சினைகள் எழ



வில்லை. ஆனால் நினைத்த நேரம் நினைத்தாற் போல் நடந்து கொள்கிற தன்மையால் வீட்டில் எல்லாருக்கும் மனக்கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது அவனுக்குத் தெரிந்தது. இதற்கு எப்படித் தீர்வு காண்பது என்றே புரியாமல் இருக்கும்போதுதான் திடீரென்று அவனுக்கு ஒரு விஷயம் புரிய ஆரம்பித்தது.

தங்கள் தனிமையான நேரங்களில் தனது காதலையும், நேசத்தையும் முழுமையாக அவனிடத்தில் காட்டுவதில் எந்தவிதமான தயக்கமோ வெட்கமோ பட மாட்டாள்.

உலகத்தில் எல்லா உயிர்களுக்கும் பொதுவான விஷயங்கள் இது ரெண்டும்தான்.

ஒன்று வயித்துப் பசி. இன்னொன்று உறவுப் பசி என்பாள்.

அவளது வெளிப்படையான தன்மை வேறொரு ஆணாக இருந்தால் அதிர்ச்சியடையச் செய்திருக்குமோ என்னவோ மதியழகன் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

அடிப்படையில் அவள் சுயசிந்தனை உள்ள பெண் என்றே அவன் திடமாக நம்பினான்.

திடீரென்று ஒரு மாற்றம் சமீப காலமாகத் தெரிந்தது. அவனுடன் நேரம் செலவழிப்பதில் நாட்டம் குறைந்தாற் போலத் தோன்றியது.

அவன் ஆசையுடன் அணுகும்போது அவன் மனம் நோகக் கூடாது என்பதற்காக மட்டுமே இசைந்து கொடுக்கிறாளோ என்று தோன்றியது.

அப்போது மதியழகனுக்கென்ன இருபத்து மூன்று வயதுதான் முடிந்திருந்தது. தந்தையின் இறப்பும், இரு

சகோதரிகளையும் ஒரு தகப்பன் ஸ்தானத்தில் இருந்து கவனிக்க வேண்டிய கடமையும் இருந்ததனாலோ என்னவோ அவனிடத்திலே ஒரு பக்குவத்தை வளர்த்திருந்தது.

பெண்களை மதிக்கறவனாகவே இருந்தான்.

"சரி.. ஆசை அறுபது நாள்.. மோகம் முப்பது நாள் போலிருக்கிறது என்று நினைத்துக் கொள்ளத்தான் செய்தான். ஆனால் இரண்டு நாட்கள் என்று அவள் வெளியே செல்ல ஆரம்பித்தவுடன் அவனாலும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

"விலாஸினி! என்ன நினைச்சுக்கிட்டிருக்கே.. நாங்க என்ன சத்திரம், சாவடியா நடத்தறோம். இது உன் வீடு பொண்ணே! நீ பாட்டுக்கு நினைச்சாப் போறே.. நாள் முழுக்க வெளியே போறே! ஒத்துக்கிட்டோம். இப்போ.. ரெண்டு நாள் வெளியே போயிட்டு வர்றே. இதை எப்படி ஒத்துக்கறது?" என்றான்.

உச்சுக் கொட்டினாள் அலட்சியமாக. "ப்ரெண்டு சௌதாமினி வீட்டுக்குப் போனேன்" என்றாள்.

"சொல்லிட்டுப் போ! இது கிராமம். நம்ம மாதிரிப் பெரிய வீட்டுல்ல என்ன நடக்குதுன்னு.. எல்லாரும் வேடிக்கை பாத்துகிட்டுத்தான் இருப்பாங்க!" என்றான்.

"டோன்ட் கேர்..! நீங்க என்னை நம்பினா.. யு ஆல்சோ டோன்ட் கேர்."

அவன் அலுப்புடன் சொன்னான்.

"ஸ்! எனக்கு இது அலுத்துப் போச்சு! ஐ ம் பெட் அப் ஆஃப் யுவர் பிரீச்சிங்" என்றாள்.

அவன் வெறித்தான். பிறகு முணுமுணுப்பாகச் சொன்னான்.



"ஆமா! எனக்கும் அலுத்துப் போச்சு!" என்றான்.

"ஆமா..! புதுசா.. இப்படி ஆரம்பிச்சுட்டியா?" என்றாள்.

பொசுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு திரும்பிப் படுத்தான்.

விலாஸினி சற்று நேரம் அவன் முதுகை வெறித்துப் பார்த்தாள்.

கையில் கிடைத்த எதையோ வீசி எறிந்து விட்டுப் படுக்கையில் 'தொப்'பென்று விழுந்தாள். அந்தப் பெரிய இரட்டைக் கட்டில் ஒருமுறை குலுங்கியது.

அப்போதும் அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை. அவள் கண்களில் கண்ணீர் வழியப் படுத்திருந்த போதும் அவன் திரும்பிப் பார்க்கவில்லை.

இப்படி ஏதாவது செய்தால்தான் அவள் திருந்துவாள் என்று தோன்றியது. ஆனால் நிலைமை வேறு விதமாக மாறியது.

* * *

"அம்மா! நீ எதுக்கு.. இப்ப அவங்களைத் தனியா விட்டுட்டு வந்தே! ஏதாவது சண்டை வரப் போகுது.." என்றாள் மகேஸ்வரி.

"நீ வேறடி.. மஹி! ரெண்டு பேரும் வாய் விட்டு சண்டை போட்டுக்கறதில்லே. ஆனா அவ அவனுக்குப் பயப்படறதில்லே!"

"ஆமா! செல்லமா வசதியா வளர்ந்த பொண்ணு. அவ எதுக்கும் யாரிடமும் பயப்பட மாட்டா!" என்றாள் மகேஸ்வரி.

"ஆனா.. என்ன சங்கடம் தெரியுமா? கெட்ட பொண்ணுன்னும் சொல்ல முடியாது.." என்று பெருமூச்சு விட்டார் தனலட்சுமியம்மா. பிறகு திடீரென்று சிரித்தார்.

"நாலே நாள்ல சமையல் கத்துகிட்டா.. அவ்வளவு டேஸ்ட்டா செஞ்சா" என்றார்.

மகேஸ்வரியும் சிரித்தாள்.

"அம்மா.. தம்பிக்கு.. இன்னும் இரண்டு வருஷம் கழிச்சுக் கல்யாணம் பண்ணியிருக்கணும்" என்றாள்.

"ஆமா..! எனக்கும் இப்ப அப்படித்தான் தோணுது."

"இனிமேத் தோணி.. என்ன செய்ய?" தனலட்சுமியம்மா பெருமூச்சு விட்டார்.

"என்னமோ நடக்கட்டும் போ..! அதான் நாலைஞ்சு நாளைக்கு நான் நிம்மதியா இருந்துட்டுப் போலாம்னு வந்தேன்" என்றார்.

"இரும்மா.. இரு!" என்று உபசரித்தாள் மகள்.

அவ்வளவு சீக்கிரம் மகள் வீட்டுக்கு வரமாட்டார் தனலட்சுமியம்மா. இத்தனைக்கும் மாப்பிள்ளையும் தூரத்துச் சொந்தம்தான்; உரிமையுள்ள இடம்தான் என்றாலும் வரமாட்டார். ஆனால் அவர் மனது ஏனோ அமைதியில்லாமல் தத்தளித்தது.

"அவசரப்பட்டு மகனுக்கு ஒரு கிறுக்குப் பொண்ணைக் கல்யாணம் செய்து வைத்து விட்டோமே" என்ற எண்ணம் தோன்றிக் கொண்டிருந்தது. அதனால்தான் ஒரு நாலு நாட்கள் மகள் வீட்டில் தங்கலாம் என்று வந்தார். அவருக்குத் தெரியவில்லை. இனிப் பல நாட்களுக்குத் தான் அமைதியைத் தொலைத்துவிட்டு அலையப் போகிறோம் என்று.

• • •

"கடுப்பேத்தாதே காளிமுத்து! நல்லாத் தேடிப் பாரு" என்றான் மதியழகன்.



"அய்யா! நம்ம பண்ணை முழுக்க ஆட்களை விட்டுத் தேடியாச்சு. எங்கயாவது குதிச்சுக் கிதிச்சுப் பழம் பறிக்கறாங்களோன்னுதான் நினைச்சேன்" என்றான் காளிமுத்து.

காலையிலிருந்து விலாஸினியைக் காணவில்லை. கார் இருந்தது. அவளுடைய சாமான்களெல்லாம் அப்படியே இருந்தது.

நாள் முழுக்கவும் தேடினார்கள் அகப்படவில்லை.

சகோதரி வீட்டுக்கு போன் செய்தான். "அம்மா! மகிக்கா கிட்டேயெல்லாம் சொல்ல வேண்டாம். புறப்பட்டு வாங்க. இந்தக் கிறுக்குப் பொண்ணை மறுபடியும் காணலை" என்றான்.

அம்மா மகளிடம் எதுவும் சொல்லாமல் புறப்பட்டு வந்தார்.

தங்கள் மொத்த நிலத்தின் இடுக்கெல்லாம் தேடினார்கள்.

"அம்மா! அவ என்ன பச்சைப் புள்ளையா? விடும்மா விடு" என்றான் கடுப்பாக.

அன்றைய நாள் முழுதும் போனது. அடுத்த நாளும் போனது. ஆள் வரவில்லை.

சாப்பாடு இறங்கவில்லை. கவலை கூடியது. அம்மா வேறு அவனைக் கலவரப்படுத்தினார்.

"தம்பி! தனியாப் போறேன் போறேன்னு போனா எந்தச் சிக்கல்ல மாட்டிக்கிட்டாளோ தெரியல" என்று மறுகிப் போனார்.

அவனுக்கும் அந்தச் சந்தேகம் எழுந்தது. ஆனால் கார் இருந்தது டூ வீலர் இருந்தது ஒன்றுமே புரியவில்லை.

அன்றைக்கு அலுவலகத்துக்கும் போகவில்லை. தனது அறையில் சோபாவில் சாய்ந்து தளர்ந்து போய் அமர்ந்திருந்தான்.

காளிமுத்து மெல்ல ஹால் கதவருகில் வந்து நிற்பது தெரிந்தது.

"என்ன?!" என்பதுபோல் பார்த்தான்.

"ஐயா..! நம்ம அய்யாசாமி சொல்றான். அம்மா டவுன் பஸ்ல ஏறிப் போனாங்களாம்."

"டவுன் பஸ்லயா?" என்றான் நம்பாதவன் போல.

"ஆமாங்கய்யா! ரொம்ப சிம்பிளாக் கிளம்பிப் போனாங்களாம்" என்றான்.

ஒருவேளை எப்போதும் போல அனுபவம் தேடுகிறேன் என்பது போல எளிமையாக டவுன் பஸ்ஸில் போகிறேனே என்று போயிருப்பாளோ..!

"அதுக்கப்புறம் ஏதாவது தகவல் தெரிஞ்சுதா?" என்றான்.

"அய்யா!" என்று நிறுத்தினான்.

"சொல்லு.. சொல்றதுன்னு ஆச்சு? அப்புறம் என்ன தயக்கம்?"

"ஐயா! வந்து பக்கத்து டவுன்ல வச்சு நம்ம காத்தமுத்து பாத்தானாம்" என்றான்.

"ம்..!"

"சென்னை பஸ்ல ஏறினாங்களாம்."

"ம்..!"

"வந்து.. வந்து.. கூட ஒரு ஆள் இருந்தானாம்."



"ஓ..!"

"நல்லாப் பாத்தானாமா?"

"காத்த முத்து இப்படிச் சொல்றான். ஆனா கருப்பண்ணன் தனியாத்தான் பஸ் ஏறினாங்கன்னு சொல்றான்."

"சரி..! நான் பாத்துக்கறேன். போ" என்று அனுப்பினான்.

"என்னத்தைப் பாக்கறது" என்று அவனுக்குப் புரியவில்லை.

மனமெல்லாம் பாரம் ஏறிக் கொண்டது. ஒரு வேளை சென்னையில் அவர்களது அம்மா வீட்டுக்குப் போயிருப்பாளோ என்று தோன்றியது. அதிலும் ஆளைக் காணவில்லை என்கிறபோது கண்டிப்பாகத் தகவல் தெரிவித்தே ஆக வேண்டும் என்ற கடமையுணர்வு வேறு தோன்றியது.

போன் செய்தான்.

அப்பா ஆழ்ந்த அமைதியுடன் கேட்டுக் கொண்டார். பிறகு சொன்னார்.

"மாப்பிளே! இங்க வர்லை! எனக்கு உள் மனசுல ஏதோ சொல்லிகிட்டே இருந்தது. இந்தப் பொண்ணு கல்யாண வாழ்க்கையில எல்லாம் அடங்கி வாழ்ற பொண்ணு இல்லைன்னு."

"மாமா..!" என்றான் ஆதங்கத்துடன்.

"மாப்பிளே! இந்த விஷயத்துல உங்களைத் தப்பு சொல்ல முடியாதுன்னு எனக்குத் தெரியும். நீங்க உண்மையா அவளை நேசிச்சீங்க..! எனக்குத் தெரியும்" என்றார்.

அந்த வார்த்தைகள் அந்த நேரத்துக்கு அவனுக்கு மிகவும் இதமாக இருந்தன. ஆனால் எங்கே.. என்ன நிலையில் இருக்கிறாளோ என்ற கவலையும் இருந்தது.

தன்னைக் காத்துக் கொள்கிற துணிவு இருந்தது என்ற ஆறுதலும் இருந்தது. காத்தே வேறு கற்று வைத்திருந்தான். ஆனால் அவனே அவளுக்கு எதிரியாக இருக்கிறானோ என்று தோன்றியது.

செய்திக்காகக் காத்துக் கொண்டிருந்தான். ஒரு செய்தியும் வரவில்லை. அவனும் போலீசுக்குத் தகவல் கொடுத்திருந்தான். பெற்றோர்களும் தகவல் கொடுத்திருந்தார்கள். ஆனால் ஒரு பயனும் இருக்கவில்லை.

இரண்டு நாட்கள் கழித்து!

எதற்கும் அவளது அறையில் தேடிப் பார்க்கலாம் என்று நுழைந்தான்.

கட்டில் மேஜை என்று எல்லாவற்றையும் புரட்டிப் போட்டான். எதுவும் இருக்கவில்லை.

நிறையப் புத்தகங்கள் ஒரு குறிப்பிட்ட விஷயத்தையே சார்ந்திருந்ததைப் பார்த்தான். நெற்றியில் முடிச்சுக்கள் விழச் சிந்தனையில் ஆழ்ந்தான்.

சற்று நேரம் கழித்து எழுந்தான்.

பீரோக் கதவைத் திறக்க சாவியைத் துழாவினான். எதற்கும் ஒரு முறை முயற்சிப்போமே என்று பீரோவின் திறவுப் பிடியை இழுத்துப் பார்த்தான்.

கதவு திறந்து கொண்டது. உள்ளே அவளது புகைப் படம் இருந்தது. லாமினேட் பண்ணி வைத்திருந்தாள்.

கண் நெகிழப் பார்த்துக் கொண்டு நிற்கையிலேயே அந்தப் போட்டோவுக்குக் கீழே நான்காக மடித்து வைக்கப்பட்ட கடிதம் இருந்தது.

எடுத்துப் படித்தான்.



ஆயிரம் இடிகள் ஒன்றாய்த் தலையில் இறங்கினாற் போல உணர்ந்தான்.

திகைத்துப் போய் நின்றான்.



# 10

உள்ளே போன மகனைப் பத்து நிமிடங்களுக்கு மேலாகக் காணவில்லையே என்று எண்ணிய தலைட்சுமி யம்மா உள்ளே எட்டிப் பார்த்தார்.

தளர்ந்து போய் சோபாவில் அமர்ந்து கொண்டிருந்த அவனைப் பார்த்ததுமே அவருக்கு வயிற்றுக்குள் ஏதோ பிசைகிறாற் போல இருந்தது.

"என்ன தம்பி!" என்று அருகில் நெருங்கினார்.

அவன் திரும்பி அம்மாவைப் பார்த்தான். அதில் தெரிந்த வெறுமை அவரை அச்சுறுத்தியது.

இயந்திரம் போலக் கையில் இருந்த கடிதத்தை நீட்டினான்.

*அன்புள்ள மதிக்கு,*

*என்னை மன்னித்து விடுங்கள். இந்த வாழ்க்கையில் எனக்குத் தேவையான ஏதோ ஒன்று கிடைக்கவில்லை என்றே தோன்றுகிறது. எனக்குப் பிடித்த ஒருவரின் உதவியோடு எனக்குப் பிடித்த வாழ்க்கையை வாழ நான் செல்கிறேன். இந்த ஆறு*

மாத கால வாழ்க்கையில் தாங்கள் செலுத்திய நிபந்தனையற்ற அன்புக்கு நன்றிகள். நான் திரும்ப வருவேனென்று எதிர்பார்க்காதீர்கள். உங்கள் வாழ்க்கையை நீங்கள் வாழலாம்.

அன்புடன்
விலாஸினி.

மகனுடைய முகத்தைப் பார்த்தார்.

முகம் இறுகிக் கிடந்தது.

மனம் மறுகிப் போனார் தனலட்சுமியம்மா. வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொண்டார். அழுது விட்டால்கூட தேவலை போல தெரிந்தது. ஆனால் அவன் அழவில்லை.

"அம்மா! எதுவும் யாருகிட்டயும் சொல்ல வேண்டாம். போதும்.. இதுவரை நான் அனுபவிச்ச எல்லாமும் போதும்" என்றான் இறுகிப் போன குரலில்.

அம்மா.. அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

"சரி.. தம்பி! நீ எப்படிச் சொல்றயோ.. அப்படி" என்று வெளியே போனார்.

சற்று நேரத்தில் சகோதரிகள் வந்து சேர்ந்தார்கள். ரசல் புரசலாக செய்தி சென்று சேர்ந்திருக்க வேண்டும் போலும்.

"தம்பி!" என்று இரண்டு புறமும் கவலையோடு நின்றார்கள்.

"அக்கா! விலாஸினின்னு ஒரு பொண்ணு என் வாழ்க்கையில் வந்தா. இப்ப இல்லே. இனி வர மாட்டா.. அதோட விட்டுடுங்க.." என்றான்.



மாமனாரும், மாமியாரும் அரக்கப் பரக்க புறப்பட்டு வந்தார்கள்.

ஆச்சரியம் என்னவென்றால் யாருமே மதியழகனைக் குறை சொல்லவில்லை. அவளுக்கு இன்னும் கொஞ்சம் பொறுப்பு வந்ததற்குப் பிறகு கல்யாணம் பண்ணி வைத்திருக்கலாமோ என்று மட்டும் கவலைப்பட்டார்கள்.

"மாப்பிளே! என்ன எழுதியிருக்கா?" என்று கேட்டார் மாமனார் தனிமையில்.

"பிடித்த வாழ்க்கை வாழப் போறேன்னு எழுதியிருக்கா" என்றான்.

உச்சுக் கொட்டினார்.

"அப்ப உங்களைத்தான் பிடிச்சிருக்கு. உங்களைத் தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு நின்னாளே.. இப்ப வேற யாரைப் பிடிச்சிருக்காம்?" என்றார் கடுப்புடன்.

மதியழகன் "இனி என்னத்தைப் பேசி என்னத்துக்கு ஆகப் போகுது" என்கிற மாதிரி நின்றான்.

"சாரி.. மாப்பிளே!" என்றார்.

மதியழகனுக்கு இந்த மாதிரி ஒரு சூழ்நிலையில் என்ன பேசுவது என்றே புரியவில்லை.

சற்று நேரம் ஒரு அசௌகரியமான மௌனம் நிலவியது. பிறகு தயக்கத்துடனும், முகத்தில் படிந்த ஒரு வித அவமான உணர்வுடனும் கேட்டார்.

"மாப்பிளே! வேற யாராவது கூட ப்ரண்ட்ஷிப் டெவலப் ஆகியிருக்குமோ?" என்றார்.

மதியழகன் ஒன்றும் பேசாமல் சற்று நேரம் தரையைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

"சாரி.. மாப்பிளே! இப்படி கேள்வியை நான் உங்க கிட்டே கேக்க நேர்ந்தது ரொம்பத் துரதிர்ஷ்டமான விஷயம், ஆனா, கேட்டுத்தான் ஆக வேண்டியிருக்கு" என்றார்.

மதியழகன் எழுந்து ஜன்னலைப் பார்த்துக் கொண்டு நின்றான். ஒரு பெருமூச்சுடன் சொன்னான். "மாமா! விலாஸினி என்னவா வேண்ணா இருக்கலாம். ஆனா, நீங்க டவுட் பண்ணினா மாதிரி இருக்காதுன்னு நினைக்கறேன்" என்றான்.

"தேங்க்ஸ்... மாப்பிளே! இத்தனைக்கப்புறமும் என் மகளை விட்டுக் கொடுக்காம பேசறீங்களே" என்றார்.

எல்லாரும் அவரவர் பங்குக்கு வந்தார்கள். ஆறுதல் சொன்னார்கள். பேசினார்கள். சென்றார்கள். ஆனால் அவன் யாரிடமும் வேதனையைக் காட்டிக் கொள்ள வில்லை.

சிறகடித்துப் பறந்து கொண்டிருந்த பறவை தரையிறங் கினாற் போல் ஓரிரண்டு ஆண்டுகள் அவன் அவனுக்குள் ஆழ்ந்து போனான்.

இருபத்து மூன்று வயதிலேயே அவனுக்குக் கல் யாணம் செய்து வைத்து அவன் பட்ட அவஸ்தையும், அவமானமும் போதும் என்று நினைத்தாரோ என்னவோ தனலட்சுமியம்மாவும் அதற்குப் பிறகு அதைப் பற்றிப் பேசவேயில்லை.

ஆறு வருடங்கள்!

ஆறு வருடங்கள் முழுமையாக ஓடினதற்குப் பிறகு அவருக்குத் தோன்றியது இனிமேலும் பேசாமல் இருக்கக் கூடாது. இருக்கவும் முடியாது என்று.

பிறகுதான் மறுபடியும் திருமணப் பேச்சை ஆரம்பித்தார்.



"தம்பி! ஆறு வருஷம் ஆயிப் போச்சு. இனிமே அந்தப் பொண்ணு வரும்னெல்லாம் எனக்கு நம்பிக்கையில்லை. போதும் அந்த ஆறு வருஷத்தைக் கெட்ட கனவா நினைச்சு மறந்துடப்பா" என்றார்.

பலமுறை மன்றாடிய போதும் அவன் அழுத்தமான மௌனத்தையே பதிலாகத் தந்தான்.

"முதல் காதலும், முதல் உறவும்" என்று எழுத்தாளர் களும் கவிஞர்களும் சொல்வது போல அவன் மனத்தில் என்ன காயம் இருந்ததோ என்ற எண்ணம் அவருக் குள்ளும் இருந்தது.

பிறகு அம்மா அவனிடம் அப்படிப் பேசுவதையும், கேட்பதையும் விட்டு விட்டார். ஆனால் அம்மா ஆழ்ந்த வேதனையுடன் நடமாடுவதைக் காணப் பொறுக்க வில்லை.

மகேஸ்வரியிடம் பேசினான்.

"அக்கா! அம்மா எதுக்கு இப்படி மூஞ்சியைத் தூக்கி வச்சுட்டு நடமாடுது" என்று வருத்தப்பட்டான்.

அக்கா சொன்னாள்.

"தம்பி! அம்மா.. சொல்றதுலயும் ஒரு நியாயம் இருக்கு? ஆறு வருஷம் வராதவ இனிமே வரப் போறாளாக்கும். ஏதோ ஒரு புயல் உன் வாழ்க்கையில் அடிச்சு முடிஞ்சு துன்னு நினைச்சுகிட்டு எங்களுக்காகவாவது ஒரு கல்யாணம் பண்ணிக்க" என்றாள்.

"அக்கா! இதுல பிராப்ளம்ஸ் வராதா? அதனால சங்கடங்கள் வராதா எந்த முடிவும் தெரியாத நிலைமை" என்றான்.

"தம்பி! நீ ஏன் அது பத்திக் கவலைப்படறே. உன்னோட வாழ்க்கையில நடந்த அசம்பாவிதத்தைச் சொல்லியே பொண்ணு கேட்போம்."

"ஆமா! ஆறு மாசம் ஒருத்தி என்கூட இருந்தா, ஓடிப் போனா. ஆறு வருஷம் வரைக்கும் திரும்பி வர்லேன்னா, யாராவது என்னை ஆம்பிளைன்னு மதிப்பாங்களா?" என்றான்.

"தம்பி! நீ குடிகாரன் இல்லே! பெண் சகவாசம் பிடிச்சு அலைஞ்சவன் இல்லை! நீ எப்படின்னு இந்த ஊருக்கேத் தெரியும். அது மட்டுமல்ல விலாஸினியாத்தான் மேலே விழுந்து பிடுங்கினாற் போல பழகினான்னு ஊருக்கேத் தெரியும். அவ்வளவு ஏன்? விலாஸினியோட அம்மா அப்பாவே உன்னை மதிக்கறாங்க. நம்பறாங்க அவங்களே அம்மாகிட்டே சொல்லியிருக்காங்க.. தம்பிக்கு ஒரு கல்யாணம் பண்ணி வைங்கன்னு. நாம பொண்ணு பாக்கற இடத்துலயே சொல்வோம். விலாஸினியோட அம்மா அப்பாகிட்டே போய் விசாரிங்கன்னு" என்றாள்.

தன் வாழ்க்கை பாலைவனமாகி விட்டாற் போல் இருப்பதாகத் தன் குடும்பத்தார் கவலைப் படுவதைப் பார்த்து மனம் இளகிய ஒரு கணத்தில்தான் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தான். ஆனாலும் வந்தனாவின் குடும்பம் மிகவும் சாதாரணக் குடும்பம் என்று தெரிந்தவுடன் தன் வீட்டினர் பணவசதியைக் காட்டி வீழ்த்தி விட்டார்களோ என்று சந்தேகம் தோன்ற ஒரே ஒரு முறை வந்தனாவிடம் போனில் பேசினான்.

"மிஸ். வந்தனா! என்னோட வாழ்க்கையில நடந்து போன விஷயங்கள்லாம் சொன்னாங்களா?" என்றான்.

"ம்.." என்றாள்.



"ரொம்ப ரிஸ்க் எடுக்கற மாதிரித் தோணலையா?" என்றான்.

"வாழ்க்கையே ரிஸ்க்தான். நாளைக்கு இருப்பமோ இல்லையோன்னு தெரியாம எத்தனையோ நீண்ட காலத் திட்டத்தைப் போடறதில்லையா" என்றாள் வந்தனா.

"அப்படிப் போடு அருவாளை!" என்று எண்ணிக் கொண்டான். லேசாகச் சிரித்துக் கொண்டான்.

அதற்குப் பிறகுதான் பெண் பார்க்கப் போனான். வந்தனாவின் அழகு அவனை ஆட்கொண்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

எளிய கைத்தறிப் புடவையில் இயல்பாக நடந்து வந்து வணக்கம் சொன்னாள்.

எதிரில் சோபாவைக் காட்டி அமரச் சொன்னான். அமர்ந்தாள்.

மற்றவர்கள் இங்கிதம் தெரிந்து நகர்ந்தார்கள். "வந்தனா.. நல்லா யோசிச்சுக்குங்க.. அப்புறமா வருத்தப் படக் கூடாது" என்றான்.

அவள் தரையைப் பார்த்தபடி தலையாட்டினாள். அவன் தொடர்ந்து சொன்னான்.

"தத்துவம்.. எல்லாம் பேசறதுக்கு நல்லா இருக்கும். ஆனா, வாழ்க்கையை ஒவ்வொரு நிமிஷமாத்தான் கடக்கணும்" என்றான்.

அவள் அவனை நேராகப் பார்த்தாள். பிறகு சொன்னாள். சுருக்கமாக, இரத்தினச் சுருக்கமாகச் சொன்னாள்.

"என் சம்மதம் கேட்டுத்தான் பெண் பார்க்கவே வரச் சொன்னாங்க" என்று.

அவன் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் அதில் பதில் இருந்தது புரிந்தது. 'வறுமையிலும் செம்மை' என்பார்களே அது அந்தப் பெண்ணிடம் இருந்தது அவனுக்கும் புரிந்தது.

அவன் எழுந்தவன், சற்று நேரம் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபடி நின்றான். பிறகு திரும்பினான்.

''இப்போதைக்கு இந்த மேரேஜ்ல எனக்குப் பெரிய இன்ட்ரஸ்ட்டும் இல்லே.. மறுப்பும் இல்லே.. அம்மா வுடைய வற்புறுத்தலுக்காக.. ஒத்துக்கறேன். ஆனா என் மனசு தெளிவாக நாளாகலாம்.. காத்திருக்கணும்..'' என்றான். அவள் தலையை ஆட்டினாள்.

மறுநாள் அம்மா தொடர்ந்து பேசலாமா என்று கேட்டதற்கு.

''சரி.. பேசுங்க!'' என்றான்.

திருமணம் நன்றாகவே நடந்தது. அவன் மற்றவர்கள் முன்னால் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் அவளிடத்தில் மட்டும் தொலைவில் நின்றான்.

வந்தனா காத்திருந்தாள்!

தன்னுடைய அந்தக் காத்திருப்புக்கு பல காரணங்கள் வைத்திருந்தாள்.

ஒரு நாளல்ல.. இரண்டு நாளல்ல... இரண்டு ஆண்டு கள் காத்திருக்க வேண்டி வந்தது.

இரண்டு ஆண்டுகளில் அவள் கண்டதெல்லாம் அவனது பீரோவைத் திறந்து சுத்தம் செய்கிற சுதந்திரம்தான்.

அதிலும் இன்றைக்குக் கையில் கிடைத்த அந்தக் கடிதத்தை வைத்துக் கொண்டு திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தாள்.

• • •



''வந்தனா!'' என்று மாமியார் அழைத்தார்.

''அத்தே!'' என்று பதில் கொடுத்தபடி வெளியே போக முற்பட்டாள்.

''வந்தனா.. வரவேண்டாம்! அங்கயே போனை எடுத்துக்கோ.. தம்பி.. பேசறான்'' என்றார்.

எடுத்தாள்.

அந்தப் பக்கம் தனலட்சுமியம்மா போன் ரிசீவரை வைத்தது தெரிந்தது.

அந்தப்புறம் மதியழகன்!

''வந்தனா...'' என்றான்.

''சொல்லுங்க..!'' என்றாள் உற்சாகமாக.

''வந்தனா.. என்ன பண்ணிகிட்டிருக்கே!'' என்று கேட்டான்.

அவள் சற்றே திடுக்கிட்டாள். அவனுடைய அனுமதி யில்லாமல் அந்தக் கடிதத்தைப் படித்திருக்கக் கூடாதோ என்று தோன்றியது. ஆனால் இப்போதைக்கு தெரிந்த மாதிரிக் காட்டிக் கொள்ள வேண்டாம் என்று முடிவு எடுத்தாள்.

''பீரோ க்ளீன் பண்ணிகிட்டிருக்கேன்'' என்றாள்.

''ஓ! பாத்து.. எந்த பைலையும் டாம்பர் பண்ணிடாதே'' என்றான்.

''சரிங்கத்தான்'' என்றாள்.

கொஞ்சம் குரல் குழைந்தாற்போல் ஆனது மதியழக னுக்கு.

''வந்தனா! மீட்டிங் நாளைக்கு மத்தியானம்தான். நான் அப்படியே கொஞ்சம் ஷாப்பிங் வந்தேன். கடிதாச் எல்லாம்

ரொம்ப அருமையா இருக்கு. வாங்கிட்டு வரட்டுமா? கலர் எது வேணும்னு சொல்லு!"

"உங்க இஷ்டம்" என்றாள்.

"அட... நீ என்ன? எங்களுக்கு இஷ்டமா இல்லேன்னா... ஷாப்பிங் வருவேனா?" என்றான்.

இப்போதெல்லாம் அடிக்கடி அவளிடம் கோபித்துக் கொண்டான். சின்னக் கோபமாகத்தான் இருக்கும். ஆனால் உடனே குளிர்ந்து விடுவான்.

அவன் கோபம் கூட அவளுக்குப் பிடித்துத்தான் இருந்தது. இப்படிக் கோபப்படுவதன் மூலமாக தனது இருப்பை அங்கீகரிக்கிறானோ என்று தோன்றியது.

"ஐயோ! கோபிக்கக்காதீங்க!" என்றாள்.

"சரி... சரி.." பின்னே? கேட்டா.. சொல்லணுமில்லே... என்றான்.

"உங்களுக்குப் பிடிச்ச கலரா எடுத்துட்டு வாங்க. எனக்கும் பர்ட்டிகுலரா எந்த லைக்கிங்கும் இல்லே!"

"ஓ.கே! டார்க் கலர்ஸ்ல எடுத்துட்டு வர்றேன்."

"ஆனா.. இங்க.. போட்டா... அத்தை எதுவும் நினைக்க மாட்டாங்களா?"

"ஏய்! களிமுத்து வைப் அதைதான் போட்டுகிட்டு நடமாடறாப்ல. உனக்கு என்ன வந்தது?"

அவள் சிரித்தாள்.

அவனும் சிரித்தான்.

"சரி... எனக்குப் பிடிச்ச மாதிரி எடுத்துட்டு வர்றேன். அது சரி.. உனக்குத்தான் எல்லாக் கலரும்.. சூட் ஆகுமே..." என்று சொல்லி விட்டு போனை வைத்தான்.



அவளுக்குள் ஒரு மகிழ்ச்சி ரேகை ஓடியது. முதல் முறையாகத் தன் கணவன் தனது அழகு குறித்துப் பேசியிருக்கிறான்.

சற்று முன்பு கடிதத்தைப் பார்த்த அதிர்ச்சி முற்றிலுமாக மறைந்து போனது.

தன்னைப் பெண் பார்க்க வந்தபோது சொன்னாரே.

"காத்திருக்கணும்..." என்று.

அது போலத்தான் காத்திருந்ததற்கான பலன்கள் மெதுவாகத் தெரிகிறாற் போலத் தோன்றியது.

இயல்பாகப் பேச ஆரம்பித்திருந்தான். அம்மாவைத் திருப்திப் படுத்துவதற்காகப் பேசுகிறாரோ என்ற சந்தேகம். இருந்தாலும் எப்படியோ பேச ஆரம்பித்திருக்கிறாரே என்று தோன்றியது. ஆனால் மனைவி என்ற முறையில் தான் செய்ய வேண்டிய கடமைகளை அவள் தவறாமல் செய்து வந்தாள்.

குடும்ப சம்பந்தமான விஷயங்களில் அவளது ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதிலும் தனலட்சுமியம்மாவுக்கு அவள் மீது அளவு கடந்த பிரியம் இருந்தது.

திருமணமாகி வந்தவுடனே குடும்பத்தின் வழக்கங்களைத் தெரிந்து கொண்டாள். குடும்பக் கடமைகளை அமைதியாக நிறைவேற்றினாள். ஒரு நாளும் தன் கணவனின் நடத்தை குறித்து அவள் புகார் சொன்னதில்லை. ஆனால் தாய் அறியாத சூலா என்பது போல. தனலட்சுமியம்மாவுக்கு விஷயங்கள் நன்றாகவே புரிந்தது.

விலாசினியின் திருமணம் முடிந்து வந்த போது தனலட்சுமியம்மாள் மகனைப் பற்றிக் கவலையுடன்

எண்ணிக் கொண்டார். ஆனால் இப்போது அவருடைய அனுதாபம் முழுவதும் மருமகளின் பால் இருந்தது.

இப்படி ஒரு கல்யாணம் அவனுக்கு செய்து வைத்திருக்க வேண்டாமோ என்று. ஆனால் உள்ளே அவரது இன்னொரு மனது சொன்னது.

"இவளைப் போல ஒரு பெண்தான் மதியழகனின் இன்றைய நிலைமைக்கு ஏற்றவளாக இருப்பாள். எப்படியும் பொறுமையாக இருந்து ஜெயிப்பாள்" என்று தோன்றியது. அந்த நம்பிக்கையில்தான் அவரும் காத்துக் கொண்டிருந்தார்.

மருமகளும் கூட அதையே யோசித்துத்தான் காத்துக் கொண்டிருக்கிறாள் என்று அவருக்கும் புரிந்தது.



## 11

மகேஸ்வரியின் குழந்தைகள் அமுதாவும், கணேஷும் வீட்டை ரெண்டு படுத்திக் கொண்டிருந்தார்கள்.

டெல்லிக்குப் போவதற்கு முன்பாக சகோதரியின் வீட்டுக்கும் போயிருந்தான். அப்போது மகேஸ்வரியைப் பார்ப்பதற்கு கமலேசுவரியும் வந்திருந்தாள்.

இரண்டு பேருமாக சகோதரனிடம் பேசினார்கள்.

"தம்பி! விலாஸினி ரொம்ப வேகமான பொண்ணு. அவ படுத்தின பாட்டை நினைச்சுக்கிட்டு நாம இவளை சோதிச்சக் கூடாது. வந்தனா ரொம்பப் பொறுமையான பொண்ணு" என்று நிறுத்தினாள் கமலேஸ்வரி.



மதியழகன் காது கொடுத்துக் கேட்கிறான் என்பது தெரிந்ததும் மகேஸ்வரியும் கலந்து கொண்டாள்.

"ஆமா தம்பி! அம்மா ரொம்பக் கவலைப்படறாங்க. வந்தனாவுக்கு நாம நியாயம் செய்யலையோன்னு என்கிட்டே ஒரே புலம்பல்" என்றாள்.

மதியழகன் தரையைப் பார்த்தான். பிறகு வயலைப் பார்த்தான். இப்போது மகேஸ்வரியின் தோப்பு பங்களாவில் போர்ட்டிகோவில் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

"இதுல நிறைய சிக்கல்கள் இருக்கு. மஹிக்கா.. அதான் கல்யாணம் வேண்டாம்னேன். அம்மா ரொம்ப வருத்தப்பட்டாங்கன்னு ஒத்துகிட்டேன்" என்றான்.

சகோதரிகள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். மகேஸ்வரி மேலும் சொன்னாள்.

"நடந்து போனதையே நினைச்சகிட்டு நிகழ்காலத்து அமைதியைக் கெடுத்துக்கக் கூடாதில்லே. இனிமே வந்தனாதானே உண்மை. நிஜம்" என்றாள் மகேஸ்வரி.

மதியழகன் அதை ஒத்துக் கொண்டான். அதற்குப் பிறகுதான் டெல்லி போயிருந்தான்.

அவன் டெல்லி போயிருந்த இடைவெளியில் மகேஸ்வரி அம்மாவிடம் அனுமதி வாங்கித் தன் தோட்ட வீட்டுக்குக் கூட்டி வந்து விட்டாள்.

வந்தனா மீது எப்போதும் மகேஸ்வரிக்கு நல்ல பிரியம். அவளது பொறுமையும் சுறுசுறுப்பும் அவளுக்கு மிகவும் பிடிக்கும்.

மகேஸ்வரியின் கணவனுக்கும் அவளை மிகவும் பிடிக்கும், வந்தனா என்று வாய் நிறைய அழைப்பான். ராமநாதன் அதுதான் அவன் பெயர். அவருக்கும் சகோதரிகள் இல்லை என்பதால் வந்தனாவிடம் வெகு அன்பாகப் பழகுவார்.

கமலீஸ்வரியின் கணவர் மோகன்குமாருக்கும் வந்தனாவை மிகவும் பிடிக்கும். எல்லாருக்குமே அரசல், புரசலாக மதியழகனுக்கும் வந்தனாவுக்கும் இன்னும் நிலைமை சீராகவில்லை என்று தெரிந்திருந்தது. ஆனால் எப்படி அதைப் பற்றிப் பேசுவது என்று யோசித்துத்தான் சகோதரிகளையே பேசச் சொன்னார்கள்.

டெல்லி விமானப் பயணத்தின் போது எல்லாரும் தனக்காகவும், வந்தனாவுக்காகவும் கவலைப்படுவது புரிந்து சிந்தனையில் ஆழ்ந்தான் மதியழகன்.

மதியழகனுக்குத் தன் நிலைமையை எப்படி இவர்களுக்குப் புரிய வைப்பது என்று தெரியவில்லை, அவனுக்குள் விடை காண வேண்டிய சில கேள்விகள் இருந்தன என்பதும் அந்தக் கேள்விகளாலே தான் இன்னும் வந்தனாவை நெருங்குவதில் தயக்கம் என்றும் அவனால் சொல்ல முடியவில்லை. ஆனால் டெல்லியில் இறங்கும் போது உறுதிமொழி எடுத்துக் கொண்டான்.

இனிமேல் யாரும் வந்தனாவுக்காக அனுதாபப் படுகிற நிலைமையை அவளுக்கு வைக்கக்கூடாது... என்பதுதான் அது.

அதற்கேற்றாற் போல் டெல்லியில் அவனுக்கு ஒரு மறக்கவொண்ணாத அனுபவமும் ஏற்பட்டது. அதற்குப் பிறகுதான் அவன் டெல்லியில் இருந்து வந்தனாவிடம் புடவை வாங்குவது பற்றிப் பேசியது.

புறப்படுவதற்கு முன்பாக மறுபடியும் வீட்டுக்குத் தொடர்பு கொண்டான்.

அம்மாதான் போனை எடுத்தாள்.

"தம்பி.. மகேஷ்வரி.. வந்து கூட்டிட்டுப் போனா... ரெண்டு நாளு அங்கதான் சந்தோஷமா இருக்கட்டும் என்று நான்தான் அனுப்பி வச்சேன்" என்றாள்.



"இங்கதான் சந்தோஷமா இல்லையே!" என்ற தொனி அதில் இருந்தது.

மதியழகன் சிரித்துக் கொண்டான்.

"எந்த வயதுப் பெண்ணாக இருந்தாலும்... சரி...! பொடி வைத்துப் பேசுகிற திறமையே அவங்களுடையதுதான்" என்று.

"சரிம்மா! நான் சாயங்காலம் வந்துடுவேன். அவளை அங்கயே இருக்கச் சொல்லு. நானும் மஹிக்கா வீட்டுக்குப் போய் ரெண்டு நாள் தங்கிட்டு வரேன்" என்றான்.

முதல் முறையாகத் தன் மகன் தன் மனைவியை "அவள்" என்று குறித்துப் பேசியது அம்மாவுக்கு மகிழ்ச்சி.

"யாரை... வந்தனாவையா.. சொல்றே?" என்றார்.

"ஆமா! என் வைப்பைத்தான்" என்றான் அம்மாவின் காது குளிர.

சொன்னாற் போலவே வந்துவிட்டான்.

மகேஸ்வரிக்கு மிகவும் மகிழ்ச்சி. திருமணத்துக்குப் பிறகு இருவருமாக சேர்ந்து வந்திருக்கிறார்கள் என்று.

விழுந்து விழுந்து உபசரித்தாள்.

வந்தனாவே ஒரு கட்டத்தில் "அக்கா.. போதும்...! எதுக்கு இப்படி அமர்க்களப்படுத்தறீங்க?" என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டாள்.

"தம்பி! மலைக் கோவிலுக்குப் போலாமா?" என்று வந்தாள் மகேஸ்வரி.

"ம் ... போலாமே? என்ன வந்தனா? போலாமா?" என்றான் ஆர்வமாக.

ஆச்சரியமும், ஆர்வமும் கண்களில் மின்ன "ம்..." என்றாள் வந்தனா.

உண்மையாகவே அந்த நேரத்தில் பார்க்க மிகவும் அழகாக இருந்தாள்.

சிறிய மலைக் கோயில் அது!

குருந்த மலை முருகன் கோயில் என்று பெயர்.

காரமடை என்ற ஊருக்கு அருகிலே இருந்தது. மொத்தமே நூறு படிகள்தான் இருக்கும்.

அமுதா மதியழகனின் செல்லம். அவன் கைகள் பிடித்துக் கொண்டேதான் குதித்துக் கொண்டு நடப்பாள்.

கணேஷுக்கு தானே மலையேறுகிற அளவுக்கு வயதில்லை என்பதால் மதியழகன் தூக்கித் தோள் மேல் வைத்துக் கொண்டான்.

இடத் தோளில் மருமகனைத் தூக்கி கொண்டு நடப்பதைக் கண்ட ராமநாதன் சிரித்தார்.

"மாப்பிளே! எல்லா இடத்துக்கும் நீங்களும் கூட வந்தீங்கன்னா... நான் ப்ரீ ஆனா.. எப்ப உங்க குழந்தைகளை எடுத்துகிட்டு இப்படி நடக்கறது?" என்றார்.

"நம்ம நாட்லயே மக்கள் தொகை அதிகமாக் கெடக்குது.. அப்புறம் எதுக்கு குழந்தை குழந்தைங்கறீங்க?" என்றான் மதியழகன்.

"அதெல்லாம்... நாட்டுக்குச் சொல்றது மச்சான். அதுக்காக.. வீட்டுல வாரிசில்லாம இருக்கலாமா?" என்றான் ராமநாதன்.

"என்ன.. வந்தனா.. மச்சான் என்னமோ கேக்கறாரே" என்று அவளைப் பார்க்கவும் வந்தனா திணறிப் போனாள்.



முகம் சிவந்து போனது.

அவளது சிவந்த முகத்தை அவன் ஆர்வமாகப் பார்க்கவும் ராமநாதன் இங்கிதமறிந்து குழந்தைகளைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டு நகர்ந்தார்.

"என்ன பதிலைக் காணோம்!" என்றான் மதியழகன்.

"பதில் என்கிட்டயா இருக்கு!" என்று முணுமுணுத்தாள் தைரியமாக.

"பின்னே? என்கிட்டயா... இருக்குங்கறே..." என்றான்.

கடகடவென்று சிரித்தான்.

டெல்லிக்குப் போய் வந்ததிலிருந்தே கணவனிடம் மாற்றம் தெரிவதை உணர்ந்தாள் வந்தனா.

தன்னை உற்றுப் பார்ப்பதும், லேசான புன்னகையுடன் அளப்பதும் ஆக அவன் செயல்கள் எல்லாம் அவளுக்குள்ளே ஒரு தவிப்பை ஏற்படுத்தின.

இப்போது கேலி வேறு பேச ஆரம்பித்திருக்கிறான். அவர்களது வீட்டுக்கு வந்ததற்குப் பிறகு வாயடிப்பதையெல்லாம் விட்டு விட்டாள் வந்தனா.

கோவிலுக்குப் போனதற்குப் பின்பும் அவன் குறும்பு தொடர்ந்தது.

கூட்டம் ரொம்பவும் இல்லை என்றாலும் ஓரளவு இருந்தது. கமலீஸ்வரியின் மகள் இந்திரா.

"மாமா! என்னை!" என்று கெஞ்ச அந்த ஒன்றரை வயதுக் குழந்தையை கையில் ஏந்திக் கொண்டான்.

வந்தனாவிடம் உரசிக் கொண்டேதான் நின்றான். மனைவி முகம் சிவக்க நிற்பதை ரசிக்கிறவன் போல் தெரிந்தான்.

அவளது முதுகுக்குப் பின்னால் லேசாகத் தோள் இடிக்க நின்றான்.

மகேஸ்வரியும், கமலீஸ்வரியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். மெல்லச் சிரித்துக் கொண்டு அவர்களைத் தனியாக விட்டு விட்டு கணவன்மாரை அழைத்துக் கொண்டு முன்னால் போய் விட்டார்கள். அதற்குள்ளாகக் கோயில் அய்யர் அவர்களைப் பார்த்து "வாங்க.. வாங்க! முன்னால வாங்க!" என்று அழைத்துப் போனார்.

கோயிலின் கர்ப்பக்கிருகத்துக்கருகில் போய் நின்றார்கள். முருகன் அழகாக இருந்தார்.

பூஜை முடித்து வெளியே வந்தார்கள். சிறிய குன்று அது. குன்றின் மேல் வீற்றிருந்த இயல்புக்கேற்ப குமரன் சிரித்த முகத்தோடு அந்த அழகிய சின்னக் கோயிலில் நின்று கொண்டிருந்தார்.

சுற்றி நடந்து வந்தார்கள்.

அளவான கூட்டம் என்பதால் பரவலாக நடக்கும் போது கூட்டமே இல்லாதது போலத்தான் இருந்தது.

மகேஸ்வரி தன் கணவன் குழந்தைகளுடன் சற்று முன்னால் நடக்க, கமலீஸ்வரி தன் கணவனுடன் சற்று பின்தள்ளி நடந்து போனார்கள்.

"அக்கா கூட ஜாயின் பண்ணிக்கலாம்" என்று அவள் ...ரையைப் பார்த்துக் கொண்டு முணுமுணுக்க அவன் ...வள் அவஸ்தையைப் பார்த்து சிரித்தான்.

"அவங்கவங்க.. பாமிலியோடு போயிட்டிருக்காங்க. ...ம எதுக்கு.. இடைஞ்சலா..." என்றான்.



அவள் நடையை மெதுவாக்கினாள்.

"நான் ஊருக்குப் போயிருந்தப்போ நீ உங்கம்மா வீட்டுக்குப் போயிட்டு வந்திருக்கலாமில்லே" என்றான்.

"சரி.. ஊருக்குப் போனதுக்கப்புறம் நடந்த முக்கியமான விஷயங்களைச் சொல்லு!"

சொன்னாள்.

"பழங்கள், காய்கறிகள் என்று வியாபாரிகள் வந்து வாங்கிச் சென்றவர்களைப் பற்றிச் சொன்னாள்.

அலுவலகத்தின் பின்பகுதியை கொஞ்சம் விரிவாக்கிக் கொண்டிருந்தான். அது தொடர்பாக நடந்த வேலைகள் பற்றிச் சொன்னாள்.

எவ்வளவு பணம் ஆபீஸுக்குக் கொடுத்தாள் என்பதையும், எவ்வளவு பணம் வரவு என்பதையும் சொன்னாள்.

"குட்!" என்று கேட்டுக் கொண்டான்.

"சரி...! ஒரு ரெண்டு நாள் மஹிக்கா வீட்ல இருந்துட்டுப் போலாமா?" என்றான்.

"ம்...!" என்றாள். "அத்தை?"

"அத்தை வந்துடுவாங்க... இப்ப வந்துடுவாங்க பாரு!" என்றான்.

சொல்லிக் கொண்டிருக்கும்போதே அத்தையும் வந்து சேர்ந்தார்.

"என்ன தம்பி! திடீர்னு?"

"இல்லம்மா! மஹிக்கா.. மச்சான் ரொம்ப நாளாக் கூப்பிட்டுகிட்டே இருந்தார். அதான் எல்லாமா.. ரெண்டு நாள் இருந்துட்டுப் போவாமேன்னு..." என்றான்.

"சரிப்பா.. சந்தோஷம்.. நான் இன்னைக்கு இருந்துட்டு நாளைக்குக் கிளம்பறேன். கரும்பு வெட்ற சமயம்" என்றார்.

பேசிக் கொண்டே கண்டும், காணாதவர் போல் மகன், மருமகளிடம் நெருங்கி நிற்பதையும் மருமகள் முகம் சிவந்து கிடப்பதையும் கண்டவர் மனம் குளிர்ந்து போனது.

வாயெல்லாம் சிரிப்பாக மகள்களை நோக்கிப் போனார்.

சுற்றுச் சுவரோரமாக நின்று சற்று நேரம் கீழே தெரிந்த இயற்கைக் காட்சிகளை ரசித்துப் பார்த்தார்கள்.

"என்... வந்தனா! நம்ம பண்ணை முழுதும் சுத்திப் பார்த்திருக்கியா?" என்றான்.

"இல்லே!" என்றாள்.

"ஊருக்குப் போனதும் கூட்டிட்டுப் போறேன்" என்றான்.

"ம்..." என்று தலையாட்டினாள்.

குரல் ஒரு மாதிரியாகக் குழைய "என்...? அதிகமாய் பேசறதில்லேன்னு முடிவா?" என்றான்.

அவள் ஒரு நிமிடம் அவனை நிமிர்ந்து பார்த்தாள். கண்கள் படபடவென்று அடித்துக் கொண்டன.

"நீங்க.. என்னமோ.. இயற்கைக்கு வித்தியாசமா இருக்கீங்க!" என்றாள்.

"திருந்திட்டேன்னு.. வச்சுக்கயேன்" என்றான்.

"என் மாமா? என்ன தப்பு செஞ்சே?" என்று குறுக்கிட்டாள் குழந்தை.



"நிறையத் தப்புப் பண்ணிட்டேன்டா" என்று உல்லாசமாகச் சிரித்தான்.

பிறகு மனைவியைப் பார்த்துக் கொண்டான். "முருகன் கோயிலுக்கு வந்தோம் பாரு. முருகன் சிரிக்கிற சிரிப்பில் எனக்கும் பாடம் சொல்லிட்டாருன்னு வை... அவரும் ரெண்டு வைப்பாரர்தானே..." என்று சிரித்தான்.

வந்தனாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. "குழந்தையை நான் கொஞ்ச நேரம் வச்சுக்கறேன்" என்றாள்.

"ம்...!" என்று கொடுத்தான்.

கொடுக்கும்போது கிட்டத்தட்ட இரு கைகளாலும் அணைத்தாற் போல் இழைந்தபடி கொடுத்தான்.

வந்தனா முகத்தில் ஒரு தவிப்போடு குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

திரும்ப வரும்போதும் காரில் பின்சீட்டில் அவள் அருகில்தான் அமர்ந்து கொண்டான்.

இரண்டு பக்கமும் மகேஸ்வரியின் குழந்தைகள் இருவரையும் வைத்துக் கொண்டு நெருங்கியே அமர்ந்திருந்தான்.

வந்தனாவுக்கு வரப்போவது என்ன என்று தெரிந்துவிட்டது. மௌனத்தில் ஆழ்ந்து கிடந்தாள்.

வீட்டுக்கு வந்ததற்குப் பிறகும் அம்மாவும் மகள்கள் இருவரும் என்னவோ கிசுகிசுவென்று பேசிக் கொண்டார்கள். சிரித்துக் கொண்டார்கள்.

பொறுக்க முடியாத வந்தனா மகேஸ்வரியிடம் தனி யாகச் சொன்னாள்.

"அக்கா! என்னை விட்டுட்டுத் தனியா என்னமோ பேசிக்கறீங்க?" என்று புகார் போலச் சொன்னாள்.

"அடியே! என் தங்கம்!" என்று கன்னம் வழித்துச் சிரித்தாள் மகேஸ்வரி.

"இனிமே... தம்பி உன்னைத் தனியா விட்டுட்டு இருக்க மாட்டான் போல இருக்கு. அதைத்தான் பேசிக்க றோம். அந்த சந்தோஷத்தை நாங்க ஷேர் பண்ணிக்க றோம். இனிமே நாங்க எதுக்கு?" என்றாள்.

வந்தனா கண்கள் படபடக்க தரையைப் பார்த்துக் கொண்டு சொன்னாள்.

"அக்கா! இன்னைக்கு என்னமோ வித்தியாசமாத்தான் பேசறாரு..." என்றாள்.

"மக்கு! இதுதான் இருக்க வேண்டிய முறை. இது வரைக்கும் அவன் நடந்துகிட்டதுதான் வித்தியாசம்" என்று.

"ஓ!" என்றாள்.

"என்ன ஓ! இப்பத்தான் தம்பிக்கு! மனசு தெளிவா யிருக்கு. நீ எதுவும் மக்கர் பண்ணிடாதே.... என்ன? அவனுக்கு எப்படிப் பிடிக்குதோ அப்படி நடந்துக்கோ..." என்றாள்.

"ம்...!" என்றாள்.

அன்றிரவு!

எல்லாரும் ஒன்றாக அந்தப் பெரிய டைனிங் டேபி ளில் சுற்றிலும் அமர்ந்து சாப்பிட்டார்கள்.



மகேஸ்வரியும், கமலீஸ்வரியும் தடபுடலாக டிபன் தயாரித்திருந்தார்கள்.

"என்ன விசேஷம்?" என்றான் மதியழகன்.

"தம்பியும், வந்தனாவும் ஜோடியா முதல் முதலா வந்திருக்காங்க.. இல்லே!" என்றார்கள்.

"மாப்பிளே! என்னமோ ஸ்பெஷலாக் கவனிக்கிறாங்க.." என்று ராமநாதன் கூடச் சிரித்தார். அந்த சமயம் மதியழகன் முகம் கூடச் சிவந்து போனது.

ராமநாதன் தனியாகச் சொன்னார். "மாப்பிளே! வந்தனா.. ரொம்ப நல்ல பொண்ணு. பழசையே வெச் சுட்டு நிகழ்காலத்தை இழந்துறக் கூடாது" என்று.

"ஆமா! மச்சான்! ஐ ஹேவ் நாட் டன் ஜஸ்டிஸ் டு வந் தனா... இனிமே எல்லாத்தையும் மாத்திரலாம்" என்றான்.

"அதைச் செய்ங்க!" என்றார் மகிழ்ச்சியுடன்.

ஏதோ பேசி வைத்துக் கொண்டாற்போல் ஒரு குறிப் பிட்ட நேரம் கழித்து வந்தனாவை அந்தப் படுக்கையறைக் குள் அனுப்பி வைத்தார்கள்.

உள்ளே நுழைந்தவளுக்கு மூச்சே நின்று விடும் போல இருந்தது.

அவளுக்காகவே காத்திருந்தாற்போல மதியழகன் முகம் மலர வரவேற்றான்.

கால்கள் பின்ன அறைக்குள் நுழைந்தாள். "இனி எல்லாம் சுகமே" என்று நாத்தனார் வாழ்த்தி அனுப்பிய போதும் எப்போதும் அப்படியே இருக்கப் போவதில்லை என்று அவளுக்கு அப்போது தெரியவில்லை.



# 12

தயக்கமும், மயக்கமுமாக உள்ளே நுழைந்தாள் வந்தனா.

டிரஸ்ஸிங் டேபிளின் முன்னால் குனிந்து பார்த்தபடி தலையைக் கோதிக் கொண்டான் மதியழகன்.

திரும்பி மனைவியைப் பார்த்தான்!

அழகாக, வரிசைப் பற்கள் தெரிய புன்னகைத்தான். வந்தனா தயக்கத்துடன் இரண்டு எட்டு எடுத்து வைத்தாள்.

இது நாள் வரை இந்த மாதிரி சிக்கல்கள் அவளுக்கு நேர்ந்ததில்லை. அவர்கள் வீட்டில் இரவு நேரங்களில் அவன் நுழைந்தவுடன் சற்று நேரம் கணவனுடன் பேசிக் கொண்டிருப்பாள். பிறகு நாகரீகமாக ''குட் நைட்'' சொல்லிவிட்டுப் பக்கவாட்டில் இருக்கிற படுக்கை யறைக்குப் போய் விடுவாள். ஆனால், இது போல் ஒரே அறையில் இருக்க வேண்டிய அவசியம் வந்ததில்லை.

பக்கத்து அறையில் இருக்கும்போது கூட அவள் எச்சரிக்கையாக இருப்பாள். அவனது கவனம் கலைக்கிற விதத்தில் எதுவும் செய்யமாட்டாள். இயல்பாக ஹம்மிங் செய்வதோ, பாட்டுப் பாடிக் கொண்டு நடமாடுவதோ கூட இருக்காது. இருந்தால் ஏதோ அவனைக் கவர்கிற விதத் தில் நடந்து கொள்வது போல இருக்குமோ என்ற பயம் அவளுக்கு.

நாகரீகமாக நைட்டி அணிந்து கொள்வாள். அது ஒரு விதமாகப் போய்க் கொண்டிருந்தது. ஆனால், இன்றைக் கும் அந்தப் பெரிய படுக்கையின் ஓரத்தில் படுத்துக் கொள்வது ஒன்றும் பெரிய விஷயமாக இருக்கவில்லை. ஆனால், இன்றைக்குக் காலையில் இருந்தே கணவனின் பார்வையும், பேச்சும் வித்தியாசமாக இருந்தது. லேசாக இழைந்தாற்போலவே நின்று கொண்டிருந்தான். அவள் அவன் முகத்தைப் பார்த்தால் குறும்பாகச் சிரித்தான். திண்டாட்டமும், திணறலுமாக அவள் நடப்பதைக் கண்டு அவன் மிகவும் ரசித்தாற் போல் இருந்தது.

அதே திணறலும், ஒரு வித திகைப்புமாக அவள் உள்ளே நுழைவதை சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டு நின்றான். அதே குறும்புப் புன்னகை வேறு.

மகேசுவரியின் வீட்டில் அன்றைக்குத் தங்குவது என்று முடிவானவுடனே மகேசுவரியும், கமலேஸ்வரியும் ஏதோ ''களுக்'' ''களுக்''கென்று சிரித்துக் கொண்டார்கள். அவர்கள் கணவன்மார் ஏதோ அவளை வாஞ்சையும், அன்புமாய் பார்த்தாலும் அந்தப் பார்வைக்கும், சிரிப்புக் கும் பின்னாலும் ஒருவிதமான குறும்பு மிளிர்வதை உணர்ந்தாள்.

தாயும், இரு மகள்களுமாக ஏதோ ஆலோசனை செய் தார்கள். சொல்லி வைத்தாற்போல அவளை இரவு பத் மணி வரையிலும் தங்களோடு வைத்துக் கொண்டார்கள் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

வந்தனா தனது நாத்தனார்கள் இருவரோடும் நல்லுற வைத்துக் கொண்டிருந்தாள். கிட்டத்தட்ட ஒரு தோழிய நடத்தினார்கள். அவர்கள் ஊருக்கு வரும் போதெல்லா பேச்சும், சிரிப்புமாக நேரம் கழிப்பார்கள்.

நல்ல சினிமாக்கள், புத்தகங்கள் ரசனைகள் என்று பகிர்ந்து கொள்வார்கள். அதிலும் மகேஸ்வரியின் ரசனைகளும், வந்தனாவின் ரசனைகளும் ஒத்துப் போகும்.

மாடர்ன் விஷயங்கள்தான் என்று கமலேஸ்வரியும், என்ன இருந்தாலும் பழைய விஷயங்களின் பெருமையே பெருமைதான் என்று மகேஸ்வரியும் பொய்ச் சண்டை போட்டுக் கொள்வார்கள்.

மதியழகனுக்கு அந்த விதத்தில் மனத்திற்குள் திருப்தி.

பல குழப்பங்களுக்கு நடுவே இந்தத் திருமணம் நடந்திருந்தாலும் வந்தனாவால் எந்தக் குழப்பமும் ஏற்பட்டதில்லை. சொல்லப்போனால் இதுவரையிலும் தான் தான் அவளுக்கு நியாயம் செய்யவில்லை. ஆனாலும் இப்படித்தான் இருக்கும் என்று எதிர்பார்த்து வந்தவள் போல் இந்த மாதிரி ஒரு சூழ்நிலையை ஒரு விதமான அமைதியுடன்தான் எதிர்கொண்டாள்.

அதுகுறித்த ஒரு விதமான அவமான உணர்வு அவனுக்குள் இருந்தது. ஆனால் தன் நடத்தைக்கான காரணங்களையும் அவன் மனதுக்குள் புதைத்து வைத்திருந்தான். ஆனால் விலாஸினியின் காரணத்தினால் வந்தனா தண்டனை அனுபவிக்க வேண்டியதில்லை என்ற தெளிவுக்கு அவன் இப்போது வந்திருந்தான். அதைத் தன் நடத்தையிலும் அவன் வெளிப்படுத்தியிருந்தான்.

இப்போது உள்ளே நுழைந்து தயங்கியபடி நிற்கிற மனைவியைப் பார்த்தான்.

"வா!" என்றான் ஒற்றைச் சொல்லில்.

அவள் நம்பவே முடியாதவள் போல் நகர்ந்தாள். அவன் அருகில் போய் தலைகுனிந்தபடி நின்றாள். "உட்கார்" என்றான்.





அவள் தயங்கியபடி அமரப் போனாள். அதற்குள் தன்னிரு கைகளாலும் அவளது நீண்ட மென்மையான கூந்தலை ஏந்திக் கொண்டான்.

"இதைப் பராமரிக்கறது ரொம்பக் கஷ்டமோ" என்றான்.

"ம்...!" என்றாள்.

மெல்ல ஏதோ பட்டுத் துணியைத் தோளில் போடுவது போல அவளது தோளிலிருந்து முன்பக்கம் சரிகிறாற் போல் படரச் செய்தான்.

மதியழகனது ஸ்பரிசம் அவளது இரு தோள்களிலும் படர்ந்தது. "ஒரு பெண்ணுக்குத் தலைமுடியும், கண்களும் அழகா இருந்தா ரொம்ப நல்லதும்பாங்க தெரியுமா?" என்றான். பின்புறம் இருந்து அணைத்துக் கொண்டான்.

மெல்லக் காதருகில் அவன் முணுமுணுக்க வந்தனா என்ன செய்வதென்று தெரியாமல் கண்களை மூடிக் கொண்டாள். அவன் தன் பக்கம் திருப்பினான்.

"ம்...!" என்றாள்.

"என்ன..." எல்லாத்துக்கும் பதில் "ம்... தானா?" என்றான். அதற்கும் அவள்.

"ம்...!" என்றாள். சொல்லும்போதே அதன் அர்த்தம் புரிய இருவரும் சிரித்தார்கள்.

மெல்ல அவள் முகம் நிமிர்த்தினான். "ம்?" என்றான். அவள் கண்கள் படபடக்க,

"ம்...!" என்றாள்.

மறுபடியும் சிரித்தார்கள். சிரிப்பதான அந்த இடைவெளியில் திரும்பி அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

ஒரு கணம் விலாஸினியின் முகம் அவன் கண்களுக்குள் தோன்றி மறைந்தது போலும். ஒரே விநாடிதான். அவன் அந்த முகத்தை மனத்திரையிலிருந்து எடுத்து அந்தப் புறம் வைத்தான்.

"இது நிகழ்காலம்! இவள் என் மனைவி. இவள்தான் என் மனைவி" என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டான்.

மெல்லக் குனிந்தான்! தன் சொல்லாலும் செயலாலும் வந்தனாவை நிமிர வொட்டாமல் அடித்து மனைவி என்ற பதவிக்கான முழு அங்கீகாரத்தையும் பரிசுகளையும் அவளுக்கு நளினமாகவும், நாகரீகமாகவும் கொடுத்தான்.

* * *

புரண்டு படுத்தான் மதியழகன்! மெது மெதுவாக நடந்தவை எல்லாம் நினைவுக்கு வந்தன. மெல்லப் புன்னகைத்துக் கொண்டான்.

வந்தனாவுக்குத் தான் நியாயம் செய்யவில்லையென்ற தன் மீதே அவன் கொண்டிருந்த கோபம் மெல்ல வடிந்திருந்தது. முகமும் மனமும் தெளிவாயிருந்தது.

ஒருக்களித்துப் படுத்தான். மனைவியைக் கையணைப்பில் கொண்டு வர வேண்டுமென கைகளை நீட்டினான். ஆனால் அவளைக் காணவில்லை.

எழுந்து தேடினான்.

மெல்லிய இரவு விளக்கின் வெளிச்சத்தில் அந்தப் பெரிய அறையின் ஓரத்தில் இருந்த அந்த சோபாவில் அமர்ந்திருந்தாள்.

கால்களை மேலே எடுத்து மண்டியிட்டு முழங்கால்களில் முகம் புதைத்து அமர்ந்து கொண்டிருந்தாள்.



மதியழகன் சுறுசுறுப்பாக எழுந்தான்.

அருகில் போனான்!

''ஹேய்! வந்தனா!'' என முகம் நிமிர்த்தினான். அவள் கண்களில் லேசாக ஈரம் படிந்திருந்தது.

இரண்டு கைகளாலும் அவள் தோள் தொட்டு எழுப்பினான்.

''என்ன... என்ன... ஆச்சு?'' என்று அவன் கேட்ட தருணத்தில் வெடித்துக் கிளம்பிய கேவலுடன் அவன் மார்பில் சாய்ந்தாள்.

மௌனக் குலுங்கலுடன் அழுதாள்.

மதியழகனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மெல்லத் தலையைக் கோதிக் கொடுத்தபடி நின்றான்.

''அழட்டும்! அழுது முடியட்டும்!'' என்று காத்திருந்தான். பிறகு மெல்ல அடங்கினாள்.

முகம் நிமிர்த்தி அந்தக் கண்ணீர்க் கன்னங்களைத் தன் முத்திரைகளால் குளிப்பாட்டினான்.

ஒருவிதமான திணறலுடன் விலகிக் கொண்டாள்.

''என்னடா?'' என்றான்.

அவள் மௌனமாக ''ஒன்றுமில்லை!'' என்பது போல் தலையசைத்தாள். ஆனால் அவன் முகம் பார்க்க மறுத்தாள்.

''இது என்ன சோகக் கண்ணீரா? சந்தோஷக் கண்ணீரா?'' என்றான் ஒரு விதமான குரலில்.

''தெரியலே!'' என்றாள்.

அவன் புன்னகைத்தான். அவளது மன இறுக்கம் உடைந்து வெளி வந்த விதம்தான் அது என்று புரிந்தது.

தன் கைகளிலிருந்து விலக்காமல் மறுபடியும் மென்மையான குரலில் சொன்னான்.

"ஐ ம் சாரிடா! என்னோட பிரச்சினைகளுக்காக உன்னைக் காக்க வச்சது எந்த விதத்திலும் நியாயமில்லே" என்றான்.

அவள் அவனது வாயைப் பொத்தினாள்.

"இல்லல்லே! அதுக்காக அழலே!" என்றாள் தடுமாற்றத்துடன்.

"பின்னே? எதுக்காக?"

"நானே... சொல்றேன்.. ஒரு நாள்.. இப்ப வேண்டாம்" என்றாள்.

"ஓ.கே! நோ.. பிராப்ளம்... எப்ப வேண்ணா.. சொல்லு!" என்றான்.

திடீரென்று அவனுக்குத் தோன்றியது. அவளுக்கு ஏதும் உடல் உபாதை இருக்குமோ என்று.

"வேற ஒண்ணும் பிரச்சினையில்லையே?" என்றான்.

"இல்லை!" என்றாள்.

"வந்தனா! நான் இந்த ரூம்ல முதல்ல தங்கியிருப்பேன். இந்த ஜன்னலைத் திறந்து பார்த்தா அந்தப் பக்கம் ஒரு மலை தெரியும். இன்னும் இரண்டு மூன்று நாள்ல பௌர்ணமி வருது. நிலா வெளிச்சத்துல அந்த மலையைப் பார்க்க ரொம்ப அழகா இருக்கும். கொஞ்சம் மனசு சங்கடமா இருந்தா... பௌர்ணமி சமயம் நான் இங்கே வருவேன். இந்த ரூம்ல தங்குவேன். இந்த ரூம் ஜன்னலைத் திறந்து வச்சிட்டு மணிக்கணக்கா பார்த்துக்கிட்டு இருப்பேன். என்னோட சின்ன டேப்ரெக்கார்ட்ல பாட்டு போட்டுக் கேட்பேன்" என்றான்.



இப்போதும் அதே போல ஜன்னல் கதவைத் திறந்தான்.

பிரம்மாண்டமான யானை ஒன்று படுத்துக் கொண்டிருக்கிறாற் போல அந்த மலை தெரிந்தது.

பார்க்க ரம்மியமாக இருந்தது! அம்மலையின் நிறம் மாறுகிற அழகைப் பார்த்துக் கொண்டு அமர்ந்தார்கள். அந்த சோபாவில் அவள் அமர்ந்திருந்தாள். அவள் அவன் கைப்பிடியில் இருந்தாள்.

"ஹேய்! எதிரில பிரம்மாண்டமான மலை! மாறுகிற அழகுகள். பக்கத்தில் ஒரு அழகான பெண்! "பத்தினிப் பெண் வேணும்"ன்னு பாரதியார் சொன்னது போல... ரொம்ப அழகா இருக்கு...!" என்றான்.

வெகு நாட்களுக்குப் பிறகு மனதில் நிம்மதி தோன்றியதாய் உணர்ந்தான் மதியழகன்.

விலாஸினி தன் வாழ்வில் வந்த முதல் புயல் என்றால் அது ஒரு விதமான சந்தோஷமான புயல்! வாழ்வை விட்டுச் சென்ற பிறகோ குழப்பம்! பொருளற்ற ஒரு காத்திருப்பு!

தானும் காத்துக் கிடந்து, வந்தனாவையும் காத்துக் கிடக்கச் செய்து...!

நீண்டதொரு பெருமூச்சு விட்டான்!

அவள் கவலையோடு நிமிர்ந்து பார்த்தாள்.

"ஹேய்! நீ எதுக்கு பயப்படறே! நான் வேற எதையோ நினைச்சுகிட்டேன்..." என்றான். அவள் முகம் வாடுகிறதோ என்று சற்றுக் கவனித்தான். அவள் முகத்தில் எதுவும் தெரியவில்லை.

வந்தனாவின் தோள்களை நீவிக் கொடுத்தபடி சொன்னான்.

"வந்தனா! ஏதோ ரொம்ப தூரம் ஓடிக் களைச்சு உட்கார்ந்த மாதிரி நான் இப்ப பீல் பண்றேன். உன்னோட இருந்த இத்தனை நாட்கள்லயும் நான் விலகி இருந்தப்பவும் நிம்மதியா உணர்ந்தேன். தாய்ப் பறவையோட சிறகுக்குள்ள இருக்கிற மாதிரி இப்பவும்.. இதுக்கப்புறமும் நான் சந்தோஷமாத்தான் பீல் பண்றேன்" என்றான்.

ஆழ்ந்த குரலில் தன் நிம்மதியுணர்வைப் பகிர்ந்து கொள்கிற அந்தக் கணத்தில் வந்தனா தன் திருமண வாழ்க்கைக்குப் பொருள் வந்து விட்டாற் போல் உணர்ந்தாள்.

"தன் மகிழ்வை வெளிப்படுத்துகிறவள் போல் எழுந்து நின்று அவனைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள். குனிந்து அவன் உச்சியில் தன் இதழ்கள் பதித்து சீராட்டினாள்.

அவனும் தன்னை ஒப்புக் கொடுத்தான்.

• • •

"ஏண்டி... கமலி! என்ன ரெண்டு பேரும் ராசியாயிருப்பாங்களா?" என்று கிசுகிசுத்தாள் மகேஸ்வரி.

கமலி சிரித்தாள்.

"நிச்சயமா! நேத்திக்குத் தம்பி ஒரு விதமாத்தான் நடமாடிட்டிருந்தாப்ல."

"ஆமா! எங்க வூட்ல கூட கேட்டாரு. என்ன, மதி கம்மா மந்திரிச்சு விட்ட கோழி மாதிரி நடமாடிட்டிருக்காப்ல.. அப்படின்னு" என்றாள் மகேஸ்வரி.



இருவரும் சிரித்தார்கள்.

"ஆமா! ரொமான்ஸ் பாக்கலையா? குருந்த மலை முருகன் கோயில்ல.. தம்பி.. சாமியை எங்க பார்த்தான். தேவி தரிசனம்தான்" என்றாள் கமலி.

இருவரும் மறுபடியும் சிரித்தார்கள்.

"மஹிம்மா! ஏதாவது வேணுங்கும்போது மட்டும் இந்த ஆம்பளைங்க.. எப்படிக் குழையடிக்கறாங்க... பாத்தியா" என்று மறுபடியும் கிளுகிளுவென்று சிரித்தார்கள்.

மகேஸ்வரியின் முகம் தீவிர பாவத்துக்கு மாறியது.

"கமலி! வந்தனா ரொம்ப நல்ல பொண்ணு. வேற ஒரு பொண்ணா இருந்தா.. பெரிய பிரச்சினை பண்ணியிருப்பாங்க.. இல்லே.. கண்ணீரும், கம்பலையுமா நடமாடிட்டிருந்திருப்பாங்க. ஆனா, வந்தனா அப்படிப் புலம்பி நான் பார்த்தது இல்லே. அம்மாகிட்டே சொல்வாளாம். "அத்தே! அவருக்கு ஒரு கசப்பான அனுபவம் ஏற்பட்டிருக்கு. இன்னமும் அதுல இருந்து மீள முடியலே... என் மேல நம்பிக்கை வர்ற வரைக்கும் நான் பொறுமையாத்தான் இருந்தாகணும். அவருக்கும் வயசிருக்கு. எனக்கும் வயசிருக்கு. அது மட்டும் இல்லைங்கத்தே... கடமைக்காக எதுவும் நடக்கக் கூடாதுங்கற அவரோட எண்ணமும் எனக்கும் பிடிச்சிருக்கு. அப்படிம்பாளாம்."

கமலியின் முகபாவமும் மாறியது. "ஆமா! ரொம்ப நல்ல பொண்ணு" என்றாள் அவளும்.

"அது மட்டுமில்ல.. அம்மா ஏம்மா வந்தனா... அம்மா ஊருக்குப் போய் வாயேன் அப்படின்னா.. வேண்டாங்கத்தே! எல்லாம் சரியானதுக்கப்புறம்தான்.. அங்க போகணும். நான் ஏதாவது உளறிட்டேன்னா.. எங்கப்பா...

வருத்தப்படுவாரு... நம்ம பிரச்சினைகள் அவர்களுக்கு எதுக்குத் தெரியணும்? அப்படீம்பாளாம். அவகிட்டே பொறுப்புன்னா... என்னனு கத்துக்கங்கடி... அப்படீங்கறாங்க அம்மா...'' என்றாள் மகேஸ்வரி.

''தம்பியும் பாவம்தான்! அந்த விலாஸினி எதுக்குத்தான் அவன் லைப்ல வந்தாளோ... ஏன் மஹிக்கா.. எங்க போயிருப்பா...?'' என்றாள் கமலி.

''அந்தக் கொகத்தை விடு கமலி...!'' என்றாள் மகேஸ்வரி கோபமாக.

''இல்ல.. மஹிக்கா! அப்படி விட முடியாது. விலாஸினி எப்பத் திரும்பி வந்தாலும் பிரச்சினைதான் தெரியுமா?'' என்றாள் கமலி.

''ஆமா! ஒருவேளை அவ நிலைமை என்னன்னு தெரியட்டும்னுதான் தம்பி இப்படி நடந்துகிட்டிருந்தானோ...'' என்றாள்.

''யாருக்குத் தெரியும்? இனி அவ கிவ எட்டிப் பாத்தா.. திருப்பி அனுப்ப வேண்டியதுதான்'' என்றாள் கமலி.

''ம்...!'' என்று மகேஸ்வரி பெருமூச்சு விட்ட அதே நேரத்தில் வந்தனாவும், மதியழகனும் சிரித்துக் கொண்டே ஹாலுக்கு வருவது தெரிந்தது.

''கமலி! எல்லாம் சரியாயிருக்க போல. பாரு! ரெண்டு பேரு முகத்திலயும் எவ்வளவு சந்தோஷம். இது நிலைக்கணும்னு வேண்டிக்கலாம்டி...'' என்றாள் மகேஸ்வரி.

''ஆமக்கா!'' என்றாள் கமலி.

எல்லாரும் நினைக்கும் வண்ணமே வாழ்க்கையில் நடந்து விடுகிறதா என்ன?





# 13

சூழ்நிலையில் அன்பும், மகிழ்ச்சியும் கலந்திருந்ததை வந்தனாவால் உணர முடிந்தது. இத்தனைக்கும் வந்தனா தனது நாத்திகளிடமோ, மாமியாரிடமோ எதையும் வெளிப்படையாய் சொல்லவில்லை.

மதியழகன் இயல்பாக அவளைப் பெயர் சொல்லி அழைப்பதும், இது நாள் வரை இல்லாத வழக்கமாய் ''டேய்!'' என்று கொஞ்சினாற் போல் பேசுவதும் விஷயத்தை வெட்ட வெளிச்சமாக்கி விட்டது போலும்.

மதியழகன் எதற்காகவாவது பெண்கள் பகுதியை எட்டிப் பார்த்தால் கூட,

''அண்ணி! தம்பி.. தேடறான்.. போ...'' என்று கலாட்டா செய்வதும், வந்தனா பதிலுக்கு ''சும்மாயிருங்கண்ணி ஏன் இப்படி கலாட்டா பண்றீங்க'' என்று கெஞ்சுவதும் அடிக்கடி நடந்தன.

தனலட்சுமியம்மாவின் மனம் குளிர்ந்து போனது. வசதியில்லை என்பதற்காக இவ்வளவு அழகான பெண்ணைக் கொண்டு வந்து அவள் வாழ்க்கையைக் கெடுத்து விட்டோமோ என்ற கவலை அவரை அரித்துத் தின்று கொண்டிருந்தது.

ஆறு வருடங்கள் கழித்தற்குப் பின்னேதானே திருமணம் செய்து வைத்தோம். இதற்குள் மகன் விலாஸினியை மறந்திருக்க வேண்டியதுதானே நியாயம்!

அவனும்தான்! வருவதாக இருந்தால் இதற்குள்ளாக வந்திருப்பானே? வரவில்லையே! அதற்கப்புறமாக மகன் மனம் தெளிந்திருக்க வேண்டுமல்லவா?

இன்னும் கூட வருவான் என்ற நினைப்பிருந்ததோ என்னமோ?! ஆனால் தான் இரண்டாம் திருமணம் செய்து வைக்கிறேன் என்று சொன்ன போது பெரிதாக மறுக்க வில்லையே!

தான் அவனிடம் கேட்ட அந்த நாள் நினைவுக்கு வந்தது.

அன்றைக்கு!

அம்மா பாத்ரூமுக்கு முன்னால் வழுக்கி விழுந்து விட்டார். பெரிதாக எதும் காயம் இல்லை. ஆனால் இடுப் பில் மொக்கை அடி விழுந்து விட்டது.

"ரெண்டு நாள் ரெஸ்ட் எடுங்க" என்று சொல்லி விட்டுப் போனார் டாக்டர்.

கணவன் இருக்கிற காலத்தில் இருந்தே நிர்வாகம் செய்தவராதலால் துறுதுறுவென்று அலைந்து கொண் டிருப்பார். படுக்கையில் அவருக்கு நிலை கொள்ள வில்லை! ஆனாலும் தன்னை மறந்த சோர்வு!

அயர்ந்து உறங்கினார்.

பகல் நேரத்தில் அவ்வளவு உறங்க மாட்டார். அதிக பட்சம் அரை மணி நேரம் கொஞ்சம் அயர்ந்து சாய்வார். பிறகு எழுந்து கொள்வார்.

"சித்தே சாஞ்சு எழுந்திருச்சா.. நைட் வரைக்கும் நல்லா இருக்கு.. சாமி.." என்பார்.

மகன் வாஞ்சையாகப் புன்னகைப்பான்.



"ஆமாம்மா! அது நல்லதுதான்! பாரின்லயெல்லாம்.. அதுலயும் ஸ்பெயின் மாதிரி நாடுகள்ல பகல்ல இருந்த மாதிரி ஒரு சின்னத் தூக்கம் போடுவாங்க அதுக்குப் பேரு.. சியஸ்டா!" என்றான்.

"ம்ஹூம்! அப்படியா? ஆமா.. அங்கெல்லாம் ராக்கோழி மாதிரி கண்ட நேரம் மாதிரி வரைக்கும் முழிச்சுகிட் டிருப்பாக... எப்பா!" என்றார்.

"ம்..! ஆனா.. அவங்க வேலைகள்லயும் கரெக்டா.. இருப்பாங்க.." என்பான் மதியழகன்.

"அதைச் சொல்லு! இல்லாட்டி இவ்வளவு வளர்ச்சி வந்திருக்குமா?" என்பான்.

உலக விஷயங்களையெல்லாம் அம்மாவிடம் அவன் எளிமையாக விளக்கும்போது அழகாகப் புரிந்து கொள் வார். அப்படிப்பட்ட அம்மா மூன்று மணி நேரமாக ஆழ்ந்து உறங்கவும் மதியழகன் கட்டிலின் அருகில் அமர்ந்து கொண்டான்.

தன்னுடைய வாழ்க்கை பாதிக்கப்பட்டதில் அம்மா நொறுங்கிப் போனார் என்று தோன்றியது. சகோதரி களிடம் சொல்லியிருக்கிறார்.

"இப்பக் கல்யாணம் வேண்டாம்ன்னுதான் அவன் சொன்னான். நான்தான் என்னமோ உலகத்துல இல்லாத பொண்ணைக் கண்ட மாதிரி இந்த விலாஸினியைப் பாத்தவுடனே, அதுவும் இவன் பின்னாலயே சுத்தினாளா அதனால பிடிச்சுக் கல்யாணம் பண்ணி வச்சேன். இப்ப இப்படித் தனிமரமா நிக்கறான்" என்பார்.

பெண்கள் ஆறுதல் சொல்வார்கள். சற்று நேரம் தான்! தானே பெருமூச்சு விட்டுக் கொள்வார். பிறகு சொல்வார்.

"அந்த விலாஸினியும் நல்ல பொண்ணுதான். ஏன் இப்படியாச்சுன்னு தெரியலே!" என்பார்.

மகேஸ்வரி அவனிடம் தனியாகச் சொன்னாள். "தம்பி! அம்மாவுக்கு உன்னைப் பத்தி ரொம்ப கவலை. தன்னாலதான் உன்னோட வாழ்க்கை கெட்டுப் போச்சுன்னு ஒரே புலம்பல்" என்றாள்.

அவனும் தீவிரமான சிந்தனையிலாழ்ந்தான். பிறகு கேட்டான்.

"அப்படி ஒன்றும் இல்லே! எனக்கும் விலாஸினியைப் பிடிச்சுத்தான் சரின்னு சொன்னேன்" என்றான் ஆறுதல் சொல்வது போல்.

"சரிப்பா! இதுக்கு என்னதான் தீர்வு! அம்மாவையும் யோசிக்கணும் இல்லே!"

"மன்னிக்கா! எனக்கு ரெண்டு மாசம் மட்டும் டைம் குடுங்க" என்றான் மதியழகன்.

சரியாக அறுபது நாள்!

அறுபதாம் நாள் முடிந்தவுடன் அம்மா அவன் அறை வாசலில் வந்து நின்றார்.

"தம்பி..!" என்றார்.

மதியழகன் ரெண்டு மாதம் காலம் கேட்டதைச் சுத்தமாக மறந்தே விட்டான்.

"என்னம்மா!" என்றான் ஆச்சரியமாக!

"தம்பி! மகேஸ்வரிகிட்டே ரெண்டு மாசம் டைம் கேட்டியாம்.. அந்த டைம் நேத்தோட முடிஞ்சது" என்றார்.

முகத்தில் தீவிர பாவம் இருந்தது. மதியழகனுக்குச் சிரிப்பு வந்தது!



"என்னம்மா.. விஷயம்!" என்றான்.

"இல்லப்பா! உனக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைக்கலாம்னு யோசிக்கறேன்."

மதியழகன் மௌனமாக அமர்ந்தான். அம்மா தொடர்ந்தார்.

"தம்பி! நல்லாப் புரிஞ்சுக்க! விலாஸினி உன் வாழ்க்கையில வந்த தலைவலின்னு நெனைச்சுக்க.. திரும்பவும் உன்னோட வாழறவதாயிருந்தா இத்தனை நாள்ல வந்திருப்பா.. இல்ல.. வராத ஒருத்திக்காக எத்தனை நாள் காத்துகிட்டிருப்பே!" என்றார்.

அவன் அம்மாவிடம விளக்கம் சொல்லியே ஆக வேண்டும் என்பதை உணர்ந்தான்.

"அம்மா! விலாஸினி திடீர்னு போயிருக்கா. என்ன ஆச்சு.. ஏதாச்சுன்னு தெரியலை. நல்ல வேளை அவங்க வீட்ல தப்பு என் பேர்ல இல்லைன்னு புரிஞ்சுகிட்டாங்க. ஆனா, இன்னொரு கல்யாணம் பண்றதுல பல பிரச்சினைகள் இருக்கு.." என்றான்.

"தம்பி! நான் பேசறேன். விலாஸினியோட அம்மா அப்பாகிட்டே" என்றார் அம்மா.

மதியழகன் இதை எதிர்பார்க்கவில்லை.

"அம்மா! அவசரப்படாதீங்க.." என்றான். ஆனால் அம்மா அவன் ஆலோசனைக்காகக் காத்திருக்கவில்லை.

விலாஸினியின் தந்தையிடம் பேசினார்.

"அம்மா! எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை. விலாஸினி செஞ்சது மகா தப்பு. மாப்பிளை அடிக்கடி என்கிட்ட பேசறார்தான். நாங்களும் தேடாத இடமில்லே!

இனிமே எங்க அவ வரப்போறா. தாராளமா நீங்க இன்னொரு கல்யாணம் செஞ்சு வைங்க'' என்றார்.

''உங்களுக்கொண்ணும் சங்கடமில்லையே!''

''என்னன்னு சங்கடப் பட முடியும்? விலாஸினி இருந்து நீங்க வேற ஒரு கல்யாணம் பத்தி யோசிச்சா.. நாங்க சங்கடப் பட முடியும். அவராவது நல்லா இருக்கட்டும்மா. நாங்களும்தான் இங்கே முழிச்சகிட்டு இருக்கோம். ரெண்டு பசங்களும் விலாஸினி பத்தி ஏதாவது தெரிஞ்சாத்தான் கல்யாணம் பண்ணுவோம்கறாங்க'' என்றார்.

''ஆமா! எங்க தம்பியும் அதேதான் சொல்றான். ஆனா, இந்த ஆறு மாசத்திலே நான் விலாஸினியைப் புரிஞ்சுகிட்ட வரைக்கும்.. இனிமே அவ வரமாட்டா!'' என்றார்.

''ஆமா..!'' என்றார். பெருமூச்சு விட்டபடி சொன்னார்.

''நானும் அதேதான் நினைக்கறேன். இன்னும் ரெண்டு மாசம் பார்த்துட்டு நானும் பெரியவனுக்குக் கல்யாணம் பண்ணி வச்சர்லாம்னு இருக்கேன்'' என்றார்.

தனலட்சுமியம்மாவின் மனம் தெளிந்தது.

துணிந்து இறங்கி விட்டார்.

மகனிடம் அழுத்தமாகச் சொன்னார்.

''போதும் தம்பி! நீ இலவு காத்த கிளியாட்டமா உட்கார்ந்திருந்தது'' என்று உறுதியாகச் சொன்னார்.

சம்பந்தியிடம் பேசியதையெல்லாம் சொன்னார். மாமனார் மதியழகனுக்கு போன் செய்து பேசியிருந்தார்.

''மாப்பிளே! போதும் காத்துகிட்டுக் கிடந்தது. அட்லீஸ்ட் உங்கம்மா மனசையாவது சந்தோஷப் படுத்துங்க'' என்று.



மதியழகனுக்கும் வேறு வழியிருக்கவில்லை. அதனடிப்படையில்தான் சம்மதம் சொன்னான். அது மட்டுமல்ல அம்மாவிடம் தெளிவாகச் சொன்னான்.

''அம்மா நடந்த எல்லாத்தையும் சொல்லித்தான் பொண்ணு கேட்கணும்'' என்று.

அம்மா பார்த்த பெண் அவ்வளவு அழகாக இருப்பாள் என்பது அவன் எதிர்பாராதது.

திருமணப் பேச்சு நடக்கும்போது அவன் ஒரு நாள் ஊருக்கே கிளம்பி வந்தான்.

''சார்! வந்தனா கிட்டே நான் பேசணும்'' என்றான்.

அவர் யோசித்தார்.

''இல்லைங்க!'' என்று தயங்கினார்.

''இல்லல்லே! நான் கண்டிப்பாய் பேசணும்'' என்றான். மேலும் சொன்னான்.

''நான் உங்க வீட்டுக்கு வர்லே! எங்கயாவது கோயிலுக்குக் கூட்டிட்டு வாங்க!'' என்றான்.

அவரும் அழைத்து வந்தார்!

கோவிலில் வைத்துப் பார்த்தான்.

எளிமையான உடையில் கூட அழகாக நின்ற அந்தப் பெண்ணை அவனுக்குப் பிடித்துத்தான் இருந்தது. ஆனால்! விலாஸினியின் முகம் மனதுக்குள் மின்னி மறைந்தது.

''மிஸ்.. வந்தனா! கல்யாணப் பேச்சு போயிட்டிருக்கு தெரியுமில்லே! போன்ல பேசினேனே. நேரிலயும் கேட்டேன். ஆனாலும் இன்னொரு தடவை கேட்டு கன்பர்ம் பண்ணியிருக்கணும்னுதான் வந்திருக்கேன். யாருடைய

வற்புறுத்தலும் இல்லையே. அப்ப சொன்னது நிஜம் தானே?''

''ம்..!'' என்றாள்.

''விலாஸினின்னு எனக்கு ஒரு பஸ்ட் லைவ் இருந்தாங்க. அவங்களைப் பத்தின விஷயம் எல்லாம் தெரியுமில்லே!'' என்றான்.

''ம்.''

''மிஸ். வந்தனா! இந்தக் கல்யாணத்துக்கு அம்மா மனசு நோகாம இருக்கணும்னு நான் ஒத்துக்கிட்டிருக்கேன். ஆனா..'' என்றான். பிறகு.. புன்னகைத்தான்.

''உங்களுக்கு எந்தக் கவலையும் இல்லாமப் பாத்துக் கலாம்'' என்றான்.

''ம்..!'' என்றாள்.

திருமண நாள் பார்த்தும் அவனால் தன் மனத்தை ஒரு நிலைப்படுத்த முடியவில்லை அதனால்தான்.

''கொஞ்ச நாள் டைம் வேணும்'' என்று கேட்டான்.

அந்தக் கொஞ்ச நாள் இரண்டு வருடங்களாக ஓடி யிருந்தது. அதற்குப் பிறகுதான் இணைந்திருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் அவனது நெருங்கிய உறவினர்கள் எல்லாரும் மகிழ்ச்சியில் திளைப்பதைப் பார்த்த அவன் மனதிலும் நெகிழ்ச்சி ஏற்பட்டது.

இன்னமும் தன் மனைவி தன்னிடம் கூச்சத்துடனேயே டந்து கொள்கிறாள் என்று புரிந்தது அவனுக்கும்.

இரண்டு வருடங்கள் ஒரு தொலைவிலேயே இருந்து ன்னவோ.. அது இயல்பான விஷயம் போலப் பழகி ிட்டாள். அதனால் அவனது நெருக்கத்தால் வெட்கத் ில் தவித்துப் போனாள்.



விலாஸினியைப் போலப் புயலாக இல்லாமல் நாணம் மிகவும் உள்ளவளாக இருந்தாள். அவனும் விலாஸினி யின் நினைவை ஒரு புறம் தூக்கி வைத்து விட்டு தன் மனத்தில் வந்தனாவை நிரப்பிக் கொண்டான்.

''ஹேய்!'' என்று அவன் அழைத்தாலோ அல்லது ''டேய்'' என்று அழைத்தாலோ அவளுக்குள்ளே ஒரு சிரிப்பு ஓடி மறையும் போலும்.

''ம்..!'' என்பாள். அந்த ''ம்..!'' அவள் தொண்டைக் குழியை விட்டு வெளியே வராமல் தகராறு செய்யும். அதை ரசனையுடன் பார்ப்பான்.

ஒவ்வொன்றிலும் அவள் வெட்கமும், பயமும் ஒரு வேளை எதையும் மறுத்தால் அவன் கோபிப்பானோ என்ற கவலையும் ஆகவே நட்மாடினாள்.

''ஹேய்! நீ என் புல் ப்ளெட்ஜ்ட் வைப். எதுக்கு இப்படி நடுங்கறே'' என்று மெல்ல இயல்புக்குக் கொண்டு வந்தான்.

''ஹேய்! மத்த சமயங்கள்ல இதுநாள் வரைக்கும். நல்லாத்தானே பேசினே! இப்ப என்ன வெட்கம்'' என்று சிரித்தான்.

''நீங்க.. நீங்க.. இப்படியெல்லாம் இதுவரைக்கும் நடந்துகிட்டதில்லே..!'' என்பாள் மென்று விழுங்கிக் கொண்டு.

''எப்படியெல்லாம்?'' என்று அவன் சீண்டுவான்.

அவள் ''வேணும்னே.. கேட்கறீங்க!'' என்று சிணுங்கு வாள்.

''ஆமா.. வேணும்னுதான் கேக்கறேன்'' என்று சீண்டு வான்.

"அதெல்லாம்.. எப்படிச் சொல்வது?" என்பாள்.

"எப்படி வேண்ணாலும் சொல்லு. தமிழ்ல சொல்ல முடியாட்டி.. இங்கிலீஷ்ல சொல்லு" என்பான்.

அவள் களுக்கென்று சிரிப்பாள்.

"சொல்ல முடியாட்டி.. செய்கையில் பதில் சொல்லு.." என்றான்.

"பதில் எங்க சொல்றது? அதான்..!" என்பாள்.

அவன் கடகடவென்று சிரிப்பான்.

"குட்.. இப்பத்தான் பேச ஆரம்பிச்சிருக்கே! இப்படித்தான்.. பேசணும்" என்பான்.

"என்னமோ.. கமலிக்கா கூப்பிடற மாதிரி.. இல்லே!" என்று அவள் நகர முயற்சிப்பாள்.

"இல்லவே.. இல்லை! மதியும், கமலியும் ரொம்ப டிப்ளமாடிக் அவங்க இப்ப யாரும் வீட்ல இல்லை தெரியுமா?"

"ஓ..!"

"ஆமா! எல்லாரும் குலதெய்வம் கோவிலுக்குப் போயிருக்காங்க. பொங்கல் வைக்கப் போறாங்களாம் எதுக்குன்னு கேட்க மாட்டியா!"

அவள் நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள். அந்த அகன்ற கண்களில் காதலும், கனிவுமாக அவள் பார்க்க அவன் அள்ளிக் கொண்டான்.

"நாம இப்படிச் சேர்ந்துட்டோம் அதுக்கு.."

"இதுக்கெல்லாமா.. பொங்கல் வைப்பாங்க?" என்றாள் அப்பாவியாக.



"வைக்கறாங்களே! இந்தத் தேவதையை ரெண்டு வருஷமா காக்க வச்சுட்டேன். இல்ல.. அதனால" என்று அவன் தொடுமுன்னே அவள் அவன் வாயைப் பொத்தினாள்.

"ஐ வாஸ் ஹேப்பி! எனக்கு ஒண்ணும் குறையில்லை" என்றாள்.

"இதுதான்.. இந்த அற்புதமான பொறுமைதான் என்னை ஜெயிச்சுடுச்சுன்னு நினைக்கறேன்.. போதும்.. இனி வாழ்க்கை இப்படியே போனாப் போதும்.. "ம்.." என்று மேலும்.

வாழ்க்கை இப்படியே போகப் போவதில்லை என்பதும், விலாஸினி முழுதாக அவர்கள் வாழ்விலிருந்து விலகிப் போய் விடவில்லை என்பதும் அப்போது அந்த மகிழ்ச்சி வேளையில் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.



## 14

"புறப்படு.. புறப்படு!" என்றான் மதியழகன். அவசரப் படுத்தினான்.

"எங்கே?" என்றாள் வந்தனா.

"பாத்தியா? இப்படி என்னைக் கவுத்திட்டியே!" என்றான்.

அவள் புரியாமல் விழித்தாள்.

"பின்னே? அட கணவனே கண்கண்ட தெய்வம்னு இருக்க வேண்டாம். அட்லீஸ்ட் கேள்வி கேட்காமக் கூட வர்லாம் இல்லையா?" என்றான்.

அவள் மெல்லிய முணுமுணுப்பில் சொன்னாள்.

"வாழ்க்கை பூரா உங்க கூட வரத்தானே வந்திருக்கேன். எங்க போறோம்ன்னு தெரிஞ்சா அதுக்குத் தகுந்த மாதிரி டிரஸ் பண்ணிக்குவேன்" என்றாள்.

"ஓ! அப்படியெல்லாம் இருக்கா..! பாரின்ல டின்னருக்கு, பார்ட்டிக்கு பிஸினஸ் மீட்டிங்குக்குன்னு உடுத்திக்கறாங்க! அது மாதிரியா? அதெப்படி.. இடத்துக்குத் தகுந்த மாதிரி.. டிரஸ் பண்றது?" என்றான்.

"இல்லே! கோயிலுக்குன்னா.. பட்டு.. கல்யாணத்துக்குன்னா.. பட்டு..! மத்த இடங்களுக்குன்னா சிம்பிளா.. அந்த மாதிரி.." என்றாள்.

"ம்..!" என்றான். சட்டென்று அவனும் பீரோவுக்கு முன்னே நின்றான்.

"திற!" என்றான்.

அவள் திகைத்துப் போனவளாய் திறந்தாள். இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு ஆராய்ந்தான்.

இரண்டாவது தட்டில் மூன்றாவது வரிசையில் இருந்த புடவையை எடுத்தான்.

"இந்தப் புடவையில உன்னைப் பார்க்கும்போது எனக்கு ரொம்பப் பிடிக்கும்" என்றான்.

அவள் புன்னகைத்தாள். "தாங்க்ஸ்!" என்றாள்.

"எதுக்கு? புடவை செலக்ட் பண்ணிக் குடுத்ததுக்கா?" என்றான்.

"இல்லே! என்னையும் ஏதோ கவனிச்சுப் பாத்திருக்கேன்னு சொல்றீங்களே! அதுக்கு.." என்றாள்.

அவன் முகம் தீவிர பாவத்துக்கு மாறியது.



"வந்தனா!" என்றான் நெகிழ்ந்து போன குரலில். தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்தான்.

"வந்தனா! நீ ரொம்ப நல்ல பொண்ணு. பெரிய சண்டையாப் போட்டுடு. அப்பத்தான் என் மனசு ஆறும்" என்றான்.

"ம்ஹூம்! நல்ல பொண்ணுன்னு சொல்லிட்டு சண்டை போடச் சொல்றீங்களே! சண்டையெல்லாம் போடறதாவே உத்தேசம் இல்லே!" என்றாள்.

"ஏன்?"

"இரண்டு வருஷம் இழந்தது பத்தாதா?" என்றாள்.

அவன் பார்வை ஆழமாக மாறியது. அந்தப் பார்வையிலிருந்த நேசமும், காதலும் பிரவாகமாகப் பொங்கி அவள் நெஞ்சத்தை நிறைத்தது.

கண்ணிமைக்க மறந்து அவள் அந்தப் பார்வையால் கவரப்பட்டு நின்றாள். ஒரு நிமிடத்திற்குப் பிறகு கண்கள் படபடத்தன.

"என்னடா!" என்றான் நெகிழ்ந்த குரலில் அவள் பதில் சொல்லவில்லை. அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

சற்று நேரம் உலகம் மறந்தார்கள்.

"ஐயோ! என்ன இது.. பகல் நேரத்துல!" என்று விலகிக் கொண்டாள்.

எங்கிருந்தோ வானொலியில் 'எந்த நேரமும் நீ அருகில் வேண்டும்' என்று பாடுவது கேட்டது.

இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

"சரி.. புறப்படறியா?" என்றான்.

"புடவையை மாத்து!" என்று நகராமல் நின்றான்.

"ப்ளீஸ்! போங்க!" என்று செல்லமாக வெளியே தள்ளிக் கதவைச் சாத்தினாள்.

அவன் சிரித்துக் கொண்டே தனது அறைக்குப் போனான்.

பத்து நிமிடங்களில் தேவதையாய் வந்து நின்ற மனைவியைப் பார்த்து மயங்கிச் சாய்வது போல் நடிக்க அவள் சட்டென்று அவன் தோளில் தட்டினாள்.

புறப்பட்டார்கள்.

• • •

பெரிய வணிக வளாகம்!

ஒட்டன் சத்திரத்திலிருந்து பழனி செல்லும் ரோடு. மாடிப்படிகளில் ஏறினார்கள்.

"என்னத்தான் இது! எங்கே போறோம்னு சொல்ல மாட்டீங்களா?"

அவன் முகத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு சொன்னான்.

"மேலே அரபு நாட்டு ஷேக் ஒருத்தன் இருக்கான். உன்னை விலை பேசி வித்தர்லாம்னு கூட்டிட்டுப் போறேன்."

அவள் திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தாள்.

"பின்னே என்னடி? கூப்பிட்டா பேசாம வருவாளா?" என்றான் கடுப்பான குரலில்.

வந்தனா அதற்குப் பிறகு பேசவில்லை. அவனுக்கே ஒரு மாதிரியாகி விட்டது.



"ஹேய்! சும்மா.. சொன்னேன். கொஞ்சம் சஸ்பென்ஸா வைக்கலாம்னு பாத்தா விட மாட்டேங்கறியே" என்றான். அதற்கும் ஒன்றும் பேசவில்லை.

இரண்டாவது மாடியை அடைந்தார்கள்!

அங்கே வலது கோடியில் அழகான விருந்தினர் அறை இருந்தது.

அந்த அறையின் முன்னாலே ஒரு பால்கனியும் நீட்டிக் கொண்டிருந்தது. அங்கே அழைத்துப் போனான்.

"இப்படி உட்காரு!" என்று ஒரு சேரை இழுத்துப் போட்டான். போட்டுக் கொண்டு அமர்ந்தார்கள்.

"அங்க.. பாரு!" என்று காட்டினான்.

அப்போதுதான் அவள் அந்தக் காட்சியைக் கவனித்தாள். எங்கே அழைத்துப் போகப் போகிறானோ என்ற தவிப்பிலேயே இருந்ததால் அவள் சுற்றுப் புறத்தைக் கவனிக்கவில்லை. இப்போது கவனித்தாள்.

வித்தியாசம் புரிந்தது!

கண்கள் அகல, மனத்தில் ஆச்சரியம் பொங்க அவள் அந்தக் காட்சியை ஆவலுடன் பார்ப்பதை, அவள் முகத்தில் பாவங்கள் மாறி மாறித் தோன்றுவதை அவன் தன் கண்ணால் பருகிக் கொள்வதை அவள் அறியவில்லை.

• • •

"இது குடைவரை கோயில்" என்றாள் வந்தனா.

"ம்.. தெரியும்!" என்றான் மதியழகன்.

பிள்ளையார் பட்டியில் இருந்தார்கள்.

வந்தனா இயல்பாகத் தொடர்ந்தாள்!

"எங்கம்மா.. வீட்ல எங்கப்பா.. என்னை ஆசையாய் கூட்டிட்டுப் போற ஒரே இடம் இதுதான். அது மட்டுமல்ல வெளியூர்ன்னு நாங்க வர்றதும் இங்கதான்" என்றாள்.

அவன் அன்புடன் பார்த்தான். அவள் அதைக் கவனிக்காதவள் போல தொடர்ந்தாள்.

"அதுவும்.. எங்கப்பாவுக்கு ரொம்ப நம்பிக்கையான தெய்வம். எனக்கும் ரொம்பப் பிடிக்கும்" என்றாள்.

"ம்..!"

"ஆமாங்க! இந்தப் பிள்ளையாருக்கு அபிஷேகம் பண்ணும்போது பாருங்க! பாலாபிஷேகமும், விபூதி அபிஷேகமும் செய்யும் போது உருவ அழகு அவ்வளவு நல்லா இருக்கும்."

"ஆமா..! அழகா இருந்தது!

"கையில கெண்டி வச்சிருக்கார் பாருங்க.. கொஞ்ச தூரத்திலே நின்னு பார்க்கும்போது பெருசாத் தெரியற விக்கிரகம்.. பக்கத்துல வர வர அளவாத் தெரியும்.. குழந்தை முகமா ஒரு இன்னசென்ஸ் தெரியும். தங்கக் கவசத்துல எவ்வளவு அழகா இருக்காரு.. பாருங்க.." என்றாள்.

மாலை நேரமென்பதால் வெயில் இல்லை. பிள்ளையார் பட்டிக் கற்பக விநாயகர் கோவிலைச் சுற்றி வந்தார்கள்.

அவனும் ஆர்வத்தோடு கவனித்துப் பார்த்தான். ஒரே சிறிய மலையைக் குடைந்து கட்டியிருந்தார்கள்.

மீண்டும் கோவிலுக்குள் வந்தார்கள். சுற்றுப் பிரகாரம் வேலைப்பாடுகளோடு அமைந்திருந்தது. தல விருட்சத்தை நின்று பார்த்தார்கள்.

வந்தனா உற்சாகமாக அந்தக் கோவிலைப் பற்றி வர்ணிப்பதை ஒருவித ஆர்வத்துடன் கவனித்தான். அவள்



சொல்லிக் கொண்டு வருகிற விஷயங்கள் அவன் மனத்துக்குள் இறங்குவதைப் போலவே அவளது முகபாவமும், கண்களில் கருவண்டு விழிகள் ஆடிய நர்த்தனமும் உள்ளே இறங்கிக் கொண்டிருந்தன.

படபடவென்று பேசிக் கொண்டிருந்தவள் அவன் பார்வை பார்த்து பேச்சை மாற்றினாள்.

"என்ன இப்படிப் பார்க்கறீங்க!" என்றாள்.

"ஒண்ணும் தப்பாப் பார்க்கலை! ரொம்ப உணர்வு மயமாய் பேசிகிட்டிருந்தயோன்னு ரசிச்சேன்" என்றான்.

அவள் மௌனமாகி விட்டாள்.

அவன் சட்டென்று பார்வையைத் திருப்பிக் கொண்டான். அவளுக்கும் புரிந்தது. தங்களின் தனிமையின் போது அவன் பார்க்கிற பார்வையாக அது இருக்கவில்லை. மாறாக ரசனையான பார்வைதான் அது. ஆனாலும் இத்தனை அன்னியோன்னியம் இதுவரை இருக்கவில்லையாதலால் அவளுக்கும் புதுமையாக இருந்தது.

மஹா தீபாராதனை பார்த்தார்கள்.

"சாயங்கால பூஜை" என்றாள்.

"ஆமா! விநாயகர் கொள்ளை அழகாத்தான் இருக்காரு" என்று அவனும் லயித்துப் போனான்.

குளத்தங்கரையில் அமர்ந்து மீன்களுக்குப் பொரி போட்டு விட்டுக் கிளம்பினார்கள்.

நேற்று மாலை கூட அவனோடு இப்படி பிள்ளையார் பட்டிக்கு வருவோம் என்ற நினைப்பு இருக்கவில்லை.

நேற்றுத்தான் அவர்கள் அந்த வணிக வளாகத்துக்கு போனது.

மாடியில் இரண்டாம் தளத்தில் இந்த கெஸ்ட் ஹவு ஸில் அமர்த்திக் கொண்டான். எதிரே காட்டிய காட்சியை இப்போது நினைத்தாலும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மதுரை செல்லும் தெருவில் வலது ஓரத்தில் மக்கள் சாரி சாரியாகத் தைப்பூசத்திற்காக பழனி முருகனைத் தரிசிக்கப் போய்க் கொண்டிருந்தார்கள்.

கூட்டம் கூட்டமாக!

இடைவெளி இல்லாமல்!

எத்தனை விதமான மக்கள்! சிறு குழந்தைகள், பெண்கள், பெரியவர்கள், இளைஞர்கள் என்று.

காவடியெடுத்துக் கொண்டு கூட்டம் கூட்டமாக வந்தார்கள்!

அவள் பரவசத்துடன் திரும்பிப் பார்த்தாள்!

"என்னங்க.. இது!" என்றாள்.

"பழனிக்குப் பாதயாத்திரை போறாங்க" என்றான்.

"ஐயோ! இத்தனை ஜனங்களா?" என்று வியந்தாள்.

"அதான்.. பாரு! எவ்வளவு அருமையான காட்சி! வாரக் கணக்கில நடந்து வர்றாங்க" என்றான்.

"எப்படிங்க.. இவ்வளவு தூரம்?!"

"சூரியன் மேலே ஏற வரைக்கும் நடப்பாங்க.. அப் பம் பதினோரு மணி வாக்கில ஓய்வு."

"அப்புறம்.. சாப்பாடு?"

"ஆமா..! அதைப் பத்தித் தெரிஞ்சுக்கத்தான் உன்னைக் கூட்டிட்டு வந்தேன். இந்நேரம் வரை குடுத்ததெல்லாம் டிரெய்லர்" என்றான்.



திரும்பவும் காரில் அழைத்துக் கொண்டு பக்கத்து கிராமத்துக்குப் போனார்கள்.

அங்கே பெரிய பந்தல் போட்டிருந்தது. வரிசையாக இரண்டு மூன்று மேஜைகள். அதன் மேல் 'சித்திரான்னம்' என்பார்களே அதுபோல் கலவை சாதம் பாத்திரங்களில் இருந்தது. ஒரு பெரிய குண்டாவில் காய்கறிப் பொரியல்.

வந்தனாவின் மாமனார் பெயரில் வழங்கப்படும் அன்னதானம் என்று தெரிந்தது.

மக்கள் வரிசையாக வந்து காகிதத் தட்டுக்களில் சாப்பாடு வாங்கிச் சாப்பிட்டார்கள். மோர் குடிப்பவர்கள் குடித்தார்கள்.

கிட்டத்தட்ட ஐநூறு பேருக்கு மேல் சாப்பிட்டார்கள். முதல் கரண்டியை வந்தனாதான் எடுத்துப் பரிமாற வேண் டும் என்றார்கள்.

அம்மாவும் சகோதரிகளும் கூட வந்து பரிமாறினார்கள். பக்தர்கள் வயிறார உண்டு அந்தப் பந்தலிலேயே ஓய்வெடுத்தார்கள்.

சாப்பாடு வந்து இறங்கிக் கொண்டே இருந்தது.

"இங்கே பக்கத்துல ஒரு வீட்ல இடம் இருக்குது; அங்க வச்சுச் செய்தது" என்றான் மதியழகன்.

"வருஷா வருஷம் உண்டா?" என்றாள் வந்தனா.

"ஆமா! இதுநாள் வரை செலவுக்குக் குடுத்து ஏற் பாடெல்லாம் பண்ணிடுவேன். அம்மா வந்து பார்த்துட்டு வருவாங்க. ஆனா, நான் பெருசா இன்ட்ரஸ்ட் காட்டினதில்லே."

இந்தத் தடவை அம்மா "மருமகதான்டா முதல் மு லாக் குடுக்கணும் அப்படின்னாங்க."

"ஓ!"

"ஆமா! ஏற்பாடு ஆரம்பிச்சு அஞ்சு நாளாச்சு. இன்னும் அஞ்சு நாளைக்கு அன்னதானம் நடக்கும்" என்றான்.

நாலு மணி வரை ஓய்வெடுத்தார்கள். அப்போதுதான் சொன்னாள்.

"எங்க! வருஷா வருஷம் பிள்ளையார்பட்டிக்கு இந்த வழியாகத்தான் போவோம். ஆனா.. இந்த சீஸன்ல போனது இல்லே. அந்த ஒரு கோயிலுக்குப் போகும்போது மட்டும் எங்க அப்பா டாக்ஸியில கூட்டிட்டுப் போவாங்க" என்றாள்.

"வர்றியா! கொஞ்ச தூரம் வரை அப்படியே கார்ல போய்ப் பார்க்கலாம்" என்றான்.

"போலாம்!" என்றாள். போனார்கள்.

அதே காட்சிதான் தொடர்ந்து நிகழ்ந்தது.

சாரி, சாரியாக மக்கள் தொடர்ந்து வந்த வண்ணம் இருந்தார்கள். மதியழகன் மனைவியை அன்புடன் திரும்பிப் பார்த்தான். பிறகு சொன்னான்.

"நம்பிக்கைதான் வாழ்க்கை! எவ்வளவு நம்பிக்கையோடு இந்தப் பயணத்தால் நல்லது கிடைக்கும்னு போறாங்க.. இல்லே!" என்றான்.

அவளும் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"ஆமா! நம்பிக்கைதான் வாழ்க்கை!" என்றாள்.

திடீரென்று கேட்டான்.

"பிள்ளையார் பட்டிக்குப் போகணும்னு இருக்கா?" என்றான்.

"போலாமா? உங்களுக்கு டைம் குடுக்க முடியுமா?" என்றாள்.



"வொய் நாட்? வைப்புக்கு டைம் குடுக்காம என்ன அப்படி முக்கியமான வேலை?" என்றான்.

அவள் லேசாகத் தலை குனிந்தபடி "தாங்க்ஸ்!" என்றாள்.

"ஏய்.. நீ அப்படி லேசா ஓரக்கண்ணால் பாத்துகிட்டு "தாங்க்ஸ்"ங்கறியே அது ரொம்ப அழகா.. இருக்கு.." என்றான்.

அவள் புடவை மடிப்பை நீவி விட்டபடி அமர்ந்திருந்தாள். அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

"ம்.. எங்க பார்த்தாலும் ஜனங்க.. பிரைவஸி கிடைக்க மாட்டேங்குது" என்றான்.

அவள் "களுக்"கென்று சிரித்தாள்.

"யு ஆர் என்ஜாயிங் இட்.. இல்லே!" என்றான் சோகம் போல.

அதற்கும் அவள் சிரித்தாள்.

வழியில் வேறு சில காட்சிகளும் கண்டார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் தெருவோரங்களில் பெரிய பெரிய பந்தல்கள் போட்டிருந்தார்கள்.

"பாத யாத்திரை செய்யும் பக்தர்கள் தங்குமிடம்" என்று.

அதே போல் வழியெல்லாம் அன்னதானப் பந்தல்கள் வேறு இருந்தன.

"பாத்தீங்களா! நம்ம ஜனங்களோட உபசரிக்கிற பண்பு. அதனாலதான் பாதயாத்திரை வர்ற ஏழை ஜனங்க சாப்பாட்டுக் கவலையில்லாம நடந்து வர்றாங்க."

"சில குரூப்ல அவங்களே வண்டியில தேவையான சாமான்களைக் கொண்டு வந்து அங்கங்கே தங்கி சமைச்சு சாப்பிட்டுட்டுப் போவாங்க" என்றான்.

எதிரிலே ஒரு பெரிய கூட்டம் முற்றிலும் இளைஞர் களோடு வந்து கொண்டிருந்தது. கழுத்தில் தொங்கிய டாலர் செயினும், கைகளில் மோதிரங்களும் மின்ன வெக்கு வெக்கென்று காவடிகளைத் தூக்கிக் கொண்டு ஒரு குழுவாக நான்கு பேர் கொண்ட வரிசைகளில் வந்து கொண்டிருந்தார்கள். வெற்றுடம்பு வேர்த்தொழுக காவி வேட்டியுடன் உரக்க முருகனுக்கு அரோகரா சொல்லிக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள்.

மதியழகன் காரை மெதுவாக ஓட்டியவனாக "சாமியெல் லாம் எங்கிருந்து வர்றீங்க?" என்றான்.

"காரைக்குடி" என்றார்கள்.

மலைத்துப் போனான். காரைக்குடியிலிருந்து நடை பயணமா? என்று.

மனைவியிடம் திரும்பி "வந்தனா.. நாம.. நாளைக்குக் காலையில பிள்ளையார் பட்டி போறோம்" என்றான்.

அவள் உற்சாகமானாள்.

"வழியெல்லாம் இந்தக் காட்சியைப் பார்த்துகிட்டே பாய் உனக்குப் பிடித்த பிள்ளையாருக்கு ரெண்டு பருமா ஒரு கும்பிடு போட்டுட்டு அப்புறம் எனக்கும் டிச்ச இடம்" என்றான்.

அவள் ஆவலுடன் எங்கே என்பது போல பார்த்தாள்.

"கோடைக்கானல்" என்றான்.

றும்பாகச் சிரித்தாள்.



அப்படித் திட்டத்தின் முதல் பகுதிதான் இப்போது நிறைவேறிக் கொண்டிருந்தது.

வந்தனா ஆழ்ந்த மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந் தாள். இனியொரு முறை மதியழகனுடன் இந்த மாதிரிப் போக முடியுமா என்று நினைக்கிற காலம் ஒன்று வரும் என்று அறியாமல்.



## 15

கோயிலை விட்டு வெளியே வர மனமே இல்லை வந்தனாவுக்கு அதிலும் தன் கணவனுடன் முதன் முதலாக வெளியூருக்கு அதுவும் தனக்கு இஷ்ட தெய்வ மான மகிழ்ச்சியாக இருந்தது.

அவளுடைய மகிழ்ச்சி வெளிப்படையாக அவளது முகத்தில் படிந்திருந்தது. அதைப் பார்த்த மதியழகனுக்கு மனம் நெகிழ்ந்தது.

தனது அருகாமையில் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறாள் தன் மனைவி. இத்தனைக்கும் கடந்த இரண்டு ஆண்டு களாக அவளுக்குத் தான் எந்த விதத்திலும் நியாயம் செய்யவில்லை. ஆனாலும் எந்த விதத்திலும் முகம் சுளிக்காமல் குறை சொல்லாமல் எத்தனை பொறுமையாக இருந்தாள்!

தன் சோகத்தையோ மனச் சங்கடத்தையோ கொஞ்சம் கூட வெளியே காட்டிக் கொள்ளாமல் தன்னுடைய

தாயையே அவளுடைய தாயாகப் பாவித்துக் கொண்டு அந்தக் குடும்பச் சூழலில் தன்னை இயல்பாகப் பொருத்திக் கொண்டு எவ்வளவு அழகாகக் குடும்பம் நடத்தினாள்!

தான் அவளுக்கு என்ன செய்தோம்? பாராமுகம் காட்டினோம். அன்பும், அழகுமாக அவள் அந்த வீட்டில் நடமாடியதே வீட்டுக்கு அழகாக இருந்தது என்று இப்போது தோன்றியது.

ஒரு நாளும் தான் அவளது இருப்பை வெளிப்படையாக அங்கீகரித்ததே இல்லை.

சமீப காலமாகத்தான் கொஞ்சம் இயல்பாகப் பழகினோம். அதற்கே எவ்வளவு மகிழ்ந்து போனாள்?

கடந்த வாரத்தில்தான் அவளை மனைவி என்ற ஸ்தானத்தில் வைத்துப் பார்க்க ஆரம்பித்தோம் என்று தோன்றியது. அதிலும் தங்களது தனிமையான நேரங்களில் அவள் விருப்பங்கள் புரிந்து இசைந்து கொடுத்து..! எல்லாவற்றைக் காட்டிலும் அவனுக்கு மிகவும் பிடித்த விஷயம் என்னவென்றால் ஒரு நாள் கூட அவளது கடந்த காலம் பற்றி அவள் குடைந்து குடைந்து கேட்டதில்லை.

நேரம் கிடைத்தால் புத்தகங்கள் படிப்பாள் இல்லையென்றால் கை வேலைகள் செய்வாள்.

வீட்டுக்கு வந்த மகாலட்சுமி என்றால் இவள்தான் என்று எண்ணிக் கொண்டான். மனம் நிறைந்தாற் போல உணர்ந்தான்.

"இன்னும் ஒரே ஒரு தடவை.. பாத்துட்டுப் போலாங்க.." என்று தரிசனத்துக்காக நின்றிருந்தாள்.

"சரி!" என்றான்.

இதோடு நாலாவது முறை பிரகாரம் சுற்றி வந்து விட்டாள்.



"போகவே மனசில்லீங்க!" என்றாள் அவனைப் பார்த்து.

"சரி.. எவ்வளவு நேரம் நின்னு கும்பிடணுமோ கும்பிட்டுட்டு வா" என்று கூட நின்று கொண்டான்.

ஐந்தாவது முறையாக அவள் தரிசனத்துக்குப் போய் நிற்கிற நேரத்தில் அவனுக்குத் தெரிந்தவர் ஒருவர் கோவிலுக்கு வந்திருந்தார்.

அவரோடு சற்று உரையாடி விட்டுப் போய் அவள் அருகில் நிற்கும்போதுதான் இத்தனை எண்ணங்களும் ஓடி மறைந்தன.

மெல்ல அவளருகில் போய் இடித்தாற்போல் நின்றான். அவள் கண் திறந்து கடவுளைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொண்டு திரும்பி அவனிடம் கேட்டாள்.

"போலாமா?" என்று.

அவன் புன்னகைத்தான்.

"போதுமா தரிசனம்? நீ போலாம்னா.. போலாம்" என்றான்.

தன் செய்கை குறித்து அவளுக்கே வெட்கம் தோன்றியது போலும்.

"போலாங்க!" என்றாள்.

"சரி.. போலாம்! நேர பிராப்ளம். எப்ப வேண்ணாலும் தேவியாருக்கு வரணும்னு இருந்தா வரலாம். எனக்கு டைம் இருந்தா நான் வர்றேன். இல்லேன்னா டிரைவரோடு வந்து பார்த்துட்டு வர்லாம். ஓகே?" என்றான்.

அவள் மகிழ்ச்சியாகத் தலையாட்டினாள்.

"ஆனா.. ஒரு கண்டிஷன்..!" என்றான்.

"ம்..!" என்றாள்.

"எனக்கு நான் கேக்கறதெல்லாம் அப்பப்பக் கிடைக் கணும்" என்றான்.

அவள் கண்கள் மின்னப் புன்னகைத்தாள்.

"இது கண்டிஷனாக்கும்..! இது உங்கள் உரிமை!" என்றாள்.

"அப்படிப் போடு அரிவாளை!" என்று சிரித்தான் பிறர் அறியா வண்ணம் அவள் இடுப்பில் கிள்ளினான்.

துள்ளிய அவள் போதும். "இது கோவில்! அதிலயும் பிள்ளையார் வேற பிரம்மச்சாரி" என்றாள்.

"பிரம்மச்சாரி.. இல்லே! அவருக்கு ரெண்டு வைப்" என்றான்.

"ஐயோ!" என்றாள்.

"ஆமாடா! வடநாட்டுல சில இடங்கள்ல அவருக்கு சித்தி, புத்தின்னு ரெண்டு வைப் இருக்கறதா வழிபட றாங்க" என்றான்.

"ஓ!"

"சரி.. கதையெல்லாம் கார்ல போயிட்டுப் பேசலாம். கிளம்பு. இப்பக் கிளம்பினாலே மதுரை போய் சேர லேட் நைட்டாகிடும், பிரண்டு வேற காத்திட்டிருப்பான்" என்றான்.

அவசரமாகத் திரும்பி மறுபடியும் ஒரு முறை பிள்ளை யாருக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு அவனுடன் பரபரப்பாக நடந்தாள்.

காரை ஓட்டிக் கொண்டே மதியழகன் சொன்னான்.



"மதுரை பிரண்ட் நம்ம கல்யாணம் ஆன நாள்ல இருந்தே விருந்துக்கு வரச் சொல்லிக் கூப்பிட்டுட்டு இருந்தான். நான்தான் தட்டிக் கழிச்சிட்டேன்" என்றான்.

அதைக் கேட்டுக் கொண்ட அவள் சொன்னாள்.

"ஏங்க! இவ்வளவு நேரம் டிரைவிங்னா.. டிரைவரைக் கூட்டிட்டு வந்திருக்கலாமோ?"

"அவரு எதுக்கு இடைஞ்சலா?" என்று சிரித்தான்.

"ஆனாலும் ரொம்ப ஓவர் ரொமான்ஸா இருக்கு!" என்றாள் முணுமுணுப்பாக.

"இந்த ரொமான்ஸ் எல்லாம் ஓவராகற ரொமான்ஸ் இல்லே! வாழ்நாள் பூரா இருக்கப் போறது. கிழவன் கிழவி யானா கூட" என்றான்.

அவள் குபீரென்று சிரித்தாள்.

"என்ன?"

"இல்லே! கிழவியா நான் எப்படி இருப்பேன்? நீங்க எப்படி இருப்பீங்கன்னு இமாஜின் பண்ணிப் பார்த்தேன்" என்றாள்.

"அப்பவும் நீ அழகாத்தான் இருப்பே!" என்றான்.

"நீங்க அப்பவும் கம்பீரமாகத்தான் இருப்பீங்க" என் றாள். ஒரு விதமாக சிரித்துக் கொண்டார்கள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பாதையில் கார் வழுக்கிக் கொண்டு ஓடியது.

• • •

## போகுமிடமெல்லாம் பசுமை!

பார்க்கிற இடமெல்லாம் பசுமையாக இருப்பதைப் பார்த்து அவனுக்கு மகிழ்ச்சி.

"வ்யூ.. எவ்வளவு அழகா இருக்கு" என்றாள்.

ஒரு இடத்தில் இறங்கி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் அவளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

குறும்பாகச் சிரித்தபடி "ஆமா! வ்யூ.. ரொம்ப நல்லாத்தான் இருக்கு!" என்றான்.

அவள் முறைத்தாள்.

அவன் சுற்று முற்றும் பார்த்தான். ஆள் நடமாட்டம் இல்லாததால் நெருங்கி நின்றான்.

"எங்கே.. இன்னொரு தடவை முறைச்சுப் பாரு!" என்றான்.

அவன் பார்வை வேறு விதமாக இருந்ததாலோ என்னவோ அவள் வெட்கத்துடன் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

"ஹேய்! ரொம்பக் குளிரான ஏரியா. அதுலபோய் வேற இப்படி நீ சாஞ்சா நான் என்ன செய்யறது சொல்லு" என்று குழைந்தான்.

சற்று நேரம் சீண்டினான். அவள் விலகிக் கொண்டாள்.

"போலாம்! உங்க பிரண்டு யாரோட கெஸ்ட் ஹவுஸ் இருக்குன்னு சொன்னீங்களே!" என்றாள்.

"ஆமா! போயிரலாம்" என்று குறும்பாகச் சிரித்து விலகிக் கொண்டான்.

சின்னதாக, அழகாக இருந்தது கெஸ்ட் ஹவுஸ். கொடைக்கானலுக்குப் பக்கத்தில் ஒரு கிராமம்.



"ஹேய்! இடம் ரொம்ப நல்லாருக்கு இல்லே! நாம இங்கே ஒரு கெஸ்ட் ஹவுஸ் கட்டிரலாமா?" என்றான்.

"உங்க இஷ்டம்.." என்றாள்.

"இல்லல்லே! உங்க இஷ்டம் தெரிஞ்சாத்தான் ப்ரொசீட் பண்ண முடியும்."

அவள் கேள்விக்குறியாகப் பார்த்தாள்.

"ஆமா! புறப்படு போலாம்ன்னு நான் சொன்னவுடனே புறப்பட்டு வரப் போற ஆள் நீதானே!"

அவள் சிணுங்கினாள். "நல்லா கேலி பண்றீங்க" என்றாள்.

"ஓ.கே.! நீயும் பண்ணு!" என்றான்.

"நான் கேலி பண்ணினேன்னா.. நீங்க தாங்க மாட்டீங்க.." என்றாள்.

"ரியலி! முயற்சி செஞ்சுதான் பாரேன்" என்றான்.

அவள் சிரித்துக் கொண்டாள்.

பில்லர் பாயிண்ட் பார்த்தார்கள். தற்கொலை முனை பார்த்தார்கள். போட்டிங் போனார்கள். நல்ல அருமையான ஓட்டல் ஒன்றில் சாப்பிட வைத்தான்.

வந்தனாவுக்கு எல்லாமே கனவு போல இருந்தது. இரவு அவன் கைப்பிடியில் இருந்த வண்ணம் சொன்னாள்.

"ஏங்கத்தான் எனக்கென்னமோ பயமாருக்கு. இவ்வளவு சந்தோஷமும் நிலைக்கணுமேன்னு. எனக்கு இதெல்லாம் கிடைக்கற அளவுக்குத் தகுதியிருக்கான்னு" என்றாள்.

அவன் அன்போடு அவள் தலையைத் தடவிக் கொடுத்த வண்ணம் கேட்டான்.

"ஏன் அப்படி ஒரு சந்தேகம்! நியாயமா உனக்குக் கிடைக்க வேண்டிய சந்தோஷம்தான். எனக்கும்தான் உன்னோட வாழ்க்கை [illegible] இருக்கு" என்றான்.

மெல்ல எழுந்து நின்றான்.

சற்று நேரம் வெளியே பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு சொன்னான்.

"வந்தனா! நம்ம வாழ்க்கையில இப்பவும் சரி.. எப்பவும் சரி.. உனக்கு சந்தேகங்கள் வரக் கூடாது. ஏதோ ஒரு கணத்தில் உன்னோட அழகைப் பாத்து நான் சரின்னு சொல்லிட்டேனா உன்னைக் கொண்டு வந்து இந்த சிக்கல்ல சிக்க வச்சுட்டேனான்னு நான் எத்தனையோ நாள் வருத்தப்பட்டதுண்டு. ஆனா.. உன்னோட பொறுமை, அன்பு, இதெல்லாம்தான் என்னோட சந்தேகங்களை மாத்துச்சு" என்றான்.

அவள் எழுந்து வந்தாள். அவன் தோள்களில் தொற்றிக் கொண்டாற் போல் கட்டிக் கொண்டாள்.

"அத்தான்! கடந்த காலம் பற்றி மறந்துடுவோம். இப்ப.. இப்பத்த வாழ்க்கையை மட்டும் நினைப்போம். நீங்களாப் பாத்து என்னை விரட்டினா உண்டு.. நானா விலக மாட்டேன் அத்தான்" என்றாள்.

"வந்தனா.. விலாஸினி" என்று ஆரம்பிக்க அவள் அவன் வாயைப் பொத்தினாள்.

"வேண்டாம்! இப்ப வேண்டாம்.. மெதுவா ஒரு நாள் உங்க மனசுல இருக்கறதை என்கிட்ட சொல்லுங்க.. என்ன நடந்துச்சுன்னு எனக்குத் தெரியலே! ஆனா.. எனக்கு ஒண்ணு தெரியும். இந்த ரெண்டு வருஷ காலத்துல நான்



உங்களைப் பாத்த வரைக்கும் கண்டிப்பாத் தப்பு உங்க பக்கம் இருக்காதுன்னு தெரியும். அத்தா[illegible]. நீங்க ரொம்ப நல்லவரு.. ஜெண்டில் மேன்" என்றாள்.

அவன் உணர்ச்சி மயமானான்.

"ஹேய்! ஐம் நாட் எ ஜெண்டில்மேன்... உன்னைப் பொறுத்த வரைக்கும்" என்று கொஞ்சி மகிழ்ந்தான்.

அவள் சிரித்தாள். "அத்தான்! வாழ்க்கைத் துணை கிட்டே இந்த விஷயத்துல... யாரும் ஜெண்டில் மேனா.. இருக்க முடியாது.." என்றாள்.

"குட் குட்! பரவால்லையே இந்தச் சின்ன மூளை நல்லா வேலை செய்யுதே" என்று அவள் தலையைத் தடவினான்.

அவள் மறுபடியும் சிரித்தாள். அவன் கைகள் சிரிக்கிற அவள் இதழ்கள் மேல் படிந்தன.

"ஆனா! எனக்கு நீ இப்படிச் சிரிக்கும்போது இப்படிப் பக்கத்துல நிக்கும்போது மூளையே வேலை செய்யற தில்லை தெரியுமா?" என்றான்.

"ம்..!" என்றாள் பதில் போல.

மெல்ல அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.

"சட்... சட்... படார்.. படார்" என்று சத்தம் கேட்கவும் "திடுக்"கென்று துள்ளினான்.

கடுகு பொரிந்தது.

இரவு நேரங்களில் இலேசான உணவு வகைகளை உண்கிறான் என்பதால் கொஞ்சமாக உப்புமா செய்து கொண்டிருந்தாள்.

கொடைக்கானலிலிருந்து வந்து ஒரு வாரமாகியும் இன்னமும் அந்த நினைவுகளிலிருந்து அவள் விடுபட வில்லை.

ஒவ்வொரு நேரம் மனதில் தோன்றியது!

கடந்த பத்து நாட்களாகக் கணவன் தன் மீது பொழிந்த காதலுக்குத் தாராளமாக எத்தனை காலம் வேண்டுமென் றாலும் காத்திருக்கலாம் என்று. அந்தக் காத்திருத்தலில் தப்பில்லை என்று தோன்றியது.

தன்னை நன்றாகக் கணவனுக்கு உணர்த்தியதும் அந்தக் காத்திருப்புத்தானே!

"என்னோட பிரச்சினைகளுக்காக நான் இந்த ரெண்டு வருஷமும் உன்னைக் காத்திருக்க வச்சிட்டேன்" என்று உருகி உருகிச் சொன்னான்.

"பரவால்லைங்க! அது உங்களோட பிரச்சினை இல்லை என்னோட பிரச்சினையும் கூடத்தான். நீங்க மனசு தெளிய லேன்னா.. எனக்கு எப்படி வாழ்க்கை நல்லா அமையும். அதனாலதான் நானும் பொறுமையாக் காத்திருந்தேன்" என்றாள்.

"ஆமா! பொறுத்தவர் பூமியாள்வார்ன்னு சொல்வாங்க. நீ மதியழகனையும் அவன் பாமிலியையும் ஜெயிச்சயே" என்றான்.

"மரியாதையில்லாமப் பேசாதீங்க!" என்றாள்.

அவன் திகைத்தான்.

"நானா! யாரை மரியாதையில்லாமப் பேசினேன்" என்றான்.

"மதியழகன்.. அவன்.. இவன்னு சொல்றீங்க" என்றாள்.



ஒரு நிமிடம் உறுத்துப் பார்த்து விட்டுக் குபீரென்று சிரித்தான்.

மறுபடியும் 'பட்.. படார்' மறுபடியும் திடுக்கிட்டு விழித்தாள்.

வேலைக்காரப் பெண்கள் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

தனலட்சுமியம்மா சற்று நேரம் மருமகளின் முகத்தை ஜாடையாகப் பார்த்தார்.

"இந்தா.. வந்தனா! மதி என்னமோ கூப்பிட்ட மாதிரி இருந்துச்சு. நீ போய்க் கவனி" என்றார்.

வந்தனா லேசாக அசடு வழிய நகர்ந்தாள். அவள் போய்க் கதவைத் திறந்தவள் திடுக்கிட்டாள்.

மதியழகனின் கரங்கள் இரண்டும் அவளை அலாக் காகத் தூக்கின.

காலால் கதவைச் சாத்தினான்.

அலற முற்பட்டவளை வாயடைத்தான்.

வந்தனா வெட்கத்துடனும், கொஞ்சம் கோபத்துடனும் திமிறிக் கொண்டு இறங்கினாள்.

"ஏங்க! இப்படிப் பண்றீங்க! நீங்க பரபரன்னு இருக் கறதைப் பார்த்துட்டு நீ போ... போன்னு அத்தை அனுப் பிட்டாங்க. அப்புறம் மீதி வேலையெல்லாம்.. அவங்க.. செய்யறாங்க" என்றாள்.

மதியழகன் இதை எதிர்பார்க்கவில்லை.

"என்னை என்ன பண்ணச் சொல்றே!" என்று குழைந் தான்.

''ஒண்ணும் பண்ண வேண்டாம். கொஞ்ச நேரம் ஏதாவது கம்ப்யூட்டர்ல உட்காருங்க.. நான் டிபன் பண்ணிட்டு வேலை முடிச்சிட்டு ஹாப் அன் அவர்ல வந்தர்றேன். சாப்பிட்டு முடிச்சரலாம். என்ன?'' என்றாள்.

''ம்..!'' என்று பெருமூச்சு விட்டான்.

அவள் ரசித்துச் சிரித்து விட்டுத் தானாக அவன் முகத்தை இழுத்துப் பரிசுகள் கொடுத்து விட்டுப் போனாள்.

கிறங்கிப் போய் அவன் பார்த்துக் கொண்டு நிற்கையில்.

''என்னமோ பைல் கேட்டாரு'' என்று மாமியாரிடம் சொல்லிவிட்டு அவள் வேலை தொடர்வது தெரிந்தது!

காத்திருந்தான்!

உணவு முடித்து மீண்டும் அறைக்குள் வந்த பின் அவனது சீண்டல்கள் தொடர்ந்தன. அவளும் மறுக்கவில்லை!

உலகம் மறக்கிற நேரம்!

டெலிபோன் மணி ஒலித்தது.

அவள் விலகிப் போய் எடுத்தாள்! அந்தப்புறம் ஒலித்த குரல் பழக்கமில்லாததாக இருந்தது.

''யாரு! நீங்க.. யாரு!'' என்றாள். அந்தப் பக்கம் பதில் வந்தது.

ஒரு நிமிடம் ஆடிப் போனாள். உணர்வு மயமாயிருந்த நிலையில் இருந்து சட்டென்று கீழே பூமிக்கு வந்தாள்.

கணவனைப் பார்த்து போனில் காத்திருப்பது யாரென்று சொன்னாள்.

''விலாஸினியக்கா பேசறாங்க'' என்று.





# 16

இறுகிய முகத்துடன் போனைக் கையில் வாங்கினான் மதியழகன்.

முகத்தில் அடித்தாற்போல் தன் வாழ்க்கையிலிருந்து வெளியே போனவள்.

தன்னை முட்டாளாக்கியவள்! ஆனால் இத்தனையும் மீறி தன்னோடு ஆறு மாத காலம் வாழ்ந்தவள் பொறுப்பிலிருந்து விலகி விட முடியாது என்ற எண்ணமும் தோன்றியது.

''ஹலோ...'' என்றான்.

''ஹலோ..!'' நான் விலாஸினி பேசறேன்.''

''சொல்லு..! விலாஸினி.. எங்கே இருக்கே! நல்லா இருக்கியா?'' என்றான்.

''ம்.. நல்லா இருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க?'' என்றாள்.

அதே சமயம்!

வந்தனா மெதுவாக அறையை விட்டு நகர்ந்தாள் மதியழகன் அதைக் கவனிக்கவில்லை!

''நான் நல்லாத்தான் இருக்கேன், விலாஸினி.. என்ன இப்படிப் பண்ணிட்டே! எட்டு வருஷம்.. எட்டு வருஷ எல்லாரையும் நெருப்பு மேல நிக்க வச்ச மாதிரி.. வ சுட்டு..'' என்று ஆழ்ந்த வருத்தத்துடன் கேட்டான்.

"தப்புத்தான்! ஆனா.. இப்பத்தான் வந்துருக்கேனே.." மதியழகன் மௌனம் சாதித்தான்.

"என்ன.. நான் வந்ததில் சந்தோஷம் இல்லையோ?" மதியழகன் ஆழ்ந்த பெருமூச்சுடன் சொன்னான்.

"விலாஸினி! இது வாழ்க்கை! ஒரு பாயிண்ட்ல நீ பாட்டுக்கு பஸ்ல இருந்து இறங்கற மாதிரி இறங்கிப் போயிட்டே! நீ திரும்பி வரும்போது எல்லாம்.. அந்தந்த இடத்துலேயே இருக்கும்னு நினைச்சியா..?" என்றான்.

விலாஸினி ஒரு நிமிடம் மௌனம் சாதித்தாள். பிறகு சொன்னாள்.

"மதி! நான் இப்பப் பழைய விலாஸினி இல்லை! நான் உங்ககிட்டே பேசணும்" என்றாள்.

"வா.. வீட்டுக்கு..!" என்றான்.

"வீட்டுக்கு வரேன்.. ஆனா.. இப்ப இல்லே.. முதல்ல உங்ககிட்டே பேசிட்டு.. மேற்கொண்டு என்ன செய்யறதுன்னு.. முடிவு பண்ணலாம்" என்றாள்.

"விலாஸினி!" என்று ஒரு நிமிடம் தயங்கித் தனக்கு மறு திருமணம் ஆகியிருக்கிற விஷயத்தைச் சொல்லலாம் என்று நினைத்தபோது அவள் ஆஃப் செய்துவிட்டாள்.

குழப்பத்தோடயே போனை வைத்தான் மதியழகன். திரும்பி வந்தனாவைப் பார்த்தான்.

வந்தனாவைக் காணவில்லை!

படுக்கையறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.

முன்னறையில் வந்தனா அமர்ந்திருந்தாள்.



சோபாவின் கைப்பிடியில் முட்டுக் கொடுத்தபடி அமர்ந்திருந்தாள்.

முகத்தில் சொல்ல வொண்ணாத கவலை தெரிந்தது. ஒரு கணம் உருகிப் போனான் மதியழகன்.

"ஹேய்! நீ எதுக்கு வெளியே வந்தே..?" என்றான் சற்றே கடுப்பாக.

அவள் எழுந்தாள். அவன் முகத்தைப் பார்த்ததும் "இல்லே! நீங்க விலாஸினி அக்கா கிட்டே பேசும்போது.."

"பேசும்போது.. என்ன ஒளிவு மறைவு இருக்கு? உனக்கும் எல்லாம் தெரிஞ்சதுதானே?"

"தெரிஞ்சதுதான்! ஆனா.. எல்லாருக்கும் அவங்கவங்க.. பிரைவஸின்னு இருக்கில்லே.." என்றாள்.

அந்தக் கணம் அவன் முகம் மென்மையாக மாறியது. அவளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான்.

"வந்தனா! நிலைமை கொஞ்சம் சிக்கலானதுதான். ஆனா.. எல்லா விஷயங்களுக்கும் ஒரு தீர்வு இருக்கில்லே.." என்றான் மென்மையான குரலில்.

அவள் ஒரு நிமிடம் மௌனம் காத்தாள். பிறகு நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள்.

"அத்தான்! எந்தத் தீர்வானாலும் சரி.. அது உங்களை சந்தோஷமா வச்சிருக்கணும்.. அதுதான் எனக்கு வேணும்" என்றாள்.

ஆழ்ந்து பார்த்தான்.

"எந்தத் தீர்வானாலுமா?" என்றான்.

அவள் உறுதியாக மறுபார்வை பார்த்தாள்.

"ஆமா! எந்தத் தீர்வானாலும் சரி..!" என்றாள்.

"சரி.. வா!" என்று உள்ளே அழைத்துப் போனான்.

"ஹேய்! வந்தனா.. நீ ரொம்ப ஸ்வீட்" என்றான்.

மெல்ல அவளை தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்தான்.

எந்த மாற்றமும் எதனாலும் ஏற்பட்டு விடப் போவதில்லை என்பது போல் முழுமையாகத் தன் காதலை நிரூபித்தான்.

வந்தனாவுக்கு தன்னை குறித்தே ஆச்சரியமாக இருந்தது. இனிமேல் உறவு கிடைக்குமோ கிடைக்காதோ என்பது போல் தாகம் தெரியத் தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்தாள்.

• • •

"என்ன.. இந்த ஷர்ட்ல கையில தையல் பிரிஞ்சிருக்கு.." என்று கத்திக் கொண்டிருந்தான்.

உள்ளே வந்த வந்தனா ஐயோ... "அது இல்லை.. டிரஸ்" என்று வேறு ஒரு சட்டை எடுத்துக் கொடுத்தாள்.

அவன் மௌனமாக அந்த ஷர்ட்டை அணிந்து கொண்டிருக்கையில் அறை வாசலில் நிழலாடியது.

அம்மா!

அவ்வளவு சீக்கிரம் அறைக்கு வராதவர் வந்து நின்றார். முகத்தில் குழப்பம் தெரிந்தது.

"தம்பி! காலையில் என்ன சொன்னே?"

அரை மணி நேரத்துக்கு முன்பு அம்மாவிடம் விலாஸினி பேசிய விஷயம் சொன்னான்.

சொல்லி விட்டு நின்று பேசுவதற்கு நேரமில்லாதவன் போல் குளிக்கப் போய் விட்டான்.



அம்மா மனதில் அதையே அசை போட்டுக் கொண்டு இருந்தவர் அவன் தயாராகி அறையை விட்டு வெளியே வரும் அளவுக்கும் பொறுமை இல்லாமல் அறைக்கு வந்து விட்டார்.

"அம்மா! விலாஸினி போன் பண்ணினா?"

"அம்மாவின் முகத்தில் ஆர்வமும், திகிலும் ஒரே சமயத்தில் தோன்றியது.

"எங்க இருக்காளாம்?"

"அம்மா! அதெல்லாம் சொல்லலே! அடுத்த வாரத்துல நம்ம ஊருக்கு வராளாம்."

"ஓ!"

"நம்ம வீட்டுக்கு வராளாம். நான் போய் நேர்ல பேசறதாம். அப்புறம் முடிவெடுக்கறதாம்" என்றான்.

அம்மா பெருமூச்சு விட்டார்.

"மழை விட்டும் தூவானம் விடலைடா.." என்றார்.

வந்தனாவைப் பார்த்தார். வந்தனா குறிப்புப் புரிந்து கொண்டவள் போல்

"அத்தை! நான் பாலைக் காய்ச்சறேன்" என்று நகர.

"வந்தனா! இரு..!" என்றான் மதியழகன். ஆணையிடும் தொனியில்.

அவள் அவனைப் பார்த்தாள். பிறகு சொன்னாள். "அத்தான்! நீங்க எது செய்தாலும் எனக்கும் சம்மதம்னு சொல்லிட்டேன். நீங்க அத்தைகிட்ட விவரமாப் பேசுங்க..! அப்புறம்.. எனக்கு எவ்வளவு தெரியணும்னு நினைக்கறீங்களோ.. அதை மட்டும் விவரமா எனக்குச் சொல்லுங்க" என்றாள்.

சரேலென்று வெளியேறினாள்.

ஒரு நிமிடம் அவள் முதுகைப் பார்த்த மதியழகன் இவள் இப்படிக் கூடப் பேசுவாளா.. என்று நினைத்தான் போலும். பிறகு அம்மாவிடம் திரும்பினான்.

"அம்மா! மொட்டைத் தாத்தன் குட்டையில விழுந்த மாதிரித்தான் பேசினா.." என்றான்.

"நீ போய்ப் பாக்கப் போறியா!"

அவள் அம்மாவை ஆழ்ந்து பார்த்தான். பிறகு சொன்னான்.

"ஆமாம்..! நான் போய்ப் பார்த்துத்தான் ஆகணும். என்ன இருந்தாலும் ஆறு மாசம் என்னோட வாழ்ந்திருக்கா. இன்னமும் நாங்க டைவர்ஸ்ன்னு எதுவும் வாங்கிடலே..! போய்ப் பார்த்துத்தான் ஆகணும்' என்றான்.

"தம்பி! வந்தனா!" என்று இழுத்தார்.

"வந்தனாவைப் பத்தி கவலைப்பட வேண்டாம். நான் பார்த்துக்கறேன்."

"முகம் வாடிக் கிடக்கே!"

'ஆமா! அதான் நான் முதல்லயே சொன்னேன். எல்லாம் தெளிவானதுக்கப்புறம் மறுகல்யாணம் பண்ணிக்கறேன்னு... இப்ப..." என்றான்.

அம்மா முகத்தில் கலவரம் படிவதைக் கண்டான் மேலும் சொன்னான்.

"அம்மா! ரொம்ப யோசிக்காதே! எட்டு வருஷம்... எட்டு வருஷம்... இடையில ஓடியிருக்கு. என் வாழ்க்கையில மாற்றங்கள் வந்த மாதிரி அவளோட வாழ்க்கையிலும் மாற்றங்கள் வந்திருக்கலாம்" என்றான்.



"அதுவும் சரிதான்!" என்றார் அம்மா.

"வந்தனா..." என்று மறுபடியும் அழைத்தான்.

வந்தனா வந்தாள்.

"வந்தனா!"

வந்தனா உள்ளே வந்தாள்.

நேராக அவளைப் பார்த்துத் தெளிவாகச் சொன்னான்.

"வந்தனா! நான் இன்னைக்கு விலாஸினியைப் பார்க்கப் போறேன். எதுவும் அவள் இஷ்டத்துக்கு முடிவாயிடப் போறதில்லே! எது நடந்தாலும் அதுல உன் முடிவுக்கும் முக்கியத்துவம் இருக்கும். புரியுதா" என்றான்.

வந்தனா நிலத்தைப் பார்த்துக் கொண்டு தலையாட்டினாள்.

மதியழகன் புறப்பட்டான்.

அறையை விட்டு அவன் வெளியே போனவுடன் மாமியாரும், மருமகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

வந்தனாவின் கண்களில் கண்ணீர் திரண்டது. உதடுகள் பிதுங்கின. சட்டென்று தலைலட்சுமி அவளைக் கட்டிக் கொண்டார்.

"என்ற ராசாத்தி...! நீ ஏண்டி அழுகறே! அவள் பொறுப்பில இருந்து விலகிப் போனா.. நீ பொறுமையா இருந்தவளாச்சே! எவ வந்தா.. என்ன.. போனா... என்ன? நீதான் நான் மனசார ஏத்துகிட்ட மருமக!" என்றாள்.

வந்தனா குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

சற்று நேரம் அழவிட்ட மாமியார் கேட்டார்.

"நீ எதுக்கு அழுகறே! அவன் அப்படியெல்லாம் உன்னை விட்டறமாட்டான். நானும் அதுக்கு ஒத்துக்க மாட்டேன்" என்றார்.

தேம்பிய வந்தனா மெது மெதுவாக அடங்கினாள்.

தனலட்சுமியம்மா சோபாவில் அமர்ந்து கொண்டார். மருமகளை மடியில் சாய்த்துக் கொண்டார். பிறகு சொன்னார்.

"வந்தனா! வாழ்க்கைன்னா.. விளையாட்டில்லை.. ராசாத்தி.. பொறுப்புக்கல்ல இருந்து யாரும் தப்பிச்சட முடியாது கண்ணம்மா...! அந்தக் கடமைக்காகத்தான் என்ற மகன் போறான். வூட்டுப் பக்கம் வந்தின்னா.. கையைக் காலை வெட்டிப் போடுவேன்னு மிரட்டிப் போட்டு வருவான்... பாரு..." என்றார்.

வந்தனா ஒன்றும் பேசவில்லை.

எழுந்து அமர்ந்தாள்!

கண்களைத் துடைத்துக் கொண்டு மாமியாரைப் பார்த்தாள்.

"இல்லைங்கத்தே! இப்பத்தான். அவர் பத்திருபது நாளாத்தான் குழப்பம் இல்லாம கொஞ்சம் சிரிச்ச முகத்தோட நடமாடிக்கிட்டிருந்தாரு. இப்பக் குழப்பம்...! எங்கத்தே.. கடவுள்னு ஒருத்தர் இருக்கானா... இல்லையா? அவரு தப்புன்னு எதுவும் இல்லாம.. அவர் எதுக்காக இத்தனை கவலைகளையும் சுமக்கணும்னு எனக்குத் தாங்கவே இல்லை! அதுதாங்கத்தே..." என்றாள்.

தனலட்சுமியம்மாள் வருத்தம் தோய்ந்த ஒரு புன்னகையை வெளியிட்டார்.

"என்ன செய்றது? எல்லாம் அவங்கப்பா போனதால வந்த வினை. அவரு மட்டும் இருந்திருந்தா... தெளிவா



முடிவெடுத்திருப்பாரு. நான்தான் விலாஸினியைக் கட்டிக்கடான்னு வற்புறுத்தினேன். எனக்குத்தான் என்ன தெரியும்? அந்தப் புள்ளே! எடுத்தேன், கவுத்தேன்னு.. இந்த வேலையெல்லாம் செய்யும்னு. நானே அவன் வாழ்க்கையைக் கெடுத்தேன். அப்புறமாவது நிம்மதியாயிருக்கட்டும்னு.. தான் உன்னைக்கொண்டு வந்தேன். உங்க வீட்ல விசாரிச்சப்போ எல்லாரும் சொன்னாங்க. பொறுமையான பொண்ணுன்னு. அப்படிப்பட்ட பொண்ணு தான் இங்கத்த சூழ்நிலைக்கு வேணும்னுதான் உன்னைக் கொண்டு வந்தேன். சும்மா சொல்லக் கூடாது தாயி! நீ தங்கம்! வேற ஒருத்தியாயிருந்தா.. என்னென்ன பிரச்சினை பண்ணியிருப்பா. நீ பொறுமையிலயே ஜெயிச்சே..! கவலைப்படாதடி.. பெண்ணே! நான் உன் பக்கம்தான்! சும்மா இப்பப் போறேன்... எப்ப வேண்ணாலும் வருவேன்னு நடந்துக்கறவங்களையெல்லாம் வச்சுகிட்டுக் குடும்பம் நடத்த முடியுமா! பாக்கலாம்.. நீ மட்டும் மனசு விட்றாதே" என்றார்.

அவள் சரியென்பது போல் தலையாட்டினாள்.

"அத்தே... இப்பவும் அவரு சந்தோஷம்தான் எனக்கு முக்கியம். எனக்கு எது நடந்தாலும் சரி.." என்றாள்.

"உனக்கு.. எதுவும் நடக்காது! அதுக்கு நான் பொறுப்பு..." என்றார்.

வந்தனாவின் மனம் எல்லையில்லாத நிம்மதியடைந்தது.

"விலாஸினியக்காவே வந்தாலும் சரி...! நான் ஒரு ஓரமா இருந்துக்கறேன். அவரு சந்தோஷமா இருந்தாச் சரி..." என்றாள்.

"அது அப்புறம் பாக்கலாம்..." என்று அவள் கண்ணை வழித்தார்.

"போ.. கண்டதையும் மனசுல போட்டுக் குழப்பிக் காம.. கோயிலுக்குப் போயிட்டு வா... நான் இருக்கேன், உனக்கு..." என்றார்.

வந்தனாவுக்கு அப்படி ஏதாவது வெளியில் போனால் தேவலை என்றிருந்தது.

கோயிலுக்குப் புறப்பட்டாள்.

• • •

காரை ஓட்டிக் கொண்டே யோசனையில் ஆழ்ந்தான் மதியழகன்!

வந்தனாவை மனதுக்குப் பிடித்த போதும் விலாஸினி செய்த குழப்பத்தால் அவள் வாழ்விலும் பிரச்சினைகள் ஏற்பட்டு விடக் கூடாதென்று தான் காத்துக் கொண்டிருந் தான்.

கடந்த மாதத்தில்தான் அவன் மனம் ஒரு முடிவுக்கு வந்தது!

தன் வாழ்க்கையில் நுழைந்த ஒரே காரணத்திற்காக அவள் தாங்க நேர்ந்தது ரொம்பவும் அதிகம் என்று தோன்றியது.

இரண்டு ஆண்டுகள் காத்திருப்பின் போதும் அவள் காட்டிய பொறுமை அவனை மிகவும் கவர்ந்து விட்டது.

தனது ஒவ்வொரு சின்னத் தேவைகளையும் கேட்கும் முன்பாகப் பூர்த்தி செய்வது!

கேள்வியே கேட்காமல் தன் கடமைகளைச் செய்வது...! என்று எவ்வளவு அற்புதமாக இந்த இரண்டாண்டுகளை யும் நடத்தினாள்.



வீட்டைப் பொறுத்தவரை எல்லா விதத்திலும் அமைதியே நிலவுகிற அளவுக்கும் பார்த்துக் கொள்வது!

மதியழகன் மனத்தில் விலாஸினியின் மேல் மிகுந்த கோபம் ஏற்பட்டது. அதே சமயம்.. இந்த எட்டாண்டு களில் அவளுக்கு என்ன நேர்ந்ததோ என்ற கவலையும் ஏற்பட்டது!

உடனே இன்னொரு மனது சொன்னது.

அப்படியெல்லாம் கவலைப்பட வேண்டிய அவ சியமே இல்லை! விலாஸினி எவ்வளவுக்கெவ்வளவு வேகமானவளோ அவ்வளவுக்கு தைரியமானவளும் கூட.

கண்டிப்பாகத் தன்னைக் காத்துக் கொள்கிற திறமை அவளுக்கு இருந்தது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது.

எந்த முடிவானாலும் தெளிவாக அவளே எடுப்பாளே ஒழிய சூழ்நிலைகளுக்குக் கட்டுப்படமாட்டாள் என்பதும் அவனுக்குப் புரிந்திருந்தது. ஆனாலும் "க்யூரியாசிட்டி" என்பார்களே அது போல ஆர்வம் இந்தச் சூழ்நிலையை எப்படிக் கையாள்வது என்பது பற்றிய குழப்பம்.. எல்லா மும் சேர்ந்து அவனைச் சோர்வடையச் செய்தது.

நிராசையான ஒரு மனநிலையில்தான் அவன் அந்த பங்களாவிற்குப் போனான்.

கார் பங்களாவில் நுழைந்ததுமே அங்கே அவன் வய தொத்த இளைஞன் ஒருவன் காத்துக் கொண்டிருந்தான்.

மதியழகன் காரில் இருந்து இறங்கி அந்தக் குழலைப் பார்த்தவுடன் அதிர்ந்து போனான்.

அவன் வேறு எதை வேண்டுமானாலும் எதிர்பார்த்திருக் கலாம். இதை சத்தமாக எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போய் நின்றான்.



# 17

பங்களா பரபரப்பாக இருந்தது.

மதியழகன் எதிர்பார்த்து வந்த சூழ்நிலைக்கு நேர் எதிராக இருந்தது.

குழப்பத்தில் ஆழ்ந்தான்.

''அம்மா.. காத்துகிட்டிருக்காங்க.. வாங்க போலாம்'' என்று அழைத்தான் அந்த இளைஞன்.

மதியழகன் ஒரு கணத் தயக்கத்துக்குப் பின் உடன் போனான்.

பெரிய பங்களா... முன்பகுதி, பின்பகுதி என்று இரண்டு பகுதிகளாக இருந்தது.

மாடிப்படியொன்று வளைந்து மேலே சென்றது. பின்பகுதிக்குப் போனார்கள்.

மேலே ஒரு பெரிய ஹாலுக்குள் நுழைந்தார்கள். அந்த இளைஞனின் பின்னால் போய்க் கொண்டே இருந்த போதிலும் மதியழகனின் கண்கள் விலாஸினி எங்காவது கண்ணில் படுகிறாளா என்று பார்த்துக் கொண்டேதான் இருந்தன.

தட்டுப்படவில்லை.

மாறாக இந்த இளைஞன் மிகவும் மரியாதையுடன் குறிப்பிட்ட விதம் பார்த்தால் ஏதோ முக்கியப் பொறுப்பில் இருக்கிறாற் போல் தோன்றியது.



ஒரு வழியாக அந்த அறையை அடைந்தார்கள்.

''அம்மா! மதியழகன் சார் வந்திருக்காங்க...'' என்று அந்த இளைஞன் கூறவும் வேறு யாருக்கோ ஏதோ கட்டளைகள் இட்டுக் கொண்டிருந்த விலாஸினி மெல்லத் திரும்பினாள். இல்லை! திரும்பினார் என்று சொல்ல வேண்டும்.

மதியழகன் உண்மையிலேயே விக்கித்துப் போனான்.

இரண்டு பேர் கண்களும் சந்தித்துக் கொண்டன. ஏதோ மர்ம நாவல் முடிச்சு ஒன்று அவிழ்ந்தாற்போல் தன் கண்களையே நம்பாதவனாய். ஆனால் தன் முன்னே நிஜமாகவே நிற்கிற விலாஸினியைப் பார்த்துத் திகைப்புமாய் நின்றான் மதியழகன்.

''வணக்கம்!'' என்று இரு கைகளைக் கூப்பினாள் விலாஸினி.

அதே தோற்றம்! அழகிய கொஞ்சும் குரல்..! எட்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்த கம்பீரத்தில் இருந்து இம்மியளவு குறையாத கம்பீரம்!

ஆனால்!

கோலம் மட்டும் வேறாக இருந்தது! மதியழகன் இரண்டு கைகளையும் கூப்பினான். எப்படிக் கைகள் இரு புறம் இருந்தும் எழுந்தன, எப்படி இணைந்தன, எப்படிக் கூப்பின என்று எதுவுமே தெரியவில்லை.

அதே போல மெதுவாக இயந்திரத் தனமாகக் கைகள் இறங்கவும் செய்தன!

வாய்ப் பேச்செழாமல் நின்றான்.

• • •

மாரியம்மன் கோவில்!

"இறைவா! அவருக்கு மன அமைதி கொடு. அவர் என்ன முடிவெடுத்தாலும் ஏற்றுக் கொள்கிற பக்குவத்தை எனக்குக் கொடு" என்று மனமுருகி வேண்டிக் கொண்டாள்.

கோவில் பழைய காலத்துக் கோயில் என்பதோடு பெரிய கோவிலும்தான். மெதுவாக பிரகாரம் சுற்றி வந்தாள்.

எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட சக்தி ஒன்று இதை யெல்லாம் நடத்துகிறது.

இரண்டு வருஷங்களாகத் தன்னை நெருங்காமல் இருந்த கணவன் ஏன் கடந்த பத்து நாட்களாக தங்கத் தட்டில் வைத்து தாங்க வேண்டும்.

எவ்வளவு நெருக்கமாக இருந்தான்? உன் வாழ் நாளைக் கெல்லாம் நீ நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி ஒரு அனுபவத்தைக் கொடுத் திருக்கிறேன். இனிமேல் கிடைக்குமோ கிடைக்காதோ என்பதற்காகவா இப்படி ஒரு அனுபவத்தைக் கொடுத்தாய்?

பெருமூச்சு விட்டுக் கொண்டாள். இனி வரப்போகும் அனுபவம் எப்படி இருந்தாலும் சரி...! வாழ்க்கை தனக்கு எதைக் கொடுத்தாலும் சரி...! தான் அதைத் தாங்கத் தயா ராய் இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

"இறைவா! அவருக்கு மனோசக்தி கொடு. சரியான முடிவெடுக்கிற அறிவையும், தெளிவையும் கொடு..." என்று வேண்டிக் கொண்டாள்.

இந்நேரம் சந்தித்திருப்பார்களா? எங்கு இருப்பார்கள்? என்ன பேசிக் கொண்டிருப்பார்கள்? மீண்டும், மீண்டும் அவளது மனம் அங்கேயே சென்றது. விலாஸினி என்ற பெண் அவரது வாழ்க்கையில் வந்து போயிருக்கிறாள் என்று தெரிந்தேதான் திருமணம் செய்து கொண்டோம்.



அப்போது இப்படி ஒரு சூழ்நிலை வந்தால் என்ன செய்வது என்று நமக்குத் தோன்றவில்லை. உள்ளூர ஒரு எண்ணம். ஆறு வருடங்கள் வராதவள் இனிமேல் வந்து விடப்போகிறாளா என்று. அந்தக் குருட்டு தைரியத்தில் தானே இந்தத் திருமணத்துக்கு ஒத்துக் கொண்டோம்.

தலையே வெடித்து விடும்போல இருந்தது. ஒரு வேளை தனக்கும், தனது கணவருக்கும் நெருக்கம் ஏற்பட்டிராவிட்டால் இது காயம்போலத் தோணாதோ?

அப்போதுதான் அந்த முடிவை எடுத்தாள். விரைவாக வீட்டுக்குப் போனாள்.

அத்தையின் அறை வாசலில் நின்றாள்.

அவர் திரும்பிப் பார்த்தார்.

"என்னம்மா!" என்றார்.

"அத்தே! எனக்குப் பைத்தியமே பிடிச்சிடும் போல இருக்கு. நான் எங்க அம்மா வீட்டுக்குப் போறேன்" என்றாள்.

அவர் திகைத்துப் போனார்.

உடனே அவள் அவசரமாகத் திருத்திச் சொன்னாள்.

"இல்லல்லே! சும்மா ஒரு நாலு நாளைக்குப் போறேன். அவரும் விலாஸினி அக்காவும் பேசி ஒரு முடிவுக்கு வரட்டும்" என்றாள்.

இந்தக் கட்டத்தில் என்ன முடிவெடுப்பது என்றே தலைலட்சுமியம்மாவுக்கு தெரியவில்லை.

"இல்லே! அவன் கோபிச்சுகிட்டா என்ன செய்யறது?"

"அத்தே! அவருக்கு இந்தப் பிரச்சினையினாலே ஏற் கனவே தலைவலி. நான் இங்க இருந்தா என்னைப் பார்க் கறப்ப எல்லாம் அவருக்குக் குழப்பம்தான் வரும்" என்றாள்.

"நீ சொல்றது சரிதான். ஆனா.. நீ பாட்டுக்கு திடீர்னு கிளம்பினா?"

"அத்தே! ப்ளீஸ் புரிஞ்சுக்குங்க... எனக்கு நெருப்புக் குள்ள இருக்கிற மாதிரி இருக்கு. நீங்க எல்லாரும் சொல்ற மாதிரி நான் பொறுமைசாலியா இருக்கலாம். ஆனா.. மன சில்லாதவ இல்லையே! எனக்கும் மனசுன்னு ஒண்ணு இருக்கு. அதுக்கும் ஆசைகள், எதிர்பார்ப்புகள் எல்லாம் இருக்கு. என்னோட வாழ்க்கையை யாரோ கையில எடுத்துகிட்டு விளையாடற மாதிரி இருக்கு; என்னால தாங்க முடியலே" என்றாள்.

தனலட்சுமி கொஞ்சம் அதிர்ந்து போனார்.

"சரிம்மா! நான் அவன்கிட்டே சொல்றேன். நீ புறப் படு" என்றார்.

அவசரமாகத் துணிமணிகளை எடுத்து அடுக்கினாள்.

புறப்பட்டாள்!

புறப்படுவதற்கு முன்பாக மறுபடியும் அத்தையிடம் சொன்னாள்.

"அத்தே! நான் இந்த விஷயம் எதையும் எங்கப்பா... அம்மாகிட்டே சொல்லலே. நீங்களும் சொல்லாதீங்க" என்றாள்.

"சரிம்மா! நீ எப்படிச் சொல்றியோ அப்படி" என்றார்.

• • •

"வாடி! இப்பத்தான் அம்மாவை பத்தின நினைப்பு வந்துச்சாக்கும்" என்றார் அம்மா.

அப்பா முகத்தில் கேள்விக் குறியுடன்தான் வரவேற்றார்.

"என்னம்மா... ஏதும் பிரச்சினையில்லையே?" என்றார்.



"இல்லப்பா! அவரு வேற ஒரு விஷயமா அலைஞ்சு கிட்டிருக்காரு. நான் ஒரு நாலு நாள் உங்களோட இருக்க லாம்னு வந்தேன்" என்றாள்.

"சந்தோஷம்மா...!" என்றார்.

சற்று நேரம் ஊர்க்கதைகளையெல்லாம் பேசியதில் கவனம் மாறியது. ஆனால், இரவின் தனிமையில் தனது அறையில் தனது கட்டிலில் படுத்துக் கொண்டு நெஞ்சு வெடிக்க அழுதாள்.

மௌனமாகத்தான்!

மறுநாள் காலை அப்பா வெளியே போய் விட்டு வந்தபோது அவரது முகம் இரண்டு போயிருந்தது.

"வந்தனா..." என்று அழைத்தார்.

"ஏம்மா! எப்ப இருந்து இப்படியெல்லாம் பொய் சொல்லக் கத்துகிட்டே?"

வந்தனாவும் வரப்போவது என்ன என்பது போல ஒன்றும் பேசாமல் பார்த்தாள்.

"அந்தப் பொண்ணு விலாஸினி வரப்போறதா பேச்சு அடிபடுது" என்றார்.

"பேச்சு இங்க வரைக்கும் வந்துடுச்சா?" என்றாள் முணுமுணுப்பாக.

"இல்லல்லே! நீ திடீர்னு வந்து நாலு நாள் இருக் கேன்னு சொன்னவுடனே சந்தேகம் வந்துடுச்சு. அதான் காளிமுத்துகிட்டே போய்ல கேட்டேன்" என்றார்.

வந்தனா மௌனம் காத்தாள். அப்பா கவலை நிறைந்த குரலில் கேட்டார்.

"ஏம்மா! கோபிச்சுகிட்டா... வந்தே?" என்றார்.

வந்தனா தலையைக் குனிந்து கொண்டாள்.

"எல்லாம் தெரிஞ்சதானே கல்யாணம் பண்ணிவச்சீங்க. இப்ப நான் எப்படி சண்டை போட முடியும்? எனக்கு அவங்க வர்ற நேரத்துல அங்க இருக்கறதுக்கு ரொம்பக் கஷ்டமா இருந்துச்சு. குழப்பமெல்லாம் தீரட்டும். நாலு நாள் அம்மா வீட்ல இருந்துட்டு வர்றேன்னு சொல்லிட்டு வந்தேன்" என்றாள்.

"என்னம்மா நீ? இந்த நேரத்துல நீ அங்க இருந்திருக்கணும்மா..."

"அப்பா! என்னப்பா... புரிஞ்சுக்காம பேசறீங்க! இப்பத்தான் எங்களுக்குள்ள எல்லாம் நார்மலாச்சு. அதுக்குள்ள இந்தப் பிரச்சினை வந்துருச்சு. அவங்க ஒரு பக்கம், நான் ஒரு பக்கம்னு அவரை வறுத்தெடுத்தா.. அவங்க என்ன பண்ணுவாங்க...? தெளிவா முடிவெடுக்கட்டும்ப்பா..." என்றாள்.

சரேலென்று உள்ளே போய்விட்டாள்.

அப்பாவும், அம்மாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

கணவனிடமிருந்து போன் வருமென்று காத்துக் கொண்டிருந்தாள் வந்தனா.

போன் வரவேயில்லை.

போன் செய்து கோபித்துக்கொண்டால் கூடப் பரவாயில்லை என்று தோன்றியது. ஆனால் அவன் அப்படி மௌனம் சாதிப்பது அவளுக்கு மிகுந்த வேதனையாக இருந்தது. ஆனால் தானாக அழைப்பதில்லை என்ற முடிவில் இருந்தாள். ஆனால் போன் வரவேயில்லை!

• • •



"அம்மா! வந்தனா எங்கே?" என்று வந்தான் மதியழகன்.

"தம்பி நீ கிளம்பிப் போனதுக்கப்புறம் முகம் வாடி நடமாடிக்கிட்டிருந்தா. அப்புறம் என்கிட்டே சொன்னா..... அத்தை! எனக்கு என்ன நடக்குமோன்னு நினைச்சு ஒரே கவலையா இருக்கு. என்னைப் பாத்துகிட்டே நடமாடிக்கிட்டிருந்தா.. அவரும் முடிவெடுக்க முடியாது. அவரு ஏதோ ஒரு முடிவெடுக்கட்டும் அம்மா வீட்டுக்குப் போறேன்னா.. போயிட்டு வான்னு அனுப்பிச்சேன்" என்றார்.

மதியழகன் "ஏம்மா! என்கிட்டே கேட்டிருக்கலாம் இல்லே!" என்றான்.

"இல்லப்பா! நீயே குழப்பத்துல இருக்கே! பாரு இப்ப மணி பத்தாச்சு. நானே திக் திக்குன்னுதான் உட்கார்ந்திருக்கேன்..." என்றார்.

மதியழகன் ஆமோதிப்பவன் போல் மௌனம் சாதித்தான்.

"சாப்பிட்டியாப்பா?" என்றார்.

"இல்லம்மா! சாயங்காலம் ஏதோ லைட்டா சாப்பிட்டது..." என்றான்.

முகத்தில் ஏகப்பட்ட களைப்புத் தெரிந்தது.

திருமணம் என்ற பெயரில் மகனை சிக்கலில் சிக்க வைத்து விட்டோம் என்ற வருத்தம் அவருக்கு தோன்றியது.

அவன் டைனிங் டேபிளில் சாப்பிட அமர்ந்தான். அவரே பரிமாறினார்.

"தம்பி! பாத்தியாப்பா!" என்றார்.

"ம்.. பாத்தேன்!" என்றான்.

"நல்லா இருக்காளா?" என்றார். ஆர்வமாக.

"ரொம்ப நல்லா.. இருக்கா..." என்றவன் அடுத்து சொன்ன வார்த்தையைக் கேட்டு. அந்தத் தாயார் அதிர்ந்து போனார்.

"நிஜம்மாவா சொல்றே!" என்றார்.

"ஆமா! பொய் சொல்லவோ விளையாடவோ செய்யுற விஷயமா இது?"

"அம்மா "தொப்"பென்று சேரில் அமர்ந்தார். கனமான மௌனம் நிலவியது. மதியழகன் பசியில் இருந்ததாலோ என்னவோ கொஞ்சம் வேகமாகவே சாப்பிட்டான். ஓரளவு வயிறு நிறையட்டும் என்று நினைத்த தாய் மனது சற்று நேரம் அமைதி காத்தது. பிறகு சொன்னார்.

"ஏம்ப்பா! அவங்க அம்மா, அப்பாவுக்குத் தெரியுமா?"

"நான் சொல்ற வரைக்கும் தெரியாது. நான் பாத்துட்டு ஒரு மணி நேரத்துல வெளியே வந்துட்டேன். அப்புறமா மாமா.. அத்தைக்கு.." என்றான் சட்டென்று நிறுத்தினான். "இனிமே.. மாமா.. அத்தைன்னு.. சொல்லிக்கறது அபத்தம்.. இல்லே!" என்றான் கசப்பாக.

தனலட்சுமியம்மாள் வாயடைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தார். அவன் தொடர்ந்தான்.

"மாமா போனல கதர்றாரு. அத்தை தேம்பித் தேம்பி அழறாங்க. நான் என்ன செய்ய முடியும்! ஆறுதல் சொன்னேன்" என்றான்.

"தம்பி! இப்படிப் பட்டும் படாமலே பேசறே" என்றார்.

"வேற என்னம்மா செய்யச் சொல்றே! நடந்து போனதையும் மாத்த முடியாது. ஆறு வருஷமா.. இல்லை யில்லை... எட்டு வருஷமா என்ன ஆனாளோ எப்படி



இருக்காளோன்னு நான் பட்ட வேதனையெல்லாம் எவ்வளவு முட்டாள்தனமானது? விலாஸினியைப் பொறுத்த வரை ஒரு மாதிரியான விரக்தி எனக்கு எப்பவோ வந்தாச்சு. ஆனாலும் கடமைன்னு ஒண்ணு இருக்கில்லே.. அதுக்காகத்தான் காத்துகிட்டுக் கிடந்தேன். அதுக்குள்ள வந்தனாவைக் கொண்டு வந்து என் வாழ்க்கையில நுழைச்சீங்க. வந்தனா... நல்ல பொண்ணு. பக்குவமான பொண்ணுங்கறதுனால இதுவரைக்கும் எல்லாம் இயற்கையாய்ப் போய்ட்டிருந்தது" என்று நிறுத்தினான்.

நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

"ஏம்மா! வந்தனா ரொம்ப வாடிப் போயிட்டாளே!" என்றான்.

"ஆமப்பா! அத்தே.. இந்த மாதிரி ஒரு சூழ்நிலை வரும்னு என் அறிவு சொல்லிட்டேதான் இருந்தது. ஆனா நேரடியா சந்திக்கறப்போ மனசு பதைக்குதுங்கறா" என்றார்.

மதியழகன் ஆழ்ந்த வேதனையோடு அதைக் கவனித்துக் கொண்டான்.

"இனி என்னப்பா செய்யறது?"

"என்ன செய்றது? யாராவது ஒரு லாயரைப் பாக்கணும்."

"லாயரா? யார் மேல கேஸ் போடறது" அவன் கசப்பாகச் சிரித்தான்.

"கேஸ்ன்னு போடறதுன்னா உங்க மேலயும் என் மேலயும்தான் போடணும்" என்றான்.

அம்மா திடுக்கிட்டுப் போனார்.

"என்னப்பா.. சொல்றே?"

"ஆம்மா.. சொன்னேன்ம்மா.. எல்லாத்துக்கும் ஒரு தீர்வு வரணுமில்லே!"

அம்மா ஒரு வினாடி தயங்கினார். பிறகு சொன்னார்.

"தம்பி! விலாஸினி தனியா சமாளிப்பா. கொஞ்ச மனதைரியம் இருக்கு. ஆனா.. வந்தனா அப்படியில்லே!" என்றார்.

அறைக்குப் போவதற்காக எழுந்த மதியழகன் சொன்னான்.

"அம்மா! நீ நினைக்கற மாதிரியில்லை! வந்தனா... நம்ம எல்லாரைக் காட்டிலயும் ரொம்ப ஆழமானவ! தைரியசாலி!" என்றான்.

சட்டென்று அறைக்குள் போய்விட்டான்.

மகன் என்ன முடிவெடுக்கப் போகிறானோ என்ற குழப்பத்துடன் தாய் போகிற மகனுடைய முதுகைப் பார்த்துக் கொண்டு நின்றார்.



## 18

நான்கு நாட்கள் ஓடியிருந்தது!

வந்தனா சுத்தமாக மனம் வாடி விட்டாள். குறைந்த பட்சம் கணவன் போனிலாவது பேசி இருக்கலாம்.

அத்தை கூடப் பேசவில்லை. இதுதான் உலகம்!

இருக்கும் வரை அந்த வீட்டிற்காக எவ்வளவு உழைத்தோம்! ஆனால் இந்தப் பக்கம் வந்தவுடனே அத்தனை பேரும் மறந்து விட்டார்களா?

ஒரு வேளை விலாஸினி நான்தான் இந்த வீட்டுக்கு மருமகள் என்று உள்ளே நுழைந்து அமர்ந்து



விட்டார்களோ! அப்படி அமர்ந்தால் என்ன செய்ய முடியும்?

ஒன்றும் செய்வதற்கில்லை!

பிரச்சினை ஆரம்பித்தபோது அந்த வீட்டில் ஏதோ ஒரு மூலையில் தொடர்ந்து இருந்தாலும் சரி என்ற எண்ணம் தோன்றியிருந்தது. ஆனால் இப்போது அப்படியெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.

தங்கள் தனிமையான நேரங்களின் போது கணவன் எப்படிச் சிரிப்பான். எப்படிக் குறும்பு பேசுவான். எப்படிச் சீண்டுவான் என்பதெல்லாம் தெரிந்ததற்குப் பின்னர் அதே போல இன்னொரு பெண்ணுடன் அவன் என்னதான் முதல் மனைவியாக இருந்தாலும் இருப்பானோ என்ற எண்ணத்தை தாங்க முடியாது என்று தோன்றியது.

முதல் மூன்று நாட்கள் போன் வரும் என்று நம்பிக் கொண்டிருந்தாள். ஆனால் போன் வராமல் போகவே அவளுக்குக் கொஞ்சம் கவலையாகிப் போனது. சொல்லாமல் வந்ததால் ஒருவேளை கோபமோ என்று.

எதற்கும் ஒருமுறை பேசிவிடலாம் என்று தோன்றியது.

நேரம் பார்த்தாள்!

மணி ஒன்பது! காலையில் ஒரு ரவுண்டு போய் முடித்திருப்பான். நிலம் சம்பந்தமான விவகாரங்களையெல்லாம் முடித்து விட்டு வந்திருப்பான். இப்போது குளித்து முடித்திருப்பான்.

போன் செய்தாள்!

முதலில் கிடைக்கவேயில்லை.

விலாஸினியும், அவரும் பேசிக் கொண்டிருப்பார்களா! பல நாட்கள் கழித்து சந்தித்திருக்கிறார்கள். பேசுவதற்கு எவ்வளவோ இருக்கும்.

முதல் காதல் மறக்காதாமே! அது போல் அவரது வாழ்வில் முதலில் நுழைந்தது விலாஸினியல்லவா? அதுவும் இளமைக் காலத்தில் பட்டாம்பூச்சி மாதிரியாக சுற்றிக் கொண்டிருந்திருப்பார்கள். அதிலும் காளிமுத்து சொல்கிறபோது பார்க்க வேண்டும்.

"சும்மா! அதிரடித் தாக்குதல்ன்னா.. நம்ம விலாஸினி அம்மாதான்" என்பான்.

இப்போதும் அதிரடித் தாக்குதல் நடத்திவிட்டார்களா! ஆறு வருஷம் அந்தப் பெண்ணுக்காகக் காத்துக் கொண்டிருந்தார் என்றால் அவள் எவ்வளவு தூரம் அவர் மனதில் இடம் பிடித்திருக்க வேண்டும்.

தன் விஷயத்தில் இரண்டு வருஷம் காத்திருக்க வைத்து விட்டுப் போனாற் போகிறது என்று தானே ஏற்றுக் கொண்டார்? என்று என்னென்னவோ சிந்தனைகள்.

"மறுபடியும் அழைத்தாள்!"

காளிமுத்துதான் போனை எடுத்தான்.

"காளிமுத்து! நான் வந்தனா பேசறேன்...!"

"அம்மா! நல்லாயிருக்கீங்களா? என்னம்மா.. திடீரென்று கிளம்பிட்டீங்க...? நீங்க இல்லாம நல்லாவே இல்லை!" என்றான்.

"சும்மாதான்! காளிமுத்து அவரு இல்லையா?"

"இந்தா.. கூப்பிடறேன்ம்மா!" என்று போனான்.

நான்கு நாட்களுக்குப் பிறகு கணவனின் குரலைக் கேட்க வேண்டும் என்ற ஆவல்தான் மற்ற எல்லாவற்றையும் பின்தங்கி விட்டு மேலோங்கி நின்றது.

மறுபடியும் குரல்!



காளிமுத்துதான் பேசினான்.

"அம்மா! ஐயா.. இப்ப பிஸியா இருக்காங்களாம். அப்புறம் பேசச் சொன்னாங்க..." என்றான்.

பொட்டில் அறைந்தாற் போல உணர்ந்தாள்.

"ஓ."

"அம்மா! விலாஸினியம்மா இன்னைக்கு சாயங்காலம் இங்கே வரப்போறாங்களாம். பெரிய விருந்துக்கு ஏற்பாடு ஆகியிருக்கு. அதுக்கு சாமான் வாங்கத்தான் பெரியம்மா, மகேஸ்வரியம்மா எல்லாரும் வெளியே போயிருக்காங்க" என்றான்.

"ஓ...!"

"அம்மா! நீங்க இல்லாம நல்லாவே இல்லை! சீக்கிரம் வாங்கம்மா!" என்றான் காளிமுத்து.

"வரேன்" என்று வைத்தாள்.

அழுகை பொங்கிக் கொண்டு வர ஹாலில் இருந்த போனை பொக்கென்று வைத்து விட்டு அறை நோக்கி ஓடினாள்.

குமுறிக் குமுறி அழுதாள்!

எவ்வளவு நேரம் தேம்பினாளோ தெரியாது அம்மாவின் கைகள் முதுகை வருடிக் கொடுப்பதை உணர்ந்து சட்டென்று திரும்பி அம்மாவின் மடியில் முகம் புதைத்துக் கொண்டாள்.

அந்தக் கணத்தில்தான் தன் கணவனை எவ்வளவு உயிராக நேசிக்கிறோம் என்று புரிந்தது. அவன் இழப்பு தன்னை எவ்வளவு தூரம் தாக்கும் என்று புரிந்தது.

அதே நேரம்!

அம்மா தன் குரலை உயர்த்தி அப்பாவிடம் பேச ஆரம்பித்தார்.

"இதுக்குத்தான் நான் அப்பவே சொன்னேன். என்ன இருந்தாலும் ரெண்டாவது பொண்டாட்டின்னா இரண்டாவது இடம்தானே! அதுலயும் முதல் வைப் உயிரோட இருக்கான்னு சொல்றீங்க! அவ எப்ப வேண்ணாலும் வந்து நிப்பா! வந்து நின்னா நம்ம பொண்ணோட கதி அதோ கதிதான்னு. அப்ப என்ன சொன்னீங்க! ஆறு வருஷமாச்சு. இனிமே எங்க வரப்போகுது அந்தப் பொண்ணு. அப்படியே வந்தாலும் என்ன நிலையில வருமோன்னு. இப்ப என்ன ஆச்சு? பணம் இருக்கு அவங்களுக்கு என் பொண்ணை ரொம்ப நல்லா வச்சுக்குவாங்கன்னு சொன்னீங்க."

"ஆமா! இப்பவும்தான் கேளு. உன் பொண்ணை நல்லபடியா வச்சுக்கலையா?"

"சொல்ல மாட்டீங்க! என் பொண்ணு ராஜகுமாரியடி. பெரிய ஜமீன்தார் வீட்ல வாழ வேண்டியவன்னு சொல்லிட்டிருந்தீங்களே! ஆனா, வாழ்க்கையே கேள்விக் குறின்னு வந்து நிக்குறா.. எங்க போய் முட்டிக்கப் போறீங்க..." என்று பொருமித் தள்ளினார்.

"இத பாரு! இப்பவும் நான் சொல்றேன். அவங்க போகச் சொல்லலை. உன் பொண்ணாத்தான் வந்திருக்கா. என்னைக் கேட்டா.. இவ அந்த நேரத்துல அங்க இருந்திருக்கணும். இவ இருந்தா எந்த முடிவும் எடுக்கறதுக்கு முன்னாடி யோசிப்பாங்க. ஆனா, முதுகுக்குப் பின்னால என்னவும் செய்வாங்க" என்றார்.

"எப்படிங்க.. இப்படி ஊரான் வீட்டுப் பொண்ணைப் பத்திப் பேசற மாதிரிப் பேசறீங்க. அவ பட



வேதனையைப் பாருங்க" என்று மறுபடியும் அம்மா புலம்ப, வந்தனா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"அம்மா! ப்ளீஸ்! நீங்க வருத்தப்படாதீங்க! எல்லாம் தெரிஞ்சுதான் நான் அந்த வீட்டுக்குப் போனேன். இப்ப என்ன நடக்குமோன்னு நினைச்சு நான் அழலை. நான் அவரோட வாழ்க்கையில நுழையாம இருந்திருந்தா அவருக்கு மனக்குழப்பம், மனசு வேதனை இதெல்லாம் இல்லாம இருந்திருக்குமில்ல... அதை நினைச்சுத்தான் அழறேன்" என்றாள்.

"அடி.. ஆத்தி!" என்று கன்னத்தில் கை வைக்காத குறையாக அம்மாவும் அப்பாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"நல்லா ஆச்சு.. போ! நாங்க உன்னைப் பத்திக் கவலைப்படறோம். நீ அவரைப் பத்திக் கவலைப்படறே" என்று முணுமுணுத்த அம்மா எழுந்து போனார்.

தங்களுடைய சிந்தனைப் போக்கும், அவளுடைய கவலையும் வேறு வேறு தளங்களில் இருக்கின்றன என்று புரிந்து கொண்ட அப்பாவும் எழுந்து போனார். சற்றுக் கழித்து அப்பாவிடம் வந்து சற்று நேரம் பேசினாள் வந்தனா. மகள் தான் நினைத்ததற்கும் மேலே உறுதியானவள் என்று புரிய அப்பா ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தார்.

• • •

பிற்பகல் இரண்டு மணியிருக்கும்!

ஒரு காரில் மகேஸ்வரியும், கமலேஸ்வரியும் வந்து இறங்கினார்கள்.

அப்பாவும், அம்மாவும் விழுந்து விழுந்து வரவேற்றார்கள்.

வந்தனா உள்ளேயிருந்து பரபரப்பாக எழுந்து வந்தாள்.

"வாங்க" என்று வரவேற்றாள்.

அவர்களுக்கு காபி உபசாரம் நடந்த நேரத்தில் அவர்கள் ஏதாவது பேச வேண்டுமோ என்னவோ எழுந்து அப்பா கொஞ்சம் அந்தப் பக்கம் போனார்.

அந்த நேரத்தில் வந்தனா கேட்டாள்.

"எங்கண்ணி! உங்க தம்பி எதுவும் கையெழுத்து வாங்கிட்டு வரச் சொன்னாரா?" என்றாள்.

"கையெழுத்தா! எதுக்கு?" என்றாள் மகேஸ்வரி.

"இல்லே! விலாஸினிக்கா வந்துருக்காங்க இல்லே. அதான் டைவர்ஸ் ஏதாவது..."

வந்தனாவின் முகத்தில் தெரிந்த ஆழ்ந்த வேதனையைப் பார்த்தார்கள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"உன்கிட்ட நேரடியாய் பேசணுமாம். அதனால உன்னைக் கூட்டிட்டு வரச் சொன்னான்" என்றாள்.

வந்தனா ஒரு விதமான கவலையான உணர்வோடு புறப்பட்டாள்.

காரில் போய்க் கொண்டிருக்கும்போது மகேஸ்வரியும் கமலேஸ்வரியும் பொதுப்படையாகப் பேசிக் கொண்டிருந்தார்களே தவிர வந்தனாவைப் பற்றியோ, மதியழகனைப் பற்றியோ எதுவும் பேசவில்லை.

வந்தனாவிற்கு இருப்பே கொள்ளவில்லை. பொறுக்க முடியாமல் கடைசியில் கேட்டாள்.

"அண்ணி, உங்க தம்பி எப்படியிருக்காரு?"

"எப்படியிருக்கான்.. ஒரு மாதிரி ஏதோ பொழைச்சகிட்டிருக்கான்."



"ஏன்? அப்படிச் சொல்றீங்க?"

"என்னா.. அவன் கவலை அவனுக்கு...!"

"எதுக்குக்கா.. கவலை!"

"பின்னே! விலாஸினி இன்னைக்கு நம்ம வீட்டுக்கு வராப்ல இல்லே!" என்றார்கள்.

"ஓ! அப்போ நான் எதுக்குக்கா அங்கே!" என்றாள் தயக்கத்துடன்.

"அதை நீ அங்க வந்து அவன்கிட்டே கேளு" என்றார்கள்.

மறுபடியும் வேறு விஷயத்துக்குத் தாவி விட்டார்கள். எதையும் அவளால் அவர்களிடமிருந்து கறக்க முடியவில்லை.

இப்போது போவது அவசியமா என்ற சந்தேகத்துடனேயே ஆனால் எப்போது கணவனே சொல்லியனுப்பியிருக்கிறாரோ அப்போது மறுக்கவே முடியாது என்ற சூழ்நிலையில்தான் போனாள்.

வீட்டுக்குப் போய் சேர்ந்தால் அங்கே நடக்கிற தடபுடல் பார்க்க இன்னும் அவளுக்கு வலித்தது.

அந்தப் பெரிய சிமெண்ட் தளம் முழுக்க ஸ்டீல் டேபிள்கள் போடப்பட்டிருந்தது.

பெரிய அளவில் பந்தி பரிமாறுவதற்கான ஏற்பாடுகள் இருந்தன.

வந்தனா ஒரு விதமான மௌனத்துடன் கவனித்தாள்.

பைபிள் கதை அவளுக்கு நினைப்பு வந்தது. "பிராடிகல் சன்" வீட்டுக்கு வந்த போது நடந்த விருந்து நினைவுக்கு வந்தது.

ஒரு வேளை விலாஸினி இனிமே இங்கேயே தங்குவாங்களோ என்ற எண்ணமும் தோன்றியது. அப்படியெல்லாம் வாழ்க்கையை பங்கு போட்டுக் கொண்டு இருக்க முடியுமா?

அந்தக் கணத்தில் முடிவெடுத்தாள்.

வாழ்க்கையை பங்கு போடவே முடியாது. அப்படி ஒரு சூழ்நிலை வந்தால் ஒருவேளை மதியழகன் விலாஸினியை மீண்டும் ஏற்றுக் கொள்வதாக முடிவெடுத்தால் தயக்கமில்லாமல் தான் விலகிச் சென்று விடுவதுதான் சிறந்தது.

போதும்! கடந்த மாதத்தில் அவன் பொழிந்த அன்பே போதும்! அதை நெஞ்சில் நிறைத்துக் கொண்டு வாழ்க்கையை சிறப்பாக ஓட்ட வேண்டியதுதான்.

தெளிவாக முடிவெடுத்தாள்.

மதியழகனைத் தேடினாள்!

அலுவலகத்தில் இருப்பதாகச் சொன்னார்கள்.

போனாள்! அவன் சோபாவில் அமர்ந்து கொண்டு ஏதோ யோசனையில் இருந்தான்.

அவள் வருவதை அவளது காலடிகளிலேயே உணர்ந்தவன் போல்.

"வா.. வந்தனா!" என்றான்.

அவள் அவன் அருகில் போய் நின்றாள். முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல் அருகில் நிற்கிற அவளை நிமிர்ந்து பார்த்தான்.

வாய் பேச்சு பேசாமல் எதிரே இருந்த சோபாவை காட்டினான்.



அமர்ந்தாள்!

"என்ன சொல்லாமக் கொள்ளாமப் போயிட்டே!" என்றான் உணர்ச்சியற்ற குரலில்.

"அத்தைகிட்ட சொல்லிட்டுத்தான் போனேன். இந்த நேரத்துல நான் உங்க முன்னாடி நடமாடிக்கிட்டிருந்தா உங்களுக்கு சங்கடமா இருக்கும். முடிவெடுக்க முடியாமத் திணறுவீங்களோன்னு நினைச்சேன்" என்றாள்.

அவன் கண்கள் ஒரு கணம் மின்னினாற் போல இருந்தது.

அவள் ஒரு நிமிடம் தயங்கினாள். பிறகு தயக்கமில்லாமல் கொட்டினாள்.

"அத்தான்! இந்த ஒரு மாச காலம் என் வாழ்க்கையிலயே இதுவரை காணாத சந்தோஷம் கிடைச்சது. அது போதும் எனக்கு. உங்க வாழ்க்கையில நான் நுழைஞ்சப்ப உங்களை நிம்மதியா வச்சுக்கணும்கிற எண்ணத்தோடதான் நுழைஞ்சேன். இப்பவும் அதே முடிவுலதான் இருக்கேன். எது உங்களுக்கு நிம்மதியைத் தருமோ அதைச் செய்ங்க. ஐயோ! வந்தனாவை என்ன செய்யறதுங்கற கவலையே உங்களுக்கு வேண்டாம். உங்க நினைப்போடவே நான் இருந்துக்குவேன். அதனால குழப்பமில்லாம எந்த முடிவையும் நீங்க எடுக்கலாம். எப்பவும் உங்க நிம்மதிதான் எனக்கு முக்கியம்" என்றாள்.

அவன் பதிலொன்றும் பேசவில்லை.

எழுந்தான். ஜன்னலோரமாகப் போய் நின்று அவளுக்கு முகம் காட்டாமல் வெளியே பார்த்துக் கொண்டு நின்றான்.

உணர்வுகளை அடக்கப் போராடுவது தெரிந்தது. ஆனால் அவளுக்கு வேறு வழியிருக்கவில்லை. அவள் சொல்ல வந்ததை சொல்லித்தானே ஆக வேண்டும்.

உறுதியோடு தொடர்ந்தாள்!

"ஒருவேளை விலாஸினியக்கா மறுபடியும் உங்க வாழ்க்கையில வர்றதா இருந்தா..." என்று நிறுத்தியபோது மட்டும் திரும்பினான். அவளை நேராகப் பார்த்தான்.

அவன் பார்வையைச் சந்திப்பதற்கு ஒரு நிமிடம் தயக்கமாக இருந்தாலும் மறுபடியும் தன்னைத் தயார் படுத்திக் கொண்டாள்.

தொடர்ந்தாள்!

"வர்றதா... இருந்தா... நான் எங்க ஊருக்குப் போறேன். ஏதாவது ஒரு ஸ்கூல் கீல்னு வச்சகிட்டு வாழ்க்கையை ஓட்டிடுவேன்" என்றாள்.

"ம்...!" என்று உள்வாங்கிக் கொண்டான்.

"என்ன? என்னால உங்களைப் பங்கு போட முடியாது. கற்பனையிலன்னாலும் நீங்க எனக்கே சொந்தம்னு வாழ்ந்துக்குவேன்" என்றாள்.

மறுபடியும் அவன் உணர்வுகளை அடக்கப் போராடுவது தெரிந்தது.

"உன் ரியாக்ஷன் என்னவா இருந்தா என்ன? நான் சொல்ல வந்ததைச் சொல்லிடறேன்" என்பது போல் தொடர்ந்தாள்.

"அதான்... அதான் விஷயம்.. நீங்க எந்த முடிவும் குழப்பமில்லாமல் எடுக்கலாம்" என்றாள்.

மெல்ல அவனருகில் நெருங்கினாள். தன் பரிசுகளை உணர்வுப் பூர்வமாக வாரியிறைத்தாள்.

அவன் திகைத்து நிற்கையிலேயே அறையை விட்டு வெளியேறினாள்.

"தாங்க்ஸ்" என்ற அவன் குரல் காற்றில் கரைந்து போனது.





# 19

வாத்தியம் ஒன்றுதான் குறை! மற்றபடி விலாஸினியைப் பூரண கும்பம் வரவேற்காத குறையாக, மொத்த வீடும் தயாராகிக் கொண்டிருந்தது.

வந்தனாவுக்கு ஒரு பக்கம் எரிச்சலாக இருந்தது. மறுபக்கம் ஆச்சரியமாக இருந்தது.

குடும்பத்துக்கே "அல்வா" கொடுத்தாற் போல வெளியே போன ஒரு பெண்மணியை வரவேற்க இவ்வளவு ஏற்பாடுகளா?

கணவனிடம் அதிகப் பிரசங்கித் தனமாகப் பேசி விட்டு வந்து விட்டாள். அவனை வேறு இன்னும் கண்ணில் காணவில்லை.

அத்தையிடம் போய் நின்று கொண்டாள். அத்தை திரும்பி வாஞ்சையாகப் புன்னகைத்தார்.

"வாடா.. ராசாத்தி! இந்த ஸ்டோர் ரூம்கிட்டே சித்த நில்லு. யாராவது ஏதாவது வந்து கேட்டா எடுத்துக் குடு" என்றார்.

அவசரமாக மற்ற ஏற்பாடுகளைக் கவனிக்கப் போனார்.

"கடைசியில நம்மளை ஸ்டோர் கீப்பர் ஆக்கிட்டாங்க" என்று கடுப்போடு இருந்தாள். ஆனால் இத்தனையிலும் விஷயம் ஆறுதலாக இருந்தது.

கணவன் ஒன்றும் உற்சாகமாக இந்த ஏற்பாடுகளில் ஈடுபடவில்லை. ஏதோ சிந்தனையில் அமர்ந்தவனாக உள்ளே அடங்கிக் கிடக்கிறான்.

அன்றைக்குப் போனாரே! என்ன பேசியிருப்பார்.

"நான் தப்புப் பண்ணிட்டேன். என்னை மன்னிச்சு ஏத்துக்குங்கன்னு கதறியிருப்பாங்க. ஆறு வருஷம் அவங்களுக்காகக் காத்துகிட்டிருந்தவராச்சே! ரெண்டாவது கல்யாணம் என்று பண்ணிகிட்டும் கூட இரண்டு வருஷம் மனசால ஏத்துக்க முடியாமத் தவிச்சவராச்சே" என்று பொருமிக் கொண்டாள்.

இந்தத் தவிப்புக்களுக்கெல்லாம் ஒரு முடிவு வந்தது. அந்த முடிவு அவள் சற்றும் எதிர்பாராததாக இருந்தது.

* * *

நாலு நாலரை மணியிருக்கும்!

ஊர்ப் பெரியவர்கள் எல்லாரும் வந்து சேர்ந்தார்கள்.

அப்போது வந்தனாவுக்குத் தோன்றியது. ஏதோ பஞ்சாயத்து வைக்கப் போகிறார்களோ என்று.

வந்தவர்கள் எல்லாருக்கும் பலகாரங்கள் வழங்கப்பட்டன.

சரியாக ஐந்து மணிக்கு மதியழகன் வந்தான். எல்லாரையும் வரவேற்றான். அமைதியாகவும் அழுத்தமாகவும் அவனும் ஒரு சோபாவில் அமர்ந்து கொண்டான்.

சர்... சர்ரென்று இரண்டு மூன்று கார்கள் வந்தன.

வந்தனா ஹாலுக்கு வராமல் பின்னணியில் இருந்தபடி எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

விலாஸினியின் பெற்றோர்கள் ஒரு காரிலும் மற்ற இரு கார்களிலும் அவளது சகோதரர்கள் குடும்பத்தோடும் வந்து இறங்கினார்கள்.



சம்பிரதாயமான நலம் விசாரிப்புக்களுக்குப் பிறகு அவர்களும் அங்கேயிருந்த சேர்களில் அமர்ந்து கொண்டார்கள்.

ஏனோ அவர்கள் முகத்தில் ஒரு சோகம் இருந்தது போல வந்தனாவுக்குத் தோன்றியது.

இன்னுமொரு ஆச்சரியமும் அவளுக்குக் காத்திருந்தது. அவளுடைய பெற்றோர்கள் ஒரு காரில் வந்து இறங்கினார்கள். நடக்கிற விஷயங்களில் ஏதோ வித்தியாசம் தெரிய அவள் யோசனையுடன் பின்னணியிலேயே இருந்து கொண்டாள்.

முன்னாலே வந்து யாரையும் வரவேற்கவில்லை!

மேலும் அரைமணி நேரம் கழிந்தது!

சற்று நேரத்தில்!

மேலும் இரண்டு, மூன்று கார்கள் வந்தன.

முதல் காரிலிருந்து அவசரமாக இருவர் வந்து இறங்கி நடுவில் வந்த காரின் கதவைத் திறக்க ஒரு நடுத்தர வயதில் இருந்த பெரியவர் இறங்கினார்.

மதியழகன் எழுந்து வந்து வரவேற்றான். அடுத்த காரில் இருந்து விலாஸினி இறங்கினாள். மதியழகன் கை கூப்பி வரவேற்றான்.

பெரியவர் உள்ளே நுழைய அவர் பின்னால் ஒரு சிறிய கூட்டம் வந்தது. அந்தக் கூட்டத்தில் முதலாவதாக விலாஸினி வந்து கொண்டிருந்தாள்.

விலாஸினியின் புகைப்படங்கள் அவர்கள் வீட்டில் பார்த்திருக்கிறாள். அதனால் அந்த வித்தியாசமான கோலத்தில் பார்த்த போதும் அவளால் கண்டு கொள்ள முடிந்தது.

மதியழகனின் கண்கள் அவளைத் தேடின. அவள் திகைத்துப் போய்ப் பார்ப்பதை அவன் குறும்பாகப் பார்த்து விட்டு "வா" என்பது போல் தலையசைக்க அவள் திகைப்புடனே அருகில் போனாள்.

அப்போதிலிருந்து அந்த வீட்டில் நடந்த எல்லா நிகழ்வுகளிலும் அவளைத் தன் அருகில் வைத்துக் கொண்டான் மதியழகன்.

* * *

"ஹலோ! நான் விலாஸினி பேசறேன்" என்ற குரல் கேட்டவுடன் ஒரு நிமிடம் விதிர்விதிர்த்துப் போனான் மதியழகன்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின் கேட்கிறான். குரலில் அதே இனிமை! ஆனால் ஒரு கம்பீரம் தெரிந்தது.

"சொல்லு!" என்றான்.

"மதி! நான் இப்ப நல்லூர்ல இருக்கேன்" என்று பக்கத்தில் இருந்த ஒரு ஊரின் பெயரைச் சொன்னாள்.

அரை மணி நேரப் பயணத்தில் அடையலாம்!

"சொல்லு!"

"மதி! நான் உங்களைப் பாக்கணும். பேசணும்" என்றாள்.

அதே நேரம்தான் வந்தனா வெளியே போனாள். அவள் அந்தப் பக்கம் போன பிறகு மதியழகன் காட்டமாகவே கேட்டான்.

"இது வரைக்கும் நீ செஞ்சதெல்லாம் போதாதா! இப்பவும் என்ன செய்யணும்னு நினைக்கறே?"

ஒரு நிமிடம் மௌனம் நிலவியது. பிறகு தெளிவாகப் பேசினாள்.



"மதி! உங்க கோபம் நியாயமானது. நான் உங்களுக்குச் செஞ்சது மகா கொடுமை. ஆனா, இப்ப நான் வந்திருக்கறது உங்க வாழ்க்கையைக் குழப்பறதுக்கில்லே. எல்லாத்தையும் தெளிவுபடுத்தத்தான் வந்திருக்கேன்" என்றாள்.

"ஓ!"

ஆரம்ப கட்டக் கோபம் வடிந்தவுடன் அவன் மெதுவான குரலில் கேட்டான்.

"சரி! நீ எப்படி இருக்கறே?" என்று.

அவள் சற்றும் பிசிறு தட்டாத குரலில் சொன்னாள்.

"நான் நல்லா இருக்கேன். கடவுள் புண்ணியத்தில் சுகத்துக்கோ, சௌகரியத்துக்கோ எந்தக் குறைச்சலும் இல்லை. நான் நல்லா இருக்கேன். நீங்க?"

"நான்.. நல்லாத்தான்.. இருக்கேன்..." என்றான். பிறகு கறாரான குரலில்,

"எங்க வரணும். சொல்லு!" என்றான்.

அப்படித்தான் அந்த பெரிய பங்களாவுக்குப் போனார்கள்.

அங்கே நிலவிய சூழ்நிலை அவன் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக இருந்தது.

அதற்குப் பிறகுதான் போய் விலாஸினியைப் பார்த்தான்.

விலாஸினி அவளின் தோற்றத்தில் எந்த வித வித்தியாசமும் இல்லாமல் இருந்தாள். ஆனால் உடையில்தான் வித்தியாசம்!

காவி உடையில்!

தூக்கிக் கட்டிய கொண்டையுடன் நின்று கொண்டிருந்தாள்.

மதியழகன் சத்தமாக அதிர்ந்து போய் நின்றான்.

• • •

"குருஜி! இவர் மதியழகன்!" என்று அறிமுகப்படுத்தினாள்.

நடுத்தர வயதில் இருந்தார் குருஜி. கண்களில் ஒளி வீசியது. தாடியும், அளவான மீசையுமாக இருந்தார்.

"வா! மகனே!" என்று வரவேற்றார்.

மதியழகனுக்குப் பெரிய அளவில் சாமியார்களிடம் ஈடுபாடு இல்லாததால் மையமாக ஒரு வணக்கம் சொன்னான்.

அருகிலேயே அமர வைத்தார். அமர்ந்து கொண்டான்.

"இந்தப் பொண்ணு, ஆன்மீகத் தேடலில் என்கிட்டே வந்தா. உடனடியா தீட்சை கொடுத்தேன். ஆனா, தன்னைப் பற்றிய எதையும் சொல்ல மறுத்துட்டா. கல்யாணம் ஆகியிருக்கான்னு கேட்டேன் ஆமான்னா. ஆனா அதைப் பத்தி மேற்கொண்டு எதுவும் கேக்காதீங்கன்னா.. நானும் விட்டுட்டேன். ஆனா.. சமீபத்துலதான்" என்று நடந்த நிகழ்ச்சிகளை விளக்கினார்.

இரண்டு மாதத்திற்கு முன்பு!

டெல்லிக்கு மதியழகன் போயிருந்தபோது அவனுடைய நண்பர்களோடு இருந்தான்.

அந்த சமயத்தில்தான் மதியழகனைப் பார்த்தாள். விலாஸினி என்கிற கிருபானந்தமயி. பழைய நினைவுகள் எல்லாம் படையெடுத்துக் கொண்டு வந்தன.



எட்டாண்டுகளுக்கு முன்பு முதுகைக் காட்டியது என்பார்களே அது மாதிரி வெளியேறித் தான் வந்தது!

இப்போது தோன்றியது தான் மதியழகனுக்கு நியாயம் செய்யவில்லை என்று. மதியழகனுக்கு மட்டுமா தன் பெற்றோர்களுக்குக் கூட தான் நியாயம் செய்யவில்லை என்று தோன்றியது.

மதியழகனைச் சந்திக்காமல் அவனது நண்பன் ஒருவரைச் சந்தித்தாள். வந்திருந்த மூன்று பேரில் ஒருவர் மதியழகனுக்குச் சற்று நெருக்கம். அவன் அவளைப் பார்த்தவுடன் அதிர்ந்து போனான்.

"விலாஸினி.. நீயா?" என்று நாக்கைக் கடித்துக் கொண்டான். "இப்ப அப்படிக் கூப்பிடலாமா?" என்றான்.

"எப்படி வேண்ணாக் கூப்பிடுங்க?" என்றாள்.

"என்னம்மா.. இப்படி ஒரு கோலம்..." என்றான்.

எனக்குப் பிடிச்சது. மாறிட்டேன். இதுலயே எட்டு வருஷமா இருக்கேன்கறதுலயே இதுதான் என்னோட வழின்னு நான் முடிவு பண்ணிகிட்டேன்னு தெரியுதில்ல..." என்றாள்.

"ஓ..." என்றவன் "மதியைப் பாத்தியா" என்றான்.

"பாத்தேன்! அவர்கிட்டே பேசத் துணிவில்லாமத்தான் நான் உங்ககிட்டே பேசறேன்" என்றாள்.

"எப்படி இருக்கிறார்?" கேட்டதுதான் தாமதம். நிகிலன் பொரிந்து தள்ளிவிட்டான்.

"என்னம்மா விலாஸினி? நீ நகரத்தில் வளர்ந்ததால உனக்குத் தெரியலை. திடீர்னு ஒரு குடும்பத்துல இருந்து ஒரு பொண்ணு அதுவும் குடும்பத்துப் பொண்ணு காணாமப் போனா என்ன ஆகும் எப்படிப் பேசக் கிளம்புன்னு உனக்குத் தெரியாதும்மா..." என்று பொரிந்து தள்ளிவிட்டான்.

விலாஸினி என்கிற கிருபானந்தமயி அமைதியாக வாங்கிக் கொண்டார். பிறகு சொன்னார்.

"அப்ப எனக்குப் புரியலே! இப்ப எனக்குப் புரியுது!" என்றாள்.

"எத்தனை வேதனை! எவ்வளவு மனப்பிரச்சினைகள்! அவனா இருக்கக் கொண்டு சமாளிச்சான். ஆறு வருஷம் நீ வரலாம்னு காத்திருந்தான். அதுக்கப்புறமும் கூட அம்மா வற்புறுத்தலுக்காகத்தான் கல்யாணம் செஞ்சான். ஆனா.. இப்பவும் கூட இன்னும் உறவு சுமுகமாகலை..." என்றாள் கிருபானந்தமயியின் முகத்தில் அளவற்ற வருத்தம் தெரிந்தது.

"நான் மிகப் பெரிய தப்பு செஞ்சுட்டேன்" என்றாள்.

"சந்நியாசம் வாங்கினதைச் சொல்றீங்களா" என்றான்.

"இல்லே! நான் அப்படி சொல்லாம வந்திருக்கக் கூடாது" என்றார்.

நிகிலன் ஒன்றும் பேசவில்லை. கிருபானந்தமயி தொடர்ந்தார்.

"சரி! என்னால நேர்ந்த பிரச்சினைகளுக்கு நானே முடிவு கட்டறேன்" என்றார்.

"விடைபெற்றுக் கொண்டு புறப்படும்போது என்னை சந்திச்சதை மதியழகன் கிட்டே சொல்லாதீங்க" என்று வேண்டிக் கொண்டு வேறு போனான்.

நேரடியாக குருஜியிடம் போய் நின்றாள்.

"குருஜீ..! நான் தப்பு செஞ்சுட்டேன்" என்றாள்.

"என்னம்மா.. விஷயம்!" என்று கேட்டார்.

மெல்ல மெல்லத் தன் பிறந்த வீட்டுப் பின்னணி, புகுந்த வீட்டுப் பின்னணி எல்லாவற்றையும் சொன்னாள்.



"எனக்குக் கேட்ட எல்லாமே கிடைச்சது குருஜி. பிறந்த வீட்ல நான் இளவரசியா இருந்தேன்னா... புகுந்த வீட்ல நான் மகாராணியா இருந்தேன். அப்ப என்னோட ஹஸ்பெண்டுக்கும் சின்ன வயசா இருந்தாலும் புயல் மாதிரி என்னோட நடத்தையெல்லாம் ஒரு பக்குவத்தோட சகிச்சகிட்டாரு. எல்லாரையும் நான் நேசிச்சேன். ஆனா எனக்குள்ளே இதுக்கு மேல ஏதோ இருக்குங்கற எண்ணம் தான். அதனால நான் சொல்லாமக் கொள்ளாம வெளியே வந்துட்டேன்" என்றாள்.

"அந்த அதிருப்தி, விரக்தி எல்லாம் ஆன்மீகப் பாதையில் சரியான விஷயம்தான். ஆனா, சொல்லாம வந்திருக்கக் கூடாது" என்றார்.

"ஆமா குருஜி! அதனால இந்த எட்டு வருஷமா மதியழகனோட வாழ்க்கை ரொம்ப பாதிச்சிருக்கு. ரெண்டு வருஷத்துக்கு முன்னால வேறு கல்யாணம் ஆகியிருக்கு. ஆனா, இன்னமும் என்னைப் பத்தி மனசு தெளிவாகலை. இனிமே நான் என்ன செய்யணும் குருஜி!"

"குழந்தே! அவரவருக்கு அவரவர் பாதை! ஆனா, நீ செய்ய வேண்டியது இன்னும் ஒண்ணு இருக்கு. அதை என்கிட்ட விடும்மா.. நான் பாத்துக்கறேன்" என்றார்.

நல்லூருக்கு வந்து சேர்ந்தவுடனே கிருபானந்தமயியை அழைத்தார்.

"அம்மா! மதியழகனை அழைச்சுப் பேசிரு" என்றார்.

"சரி", என்று நகர்ந்தபோது "அம்மா அந்த வீட்டுக்கு நான் ஒரு தடவை வரணும்னு ஆசைப்படறேன்னு சொல்லு..." என்றார்.

விலாஸினி மதியழகனிடம் பேசினாள். "மதி! எனக்கு நிறைவே இல்லாத நிலைமையில்தான் நான் துறவறம்

வாங்கினேன். இப்ப ஆயிரக் கணக்கான குழந்தைகளை வச்சுப் பராமரிக்கவும் மனசு நிறைவா இருக்கு'' என்றாள்.

அதிர்ச்சி தெளிவானதும் மதியழகன் கிருபானந்தமயி சொல்வதையெல்லாம் அமைதியாகவே வாங்கிக் கொண்டான்.

குருஜி சொன்னது போலவே சொன்னான்.

''அவரவருக்கு அவரவர் பாதையில போக உரிமையிருக்கு. ஆனா, யாரோட மனசும் புண்படாத வகையில் அதைச் செய்யலாம். அத்தையும், மாமாவும் மனசளவில் ரொம்ப உடைஞ்சு போயிட்டாங்க. குருஜி எங்க வீட்டுக்கு வர்றப்ப அவங்களையும் வரச் சொல்றேன். எல்லாருடைய மன்னிப்பையும் ஆசீர்வாதத்தையும் வாங்கிட்டு நீங்க உங்க பாதையில தொடரலாம்'' என்றான் கம்பீரமாக.

எழுந்தான்.

வணக்கம் சொன்னான். குருஜியிடம் விடைபெற்றுக் கொண்டான்.

அவன் தளராத நடையில் வெளியே போனதைப் பார்த்த குருஜி திரும்பத் தன் சீடர்களிடம் சொன்னார்.

''இவன் மனிதன்!'' என்று.



## 20

''குருஜி'' என்றார் கிருபானந்தமயி தயக்கத்துடன்.

''சொல்லு… மகளே!''



''குருஜி! நாம அந்த வீட்டுக்குப் போவது அவசியமா?'' என்றார்.

''ரொம்பவும் அவசியம் மகளே!'' என்றார் புன்னகையுடன் தர்மானந்தா.

கிருபானந்தமயி தயக்கத்துடன் பேசாமல் நின்றார். குருஜி தொடர்ந்தார்.

''துறவறம்கறது வாழ்க்கையில இருந்து தப்பிச்சு வர்றது இல்லை மகளே! அது ஒரு தேடல்! வாழ்க்கையில நிறைவில்லை. இதுக்கும் மேலே ஏதோ இருக்கு! நம்ம பிறவியின் காரணம் என்னன்னு தேடறது..'' என்றார்.

''நீ வாழ்க்கையிலிருந்து தப்பித்து ஓடி வந்துவிட்டாய் என்ற குற்றச்சாட்டு அதில் தொனித்ததோ என்னவோ என்றெண்ணி கிருபானந்தமயி துணுக்குற்றார். அதைப் புரிந்து கொண்டாற் போல் தர்மானந்தா தொடர்ந்தார்.

''துறவறம் பற்றிய உன்னோட நோக்கத்துல தப்பில்லை மகளே! ஆனா… நீ வெளியில வந்த விதத்துல தவறு இருக்கோன்னு எனக்குப் படுது'' என்றார்.

கிருபானந்தமயினால் அதை மறுக்க முடியவில்லை. ''நீ இப்படித்தான் என்று தெரிந்திருந்தால் அந்தப் பையன் வேறு வாழ்க்கைக்கு போயிருப்பான். அவனை ஒரு குழப்பத்தில் வச்சுட்டே. உன் பெற்றோர்களையும் அதே போல் குழப்பத்துல வச்சுட்டே! அதுக்கு உனக்கு எந்த வித உரிமையும் கிடையாது மகளே! கொஞ்சம் யோசிச்சுப் பாரு! ஊருக்குள்ளே கௌரவமா வாழ்ந்துகிட்டிருக்கிற ஒரு குடும்பம். அந்த இளைஞனுடைய மனைவி சொல்லாமல் கொள்ளாமல் போயிட்டான்னா அந்தப் பையனை நோக்கி எத்தனை விமர்சனங்கள் வந்திருக்கும்.

... எத்தனை கருத்துக்கள் வீசப் பட்டிருக்கும்..." என்று கேட்டார் உருக்கமாக.

கிருபானந்தமயி. குற்ற மனப்பான்மையுடன் நின்றார்.

"அந்தப் பையனோட கௌரவத்தைக் காப்பாத்திக் குடுக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கு" என்றார் குருஜி தொடர்ந்து.

கிருபானந்தமயி அதற்கு மேல் மறுக்கவில்லை. தனக்கென்று இருக்கிற அறைக்குப் போனார். தியானத்தில் ஆழ்ந்தார். ஆனால் மனது கட்டவிழ்ந்த குதிரை போல் ஓட ஆரம்பித்தது.

• • •

முதல் நாள் தனது வேகத்துக்கு ஈடு கொடுத்த மதியழ கனை மறுநாள் பார்ப்பதற்கே அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. ஆனால், வாழ்வின் எல்லையை உணர்ந்தாற் போலவும் இருந்தது.

"இவ்வளவுதானா?" என்றாற்போல ஒரு உணர்வும் தோன்றியது.

இப்போதெல்லாம் நிறைய புத்தகங்கள் படிக்க ஆரம் ...த்திருந்தாள்.

வாழ்க்கையில் ஏதோ போதவில்லை என்று தோன்றியது ...ணம், பாதுகாப்பு, மகிழ்ச்சி, நல்ல இல்லற வாழ்க்கை ...று எதில் குறைவில்லை தனக்கு.

...தனது புயல் வேகப் பாய்ச்சலையும், வேகத்தையும் ...க் தவறாக எடுத்துக் கொள்ளாமல்.

"இருக்கறதுதான்! அம்மிணி ரொம்ப பாஸ்டா ...டா" என்று குறும்பாகச் சிரிக்கற மதியழகனுடன் ...கிற வாழ்க்கையில நன்றாகவே இருந்தது. அந்த



சமயத்தில்தான் திடீரென்று தியானங்களின் மீது ஈடுபாடு ஏற்பட்டது.

ஓஷோ, ஸ்ரீரவிசங்கர், விவேகானந்தர், ஜக்கிவாசுதேவ் என்று நிறையப் படிக்க ஆரம்பித்தாள். அந்த நிறை வின்மை மதியழகனுக்கும் புரிந்தது போலும். ஒரு நாள் கேட்டான்.

"ஏய்! என்ன எதையோ தேடிக்கிட்டிருக்கறவ மாதிரியே இருக்கே..." என்று.

அப்போதுதான் அவளுக்கே புரிந்தது. தான் எதையோ தேடிக் கொண்டிருக்கிறோம் என்று.

"எனக்கு வாழ்க்கையில எதுவுமே போராட வேண்டிய அவசியம் இருக்கலே... அதான் எனக்கு போரடிக்குது..." என்று.

மாமியாரின் அன்பு, சகோதரர்களுடைய அன்பு, பெற் றோர்களின் அன்பு, மதியழகன் அவள் மேல் வைத்திருக் கிற நேசம் இவையெல்லாம் தன்னைக் கட்டிப் போடு கின்றனவோ என்று யோசித்தாள்.

சிறுவயதில் இருந்தே சகோதரர்கள் அவளை பூப் போலத் தாங்கினார்கள்.

எல்லாரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவார்கள். "லேட்டஸ்ட் கேமரா இருந்தாத் தேவலை" என்றால் போதும் அடுத்த நாள் காலையில் பெரிய சகோதரர் ஒன்று கொண்டு வந்து கொடுத்துப் போவார். பத்து மணிக்கு சின்னவர் ஒன்று கொடுத்தனுப்புவார். பதினோரு மணிக்கு அப்பா போன் செய்து,

"எம்மா! ஆபீஸ் ஆள்கிட்டே கேமரா அனுப்பியிருக் கேன்" என்பார்.

விலாஸினிக்குச் சலிப்பாக இருக்கும். அப்புறம் ஏழைப்பட்ட தோழிகளுக்குப் பரிசாகக் கொடுப்பாள்.

திருமணமான முதல் நான்கு மாதங்கள் எல்லாம் இனிமையாகத் தெரிந்தது. ஆனால் அதற்குப் பிறகு சீழான மனித உணர்வுகளின் வடிகால்தான் திருமணம் என்று தோன்ற ஆரம்பித்தது. அதனால்தான் அம்மா வீட்டில் போய் பதினைந்து நாட்கள் இருந்து விட்டு வருகிறேன் என்று போனாள். மதியழகன் அவளுடைய விருப்பங்கள் எதற்கும் பெரிதாகத் தடை சொல்வதில்லை.

அங்கே போயிருந்த போது இரண்டு மூன்று நாட்கள் சொற்பொழிவுகள் கேட்கப் போனாள்.

"சொற்பொழிவா? கேட்கப்போறியா... நீயா?" என்று அப்பாவும், அம்மாவும் ஆச்சரியப்பட்ட போது.

"ஜஸ்ட் பார் எ சேன்ஜ்" என்று புன்னகைத்து விட்டு அறைக்குப் போனாள். பிறகு அந்த மடத்தின் குருஜி ஒரு தியான வகுப்பு நடத்தினார்.

நான்கு நாட்கள்!

இரவு பகல் தங்கி இருந்தாள்.

சட்டென்று அவளுக்குத் தோன்றிவிட்டது. இனிமேல் ஆன்மீகத் தேடல்தான் தன் வாழ்க்கை என்று.

மதியழகனைப் பார்த்தவுடன் எப்படி இவன்தான் தன்னுடைய ஆள் என்று தோன்றியதோ அதே போல் இனிமேல் இதுதான் வாழ்க்கை என்று தோன்றிவிட்டது.

வீட்டில் ஒத்துக் கொள்வார்களா? அழுது கரைவார்கள். தன்னையும் கரைத்து விடுவார்கள்.

ம்ஹூம்! சொல்லவே கூடாது! அதற்குப் பிறகுதான் அவர்களுக்கு வெறுப்பேறுகிற மாதிரி நடந்து கொண்டாள்.



மதியழகனின் அம்மா தனலட்சுமியம்மா சலித்துக் கொண்டார். மதியழகன் சிரித்துக் கொண்டான்.

யோசித்தாள்!

வெகுவாக யோசித்தாள்!

தன் பிரிவால் அவர்கள் மனம் நோகாமல் இருக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு வெறுப்பேற்படுகிற மாதிரித்தான் ஏதாவது செய்ய வேண்டும் என்றுதான் அப்படி ஒரு கடிதத்தை எழுதி வைத்து விட்டு வந்தாள். ஆனால், மதியழகன் தன்னோடு பேசும் போது சொன்னது நினைவு வந்தது.

"தப்புப் பண்ணிட்டீங்க சுவாமினி! மனசுல உள்ளதைத் தெளிவாய் பேசி வெளியே வந்திருக்கலாம். நீங்க இந்தப் பாதையில போறீங்கன்னு தெரிந்திருந்தா உங்களைப் பற்றின கவலை இல்லாம கொஞ்சம் நிம்மதியாவது இருந்திருக்கலாம். அம்மா ரொம்ப வேதனைப் பட்டாங்க...! அதிலயும் உங்க பேரண்ட்ஸ் ரொம்ப ரொம்ப வேதனையில இருக்காங்க... இப்பவும்! அம்மா விருப்பத்துக்காக நான் ஒரு கல்யாணம் செஞ்சேன். ஆனா, ரொம்ப அருமையான பொண்ணு வாழ்க்கையை அதன் போக்கில எதிர் கொள்ற பொண்ணு. எட்டமுடியாத நோக்கங்களை வச்சுக்காத இயல்பான பொண்ணு. ஆனா... வந்தனாவுக்கு நான் நியாயம் செய்ய முடியாம போச்சு. சமீப காலம் வரை!"

"ஓ!"

"ஆமாங்க! கிருபானந்தமயி! இப்பவும் உங்களோட முடிவை நான் ஏத்துக்கறேன். மதிக்கறேன். ஆனா, அதுல எனக்கு உடன்பாடில்லை. தாகூர் சொல்ற மாதிரி வாழ்க்கை

ரொம்ப அழகானது. கர்மயோகம்னு நம்ம பெரியவங்க சொல்லியிருக்காங்க. ஒவ்வொருத்தரும் தன் கடமையைச் செஞ்சாலே ஞானம் கிடைக்கும். இருக்கற இடத்தைத் தேடி வரும்னு இல்லறத்திலேயே கூட தாகூர் சொல்றாங்க'' என்றான் சட்டென்று நிறுத்தி விட்டு ஒரு பெருமூச்சு விட்டான்.

''சரி! இந்த ஆத்ம விசாரம் எல்லாம் இப்ப எதுக்கு? உங்க பாதையை நீங்க தேர்ந்தெடுத்துகிட்டீங்க. உங்களைப் பத்தின கவலை ஒரு முடிவுக்கு வந்துச்சு... எனிவே... பெஸ்ட் ஆப் லக்'' என்றான்.

கிருபானந்தமயி கொஞ்சம் அசந்துதான் போனார். வேதங்கள், உபநிஷதங்களின் சாரத்தையெல்லாம் மதியழகன் ஒரிரு வரிகளில் சொன்னாற் போல இருந்தது.

பிறகுதான் குருஜியிடம் அழைத்துக் கொண்டு வந்தார். குருஜி அப்போதுதான் அவனிடம் இருபது நிமிடங்கள் பேசி விட்டு

''இவன் மனிதன்'' என்று சொன்னார்.

• • •

குருஜி அந்த வீட்டில் இயல்பாகப் பழகினார்.

''கிருபானந்தமயி! உன் பூர்வாசிரமத்து மனிதர்கள் கிட்டே பேசி உன் நிலைமையெல்லாம் தெளிவு செய். அதுக்குள்ளே இந்த ஊரப் பெரியவங்ககிட்டே நானும் பேசிக்கிட்டிருக்கேன்'' என்றார்.

பேச்சுக்கு நடுவே தனது திருமண வாழ்க்கையைப் பற்றி விலாஸினி சிறப்பாகவே சொல்லியிருக்கிறாள் என்பதைத் தெளிவுபடுத்தினார்.



''நம்ம கிருபானந்தமயி என்னிடம் தீட்சை வாங்க வந்தப்ப சொன்னது என்னன்னா எனக்கு வாழ்க்கையில எந்த மனக்குறையும் இல்லை குருஜி! ஆனா அதுவே எனக்குக் குறையாப் போச்சு. நேரத்துக்கு சாப்பாடு, தூக்கம், காமம் இதெல்லாம்தான் வாழ்க்கையா? இதுக்கு மேலே ஏதோ இருக்குன்னு தேடறேன். குருஜின்னு சொன்னாப்ல'' என்று திரும்பத் திரும்பச் சொன்னார்.

''ஆமா! பின்னே... மதியழகன் ரொம்ப அருமையான பையன் இல்லே! தனலட்சுமியம்மாதான் என்ன?'' என்று அவர்கள் சிலாகித்துக் கொண்டார்கள்.

பேச்சுக்கு நடுவே குருஜியின் கண்களும், அவன் கண்களும் சந்தித்துக் கொண்ட போது அளவற்ற கருணை குருஜியின் கண்களில் மிளிர்ந்தது.

தான் செய்யாத தவறுக்காகத் தனது குடும்பம் சிலுவை சுமந்ததை குருஜி முற்றிலுமாக உணர்ந்திருந்தார். அதனாலேயே தன்னைக் கௌரவப்படுத்தவே இங்கு வந்திருக்கிறார் என்பது அவனுக்குப் புரிந்தது. அகமும், முகமும் மலர மரியாதை கலந்த பார்வையொன்றை படரவிட்டுக் கொண்டு அமர்ந்திருந்தான்.

குருஜியும் அருமையாக அந்த பந்தலின் கீழே அமர்ந்து சொற்பொழிவு செய்தார். கூட்டம் லயித்துக் கேட்டது.

அதற்குப் பிறகு அன்னதானம் நடைபெற்றது. கூட்டம் கலைவதற்குப் பிற்பகலாகி விட்டது.

எல்லோரும் சென்றதற்குப் பிறகு குருஜி அந்த வீட்டுப் பூஜையறைக்கு வந்து தன் கையால் பூஜை செய்தார்.

வந்தனாவை அழைத்து மடத்தின் சார்பாக பூஜைப் பொருட்கள் அடங்கிய பை ஒன்றை பரிசாக அளித்தார்.

பித்தளைக் குத்து விளக்குகள் பஞ்ச பாத்திரம் என்று அதில் இருந்தது.

பிறகு விலாஸினியின் பெற்றோரைச் சந்தித்தார். கண்கள் கலங்கிக் கதறிய அவர்களைச் சமாதானப் படுத்தினார். சகோதரர்கள் ஒருபுறம் கலங்கினார்கள்.

"வருத்தப்படாதீர்கள்! ஒருவேளை கிருபானந்தமயி... உங்களோட இருக்கிற வாழ்க்கையில இருந்திருந்தா... மூச்சு முட்டற மாதிரி உணர்வுலதான் இருந்திருப்பா! இப்ப அவளோட பாதையில சந்தோஷமா இருக்கா! நீங்க சந்தோஷமா இருங்க! இப்படி ஒரு அற்புதமான குழந்தையை கடவுள் உங்களுக்கு குடுத்திருக்கார். எங்க ஆசிரமத்துல எத்தனை குழந்தைகளுக்குத் தாயா இருக்கா... தெரியுமா...?" என்றார்.

மெல்ல மனம் தேறிக் கொண்டார்கள்!

போவதற்கு முன்பாக "குருஜி! விலாஸினிக்கு சேர வேண்டிய சொத்துப் பங்கை மடத்துக்கே கொடுத்தர்றோம். என்ன வேண்ணாலும் கேளுங்க" என்றார்கள்.

"ஆகட்டும், தேவையானப்ப நானே கேட்டு வாங்கிக்கறேன்" என்றார் குருஜி.

எல்லாரும் போனதற்குப் பின்பு வந்தனாவையும் மதியழகனையும் ஒருசேர ஆசீர்வதித்தார். கிருபானந்தமயி அதைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

குருஜி "என்ன மகனே! இப்பவும் இல்லறம்தான் உயர்ந்ததுன்னு சொல்றியா?" என்று கடகடவென சிரித்தார்.

மதியழகன் புன்னகைத்தான். "குருஜி! விலாஸினி இன்னைக்கு கிருபானந்தமயியா மாறி நிக்கறது எனக்கு பிரமிப்பாத்தான் இருக்கு. இன்னும் உயரமான இடத்துக்குப் போயிட்டாலும்... மகிழ்ச்சிதான். ஆனா, எனக்கான பாதை இல்லறம்தான். ஏன்னா, வள்ளுவரே சொல்லியிருக்காரு துறவுகளையும் பராமரிக்கிற இல்லறம் சிறந்ததுன்னு"



குருஜி கலகலவென்று சிரித்தார்.

"நல்லது மகனே!" என்றார்.

மதியழகனும், வந்தனாவும் அறையில் ஏதோ எடுப்பதற்காக நிற்கையில் கிருபானந்தமயி வந்தார்.

"உத்தரவு வாங்கிக்கறேன்" என்றார்.

வந்தனா சட்டென்று அவர் காலில் விழுந்தாள். எழுந்து சொன்னாள்.

நீங்க சாமியார்ங்கறதுக்காக விழலே! வாழ்க்கையைத் தூக்கியெறிந்துவிட்டுப் போவதற்கு ஒரு தைரியம் வேணும் இல்லே! உங்களோட அந்தத் துணிச்சல் என்னை ஆச்சரியப்படுத்துச்சு. உங்க பாதையில உங்களுக்கு வெற்றி கிடைக்க வாழ்த்துக்கள்" என்றாள்.

மனைவியின் அந்த அறிவார்ந்த பேச்சை ஒரு பெருமையுடன் பார்த்துக் கொண்டு நின்ற மதியழகனின் கண்களும், அவரது கண்களும் ஒருகணம் பார்த்துக் கொண்டன.

மதியழகன் கம்பீரமாகவும் நிச்சலனமாகவும் இரு கைகளையும் கூப்பி ஒரு வணக்கம் சொன்னான்.

வாசல் வரை சென்று வழியனுப்பினார்கள்.

கார்கள் போனவுடனே மழை பொழிந்து ஓய்ந்தாற் போல் இருந்தது!

எல்லாருக்கும் ஒருவரிடம் ஒருவர் என்ன பேசுவது என்றே தெரியாத சூழ்நிலை இருந்தது.

அன்றிரவு!

அம்மா மகனை அழைத்து ஏதோ கட்டளையிட்டார்.

மதியழகன் காரை எடுத்துக் கொண்டு அன்றிரவே வெளியூர் கிளம்பினான். கிளம்புவதற்கு முன்பாக சில முக்கியக் கட்டளைகளை சகோதரிகளிடம் சொல்லி விட்டு புறப்பட்டான்.



## 21

வீடு முழுதும் இன்னும் கூட்டம் குறையவில்லை என்பதாலோ என்னவோ யாரும் தனியறைகளை நாட வில்லை.

மதியழகன் இரவு அவர்கள் அறைக்கு வரவில்லை. வந்தனாவும் தனது நாத்தனார்களோடு ஒரு பெரிய அறையில் தங்கிக் கொண்டாள்.

இரவெல்லாம் மதியழகன் கண்ணிலே படவில்லை. அவளுக்கும் உறக்கம் சரியாக இருக்கவில்லை. நடு இரவில் சிறிது நேரம் உறங்கினாள். அப்போதும் கனவுகள் நிறைந்த உறக்கம்!

விலாஸினியின் உருவம் வந்து போனது. கூடவே கணவனின் உருவம்.

குருஜியின் உருவம்!

உறக்கமும், விழிப்பும் கலந்த ஒரு நிலையில் உறங்கி எழுந்தாள்.



கணவன் எங்கே என்று யாரிடமும் கேட்க பயமாகவும் இருந்தது.

எப்போதும் அவள் கண்களில் எதையோ தேடுகிற மனோபாவம் இருக்குமானால் மாமியார் உடனே புரிந்து கொள்வார். அதற்கேற்ற விதத்தில் செய்தியைக் கொடுத்து விடுவார். இப்போதும் அதே போல் அத்தனை கூட்டத் திற்கும் நடுவே அவளைத் தேடி வந்தார்.

"அம்மிணி! நீ எதற்கும் கவலைப்படாதே! நான்தான் தம்பியை ஒரு வேலையா அனுப்பியிருக்கிறேன். வந்துரு வான். ஒரு ரெண்டு நாள்ல" என்றார்.

வந்தனா ஏதோ கனவில் நடமாடுவதைப் போல நடந்து கொண்டிருந்தாள். ஆச்சரியமான விஷயம் என்ன வென்றால் விலாஸினியின் பெற்றோர்கள் இன்னும் தங்கியிருந்தார்கள்.

வந்தனாவின் பெற்றோர்கள் மட்டும் கிளம்பிவிட் டார்கள்.

ஏதோ லாரிகள் வந்து பொருட்களை ஏற்றிச் சென்றன.

பெரிய பந்தலைப் பிரித்தார்கள். அந்தப் பொருட்கள் ஏற்றப்படுகின்றன போலும் என்று நினைத்துக் கொண் டாள் வந்தனா.

மாடியில் இந்த இரண்டு பெரிய அறைகளில் இருந் பொருட்களை எடுத்து லாரிகளில் நிரப்பிக் கொண்டிரு தார்கள்.

வெற்றுப் பார்வையாக அதைப் பார்த்த வந்தனா தன பாட்டுக்கு சமையல் மேற்பார்வைக்குப் போய்விட்டாள்

அன்றைக்கு உறவினர்களே கிட்டத்தட்ட ஐம்ப பேருக்கு மேல் இருந்தார்கள்.

"அது சரி! என்ன பண்றது... அந்த அம்மிணிக்கு அப்படி மனசு போயிருக்கு"

"உனக்குத் தெரியுமா? ஒரு குடும்பத்துல இருந்து ஒரு ஆள் சாமியாராய் போனாலும் அந்தக் குடும்பத்துல ஏழு தலைக்கட்டுக்கு செஞ்ச பாவமெல்லாம் போயிருமாம்."

விதவிதமான வியாக்கியானங்கள்

விதவிதமான பேச்சுக்கள்!

எதுவுமே வந்தனாவின் மனதில் இறங்கவில்லை. கணவன் எங்கே? எங்கேயென்று மனம் அதிலேயே இருந்தது.

மாலையானது!

விலாஸினியின் பெற்றோர்கள் புறப்பட்டார்கள். இதற்குள்ளாக மற்ற உறவினர்கள் எல்லாரும் கிளம்பிப் போய் விட்டார்கள்.

மதியழகனின் சகோதரிகளின் குடும்பத்தார் மட்டுமே இருந்தார்கள். சம்பந்திமார்கள் கூடப் போய் விட்டார்கள்.

விலாஸினியின் சகோதரர்கள் சரியாக அந்த நேரத்துக்கு வந்தார்கள்.

எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டார்கள்.

"என்னவோ, விலாஸினிக்குப் பிடிச்ச வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக்கிட்டா. ஆனா, அவளுக்கு இங்க இருந்த வரைக்கும் வாழ்க்கையில எந்தக் குறையும் இருக்கலை. அது எங்களுக்குத் தெரியும்" என்றார்கள் தலைலட்சுமியம்மாளிடம்.

தலைலட்சுமி மையமாகப் புன்னகைத்து வைத்தார். விலாஸினியின் அப்பா தொடர்ந்தார்.

"அம்மா! இனிமே வந்தனாதான் எங்க பொண்ணு. நாங்கதான் அந்த சீர்வரிசையெல்லாம் அப்படியே



வந்தனாவுக்குக் கொடுத்தர்றோம்னு சொன்னோம். நீங்க வேண்டாம்னுட்டீங்க" என்றார்.

"ஆமாங்க! அது சரிவராது! உங்க மகன்களுக்கும் வந்திருக்கிற மருமகள்களுக்கும் அது பிடிக்காமப் போகலாம். ஐயோ! இத்தனையும் தூக்கிக் கொடுத்துட்டோம்னு உங்களுக்கும் தோணலாம். நீங்களும், மதியுமா செஞ்சிருக்கற முடிவுதான் நல்லது. விலாஸினிக்குன்னு நீங்க கொடுத்ததையெல்லாம் அப்படியே அந்த ஆசிரமத்துக்குன்னு கொடுத்தர்றதுன்னு மதியழகன் முடிவு செஞ்சுட்டான்" என்றார்.

அவர்கள் ஒரு பெருமூச்சு விட்டார்கள். விலாஸினியின் அம்மா வந்தனாவைக் கட்டிக் கொண்டார். கண்கள் கலங்கின.

"அம்மா! எல்லாரும் சொல்வாங்க என்ன இருந்தாலும் பெண் பிள்ளைகளுக்குத்தான் பாசம் அதிகம்னு சொல்லுவாங்க. அந்தப் பாசத்தை அனுபவிக்க எங்களுக்கு குடுத்து வைக்கலை!"

"அம்மா! அப்படி நினைச்சுச் சங்கடப்படாதீங்க. நான் என்னைக்கும் உங்களுக்கு மகள்தான். அது மட்டுமில்லம்மா...! விலாஸினியக்கா செய்றது மிகப் பெரிய காரியம். எத்தனை குழந்தைங்களுக்கு தாயாய் இருக்காங்க; எத்தனையோ அனாதைக் குழந்தைங்களைப் பாத்துக்கறாங்க. அது பெரிய விஷயம்மா..." என்றாள்.

எல்லார் மனமும் அந்த வார்த்தைகளினால் சற்றே தேறினாற் போல் இருந்தது.

விலாஸினியின் தாய் ஒரு பெரிய நகைப் பெட்டியை வந்தனாவின் கையில் திணித்தார்.

"வந்தனா! எங்களோட அன்பளிப்பு இந்த நகை செட்! எங்க மகளால மருமகப் பிள்ளையோட வாழ்க்கையில ஏற்பட்ட குழப்பத்தை நீ சரி செய்யணும். பாவம் ஆறு வருஷம் அவரும் மனசளவில் ரொம்ப சங்கடப்பட்டுட்டாரு. இனிமேயாவது நல்லாக் கவனிச்சுக்க..." என்றார்.

வந்தனா மாமியாரையும் பார்த்தாள். மாமியார் "வாங்கிக்க...!" என்பது போல் தலையசைத்தார்.

வந்தனா அவர்கள் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டாள்.

விடை பெற்றுப் புறப்பட்டார்கள்.

விலாஸினியின் பெற்றோர்களின் கார் கிளம்புகையில் போர்ட்டிகோவில் நின்று வழியனுப்புகையில் அவள் உள் மனதில் விலாஸினி தன்னிடம் தனிமையில் சொன்ன வார்த்தைகள் ஓடின.

"வந்தனா! இந்தக் குடும்பத்துல எல்லாருமே நல்லவங்க. என்னோட மனசுலதான் வேற நாட்டம் ஏற்பட்டிருச்சு. ஆனா, குருஜி சுட்டிக் காட்டினப்பதான் என்னால மதியழகனோட வாழ்க்கையில எவ்வளவு குழப்பங்கள் ஆயிருச்சுன்னு எனக்குப் புரிஞ்சது. எனக்குப் பிடிச்ச வாழ்க்கையை வாழறதுக்கு எனக்கு உரிமையிருக்கு. ஆனா, என்னோட சம்பந்தப்பட்ட ஒரே காரணத்துக்காக ஆறேழு வருஷம் மதியழகனோட வாழ்க்கையில குழப்பம் ஆச்சேங்கறது ரொம்ப வருத்தமான விஷயம்" என்றாள்.

வந்தனா என்ன பேசுவது என்று தெரியாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

கிருபானந்தமயி தொடர்ந்தார்.



"வந்தனா! உன்னைப் பார்த்தாலே தெரியுது. உன்னோட நடத்தையிலயும் தெரியுது. நீ ரொம்பப் பொறுமையான, பக்குவமான பொண்ணுன்னு. உன்னை மாதிரி ஒரு பொண்ணுதான் மதியழகனுடைய வாழ்க்கை முழுக்க கூடப் பயணம் செய்றதுக்கு ஏத்த பொண்ணு. மதியழகன் கிட்டே என்னால அவரோட வாழ்க்கையில ஏற்பட்ட குழப்பத்துக்கு நான் மன்னிப்புக் கேட்டேன்னு சொல்லு. நீயும் அவரோட எந்தக் குற்ற உணர்வும் இல்லாம சந்தோஷமா இரு" என்றாள்.

வந்தனா துறவி என்ற முறையில் விலாஸினியின் காலில் விழுந்து வணங்கினாள். பிறகு எழுந்து சொன்னாள்.

"அம்மா! இந்த முடிவு எடுக்கறதுக்கும் ஒரு துணிச்சல் வேணும். துறவின்னா ஒரு தப்பித்தல்னு நினைக்கறாங்க. ஆனா அப்படியில்லை. அதுக்கும் ஒரு பிடிவாதம் வேணும். நீங்க எங்களைக் காட்டிலும் பல படிகள் மேல இருக்கீங்க... உங்க வைராக்கியத்துக்கும், துணிச்சலுக்கும் நான் தலை வணங்குகிறேன்" என்றாள்.

ஒரு நிமிடம் ஆழப் பார்த்த கிருபானந்தமயியின் முகத்தில் சாந்தம் நிறைந்த ஒரு புன்னகை மலர்ந்தது.

"நீ புத்திசாலிப் பொண்ணும் கூட. மதியழகன் மாதிரியே அழகா ஒரு பெண் குழந்தை கிடைச்சா... அதுக்கு விலாஸினின்னு பேரு வைங்க... நான் முழுவதுமா இருந்து வாழ முடியாத வாழ்க்கை என் பிரதிநிதியா வச்ச அந்தப் பொண்ணுக்குக் குடுங்க" என்றார்.

விலாஸினியின் பெற்றோர்கள் கண்கள் கலங்க காரில் ஏறிச் சென்ற போது வந்தனாவுக்குப் பாவமாகவும் இருந்தது. பாரமாகவும் இருந்தது.

அத்தையிடம் கேட்டாள். ''என்னங்கத்தே'' ஆச்சரிய மாக இருக்கு. நகையை வாங்கிக்கச் சொன்னீங்க...'' என்றாள்.

''இல்ல... வந்தனா! பொண்ணு சாமியாராய் போன அதிர்ச்சியே நமக்குப் பெருசு. அவர்களுக்கு அது ரொம்ப அதிகம். மனசு தெளிய நாளாகும். அதுல வேற விலா ஸினி சம்பந்தமான எல்லாப் பொருளையும் திருப்பிக் கொடுக்கச் சொல்லிட்டான் மதியழகன். ரெண்டு லாரி முழுக்க எல்லாம் ஏறிப் போச்சே.... பாக்கலையா? அதான் இதையும் நாம வேண்டாம்னா... சங்கடப்படுவாங்க... வேற ஏதாவது விதத்துல நாம திருப்பிச் செஞ்சரலாம்'' என்றார்.

அப்போதுதான் வந்தனாவுக்குப் புரிந்தது. கணவன் எதற்காக அலைந்து கொண்டிருக்கிறான் என்று.

மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போல பிரச்சினைகள் இன்னும் முடியவில்லை என்று தோன்றியது.

• • •

ஆசிரமத்து வேன் லேசான குலுக்கலுடன் அந்த ஊர் விட்டுக் கிளம்பிய போது.

விலாஸினி என்ற பூர்வாசிரமப் பெயர் கொண்ட கிருபானந்தமயி ஊரை ஒருமுறை நிதானமாகத் திரும்பிப் பார்த்தார்.

இன்று போலவே அன்றைக்கு நான்தான் கிளம்பிப் போன நினைவு வந்தது.

ஒவ்வொரு நாளும் கணவனிடம் வேகத்துடன் உறவு கொண்ட நாட்களில் எல்லாம் மறுநாள் ஒரு வெறுமை தோன்றும். அதைக் காட்டிலும் தனது வேகத்தை



இயல்பாய் எடுத்துக் கொண்டு தன்னைப் புரிந்து கொண்டு நடந்து கொள்கிற கணவனைப் பற்றி எண்ணும் போது வெட்கம் தோன்றும்.

தன்னைக் குறித்தே எரிச்சலும் தோன்றும். ''பிராடிகல் டாட்டர்'' ''ஸ்பாயில்ட் சைல்ட்'' என்பது போல வாழ்க்கை தனக்கு எதையுமே மறுக்கவில்லை.

ஏதாவது குறைகள், பிரச்சினைகள் என்று இருந்திருந் தால் அவற்றைச் சமாளிப்பதிலே மனம் முழுதும் சென் றிருக்கும் அல்லது அடுத்த வேளை சோற்றுக்கு என்ன செய்வது என்ற எண்ணமும் கவலையும் இருந்திருந்தால் கூட வாழ்க்கை சுவாரசியமாக இருந்திருக்கும் என்று தோன்றியது.

''நானேதான் சுமக்க வேண்டும்'' என்கிற மாதிரிப் பிரச்சினைகள் எதுவும் இருக்கவில்லை.

''நான்தான் இதை முழுமையாகச் செய்தேன்'' என்று சொல்லிக் கொள்வதற்கான வாய்ப்பும் இருக்கவில்லை.

எல்லாமே ''ரெடிமேடாக'' என்பார்களே ஆயத்தமாக அவள் வாழ்க்கையில் இருந்தது என்பதே தான் உள்ளீடற்ற வாழ்க்கை வாழ்கிறோம் என்ற எண்ணத்தைத் தோற்று வித்தது.

தனக்குள்ளே ஏதோ ஒரு இடம் காலியாகவே இருந்த தாக உணர்ந்தாள்.

பிறந்த வீட்டில் யாருமே அவளைப் புரிந்து கொள்ள வில்லை.

''டோண்ட் பாதர் யுவர்செல்ப்'' என்ன வேண்டும் கேள்! என்றுதான் அவளை ஒரு அழகுப் பொருளாக உட்கார வைத்து விட்டார்கள் அதனாலோ என்னவோ இருபத்து நான்கு வயதில் தந்தை இறந்த பிறகும் துணிவுடன்

பொறுப்புகளை சுமக்கிற மதியழகனைப் பார்த்தவுடனே அவளுக்கு ஒரு ஈர்ப்பு வந்தது.

அவனோடு வாழ்கிற அந்த ஆறு மாதத்திலும் மதியழகன் மேல் ஈர்ப்பு அவளுக்கு இருந்தது. ஆனால், இந்த மாதிரி வாழ்க்கை மட்டுமே தன்னுடைய வாழ்க்கையல்ல என்ற எண்ணம் தோன்றிக் கொண்டேயிருந்தது.

அம்மா வீட்டில் சென்னையில் பத்து நாட்கள் தங்கிய போதுதான் குருஜியின் பேச்சைக் கேட்பதற்குப் போனாள்.

அந்த ஒன்றரை மணி நேரப் பேச்சு அவளை ஈர்த்தது.

தனக்கான விடைகள் அவரிடம் இருப்பது போலத் தோன்றியது. அந்த யோகா வகுப்பிற்குப் போனதற்குப் பின் நிறைய ஆன்மீகப் புத்தகங்களைத் தேடிப் பிடித்தாள். அதற்கேற்றாற் போல் குழந்தைக்குக் கிடைத்த விளையாட்டுச் சாமான் போல ஒரு பெரிய அறையையே மதியழகன் அமைத்துக் கொடுக்கவும் இன்னமும் சௌகரியமாகப் போயிற்று.

இரண்டாவது முறை அவள் சென்னைக்கு குருஜி வருகிற நேரம் தெரிந்து போனாள். அவரே இருந்து நடத்துகிற யோகா வகுப்பிற்குப் போய்க் கலந்து கொண்டாள்.

அப்போதே அவள் மனத்துக்குள் தோன்றிவிட்டது. இதுதான் தான் போக வேண்டிய பாதை என்று.

திடீர் திடீரென்று மனதுக்குள் தோன்றிய போது கிளம்பினாள்.

அவர்களின் ஊருக்கு அருகே சுவாமிஜியின் இயக்கம் சார்ந்த ஒரு தியான மண்டபம் இருந்தது. அங்கே போய் இரண்டு நாட்கள் தங்கி விட்டு வந்த போதுதான் வீட்டில் அவளால் நேர்ந்த குழப்பம் அவளுக்குப் புரிந்தது.



ஆழ் மனது சொன்னது!

"இனிமேல் சோறாக்கவும் பொருள் தேடுவதுமான வாழ்க்கை தனக்கு ஒத்து வராது" என்று.

வீட்டில் ஒட்டாத நிலைமை அவள் மனதுக்குள் ஓடிக் கொண்டே இருந்தது.

யோசித்தாள்!

தன்னுடைய தவறுகளையும் பொறுத்துக் கொண்டு தன்னிடம் அன்பு காட்டுகிற மதியழகனிடம் எப்படிச் சொல்லுவது என்று அவளுக்குத் தெரியவில்லை.

தன் பிறந்த வீட்டிலும் அந்த புகுந்த வீட்டிலும் சரி தன்னை எவ்வளவு நேசிக்கிறார்கள் என்பது புரிந்தது.

அன்போடு இவர்கள் தன்னை வழியனுப்பி வைக்க மாட்டார்கள் என்று தோன்றியது. அதனால்தான் அப்படி ஒரு கடிதத்தை எழுதி வைத்தாள்.

படித்தால் இரண்டு விதமாகவும் பொருள் தருகிற மாதிரி அந்தக் கடிதத்தில் அமைந்திருந்தது.

மாமியார், அவளது பெற்றோர்கள் எல்லாருமே தான் வேறொருவரோடு போய் விட்டதாக நம்பிக் கொள்கையில் மதியழகன் மட்டும் தான் அப்படியெல்லாம் செய்யக் கூடியவளல்ல வேறு ஏதோ விஷயம் இருக்கிறது என்று காத்துக் கொண்டிருந்ததாக குருஜி சொன்னது கேட்டு இப்போது கூட அவளுக்குப் பெருமிதம்தான் ஏற்பட்டது.

தன் வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட மனிதர்கள் எல்லாரும் நல்லவர்களாகவே இருந்தார்கள் என்ற பெருமிதத்தோடு தனது பயணத்தைத் தொடர்ந்தாள். ஆனால், எந்தக் குற்ற மனப்பான்மையும் இல்லாமல்.

இன்னமும் கூட ஒன்றிரண்டு கடமைகள் தனக்கு இருந்தன என்று அவளுக்குப் புரிந்திருந்தது.



# 22

பரபரப்புக்குக் காரணம் இப்போது முழுமையாகப் புரிந்தது வந்தனாவுக்கு!

விலாஸினியின் பொருட்களையெல்லாம் திரட்டித் திருப்பி அனுப்புகிற வேலையைத்தான் தனது மாமியாரும் நாத்தனார்களும் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று புரிந்தது. ஆனால் கணவன் ஏன் நேற்றிலிருந்து தன்னிடம் தொடர்பு கொள்ளவில்லையென்று கொஞ்சம் கவலையாக இருந்தது.

இன்னொரு மாற்றமும் வீட்டில் தெரிந்தது. நேற்று மாலை வரை தன்னைக் கூப்பிட்டுக் கூப்பிட்டு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்த மாமியார் இன்று காலையில் இருந்து தன்னை கண்டு கொள்ளவேயில்லை.

வந்தனா மனம் தளராமல் தான் போய் சமையலறையில் புகுந்து கொண்டாள். சமையலின் முழுப் பொறுப்பையும் தான் எடுத்துக் கொண்டாள்.

சமையல்காரப் பெண்மணியைக் கூட ஒதுங்கச் சொல்லி விட்டு பத்து பேருக்கு மேலாகத் தானே சமையல் செய்தாள். அவர்களின் உதவியை மட்டும் வாங்கிக் கொண்டாள்.

சூழ்நிலையில் இருந்த வித்தியாசம் கருதி மிகவும் தடபுடலாகவும் இல்லாமல், அதற்காக ஒன்றுமே இல்லாமல் போய்விடாமலும் சத்தாகவும், சுவையாகவும் சமையல் செய்தாள்.



ஒருவகையில் நாத்தனார்கள் இருவருக்கும் அது வசதியாக இருந்தது போலும்!

அது மட்டுமில்லாமல் நாத்தனார்கள் இருவருக்குமே விலாஸினியின் பொருட்கள் பட்டியல் போடப்படும் போது வண்டிகளில் ஏற்றப்படும் போதும் தான் உடன் இருப்பதில் அவ்வளவாக விருப்பம் இல்லை என்றே தோன்றியது.

தானாக மேலே விழுந்து எதற்காகப் பிடுங்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள். ஆனால் அதற்காக சம்பந்தமில்லாதவள் போல் ஒதுங்கியிருக்கவும் மனது ஒப்பவில்லை. அதனால்தான் சமையலே சிறந்தது என்று அதில் புகுந்து கொண்டாள்.

நேரத்திற்கு வந்து உணவை மட்டும் சாப்பிட்டு விட்டு,

''வந்தனா ரொம்ப நல்லாயிருக்கு!'' என்று ஒரு வார்த்தை பாராட்டி விட்டு அவர்கள் தங்கள் பணிக்காகச் சென்ற போதும் கூட அவளுக்கு குறையாக இருந்தது. மறுநாள் மாலை வரை இது தொடர்ந்தது.

மறுநாள் மாலை!

ஐந்து மணியிருக்கும்!

திடீரென்று கமலேஸ்வரி குழந்தைகளோடு புறப்ப டாள். பெரிதாக ஒன்றும் வந்தனாவிடம் பேசவும் இல்லை

''இந்தா... வந்தனா... நான் கிளம்பறேன்!'' என் மட்டும் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

மகேஸ்வரி, மற்றும் கமலேஸ்வரியின் கணவ மார்கள் முதல் நாளே கிளம்பிப் போயிருந்தார்கள்.

''அக்கா! இன்னும் ரெண்டு நாளாவது இருந்துட் கிளம்பலாமில்லே!''

"இல்லல்லே வேலை முடிஞ்சதில்ல... நான் கிளம்ப றேன்" என்றார்.

முகம் இறுக்கமாக இருந்தாற் போல் தோன்றியது. அரை மணி நேரத்தில்.

மகேஸ்வரியும் தன் குடும்பத்தோடு கிளம்பினாள். "அக்கா! நீங்களாவது ரெண்டு நாளைக்கு இருக்கக் கூடாதா?" என்றாள் வந்தனா கெஞ்சதலாக.

மகேஸ்வரி ஏதோ கொஞ்சமாகப் புன்னகைத்தாள்.

"இல்ல... வந்தனா! வந்து நாலு நாளாச்சு... வீட்டுக் காரியம் பாக்கணுமில்லே" என்றாள்.

"சரிக்கா! கொஞ்ச நேரம் இருங்க! நான் டிபன் செஞ்சு தரேன். எடுத்துட்டுப் போவீங்களாம்! வீட்ல போய் ரெஸ்ட் எடுங்க" என்றாள்.

"சரி" என்றாள் மகேஸ்வரி.

சப்பாத்திகள் தயாரித்தாள். இட்லி, சப்பாத்தி குருமா என்று கொடுத்தனுப்பினாள். போகிற வழியில் கொடுத்து விடுங்கள் என்று கமலேஸ்வரி வீட்டுக்கும் கொடுத்தனுப் பினாள்.

இதையெல்லாம் மாமியார் சம்பந்தமில்லாதவர் போல் பார்த்துக் கொண்டிருந்தது அவளுக்கு உறுத்தலாகவே இருந்தது.

வலியச் சென்று "அத்தே! என்னங்கத்தே! உடம்புக்கு முடியலியா? ரெஸ்ட் எடுத்துக்குங்க" என்றாள்.

"ம்..!" என்று அறைக்குள் போய் முடங்கிக் கொண்டார்.

வந்தனாவின் மனத்தில் திடீரென்று சலிப்புணர்வு தோன்றியது. திடீரென்று தான் ஏதோ ஒரு வேண்டாத பொருள் ஆகி விட்டோமோ என்று தோன்றியது.



ஊருக்குப் போன கணவனும் இரண்டு நாட்களாகத் தொடர்பு கொள்ளவில்லை. திடீரென்று குடும்பத்தினரின் நடத்தையில் பெரிய மாற்றம் தெரிகிறது.

தனது அறைக்குள் போனாள்.

சோர்ந்து படுத்துக் கொண்டாள்.

கண்களில் கண்ணீர் கரகரவென்று வழிந்தோடியது. ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள்.

இரவு ஒன்பது மணியிருக்கும்!

திடீரென்று விழிப்பு வந்தது!

அப்போதுதான் அவளுக்கு அந்த எண்ணம் தோன் றியது. தானேதான் முயற்சி செய்தால் என்ன என்ற எண் ணம்தான் அது.

தானே கணவனின் எண்ணுக்கு தனது செல்போனி லிருந்து அழைத்தாள்.

அப்படி அழைப்பதற்கு ஒரு சமாதானமும் செய்து கொண்டாள்.

எங்கே என்ன வேலையாக இருந்தால் என்ன?

இரவு நேரத்தில் ஓய்வுக்காக ஒரு இடத்தில் தங்கித் தானே ஆக வேண்டும்? என்று எண்ணியதால்தான் அழைத்தாள்.

மதியழகன் தொடர்புக்குள் வந்தான். எந்த விதமான வித்தியாசமும் இல்லாதவனாக,

"என்ன?" என்றான்.

அப்படி ஒரு விட்டேற்றியான ஒரு கேள்வியை அவள் எதிர்பார்க்கவில்லை.

"இல்லே! ரெண்டு நாளா போன் பண்ணலையே" என்றாள்.

"போன் பண்ணலேன்னு தெரியுதில்லே! அப்புறம் என்ன கேள்வி...?"

..........!

"இங்க.... பார்! எப்பக் கூப்பிடணும்னு எனக்குத் தெரியும்... போனை வை...!" என்றான்.

அவள் கண்கள் கலங்கின.

இயந்திரம் போல போனை வைத்தாள். படுக்கையில் படுத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்!

'நல்ல துணிமணிகளும், நகைகளும், போக்குவரத்துக்குக் காரும், இருப்பதற்கு பங்களாவும்தான் வாழ்க்கையா? இதற்காகவா இத்தனை நாள் காத்துக் கொண்டிருந்தோம்.'

குலுங்கிக் குலுங்கி அழுதாள்!

அதே போன்ற வேதனை வேறு ஒரு இடத்திலும் பிரதிபலித்துக் கொண்டிருந்ததை அவள் அறியவில்லை.

• • •

வந்தனாவின் அப்பா.... சாப்பாடு செல்லாமல் அமர்ந்து கொண்டிருந்தார்.

"ஏங்க... சாப்பிடலையா?" என்றார் அம்மா...

"எம்மா! நான் ரொம்பத் தப்பு பண்ணிட்டேன்... போலீருக்கு... நம்ம வந்தனா... இவ்வளவு கல் நெஞ்சக்காரியா மாறுவான்னு நான் நினைக்கவேயில்லை..." என்றார்.

"எதனால அப்படிச் சொல்றீங்க...?"

"ஆமா...! ரெண்டு வருஷம் கிட்டத்தட்ட ஒரு வேலைக்காரி மாதிரித்தான் இருந்திருக்கா..."

"சேச்சே! அப்படியெல்லாம்... இல்லே. சம்பந்தியம்மா அவளுக்கு எல்லா அதிகாரமும் குடுத்துருக்காங்க..."



"அது யார்... இல்லேன்னு சொன்னா...? ஆனால் யார் அவளுக்கு அதிகாரமும், வாழ்க்கையும் குடுக்கணுமோ அவரு எந்த உரிமையும் இல்லாமத்தான் வச்சிருந்திருக்காரு..."

"நான்தான் அன்னைக்கே சொன்னேனே....! பணம்... பணம்னு பாத்துக் குடுக்காதீங்க... நாளைக்குப் புள்ளைக்கு நிம்மதியில்லாமப் போயிரும்னு..."

"அது கூட எனக்கு வருத்தமில்லே! ஆனா, இந்த வந்தனா புள்ளே எதுவுமே நம்மகிட்டே சொல்லலையே! நான் சந்தோஷமாத்தான் இருக்கேன்னு சாதிச்சுட்டாளே" என்றார் வருத்தத்துடன்.

நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

"பணம் முக்கியமில்லே! வந்துரும்மா... என்று கூட்டிட்டு வந்துருப்பேனே."

"அதான்! ஒருவேளை நீங்க அப்படியெல்லாம் முடிவு எடுப்பீங்கன்னுதான் சொல்லாம விட்டுட்டாளோன்னு தோணுது. நான் முதல்லயே சொன்னேன், பணமும் வசதியும் மட்டும் பாக்காதீங்க.... அந்தக் குடும்பத்துல ஏதோ சிக்கல் இருக்கிறது..."

"இல்லயே! நான் விசாரிச்ச வரைக்கும் எல்லாம் பையன் அருமையான பையன் தனலட்சுமியம்மா ரொம்ப நல்லவங்கதான்னு சொன்னாங்க" என்றார்.

சற்றும் எதிர்பாராத விதமாக... அப்பா குலுங்கிக் குலுங்கி அழுதார்.

"மக... மனசளவுல எத்தனை கஷ்டப்பட்டாளோ, இத்தனையும் தாங்கியிருக்காளே..." என்று புலம்பினார்.

"சரி... போனது போகட்டும் விடுங்க. இப்பத்தான் விலாஸினி சாமியாராயிட்டான்னு ஆயிருச்சில்லே" என்று தேற்றினார் மனைவி.

சற்று நேரத்தில் அம்மா புலம்ப ஆரம்பித்தார். அப்பா தேறுதல் சொன்னார்.

"இல்ல... இனிமே... வெளித்தோற்றத்தை மட்டும் பார்த்து நாம ஏமாந்துறக்கூடாது. நான் மாப்பிள்ளைகிட்டே ஸ்ட்ரிக்டா பேசப் போறேன். கஞ்சி குடிச்சாலும் நிம்மதியா வாழ்வது ரொம்ப முக்கியம்" என்றார்.

"என்னமோ... செய்ங்க...! ஏடாகூடமா போயிடப் போகுது..." என்றார் அம்மா கவலையுடன்.

அப்பா உடனடியாக போனில் அழைத்தார்.

அம்மா கவலையுடன் பின்னால் நின்று கொண்டு கவனித்தார்.

"மாப்பிளே! நான்... பேசறேன்" அந்தப் பக்கம் என்ன சொன்னாங்களோ தெரியவில்லை. "இல்ல.... மாப்பிளே... பேசணும்" என்றார் அழுத்தம் திருத்தமான குரலில்.

அந்தப் பக்கமிருந்து ஒப்புதல் கிடைத்தது போலும்.

"மாப்பிளே! என் பொண்ணு உங்களோட சந்தோஷமா இருக்கான்னு நினைச்சுகிட்டிருந்தேன். ஆனா... ரெண்டு வருஷமா குடும்ப வாழ்க்கைன்னு ஒண்ணு இல்லாம இருந்திருக்கான்னு தெரியாமப் போச்சே..." என்றார்.

"அது சரி... இப்ப எப்படித் தெரிஞ்சது மாமா!"

"எப்படியோ தெரிஞ்சது மாப்பிளே! உங்க வீட்டுப் பணத்துக்காகவும், வசதிக்காகவுமா.... பொண்ணைக் குடுத்தேன். உங்க குணத்துக்காக... சம்மந்தியம்மா... குணத்துக்காக..." என்றார்.

"சரி... இப்ப என்ன மாமா?"

"என்ன மாப்பிளே இப்படிக் கேக்கறீங்க? அவளுக்கு பெரிய வசதிகள் கொடுக்கலேன்னாலும் என் வசதிக்கு அவளை மகாராணி மாதிரித்தான் வச்சிருந்தேன்."



"நானும் அப்படித்தான் மாமா அவளை நடத்தறேன். நீங்களே உங்க பொண்ணுகிட்டே கேளுங்க ஏதாவது குறையிருக்கான்னு."

"அவ சொல்ல மாட்டா... மாப்பிளே! அதுதானே பிரச்சினையே!"

"அப்புறம்... ஏன்... மாமா? நீங்க கவலைப் படறீங்க..."

"என்ன மாப்பிளே இப்படிச் சொல்றீங்க? நாங்க பெத்தவங்க ஆச்சே! தானாடாவிட்டாலும் சதை ஆடுமில்லே!"

"ரொம்ப சரி... மாமா! தப்பில்லே" என்று. ஆரம்பித்த மதியழகன் பத்து நிமிடங்களுக்கு மேல் பேசினான்.

நிமிடங்கள் கடக்க கடக்க தனது கணவனின் முகத்தில் ஏற்படுகிற மாற்றங்களைப் பார்த்துக் கொண்டே நின்றிருந்தார் அம்மா.

கடைசியாக "நான் சொல்றதைச் சொல்லிட்டேன். அப்புறம்... உங்க முடிவு" என்று போன் கட் செய்தான் மதியழகன்.

"என்ன சொல்றாங்க?" என்று கவலையுடன் கேட்ட மனைவியிடம் சொன்னார்...!

அன்றைக்கெல்லாம் சிந்தனையுடன் நடமாடிக் கொண்டிருந்தார்.

மாலை ஆறு மணியிருக்கும்.

மகளை அழைத்தார்!

தன் மனதில் பட்டதைச் சொன்னார். மனைவி ஒருவிதமாகப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு கொள்ளவேயில்லை.

• • •

மறுநாளும் வீட்டின் நிலைமை அப்படியேதான் இருந்தது.

அத்தையும் ஏதோ சிந்தனையில் இருப்பதைக் கண்ட வந்தனா தானும் விலகியே இருந்து கொண்டாள்.

சிந்தனையில் ஆழ்ந்தவளாக நடமாடிக் கொண்டிருந்தாள்.

சும்மாயிருக்கிற மனதில் வேண்டாத சிந்தனைகள் தோன்றும் என்பதால் வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டாள்.

மிகக் குறைவான பேச்சு!

மிகக் குறைவான கருத்துப் பரிமாற்றம் என்று வித்தியாசமான சூழ்நிலை நிலவியது.

அப்பா மருமகனிடம் பேசியது எதுவும் வந்தனாவிற்குத் தெரியாது.

இரவு ஏழு மணியிருக்கும்!

போன் ஒலித்தது!

வந்தனா அவசரமாக ஏதோ வேலையிருப்பதை போல் சமையலறைக்குள் புகுந்து கொண்டாள்.

அத்தையே போய் எடுத்தார்!

நேற்று கணவன் எரிந்து விழுந்ததிலேயே அவள் மனம் வாடிப் போனாற்போல் உணர்ந்தாள். அதனால் அவளாகப் போய் போனை எடுக்கவில்லை.

அத்தைதான் எடுத்தார்!

பேசிவிட்டுப் பிறகு அழைத்தார்.

"வந்தனா! உங்கப்பா... பேசறார்" என்றார். போனை.

"அம்மா! நீ உடனே புறப்பட்டு வா!" என்றார்.



"என்னப்பா... விளையாடறீங்களா?" என்றாள் வந்தனா.

"விளையாடலம்மா! புறப்பட்டு வந்துரு" என்றார். போனை வைத்து விட்டார்.

குழப்பத்துடன் அவள் அறைக்குச் செல்கையில் மறுபடியும் போன்.

அத்தை எடுத்தார். பிறகு அவளது அறைக்கு வந்தார்.

"வந்தனா! உன்னை அம்மா வீட்டுக்கு புறப்பட்டுப் போகச் சொல்றான் மதியழகன்" என்றார்.

"அத்தே!" என்றாள் திகைப்புடன்.

"புறப்படும்மா! அவனே சொல்லும் போது நான் என்ன செய்யட்டும்!" என்றார்.

வந்தனா மனதில் திகிலும், வருத்தமுமாகப் புறப்பட்டாள்.

எத்தனை எதிர்பாராத அதிர்ச்சிகள் காத்திருக்கின்றன என்று அப்போது அவளுக்குப் புரியவில்லை.



## 23

கார் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது!

மாமியார் வந்து வழியனுப்பி வைத்தார். அவளுக்கு ஏதோ குழப்பம்!

ஏன் எல்லாரும் திடீரென்று தன்னிடத்தில் பாராமுகம் காட்டுகிறார்கள்.

விலாஸினி சாமியாராகப் போகாமல் இருந்திருந்தால் கூட அவர்கள் இப்படிக் கோபித்துக் கொண்டால் ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால் விலாஸினியோ குடும்ப வாழ்க்கையே வேண்டாம் என்று போய் விட்டாள். பிறகு இவளிடத்திலே கோபித்துக் கொள்வதற்கு என்ன இருக்கிறது?

மனிதர்கள் ஏன் இப்படி விசித்திரமாக நடந்து கொள்கிறார்கள்? அவளுக்கு சலிப்பாக இருந்தது.

பொறுமையெல்லாம் வடிந்தாற்போல் இருந்தது. எத்தனை காலம்தான் இவர்களின் விருப்பத்திற்கெல்லாம் ஆடிக் கொண்டிருப்பது!

வேறு எந்தப் பெண்ணாக இருந்தாலும் இப்படியெல்லாம் இரண்டு வருஷங்கள் பொறுமையாக நடமாடிக் கொண்டிருந்திருக்க மாட்டார்கள். அது கணவனுக்கே தெரிந்துதான் இருக்கிறது. பிறகும் ஏன் தன்னை இப்படி வறுத்தெடுக்கிறார்?

பேசாமல் கடந்த இரண்டு வருஷங்கள் இருந்தது போலவே நெருங்காமலே இருந்திருக்கலாமோ? இப்போது நெருங்கியதற்கும் பின்பு கோபம், நேசம் எல்லாவற்றிலும் ஒரு வேகம் இருக்கிறது.

கொஞ்சம் நொந்து போனாற்போலத்தான் பேசிக் கொண்டிருந்தாள். இந்த முறை ஏதாவது கணவனிடம் பேச நேர்ந்தால் தானும் மனுஷிதான் தனக்கும் உணர்வுகள் இருக்கின்றன என்று தெளிவாகக் காட்டி விட வேண்டும் என்று உறுதியாக முடிவு செய்து கொண்டாள். அதற்குள்ளாக அப்பா எதற்குக் குட்டையைக் குழப்புகிறார்.

அவளுக்கு இன்னொரு பயமும் தோன்றியது. இது நாள் வரை தன்னுடைய புகுந்த வீட்டுப் பிரச்சினைகளை



அவள் பெற்றோரிடம் சொல்லவே இல்லை. இந்த முறை வந்தபோதுதான் ஏதோ அரசல் புரசலான பேச்சுக்களில் இருந்து புரிந்து கொண்டார்கள் போலும்.

"எம்மா! எந்தப் பிரச்சினைகளையும் இதுவரைக்கும் என்கிட்ட சொல்லவே இல்லை!" என்று கேட்டார்.

எப்போதும் கூட்டம் நிறைந்திருந்தது போதாததற்கு நேரம் கிடைக்கவில்லை. கிடைத்த இடைவெளியில் ஒரு நிமிடம் நின்று பேசியபோது கேட்டார்.

"பிரச்சினை எதுவும் இல்லையேப்பா!" என்றாள் அப்பாவியாக.

"ஆமா! ஊர்க்காரங்க வேண்ணா அப்படி நினைக்கலாம். ஆனா, உங்க வீட்டு மாப்பிளைகளே சொல்றாங்க... நம்ம மாப்பிளே... உனக்கு குடுக்க வேண்டிய இடத்தைக் குடுக்கலேன்னு..." என்றார்.

"அப்பா! அவங்க புரிஞ்ச மாதிரிப் பேசறாங்க! ஆனா... நிலைமை மாறிடுச்சு...." என்றாள்.

"ஓ!" என்ற அப்பா ஒரு நிமிடம் மௌனம் காத்தார். பிறகு சொன்னார். இல்லை கேட்டார்.

"அப்பா! நிலைமை முதல்ல கஷ்டமாத்தான் இருந்திருக்கு..." என்று.

அவள் புன்னகைத்தாள்!

"அப்பா! இதைப் பத்தி நாம அப்புறம் விரிவாய் பேசலாமே! இப்பத்திக்கு நான் சந்தோஷமா இருக்கேன்னு மட்டும் புரிஞ்சுக்குங்க..." என்றாள்.

அதற்குள் அத்தை குரல் கொடுத்து அழைக்கவே வேலை பார்க்க ஓடி விட்டாள்.

அப்போதிருந்தே அப்பா முகம் வாடி இருந்தது. "பிரச்சினையெல்லாம் ஒண்ணுமே இல்லைப்பா!" என்று அடித்துச் சொல்லி ஆறுதல் படுத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்தது! ஆனால் அவளால் அப்படி அடித்துப் பேச முடியவில்லை! ஏனென்றால் விலாஸினியின் வருகையால் இன்னும் என்னென்ன மாற்றங்கள் ஏற்படுமோ என்ற யோசனை அவளுக்கே இருந்தது.

இப்போது வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைகிறாற் போல் இனிமேல் விலாஸினியின் தலையீடு தங்கள் குடும்பத்தில் இருக்கப் போவதில்லை என்ற நிலைமையில் தனது இடத்துக்காகப் போராட முடியும் என்ற உறுதி தோன்றியிருக்கிற நிலையில் இப்படி ஆளாளுக்குக் குழப்புகிறார்களே என்று கோபம் வந்தது.

அவளுடைய பொறுமையும் எல்லை கடந்து விட்டதாக உணர்ந்தாள். இந்த முறை கணவனிடம் பேசும்போது எல்லாக் கோபத்தையும் கொட்டி விட வேண்டும்! இதற்கும் மேலாகவா தன்னுடைய வாழ்க்கை பந்தாடப் பட்டு விடும் என்று எண்ணிக் கொண்டாள்.

வீட்டுக்குக் கார் போனவுடனே அவள் டிரைவரிடம் சொன்னாள்.

"நீங்க... போங்க! நான் வேணும்கறப்ப போன் பண்றேன்..."

"இல்லம்மா! பெரியம்மா காரோட வெயிட் பண்ணச் சொன்னாங்க... சின்னய்யாகிட்டே இருந்து தகவல் வருமாம். வந்ததுக்கப்புறம் வரச் சொன்னாங்க" என்றான்.

எப்போதும் போல் தனது வசதிகள் கூட அவர்களால் தான் தீர்மானிக்கப்படுகின்றன என்ற கடுப்பில் உள்ளே போனாள்.



அப்பாவும் அம்மாவும் ஹாலுக்கு வந்து வரவேற்றார்கள்.

"வாடா... ராசாத்தி..." என்றார் அம்மா.

அப்பாவின் மௌனம் அவளுக்கு சற்றே கவலையைத் தந்தது. ஆனாலும் அப்பாவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

அம்மா மகளை மேலிருந்து கீழாக ஆராய்ந்தார். எப்போதும் போல் விலையுயர்ந்த ஆனால் எளிமையான புடவை.

கூந்தலைத் தழையக் கட்டியிருந்தாள். நெற்றியின் நடுவே வட்டப் பொட்டு மின்ன நின்றிருந்தாள்.

"வாம்மா!" என்றார் அப்பா ரொம்பவும் யோசனைக்குப் பிறகு.

"சாப்பிட்டியா?" என்றார் அம்மா.

அப்போதுதான் அவளுக்கு நினைவு வந்தது. காலையில் சாப்பிட்டது. அதற்குப் பிறகு அவளுக்குப் பசி பற்றிய நினைவே எழவில்லை. இப்போது அம்மா கேட்டவுடனே அவளுக்கு பசி குப்பென்று எடுத்தது.

"இல்லம்மா! காலையில சாப்பிட்டது. மத்தியானமா கொஞ்சம் தயிர் சாதம் சாப்பிட்டேன். இப்பப் பசிக்குது" என்றவள் தனது அறைக்குப் போக முற்பட்டாள்.

"இரு வந்தனா! இப்படியே கை கழுவிட்டு வா... உட்காரு... சாப்பிட்டுட்டு அப்புறம் ரூமுக்குப் போ! நல்லா ரெஸ்ட் எடுத்துட்டு அப்புறமா காலையில பேசலாம்" என்றாள்.

அப்பாவும், அம்மாவும் ஏதோ பார்வை பரிமாறிக் கொள்கிறாற் போல் இருந்தது.

பசியென்ற நினைப்பும், "அம்மா வீடு" என்ற சுதந்திர உணர்வும் தோன்ற அவள் அமர்ந்தாள். அம்மா சூடாக பூரி கிழங்கு வைத்திருந்தார்.

"அம்மா... உன் கையால பூரி சாப்பிட்டு எத்தனை நாளாச்சு... போடு.... போடு..." என்று ஆசையாகச் சாப்பிட்டான். அதற்குப் பிறகு கையைக் கழுவி விட்டு பெட்டியை எடுத்துக் கொண்டு தனது படுக்கையறை நோக்கிப் போனாள்.

கதவைத் திறந்தாள்!

உள்ளே யாரோ இருந்தாற் போல் உணர்ந்தாள். யோசனையுடன் எட்டிப் பார்த்தாள்.

சோபாவில் யாரோ அமர்ந்திருக்கிறாற் போல் இருந்தது.

"யார்?" என்று குரல் கொடுக்க அந்த ஆஜானுபாகுவான உருவம் எழுந்து நின்றது.

அவள் கண்கள் தெறிக்கப் பார்த்துக் கொண்டு நிற்கிற இடைவெளியில்

"டீ வந்தனா! நானும் அப்பாவும் கோயிலுக்குப் போயிட்டு வரோம்.... உன் தாழ்ப்பாள் போட்டுக்க..." என்று குதூகலமாகக் குரல் கொடுத்து விட்டு அம்மா போவது தெரிய இன்னும் திகைத்துப் போனாள்.

• • •

ஒவ்வொன்றாக மேலே வந்து விழுந்த அந்தத் தலையணைகளைத் தாங்கிப் பிடித்து படுக்கையின் மேல் "தொப்" "தொப்" என்று போட்டுக் கொண்டிருந்தான் மதியழகன்.

"எல்லாரும் என்ன நினைச்சிட்டீங்க! இது மண்ணு... இதுக்கு உணர்ச்சியேயில்லை! இவளை எப்படி வேணும்னாலும் நடத்தலாம்னா! ஒரு போன்... ஒரு போன்... செஞ்சு... நான் நல்லாத்தான் இருக்கேன்... நீ உசுரோட தான் இருக்கியான்னு கேட்க முடியாதா? மனசு கேட்காம



போன் பண்ணினா... நானே கூப்பிட மாட்டேனா... கூப்பிடத் தெரியாதான்னு... கடுப்படிக்கறது... வேற..." என்று அவள் குரலெடுத்துக் கத்துவதைக் கண்களில் சிரிப்புடன் கண்களில் மின்னல் வீசப் பார்த்துக் கொண்டிருந்த மதியழகன் மெல்ல அடியெடுத்து வைத்து அருகில் வந்து விட்டான் என்பதை அவள் கவனிக்கவில்லை.

வேகத்துடன் தன்னருகில் அவளை இழுக்கவும் கையில் இருந்த அந்தத் தலையணையோடு அவன் கைகளில் சிக்கிக் கொண்டாள்.

அதற்கு மேல் அவன் அவளைப் பேசவிடவில்லை.

"குட்...! இந்தக் கோபம்... டிப்ரண்டா இருக்கு...! அதுவும் என் பொறுமைத் திலகத்துகிட்டே இருந்து..." என்று கிறக்கமாக முணுமுணுத்தபடி அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.

மெல்ல சாவதானமாக அவன் நிமிர்ந்த போது அவள் மலங்க.. மலங்க விழித்தபடி நிற்கக் கண்டான்.

மறுபடியும் உள்ளம் பறிகொடுத்தவனாய் கொண்டாடி மகிழ்ந்தான். அவள் அப்போதும் முறுக்கிக் கொண்டவளாய் விலகினாள்.

"அங்க.. வராம.. இங்க எதுக்கு வந்தீங்களாம்?" என்றாள்.

"எல்லாம் காரணமாத்தான்!" என்றான்.

"என்ன காரணம்?" என்றாள்.

"இத பார்றி" நான் எங்க மாமியாரம்மாகிட்டே விவரமாச் சொல்லி வச்சிருந்தேன். எனக்கும், வந்தனாவுக்கும் நிறைய வேலையிருக்கு? நான் உள்ளே இருக்கேன்னு சொல்லாம சாப்பிடறதுக்கு நல்லாக் குடுத்து உள்ளே

அனுப்புங்கன்னு.. அதெல்லாம் இப்ப உனக்கும் சொல்றதுக்கு.. நேரம் இல்லை.. பெண்ணே!'' என்றான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். ''களுக்'' கென்று சிரித்தாள்.

''என்ன..?'' என்றான்.

''எங்கப்பா.. எங்கப்பா.. கூட எப்படி மாறிட்டாரு.. பெருசா.. முகத்தை சீரியஸா வச்சகிட்டு நின்னாரு..'' என்றாள்.

இருவரும் சிரித்தார்கள்!

பிறகு அவன் சொன்னான்.

''உங்க குடும்பமே சாது மிரண்டா காடு கொள்ளாதுங் கற டைப்போ... ''உங்கப்பா.. ஒரு மிரட்டு.. மிரட்டினாரு.. பாரு..'' என்றான்.

அவள் திகிலுடன் பார்க்க, அவன் மூக்கைப் பிடித்துச் செல்லமாக ஆட்டி விட்டு அவன் சொன்னான்.

''எய்யா! என் பொண்ணை சந்தோஷமா வாழ அனுப் பிச்சேனா.. இல்லை, உன் வசதிக்கு பங்களாவுக்கு அலங் காரப் பொருளா அனுப்பிச்சேனான்னு.. ஒரே பரேடுதான்'' என்றான்.

''அப்படியெல்லாம் பேசினாரா?'' என்றாள் கவலை யுடன்.

''விஷயம் இதேதான். ஆனா கொஞ்சம் கௌரவமாகக் கேட்டாரு..'' என்றான்.

''ஓ!''

''என்ன.. ஓ! ஒன்னும் கவலைப்படாதே! எனக்கொரு மகள் இருந்து அவளை இப்படி ஒருத்தன் நடத்தினா.. நான் இதுக்கும் மேல வெடிச்சிருப்பேன்'' என்றான்.



அவள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். மெல்ல தன் வலக்கையால் அவன் மார்பை நீவிக் கொடுத்தாள்.

''அதான்! அம்மாகிட்டே சொல்லிட்டு நான் நேரா வந்தேன்'' என்றான்.

அவள் கேள்வியோடு நிமிர்ந்தாள். அவன் தொடர்ந்தான்.

''இதுவரைக்கும் இங்க தங்கினதில்லே! இங்கேயே தங்கி.. எனக்கும்.. என் வைப்புக்கும்.. எல்லாம்.. எல்லாம்.. நல்லபடியாத்தான் மாமனாரே போயிட்டிருக்குன்னு காட்ட வேண்டாம்?'' என்றான். 'எல்லாம்' என்ற வார்த் தையை இரண்டு பொருள் வருகிறாற் போல வேறு விதமான குரலில் அவன் உச்சரிக்கவும் அவளுக்கு முகம் சிவந்தது.

அவன் சிரித்தான்.

''எதுக்கு இப்ப இப்படி முகம் சிவந்து போச்சு?'' என்றான்.

''சரி.. போதும்.. காக்கா.. அடிச்சது.. இந்த மூணு நாளா என்ன நடந்துச்சுன்னு கொஞ்சம் விவரமாச் சொல்லுங்க..''

''சொல்றேன்.. ஆனா.. இப்ப.. இல்லே!'' என்றான்.

அவளும் மேற்கொண்டு வற்புறுத்தவில்லை.

எல்லாக் குழப்பங்களும் முடிந்து கணவன் தனக்கே தனக்கென்று வந்ததே போதும் என்ற நினைவு அவள் உள் ளத்தில் இருந்ததால் மலர்ந்த முகமும், உணர்வுகள் நிறைந்த மனமுமாக அவனிடம் தன்னை ஒப்புக் கொடுத்தாள்.

• • •

''மாப்பிளே...! மாப்பிளே!'' என்று முகம் நிறைந்த மகிழ்ச்சியுடன் மாமனார் அவனை விழுந்து விழுந்து உபசரித்தார். அதைப் பார்க்க மதியழகன் மனம் கூட நெகிழ்ந்து போனது.

"ஏம்.. மாமா! நீங்களும் அங்கேயே வந்துருங்களேன்" என்று அழைத்தான்.

"இல்ல.. மாப்பிளே! இது எங்க தாத்தா காலத்துல இருந்து இருக்கற வீடு. ஏதோ நான் இருக்கற வரைக்கும் நிலத்தைப் பாத்துக்கறேன். அஞ்சு ஏக்கர் நிலத்துல கிடைக்கறதும் எனக்கு வர்ற பென்ஷனும் எங்க வாழ்க்கைக்குப் போதும். அப்புறம் எல்லாமும் உங்க பொறுப்பு. கார் ஏறினா மூனு மணி நேரம் பயணம் வந்து பாத்துக்கறேன். இல்லே.. போன் பண்ணினா நீங்க வர்றீங்க" என்றார்.

"மாப்பிளே..! சந்தகை சாப்பிடுவீங்களா!" என்று வந்தார் மாமியார்.

"நீங்க பிரியமா.. எது செஞ்சாலும் சரி.. சாப்பிடுவேன்" என்றான்.

சந்தகை என்று அழைக்கப்படுகிற சேவை ஆப்பம் கடலைக் குழம்பு என்று சுவையாகச் செய்து பரிமாறினார்.

மதியழகன் "அத்தை.. மாமா..!" என்று வாய் நிறைய அழைத்து நகைச்சுவையாகவும் பேசிக் கொண்டு நேரம் ஓட்டுவதைக் கண்ட வந்தனாவுக்கும் மனது மகிழ்ச்சியாகவே இருந்தது. ஆனாலும் உள்ளே ஒரு உறுத்தல் இருந்து கொண்டே இருந்தது.

மெதுவாகக் கணவனிடம் தனிமையில் கேட்டாள்.

"அத்தான்! என்னன்னு தெரியலை. அத்தையும் மூட் அவுட்ல இருந்தாங்க.. மகேஸ்வரி அக்காவும், கமலேஸ்வரி அக்காவும் கூட என்னமோ கோபமா இருந்த மாதிரி இருந்துச்சு" என்றாள்.

"கோபமா.. இருந்த மாதிரி இல்லே. நிஜமாவே கோபமா இருக்காங்க.." என்றான்.

"ஏன்?" என்றாள் அதிர்ச்சி நிறைந்தவளாக.



சொன்னான். காரணம் சொன்னான்.

அவள் ஒரு நிமிடம் திகைத்துப் போனாள். பிறகு கேட்டாள்.

"அது.. அது.. எப்படி அவங்களுக்குத் தெரிஞ்சது?" என்று கேட்டாள்.

"உங்கப்பா.. தான்.. சொல்லியிருக்காரு. அதுவும் எங்க மாப்பிள்ளைங்க ரெண்டு பேருகிட்டயும் சொல்லியிருக்காரு. மோகன்குமார் அத்தானும், ராமநாதன் அத்தானும் அப்படியே போய் தத்தம் மனைவிமாரிடம் ஒப்பிச்சிருக்காங்க. அதனால்" என்றான்.

"நான்.. நான்.. எந்த அர்த்தத்திலே சொன்னேன்னு எனக்குத் தானே தெரியும்?"

"அது.. எனக்கும் தெரியும். அதனால்தானே.. சென்னையிலிருந்து நேரா இங்க ஓடி வந்தேன்" என்றான்.

அவள் அவன் தோள்களைக் கட்டிக் கொண்டாள். சேரில் அமர்ந்திருந்த அவன் தன் முகத்தை நிமிர்ந்து பார்த்ததோடு தன் இரு கைகளையும் உயர்த்தி அவளது தோளை வளைத்துக் கொண்டு சொன்னான்.

"இனிமே எந்தச் சந்தேகமும் வராத அளவுக்கு ரெண்டு நிருபணங்கள் வச்சிருக்கேன்.." என்றான்.

அவளும் ஆவலோடு காத்திருந்தாள்.



# 24

வியப்பில் ஆழ்ந்து போயிருந்தாள் வந்தனா!

இப்போதும் காரில்தான் போய்க் கொண்டிருந்தார்கள். இல்லையில்லை ஒரு முக்கியமான நிகழ்வை முடித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள்.

காலையிலிருந்தே "சீக்கிரம்.. புறப்படு.." என்று விரட்டிக் கொண்டிருந்தான் மதியழகன்.

"எங்கே?" என்று முன்னொரு முறை கேட்டதற்கு அவன் செய்த கேலி நினைவுக்கு வந்ததால் கேட்கவும் பயமாக இருந்தது. அது அவனுக்கும் நினைவு வந்தது போலும் அவனே சிரித்துக் கொண்டு சொன்னான்.

"ரொம்பவும் கிராண்டாவும் இல்லாம.. ரொம்பவும் சிம்பிளாவும் இல்லாம.. சிம்பிளா ஏதாவது புதுப் பட்டுப் புடவையே கட்டு" என்றான்.

அந்த மாதிரி எதுவும் கொண்டு வரவில்லையே என்று யோசித்தாள். அவன் மறுபடியும் குறும்பாகப் புன்னகைத்த வண்ணம் ஒரு பாக்கெட்டை எடுத்துக் கட்டிலின் மேல் 'தொப் தொப்'பென்று போட்டான்.

வந்தனா ஆச்சரியமாக எடுத்துப் பார்த்தாள். அவன் விவரித்தாற் போலவே ஒரு புடவையும் பிளவுஸும் இருந்தது.

உடுத்திக் கொண்டாள்.

வந்தனா உடை மாற்றிக் கொண்டு வருகிற அந்த இடைவெளியில் அவன் மாமனாரிடம் பேசிக் கொண்டிருந்தான்.

ரொம்பவும் இயல்பாக அவனும், மாமனாரும் பேசிக் கொள்வதை மகிழ்ச்சியாகப் பார்த்தபடி அம்மா நடமாடிக் கொண்டிருந்தாள்.

பத்து நிமிடங்களில் அவன் வெளியே வந்தபோது அப்பாவும், அம்மாவும் தயாராக நின்றார்கள்.



அதற்கு மேலும் வந்தனாவால் பொறுக்க முடியவில்லை.

"ப்ளீஸ்! ஒரு நிமிஷம்!" என்று கணவனைத் தங்கள் அறைக்கு அழைத்துப் போனாள்.

"எனக்குத் தலையே வெடிச்சுடும் போல இருக்கு. எங்க போறோம்னு சொல்லுங்க" என்றாள்.

"வேண்டாம்...! தலை வெடிச்சுடுச்சுன்னா.. ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்ல யார் கையெழுத்துப் போடுவாங்க?" என்றான்.

"ரெஜிஸ்ட்ரார் ஆபீஸா?" என்றாள்.

"நீ.. வா! கார்ல போகும்போது பேசிக்கலாம்" என்றான். அவன் காரைக் கிளப்புகிற அந்த இடைவெளியில் அப்பாவிடம் கிசுகிசுத்தாள்.

"அப்பா! நீங்க ஏதாவது ரெஜிஸ்டர் பண்ணனும்னு டிமான்ட் பண்ணினீங்களா?" என்றாள்.

"இல்லையேம்மா! அப்படி எதுவும் நான் பேசவே இல்லையே!" என்றார் அப்பா.

சற்றே நிம்மதியானாள்.

கார் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் போனபோது அவளது சகோதரிகள் இருவரும் தங்கள் கணவன் மார்களோடு வந்திருந்தார்கள்.

"அக்கா!" என்று அவள் கணவன் அவர்களை நோக்கிப் போக.

"உன்கிட்டே ஒரு பெரிய சண்டை போடணும். இப்ப வேண்டாம்.. அப்புறம் பேசிக்கறோம்" என்றார்கள்.

"ஆமா..! வந்தனா.. இப்ப வந்த வேலையைக் கவனி...!" என்றார்கள்.

"வந்த வேலை" என்ன என்று அப்போதுதான் கவனித்துப் பார்க்க ஆரம்பித்தாள்.

மதியழகன் மெல்லிய குரலில் சொன்னான். "வந்தனா! நம்ம மேரேஜை சட்டப்படி ரெஜிஸ்டர் பண்ணணும்" என்றான்.

"ஓ..!" என்றாள்.

"ஆமா! சட்டப்படி ரெஜிஸ்டர் பண்ணிக்கறது நல்லது.." என்றான்.

சட்டப்படி ரெஜிஸ்டர் செய்தார்கள்!

அவளது பக்கத்தில் இருந்து தாய், தந்தையரும், அவனது பக்கத்தில் இருந்து சகோதரிகளின் கணவன்மார்களும் சாட்சிக் கையெழுத்து போட்டார்கள்.

மீண்டும் வீட்டுக்கு வந்ததற்குப் பின்பு காளிமுத்து சமையலுக்கு ஆட்களை வைத்துக் கொண்டு குடும்பத்தளவுக்கு ஒரு பெரிய விருந்து தயார் செய்திருந்தான்.

விருந்து முடிந்து வந்தனாவின் பெற்றோர்கள் புறப்படும்போது வந்தனாவின் அப்பா ஒரு நிமிடம் தயங்கினார்.

"மாப்பிளே! ஒரு நிமிஷம் தனியாப் பேசணும்" என்றார்.

"வாங்க.. மாமா!" என்று தங்கள் தனியறைக்கு அழைத்துப் போனான்.

"மாப்பிளே! நான் எதுவும் மனை நோகப் பேசிட்டேனா! அதனால்தான் இந்த ரெஜிஸ்ட்ரேஷன்லாம் ஏற்பாடு செஞ்சீங்களோ..." என்றார்.

மதியழகன் ஒரு நிமிடம் தரையைப் பார்த்தான். "நீங்க எதுவும் தப்பாய் பேசலே மாமா! ரெண்டாம் தாரம்னாலும் நல்லா வச்சுக்குவாங்கற நம்பிக்கையில்தான் பொண்ணைக்



குடுத்தீங்க.. அதனால விலாஸினி திரும்பி வரப் போறான்னவுடனே உங்களுக்கும் பயம் வந்தது நியாயம்தானே. நானே வந்து உங்ககிட்டப் பேசணும்னு நினைச்சிருந்தேன். அதுக்குள்ள விலாஸினி கிளம்பி வந்துட்டா.. உங்களுக்கும் பயமாப் போச்சு. அது இயற்கைதானே. உங்க பயத்தைப் போக்கணும்கறதுக்காகத்தான் நேரடியா அங்கே வந்தேன்.. அப்புறமா யோசிச்சேன். ரெஜிஸ்டர் பண்றதுதான்.. நல்லதுன்னு நானும் யோசிச்சுகிட்டேயிருந்தேன். மாமா! இப்ப ஒண்ணு சொல்றேன் கேளுங்க..! ஒரு வேளை விலாஸினி இந்த மாதிரி இல்லாமத் திரும்பி வந்திருந்தா கூட... நான் டைவர்ஸுக்குத்தான் போயிருப்பேன். இன்பாக்ட்... அந்த சந்தேகத்தையெல்லாம் நிவர்த்தி செஞ்சதுக்கப்புறம்தான் குடும்ப வாழ்க்கையை ஆரம்பிக்கறதுன்னு வெயிட் பண்ணிகிட்டிருந்தேன்" என்றான்.

மாமனாரின் முகம் மலர்வதைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ரொம்ப சந்தோஷம் மாப்பிளே! என் சம்சாரத்துக்கு என் மேலே கோபம். மக ராஜகுமாரி மாதிரி இருக்கணும்கறதுக்காக ஒரு நிச்சயமில்லாத வாழ்க்கைக்குத் தள்ளிட்டீங்களேன்னு. விலாஸினி வீட்டுக்கு வந்து நின்றவுடனே எனக்கும் கொஞ்சம் பயமாயிருச்சு."

"இப்ப எல்லாம் தெளிவுதானே?" என்றான்.

"ரொம்பத் தெளிவு மாப்பிளே..!" என்றார் மனம் நிறைந்தவராக.

புறப்படும்போது மாமியாரம்மா வேறு தனியாக நன்றி சொன்னார்.

"அடுத்த மாசம். ரெண்டு மூணு நாள் அங்க வரோம்.. மாமா" என்று வழியனுப்பி வைத்தான்.

திரும்பவும் உள்ளே வந்தார்கள்.

வந்தனா நேராகக் கமலியிடம் போய் நின்றாள்.

"அக்கா..! என் மேல என்ன கோபம்?" என்றாள்.

கமலியும் மகேஸ்வரியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"தம்பி! இந்த நியாயத்தைக் கேளு! நாங்க ரெண்டு பேரும் இவளைக் கூட்டிட்டு வர்றதுக்குப் போயிருக் கோம். எதுக்கு வந்திருக்கீங்க..? டைவர்ஸ் பத்திரத்துல உங்க தம்பி கையெழுத்து வாங்கிட்டு வரச் சொன்னா ரான்னு கேட்கறா.." என்றாள் மகேஸ்வரி.

மதியழகன் மௌனமாகக் கேட்டுக் கொண்டான்.

தனலட்சுமியம்மா ஒரு பக்கம் புகார் சொன்னார். "ஆமாடா தம்பி! விலாஸினி மறுபடியும் வந்துட்டா.. இவ இங்கே இருக்க மாட்டாளாம். அவங்க ஊருக்குப் போய் ஸ்கூல் ஆரம்பிச்சுட்டு அங்க இருந்துக்குவாளாம்... எப்படி இருக்கு?"

மதியழகன் அதையும் மௌனமாகவே கேட்டுக் கொண்டான். மனைவி குற்றம் செய்தாற்போல் நிற்பதைப் பார்த்தவுடன் அவனுக்குள் அன்பும், நெகிழ்ச்சியும் ஒருங்கே ஊற்றெடுத்தது.

"சரி.. விடுங்க.. அவ நிலைமையில யார் இருந்திருந் தாலும் இப்படித்தான் குழப்பம் இருந்திருக்கும்" என்றான்.

மோகன்குமாரும், ராமநாதனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு குபீரென்று சிரித்தார்கள்.

"பாத்தீங்களா! தம்பி உங்களையெல்லாம்.. கழட்டி விட்டுட்டான்" என்று சிரித்தார்கள்.



அம்மா சடாரென்று மருமகளைத் தோளோடு சேர்த்துக் கொண்டார்.

"போங்கடி! சும்மா.. அவளைக் கலாட்டா பண்ணிக் கிட்டு.. அவளா இருக்கக் கொண்டு இத்தனை நாள் பொறுமையா இருந்தா" என்றார்.

எல்லாரும் ஒரு மனதாக அதை ஆமோதித்தார்கள். அன்றிரவு ஏழு மணியிருக்கும்.

சகோதரிகளின் கணவன்மார்கள் கேட்டார்கள். "என்ன.. ஊருக்குப் புறப்படறதா ஐடியா இல்லையா?" என்று.

"நாம புறப்படலே. அவங்க புறப்படறாங்க" என்றார் கள்.

"ஆமா.. புறப்படு.." என்றான்.

அவள் 'பேக்' செய்யப் போகும்போது ஒரு குட் கேஸைக் கொண்டு வந்து "பொக்" கென்று வைத்தாள் கமலீஸ்வரி.

"எல்லாம் ரெடியாயிருக்கு!" என்றாள்.

மதியழகன் சகோதரிகளிடம் குறும்புப் பார்வையை வீசி விட்டு மைத்துனர்மார்களைப் பார்த்து ஒரு விதமாகச் சிரிப்பைச் சிரித்தான்.

மறுபடியும் கலகலச் சிரிப்பு!

அதே சிரிப்போடு அவளையும் அவனையும் எங்கோ அனுப்பி வைத்தார்கள்.

• • •

"நான் சொன்னேன்.. இல்லா! ரெண்டு திருமணங் கள்ன்னு. ஒண்ணு ரெஜிஸ்டர் மேரேஜ்.. இன்னொண்ணு.. இது.." என்றான்.

"எது?" என்றாள்.

"இன்னும் கொஞ்ச நேரத்துல.. தெரியும்..!" என்றான்.

காரை அவனே ஓட்டினான்.

அரை மணி நேரம் பயணம்.

இப்போது போகிற திசையைப் பார்க்கிற போது அவளுக்கு நினைவுக்கு வந்தது.

அந்தப் பாதையில் இன்னும் ஐந்து நிமிடப் பயணத்தில் அவர்களுக்கு ஒரு தோப்பு இருந்தது.

வளமான பூமி!

"இங்க எதுக்காகப் போறோம்" என்பது போல் அவனைப் பார்க்க.

கடந்த இரண்டு நாட்களாக கணவனின் முகத்தில் ஒரு தெளிவு இருந்ததை உணர்ந்திருந்தாள்.

அவள் மனமும் நெகிழ்ந்திருந்தது.

தனக்காகவும் வருத்தப்பட்டிருக்கிறான். விலாஸினியின் பால் தனக்கொரு கடமை இருக்கிறது என்பதையும் உணர்ந்து தத்தளித்திருக்கிறான்.

எல்லாம் இப்போது ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். என்னதான் விலாஸினி தைரியமான பெண் என்றாலும் அவளுக்கும் ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்ற கவலையும் உள்ளே இருந்திருக்க வேண்டும். அதையெல்லாம் பார்க்கும்போது தனக்கேற்பட்டது ஒரு பெரிய கவலையேயில்லை என்று தோன்றியது.

கார் அந்தத் தோப்புக்குள் நுழைந்தது. தோப்பின் ஓரமாகவே ஒரு பாதை இருந்தது. அதன் வழியாகப் போன காரைக் கடைசியில் கொண்டு போய் நிறுத்தினான்.



இறங்கினார்கள்.

"அங்க.. பார்!" என்றான்.

பார்த்த வந்தனா திகைத்துப் போனாள்!

பௌர்ணமிக்கு இன்னும் இரண்டு மூணு நாட்களே இருந்ததால் நிலவு தனது ஒளியைத் தண்ணென்று வாரி இறைத்துக் கொண்டிருந்தது.

கண் முன்னாலே ஒரு இனிய காட்சி விரிந்து கொண்டிருந்தது.

ஒரு சிறிய கட்டிடம்!

அசப்பில் ஒரு சிறிய கோட்டையைப் போல இருந்தது. வடிவமைப்பு அவ்வளவு அழகாக இருந்தது.

வட்ட வடிவமாக சுற்றிலும் இடம். அந்த மாளிகையைச் சுற்றிலும் ஒரு அகழி போல ஒரு கால்வாய் ஓடியது. செயற்கையாக அமைத்திருந்தார்கள்.

அகழியைப் போல!

நிலவின் பிரதிபிம்பம் தண்ணீருக்குள் விழுந்து பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

அந்த வட்ட வடிவமான சிறிய பங்களாவுக்கு நான்கு புறங்களிலும் ஓடை போன்ற மேடை இருந்தது.

வந்தனா கண்களும், முகமும் மலர அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

கலகலவென்ற அவளது சிரிப்பில் அவனும் சேர்ந்து கொண்டான்.

"ஐய்யோ! என்னங்க.. இவ்வளவு அழகா.. இருக்கு.." என்றாள் ஆச்சரியம் நிறைந்த குரலில்.

அவன் காரை அகழிக்கு இந்தப் புறமாக ஒரு ஓட்டு வீட்டைப் போல் அமைக்கப்பட்டிருந்த கார் ஷெட்டில் நிறுத்தி விட்டு வருகிற இடைவெளியில் மறுபடியும் ஒரு ஜால வித்தை செய்தான்.

உள்ளே போய் ஏதோ ஸ்விட்சைப் போட்டான் போலும்!

அகழியின் கரையோரத்தில் வெள்ளை நிற ஸ்டீல் கம்பிகளினாலான தடுப்பில் சரியான இடைவெளிகளில் உருண்டையான மெர்க்குரி விளக்குகள் பதிக்கப்பட்டிருந்தன. அவையனைத்தும் பளிச்சென்று எரியவும் ஒரு வித்தியாசமான சூழல் அங்கே தெரிந்தது.

'இந்தப் புன்னகை என்ன விலை? உன் இதயம் சொன்ன விலை!' என்று கதாநாயகனும் கதாநாயகியும் பாட்டு பாடிக் கொண்டு இறங்கி வராததுதான் குறையாகத் தெரிந்தது.

அவள் திரும்பினாள். குறும்பாகத் தலையைச் சாய்த்துக் கொண்டு அவனிடம் கேட்டாள்.

''ஏங்க.. உங்களுக்குப் பாட வருமா?'' என்றாள்.

''ஏன்?'' என்றான் கார் சாவியைக் கையில் சுழற்றிக் கொண்டு வந்தவன்.

''இல்லே! இந்த இடத்தைப் பார்த்தவுடனே 'இந்தப் புன்னகை என்ன விலை? உன் இதயம் சொன்ன விலைன்னு' கதாநாயகனும் கதாநாயகியும் பாடிட்டு வந்த மாதிரித் தோணுச்சு. அதான்.. நாம பாடணும்னா...'' என்று கன்னத்தில் ஒற்றை விரலைத் தட்டிக் கொண்டு யோசிப்பவள் போல் நடித்தவள்.

''ம்! நான் பரவால்லே! சுமாராப் பாடுவேன்.. நீங்க?'' என்றாள்.



அவன் கிளுகிளுப்பாகச் சிரித்துக் கொண்டு அவளருகில் நெருங்கினான்.

''சினிமாவிலே.. டூயட் எதுக்காக வைக்கிறாங்க.. தெரியுமா? நேரடியாச் சொல்ல முடியாததைப் பாட்டில வச்சர்லாம்.. இல்லே! அதுக்குத்தான்'' என்றான்.

இன்னும் நெருங்கி நின்று அவள் முகத்தைத் தன் வலக்கையால் நிமிர்த்தினான். ஒற்றை விரல் அவள் முகத்தில் ஓவியம் வரைய அவன் கிறங்கிய குரலில் சொன்னான்.

''நமக்குத்தான் எல்லாத்தையும் விவரமா அலச லைசென்ஸ் இருக்கையில.. நாம ஏன் பாட்டுப் பாடிக்கிட்டு டைமை வேஸ்ட் பண்ணணும்?'' என்றான்.

தன் இரு கைகளாலும் தூக்கிக் கொண்டான். அவள் அவன் தோள்களில் முகம் புதைத்துக் கொள்கையில் அவன் தொடர்ந்து சொன்னான்.

''அப்புறம்.. பேக் கிரவுண்ட் ம்யூஸிக் வேணும்பே'' என்றான்.

அவள் நெற்றியில் இதழ் பதித்தவன்.

''இந்தச் சத்தம்தான் பேக் கிரவுண்ட் ம்யூஸிக்'' என்றான்.

உள்ளே போனவுடன் செல்லமாக பொத்தென்று போடுகிறாற் போல நடித்து விட்டு சோபாவில் இறக்கினான்.

உள்ளேயும் அலங்காரம் அழகாக இருந்தது. எளிமையான உள்நாட்டுப் பொருட்களிலேயே அந்தச் சிறிய மாளிகையை அலங்கரித்திருந்தாள்.

''நமக்குன்னு இத்தனை இடமும், தோட்டமும் இருக்கையிலே நமக்கு எதுக்கு.. ஹனி மூன்? மாசத்துக்கு இரண்டு மூன்று நாளாவது இங்க வந்துடுவோம்'' என்றான்.

வந்தனா வாயடைத்துப் போய் இருந்தவள், ''என் மனசங்கற மாளிகைக்கும், எனக்குச் சொந்தமான எல்லா மாளிகைகளுக்கும் இனிமே நீதானே மகாராணி'' என்று முணுமுணுத்துக் கொண்டே தன் கையணைப்பில் இறுக்கிக் கொண்டான்.

வந்தனாவின் மனதில் பல சந்தேகங்கள் இருந்த போதும் எதுவும் கேட்பதற்கு இது நேரமல்ல என்று அவன் கைகளில் முடங்கிக் கொண்டாள் எல்லையற்ற நிம்மதி யுடன்.



# 25

முகமெல்லாம் மலர கலகலவென சிரிக்கிற கணவனை ஆசையாக ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டாள் வந்தனா.

அப்படி அவள் பார்த்துக் கொண்டிருக்கும்போது ஒரு முறை அவளைக் கவனித்து விட்ட மதியழகன் குறும் பாகச் சிரித்துக் கொண்டு வேகமாக அருகில் இழுத்துக் கொண்டான்.

''என்ன பார்வை உந்தன் பார்வை?'' என்று மெல்லிய குரலில் பாடினான். நன்றாகவே பாடினான்.



''ஐயோ! ரொம்ப நல்லாவே பாடறீங்க?'' என்று கொஞ்சிக் கொண்டாள் மனைவி. பிறகு ஆழ்ந்த குரலில் சொன்னாள்.

''ஏங்கத்தான்! நானும் இந்த இரண்டு வருஷமா உங் களைப் பார்த்துக்கிட்டுத்தானே இருக்கேன். உள்ளுக் குள்ளே ஏதோ சிந்தனை ஓடிக்கிட்டே இருக்கிற மாதிரி இருக்கும்.'' என்றாள்.

அவன் அழுத்தமானதொரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

''வந்தனா! ஒருவேளை மனசு இப்ப லேசாயிருச்சு போல இருக்கு.. என்ன இருந்தாலும் ஆறு மாசம்னாலும் கூட வாழ்ந்தவ.. கட்டின வைப். ஆளைக் காணலை. என்ன ஏதுன்னு தெரியலைன்னா.. திடீர்னு அந்த நினைப்பு வரும்போது ஒண்ணுமே ஓடாது தெரியுமா?'' என்றான்.

''எனக்குப் புரியுது..!'' என்றாள்.

''ம்ஹூம்..! யாருக்குமே புரியாது! அனுபவிச்சவனுக் குத்தான் அது புரியும்!'' என்றான்.

''அது என்னமோ நிஜம்தான்..! என்றாள் அவளும் அதே பெருமூச்சுடன்.

கட்டிலில் அவன் கால் நீட்டி அமர்ந்திருக்க அவள் அவன் தோள் மேலே சாய்ந்தாள். அவள் வலது கை அவனது வலத் தோள் பட்டையிலிருந்து நீவிக் கொடுத்துக் கொண்டிருந்தது. எங்கோ கனவில் ஆழ்ந்தவன் போல தனக்குத் தானே பேசிக் கொள்வது போல அவன் சொன்னான்.

''வந்தனா! அப்ப எனக்கு இருபத்தி மூணு வயசு. அப்பா வேறு இல்லை. உலகம்னா என்னன்னு தெரியாத வயசு.

திடீர்னு ஒரு பொண்ணு மேலே விழுந்து பிடுங்கிக் காதலிக்கிறா..! அப்புறம் திடீரென்று ஒரு கல்யாணம். அஃப்கோர்ஸ்.. அந்த ஆறு மாசம் நானும் விலாஸினியும் சந்தோஷமாத்தான் இருந்தோம்'' என்றவன் திடீரென்று தன்னை மீட்டுக் கொண்டாற்போல மனைவியின் முகம் பார்த்தான்.

அவள் அன்புடன் புன்னகைத்தாள்!

''நீங்கதான் எல்லாத்தையும் ஏற்கனவே சொல்லித் தானே என்னைக் கல்யாணம் செஞ்சீங்க'' என்ற பதில் அவள் பார்வையில் தெரிந்தது. அவன் அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டினான். பிறகு தொடர்ந்தான்.

''ஆனா.. எல்லாமே ஒரு வேகத்துல நடந்து முடிஞ்ச மாதிரி இருந்தது. ஆனா, விலாஸினி புயல் போல என் வாழ்க்கையில நுழைஞ்சு.. புயல் போல வெளியே போனாலும் அந்த உறுத்தல் ஒரு ஓரத்துல இருந்துகிட்டே இருந்துச்சு.''

''ஆமா! ஊவா முள் ஒன்னு தொண்டைக் குழிக்குள் சிக்கின மாதிரி பீல் பண்ணியிருப்பீங்க'' என்றாள்.

அவன் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதவன் போல் குனிந்தான். கொஞ்சினான். பிறகு சொன்னான்.

ஆனா, உன்கிட்டே ஒரு விஷயம் ரொம்பப் பிடிச்சிருக்கு. அது என்னன்னா.. உங்கப்பா கிட்டே.. எங்கம்மா கிட்டே எல்லாரு கிட்டயும் எப்பவுமே சொல்லுவியாம். அவரு பாவம்! என்ன குழப்பத்துல இருக்காரோ.. தெளிவாகட்டும்னு.''

அவள் மறுபடியும் புன்னகைத்தாள். பிறகு அவன் கழுத்துக் காலரைத் திருகிக் கொண்டே சொன்னாள்.



''ஆமா! முதல் முதலா.. நான் எப்ப.. உங்களைப் பாத்தேனோ.. அதுவும் அந்தக் கோவில்ல வச்சுப் பேசினீங்களே.. அப்பவே.. என் மனசு என்கிட்டே இருக்கலை.. உங்ககிட்டே தாவிருச்சு..'' என்றாள்.

''ம்..!'' என்றான் ஆச்சரியமாக.

''சரியான ஊமைக் கோட்டான் நீ..!'' என்று கன்னம் கிள்ளினான்.

அவள் முகம் சிவந்தாள்.

''என்னமோ தெரியலீங்க! ஆரம்பத்துல இருந்தே.. உங்க மனசுல எவ்வளவு வருத்தம் இருக்கும். இப்படி நடந்ததுல.. உங்களோட தவறு எதுவுமே இல்லையே இப்படியேதான் என் மனசுல தோணுச்சு'' என்றாள்.

''ஆமா.. வந்தனா! நானும் கூட இப்ப யோசிக்கும்போது புரிஞ்சுக்கறேன். நீ வந்ததுக்கு முன்னாலே அந்த ஆறு வருஷமும் என்னோட வாழ்க்கையோட கடுமையான காலம்னு நினைக்கறேன். அதிலயும் விலாஸினி கிளம்பிப் போன முதல் ஒரு வருஷமும் நான் ரொம்ப மனசளவுலே கஷ்டப்பட்டுட்டேன். வேலை, வேலைன்னு முழுகித் தான் சமாளிச்சேன். இவ்வளவு பெரிய இடமும், நிர்வாகமும் இருப்பதால.. எனக்கு என்னை மறக்க முடிஞ்சது. விலாஸினியைப் பத்தின கவலை ஒரு பக்கம் அவளைப் பத்தின நம்பிக்கை ஒரு பறம்..! சேச்சே.. கொடுமை தெரியுமா?'' என்றான்.

சற்று நேரம் மௌனம் நிலவியது! பிறகு தொடர்ந்தான்.

''அதிலயும்.. விலாஸினி ஒரு கெட்டிக்காரத் தனம் செய்யறதா.. நினைச்சுகிட்டு.. ஒரு காரியம் செஞ்சா.. பாரு! ஒரு லெட்டர் எழுதி வச்சிட்டுப் போனா பாரு.. ரெண்டும்

கெட்டான் தனமா..!" என்றான். இப்போது கூட குரலில் கோபம் தொனித்தது.

அப்போது அவள் குரலில் உறுத்தல் தெரியச் சொன்னாள்.

"அந்த லெட்டரைப் பார்த்தேன்!" என்றாள்.

அந்தக் கணம் அவன் முகத்திலும் ஒரு மாற்றம் தெரிந்தது.

"தெரியும்! நீ பார்த்திருப்பேன்னு எனக்கும் தெரியும்..!" என்றான்.

"எப்படி?" என்றாள் வியப்பாக.

"எப்பவும் நான் வக்கிற பொஸிஷன்ல இருந்து அது மாறியிருந்தது. ஆனா, நீ படிச்சியான்னு கேட்கறதுக்கு எனக்கே ஒரு மானக்கேடா இருந்துச்சு."

அவள் மிகுந்த ஆதரவுடன் மார்பை நீவிக் கொடுத்தாள்.

"எனக்கும் அதனாலதான் அதைத் தெரிஞ்ச மாதிரியே காட்டிக்க மனம் வர்லே" என்றாள்.

"தாங்க்ஸ். அது எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது. அந்த இங்கிதம்..! எப்பவுமே.. இந்த நிமிஷம் வரைக்கும்.. நடந்த காலத்துல என்ன நடந்துச்சன்னு நீ தெரிஞ்சுக்கவும் நினைக்காத பெருந்தன்மை."

"அது பெருந்தன்மை.. இல்லீங்க..! அது நான் உங்க மேல வச்ச நம்பிக்கை.." என்றாள் உணர்வு நிறைந்த குரலில்.

"தாங்க்ஸ்!" என்றான்.

"ஏன்..! எப்படி நீ கல்யாணத்துக்கு ஒத்துகிட்டே!" என்று கேட்டான்.



"எங்க அப்பா..! அவருதான் காரணம்! அவருக்கு எப்பவும் நான் இறக்கையில்லாத தேவதை மாதிரியும், ஏதோ தேவலோகத்து ராஜகுமாரன் வந்து என்னைக் கொத்திட்டுப் போகப் போற மாதிரியும் ஒரு கனவு! ஆனா.. வாழ்க்கையோட நிஜம் என்னன்னு எனக்குத் தெரியும். ஆனா, அவரோட கனவைக் கலைக்க எனக்கு மனசு வர்லே. அதிலயும் உங்களைப் பாத்ததுமே அவரு பாதி விழுந்துட்டாரு..! மீதிப் பாதி நீங்க நேர்ல வந்து என்னை சந்திச்சு.. கன்பர்ம் பண்ணிட்டதுமே விழுந்துருச்சு.. வாழ்க்கையில முன்னாலே கஷ்டப்பட்டா.. பின்னாலே நல்லா.. இருக்கலாம்னு.. அப்படி ஒரு நம்பிக்கை" என்றாள். புன்னகைத்தாள்.

பிறகு திடீரென்று நினைவு வந்தவள் போல் கேட்டாள்.

"நீங்க.. எப்படி ஒத்துகிட்டீங்க!" என்று. அவன் ஒரு நிமிடம் சிந்தனையில் ஆழ்ந்தவன் போல் மௌனமானான். பிறகு சொன்னான்.

"நான் அம்மாவோட மனசு அமைதிக்காகத்தான் வந்தேன். ஆனா.. உன்னைப் பார்த்தவுடனே என் மனசுல ஒரு எண்ணம். இந்தப் பெண் அமைதியானவளாக இருக்கிறாள். இவளிடமிருந்து நமக்கும் அமைதி கிடைக்கும்ன்னு. அது மட்டுமில்லே எனக்கும் தனிமை ரொம்ப கொடுமையாய் இருந்தது. சாஞ்சுக்க ஒரு தோள் வேணும் கற எண்ணம் எனக்கும் ரொம்பத் தேவையாயிருந்துச்சு.." என்றான்.

இப்போது அவன் கன்னம் தடவி உருகுவது அவள் முறையாயிருந்தது. அவன் அந்தத் தொடுகையை அனுபவித்துக் கொண்டு சாய்ந்திருந்தான். அவ[illegible] கேட்டாள்.

"அப்புறம் ஏன்? ரெண்டு வருஷம்.. விலக்கியே வச்சிருந்தீங்க" என்று.

"ஆமா அது உனக்கு நான் செஞ்ச பெரிய தப்புத்தான். இப்ப நினைச்சா.. என் மேலயே எனக்குக் கோபம் வருது. பாவம்.. புதுசா.. ஒரு இடத்துக்கு வந்திருக்கற பொண்ணுன்னு கூட இல்லாமே.. என்ன பாடு படுத்தினேன்" என்றான்.

"நான் புரிஞ்சுகிட்டேன்.. அது நீங்க ஒரு விதமான ஃப்ரஸ்ட்ரேஷன்ல இருக்கீங்கறதோட வெளிப்பாடுன்னு நான் புரிஞ்சுகிட்டேன். கடந்த காலம் ஒரு முடிவுக்கு வர்லே. நிகழ்காலத்துலயும் ஒட்ட முடியலே.. ஐ குட் அண்டர்ஸ்டேண்ட்" என்றாள்.

"சரியாப் புரிஞ்சுகிட்டே! அதுக்கப்புறம்.. என் மேலயே கோபம் வரும்.. அந்தக் கோபத்தை மறைக்கறதுக்குத்தான் நான் உன் மேல எரிஞ்சு விழுவேன்.

"ஆனா.. சமீப காலமாக நீங்க கோபம் காமிச்சது கூட எனக்குப் பிடிச்சுத்தான் இருந்துச்சு. ஏன்னா.. கோபம் காட்டினீங்கன்னாலே என் மேல உரிமை எடுத்துக்கறீங்கன்னுதானே அர்த்தம்!"

"லவ்லி.. கேர்ள்.. எப்படியெல்லாம் உன் மனசுக்கு நீயே சமாதானம் சொல்லிகிட்டிருந்திருக்கே!"

"இல்லீங்க! நான் சமாதானம் சொல்லிக்கலே. எனக்கென்னமோ உங்களோட ஒவ்வொரு சிந்தனையும் புரிஞ்சுதான் இருந்தது.

"அப்புறம்.. ஏன்.. விலாஸினி.. வரப்போறான்னு தெரிஞ்சவுடனே கிளம்பினே?" என்றான்.



அவள் சற்று நேரம் வேறு பக்கம் பார்த்தாள். பிறகு மெல்லிய குரலில் தொடர்ந்தாள்.

"முதல்ல.. விலாஸினியக்கா வர்றதாக் கேள்விப் பட்டவுடனே நீங்க என்ன முடிவு எடுப்பீங்கன்னு தெரியலே. ஆனா, முதல் உரிமை அவங்களுக்குத்தானே! அவங்க வர்றதானா வரட்டும்! நாம ஒரு ஓரமா ஒரு பக்கம் இருந்துக்கலாம்னு நெனச்சேன். ஆனா, அவங்க வரப்போற நாள் நெருங்க.. நெருங்க.. உங்களை அப்படியெல்லாம் விட்டுக் கொடுக்க என் மனசு ஒத்துக்காதுன்னு தெளிவாத் தெரிஞ்சுருச்சு. அதனால உங்க சந்தோஷம் தான் முக்கியம்னு. விலகிப் போறதுதான் நல்லதுன்னு யோசிச்சேன். அதான் அப்பாகிட்டே சொன்னேன்."

"ம்.." அதேதான்! நீ கேட்டயே ஏன் அத்தை. கமலிக்கா, மகேஸ்வரிக்கா எல்லாரும் உன் மேலே கோபமா இருக்காங்கன்னு. அதுக்கும் காரணம் இதுதான். அந்தப் பொண்ணே வந்து சேரலை. அதுக்குள்ளே இவ எப்படி போறேன்னு முடிவெடுக்கலாம். ஆறே மாசத்துல வெளியே போனவளை மதிப்போமா? ரெண்டு வருஷம் பொறுமையாக் காத்துக்கிட்டிருந்தவளை மதிப்போமா.. அப்படின்னு.."

"விஷயம் அதில்லீங்க! அவங்கதான் முதல் உரிமைக் காரங்க.. அவங்க டிமாண்ட் - பண்ணினா..." என்னும் போதே அவன் குறுக்கிட்டான்.

"தட்ஸ் தி... பாயிண்ட் கல்யாணம் ஆனதற்குப் பிறகும் நான் ஏன் காத்திருந்தேன்னா.. சட்டத்தில் ஒரு பாயிண்ட் இருக்கு. ஏழாண்டுகள் பிரிஞ்சிருந்தா விவாகரத்துக் கோரலாம்னு. எப்படியிருந்தாலும் விலாஸினி ஆறு வருஷம் வர்லேன்னா அதுக்கப்புறம் வர

மாட்டான்னுதான் எனக்குள்ளே ஒரு எண்ணம். ஏன்னா, அவளும் ரொம்பத் தீர்க்கமா சிந்திக்கிற பொண்ணுதான்.

..........!

"வந்தனா! அதனாலதான் ஏழு வருஷம் முடிஞ்சதுக் கப்புறம்.. அதுக்கப்புறம் ஆறு மாசம் கழிச்சுத்தான் நான் உன்னைத் தொட்டேன். ஆனா, ஒரு மாதிரி நாம இணைந்த நேரத்துல மறுபடியும் விலாஸினி பேர் அடிபட்டவுடனே நான் கொஞ்சம் அப்செட் ஆயிட்டேன். என் வாழ்க்கையில அந்தப் பொண்ணு விளையாடறதுக்கு ஒரு அளவில்லையான்னு.."

"ஏங்கத்தான்..!"

"சொல்லுங்க.. கிருபானந்தமயியாரே!"

"விலாஸினியக்கா.. அப்படி ஒரு முடிவெடுத்தாங்களே அதுக்கும் ஒரு துணிச்சல் வேணுமில்லே..!"

"ஆமா! துறவறத்துக்கும் ஒரு துணிச்சல் வேணும் தான்..! என்னோட ஒபினியன்.. இல்லறத்துல இருந்து.. இல்லறப் பிரச்சினைகளைச் சந்திச்சாலே.. அதுவே ஒரு பெரிய விஷயம்..! விலாஸினிக்கு எல்லாமே எளிதா கிடைச்சது. அதனால ஒரு வெறுமை. ஏதோ ஒரு தேடலை தேடி வெளியே கிளம்பிட்டா! ஆனா, நான் என்னோட கடமைகள்ல இருந்து வெளியே போறதா.. இல்லை..!"

"இதுவும் கரெக்ட்தான்..! வாழ்க்கையை நேசிச்சு வாழ்ந்தாலே பெரிய வெற்றிதான்..! இன்னமும் ஆன்மீக விஷயங்களைத் தேடிப் போற அளவுக்கு நாம பக்குவ மாகலை" என்றாள்.

"ஹேய்! என்னதிது.. அருமையா ஒரு கெஸ்ட் ஹவுஸ் கட்டி அதுல.. தனியா அதுவும் நிம்மதியா நேரம்



செலவழிக்கலாம்னு வந்தா.. இப்படிப் பேச்சு போயிக் கிட்டிருக்கு."

"தப்பில்லைங்கத்தான்! கிருபானந்தமயிக்கும் நமக்கும் சம்பந்தமில்லைன்னாலும் விலாஸினிக்கும் நமக்கும் நெருங்கின தொடர்பு இருந்திருக்கு. அப்ப எப்படி நாம அவங்களைப் பத்திப் பேசாம இருக்க முடியும்?"

"சரி.. பேசிக்குவோம்.. நான் இப்பத் தெளிவா உனக்கு சொல்லிடறேன். விலாஸினி என்னோட கடந்த காலம். அவ என்னோட வாழ்ந்தப்ப நான் சந்தோஷமாத்தான் இருந்தேன். ஆனா, என்ன இதுதான் என்னோட முடிவு.. நான் இதுக்காகத்தான் வெளியே போறேன்னு சொல் லிட்டுப் போயிருக்கலாம். எத்தனையோ குழப்பங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும். ஆனா, எப்ப ஆறு வருஷமா அந்த வழியிலே இருக்காளே.. அப்ப அதுதான் அவளோட வழிங்கறது உறுதியாயிருச்சு. ஆனா, இந்த விஷயத்துல குருஜியை எனக்கு ரொம்பப் பிடிச்சிருச்சு. ஏன்னா, என்னோட நிலைமையில யோசிச்சு.. என்னோட மரி யாதையைக் காப்பாத்தணும்னு நினைச்சு நம்ம வீட்டுக்கு வந்து எல்லாருக்கும் விஷயங்களைத் தெளிவாக்கிட்டுப் போகணும்னு என்ன இருக்கு? ஆனா.. செஞ்சாரு! அதுக்காக அவருக்கு நாம நன்றி சொல்லணும்" என்றான்.

"ஆமா! ஆன்மீகம்ன்னா எல்லா உயிரினங்களையும் நேசிக்கறது தானே! வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்னு வள்ளலார் பாடியிருக்காரில்ல..!"

"ம்.. இதெல்லாம் வேற படிப்பியோ!"

"ம்.. எல்லாமும் படிக்கறதுதான்!"

"சரி..! இனிமே வேற நிறையப் படிக்கறதுக்கு இருக்கு.. இப்ப வரைக்கும் பரவால்ல! பாஸ் மார்க் போடலாம்."

"ஹல்லோ! ஹல்லோ! அது நான் சொல்லணும்" என்று குறும்பாகச் சிரித்தாள்.

"யாரு நமக்குப் பாஸ் மார்க் போடலேன்னாலும் சரி.. உங்கப்பா கிட்டே பாஸ் மார்க் வாங்கணும். அது நீ குடுக்கற சப்போர்ட்லதான் இருக்கு.. அப்புறம்.. உடனே குழந்தை கிழந்தைன்னு ஆரம்பிச்சராதீங்க.. இன்னும் நிதானமா ரெண்டு வருஷமாவது ஒரு அமைதியான வாழ்க்கை உன்னோட வாழணும். எல்லாப் புயல்களையும் கடந்தாச்சு..! இனிமேலாவது பூந்தென்றல் என்னோட வாழ்க்கையில வீசணும். அது இந்தப் பூஞ்சோலையின் கையிலதான் இருக்கு. என்னா! நீ எனது பூஞ்சோலை..!" என்றான்.

"நிச்சயமா! இனிமே உங்க வாழ்க்கையிலே உஷ்ணக் காற்றே கிடையாது. எல்லாமே பூந்தென்றல்தான். நீங்க இனிமே நிம்மதியா, சந்தோஷமா இருக்கணும். இந்தக் குடும்பத்துல அமைதி நிலவணும். அதுக்காகவும் உங்களோட விருப்பத்தை நிறைவேத்தறதுக்காகவும் நான் என்னவும் செய்வேன். என்னை..! என்று சொல்கையில் அவள் மறுபடியும் குறுக்கிட்டுச் சொன்னாள்.

"நீ எனது பூஞ்சோலை!" என்று இருவரும் சிரித்தார்கள்.